ஜூலை - செப்ரெம்பர் 2008

# கலைமுகம்


கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

கலை இலக்கிய சமூக இதழ்



100/=

# பதிவுகள்



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் 13.09.2008 மாலையில் கலைத்தூது கலையகத்தில் நடத்தப்பட்ட 'கிராமியக் கலை அரங்கு' நிகழ்வின் சில காட்சிகளை படங்களில் காணலாம். இந்நிகழ்வில் இணுவில், வட்டுக்கோட்டை, மாவை கலட்டி – தெல்லிப்பளை, யாழ் கரையோரப் பிரதேசம், நல்லூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கோலாட்டம், காவடி, கரகம், வேப்பிலை ஆட்டம், குதிரை ஆட்டம், அம்பா, சிரட்டைக் கும்மி ஆகிய கிராமியக் கலைவடிவங்கள் மேடையேற்றப்பட்டன. நீண்ட காலங்களின் பின் கிராமியக் கலைவடிவங்கள் பலவற்றையும் ஒரே அரங்கில் பார்க்க முடிந்தமை முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. இந்நிகழ்வுக்கு மூத்த நாடகக் கலைஞர் திரு. எஸ்.ரி.அரசு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.



திருமறைக் கலாமன்றத்தின் சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தினால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வரும் சைவ சித்தாந்த இறுவட்டுக்களின் வரிசையில் உமாபதி சிவாச்சாரியார் அருளிய 'கொடிக்கவி' இறுவட்டின் வெளியீட்டு விழா 13.09.2008 காலையில் யாழ்ப்பாணத்தில் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு தலைமை தாங்கிய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும், சிவத்தமிழ் வித்தகர் திரு.சிவ. மகாலிங்கம் ஆசியுரை வழங்குவதையும், முதற் பிரதியை சைவசித்தாந்த ஆய்வு வட்டத்தின் முன்னாள் இணைப்பாளர் க.சிவபாதசுந்தரம் அவர்களும், சிறப்புப் பிரதியை 'வலம்புரி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் அவர்களும் நிகழ்வின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். நிகழ்வில் 'கொடிக்கவி அருளும் பொருள்' என்னும் பொருளில் நீ. மரியசேவியர் அடிகள் கருத்துரை வழங்கினார்.



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் 'அந்த மான்' என்னும் நாட்டிய நாடகம் 14.09.2008 மாலையில் மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்பட்டது. நாடகத்தின் சில காட்சிகளை படங்களில் பார்க்கலாம். இந்நாடகத்திற்கான நெறியாள்கையை கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியர்களில் ஒருவரான செல்வி தர்மினி எட்வேட் பிரேமகுமாரன் மேற்கொண்டிருந்தார். இந்நாடக நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடனத்துறை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசனும், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவன பணிப்பாளர் திரு.இ.அ. திலகரட்ணமும் கலந்து சிறப்பித்தார்கள்.

காலாண்டுச் சஞ்சிகை

# கலைமுகம்

கலை, இலக்கிய, சமூக இதழ்

கலை 19 முகம் 02

ஜுலை - செப்ரெம்பர் 2008

பிரதம ஆசிரியர்
**நீ. மரியசேவியர் அடிகள்**

பொறுப்பாசிரியர்
**கி. செல்மர் எமில்**

அட்டைஓவியம்
**அ. அ. சஞ்ஜீத்**

அட்டைப்பட கணினிவடிவமைப்பு
**அ. ஜூட்ஸன்**

கவிதைகளுக்கான ஒளிப்படங்கள்
**பீ. சே. கலிஸ்**

இதழ் வடிவமைப்பு
**கி. செல்மர் எமில்**

கணினி அச்சுக்கோர்ப்பும்
பக்க அமைப்பும்
**ஜெயந்த் சென்ரர்**
28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு
**ஏ. சி. எம். அச்சகம்**
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


விநியோகம்
**கா. சுரேன்**

விநியோக உதவி
**கொ. சுரன்சன்**
**ஜோ. ஜெஸ்ரின்**

தொடர்புகளுக்கு
**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
Tel. & Fax : 021-222 2393
E-Mail: cpateam@sltnet.lk

**Centre for Performing Arts**
19-5/6, Milagiriya Avenue,
Colombo-4, Sri Lanka.
Tel. 0112-597245 Fax: 0112-556712

## உள்ளே...



**கட்டுரைகள்**
மித்ரா
தபின்
சாங்கிருத்தியன்
சோ. பத்மநாதன்
ந.சி.ஸ்ரீ நதிபரன்
பா. துவாரகன்
செ. திருநாவுக்கரசு
மகிழன்

**நேர்காணல்**
மூத்த பத்திரிகையாளர்
சி. பெருமாள்
[சந்திப்பு : சு.ஸ்ரீகுமரன்]

**தொடர்**
சௌஜன்ய ஷாகர்

**நூல் மதிப்பீடுகள்**
அருள்திரு ம. டேவிற்
சு.ஸ்ரீகுமரன்
மதுரன்

**கவிதைகள்**
பஹீமா ஜஹான்
அனார்
சி. ஜெய்சங்கர்
ந. சத்தியபாலன்
தேஜஸ்வினி
ராக
சித்தாங்கன்
[illegible]

**ஏனையவை**
இ. ஜீவகாருண்யன்


**மற்றும்**
தலையங்கம்
நிகழ்வுகள், பதிவுகள்
அஞ்சலி

**சிறுகதைகள்**
இயல்வாணன்
சித்தாந்தன்
சி. சிவரசன்

வணக்கம்!

ஆட்சிமுறைகளுள் 'மக்களாட்சியே' சிறந்தது என்பது பலரின் கருத்து. இத்தகைய ஆட்சி, கி.மு 500 இல் இருந்து 330 வரை தன்னகத்தே இருந்ததாக கிரேக்க நாட்டின் அத்தேன்ஸ் நகரம் பெருமை பாராட்டுகின்றது. தனி உரிமை யுடைய நகர அரசாக இயங்கிய அந்நகரத்தில் அதைச்சேர்ந்த குடிமக்கள் அனைவரும் அதன் அரசியலில் கலந்து கொள்ளும் உரிமையை பெற்றிருந்தனர். ஆயின் 'அனைவரும்' என்ற சொல்லில் பெண்கள், அடிமைகள், அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மற்றைய கிரேக்க நகரங்களை சேர்ந்தோர் அடக்கப்பட்டிருக்கவில்லை. அது, குடிமக்களின் ஒட்டுமொத்த தொகையில் நான்கில் ஒரு பகுதியினரின் ஆட்சியாகவே அமைந்திருந்தது. கிரேக்க அறிஞர்கள் பலர் மக்களாட்சியை பெரிதும் போற்றவில்லை. இத்தகைய ஆட்சி மக்கள் உணர்ச்சிகளைத் தவறாக தட்டியெழுப்பி அதைத் தமது சொந்த நலன்களுக்கு பயன்படுத்துபவர்கள் அதிகாரபீடமேற வழிவகுக்கும் என பிளேற்றோ அஞ்சினார். மக்களாட்சியை "ஆளப்படுபவர்களாலான ஆட்சி" என வரையறை செய்த இப்பேரறிஞர், தனி ஒருவரின் (மன்னன்) ஆட்சி (மோனார்க்கி), செல்வம் படைத்த சிறப்பு குழுவினர் போன்றோரின் ஆட்சி (ஒலிகார்ச்சி), ஒரு இனம் அல்லது நாடு இன்னுமோர் இனத்தை அல்லது நாட்டை ஆளும் ஆட்சி (ரிமார்க்கி) என்பவைகளுடன் ஒப்பிட்டு, 'பொலிரெய்யா' என்னும் உரையாடல் நூலில் தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளார். மக்களாட்சி, ஏழைகளின் கைகளில் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து செல்வந்தர்களை பாதிக்கக்கூடிய நிலைமைக்கு இட்டுச்செல்லும் என்ற கருத்தை அரிஸ்ரோட்டில் முன் வைத்தார். மேலும் அவர், பல்வேறு ஆட்சி முறைகள் பற்றி கூறியவை மேற்புலத்து அரசியல் வரலாற்றில் ஆழ தடம் பதித்துள்ளது. அவரது எண்ணக்கருவில் அரசர் ஆட்சி, மேற்குடியாளர் ஆட்சி, பொது நலனுக்காக நடைபெறும் தனி ஒருவரது ஆட்சி, சிலவர் ஆட்சி, அல்லது பலரது ஆட்சி முறைகள் நீதியானவை பொது நலனை மறந்து சுயநலத் துக்காக இயங்கும் ஆட்சி முறைகள் அனைத்தும் நீதியா னவை அன்று. இப்பின்னணியில், குடிமக்களின் ஒட்டுமொத்த பொதுநலனை அடைவதற்கு மக்களாட்சி பொருத்தமற்றது என்ற கருத்தையும் வெளியிட்டார்.

இந்திய மண்ணிலும், புத்தபெருமான் பிறப்பதற்கு முன்பே 'மகா ஜன பாத' என அழைக்கப்பட்ட சிறு குடியரசுகள் இருந்தன என்றும், அவைகள் சங்க,கண,பஞ்சாயத்து போன்ற மக்களாட்சியுடன் இணைந்த செயற்பாட்டு அலகுகள் அடங்கிய ஒருவகையான (சிறப்பு குழுமங்களின் ஆட்சி என்றும் ஒரு சிலரால் அழைக்கப்படும்) மக்களாட்சியை கொண்டிருந் தன என்றும், அவைகளுள் வைஷாலியா (இன்றைய பிகார்) உலகின் முதற்குடியரசாக கணிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது.



மக்களாட்சியின் இத்தகைய அன்றைய வடிவங்கள் நிலைத்து நிற்கவில்லை. மாறாக, மேற்புலத்திலும் சரி கீழ்ப்புலத்திலும் சரி மன்னராட்சியே பல நூற்றாண்டுகளாக வேரூன்றித் தன்னை நியாயப்படுத்திக்கொண்டது. மறுபுறம், பல நாடுகளில் ஆன்றோர்கள் நடுவில் நல்லாட்சி பற்றிய கருத்தாடல்கள் நிகழ்ந்து வந்துள்ளன. வடஇந்தியாவில், கௌத்திலியரின் 'அர்த்தசாஸ்திரம்' தர்ம அரசுமுறை பற்றி விலாவாரியாக எடுத்துக்கூறியது. தமிழகத்தில், கடைச்சங் கத்தில் ஆக்கப்பட்டன என கூறப்படும் நூல்கள் சிலவற்றில், குறிப்பாக திருக்குறளில், நல்லாட்சி முறைபற்றிய தெளிவான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. மன்னர் ஆட்சியை 'இறைமாட்சி' என்று விழிக்கும் வள்ளுவர், "அறன் இழுக்காது அல்லவை நீக்கி" நீதி முறை செய்து குடிமக்களை காப்பாற்று பவனே 'இறை' எனக்கூறி, கொடை, அருள், செங்கோல் முறை, குடியோம்பல் என்ற நான்கும் உடையவனாக அரசன் இருக்க வேண்டும் என இடித்துக்கூறுகிறார். நீதி வழுவாது செங்கோல் செலுத்தும் அரசனின் நாட்டில் பருவ மழையும், நிறைந்த விளைவும் ஒருசேரநிற்கும் என மேலும் வலியுறுத்தி, "அந்தணர் நூற்க்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்ன வன் கோல்" என்று செங்கோன்மையை ஆட்சி முறை யின் குறிக்கோளாக எடுத்துக்கூறுகின்றார்.

மக்களாட்சி முறை இன்றைய வடிவத்தில் தோன்று வதற்கு காரணிகளாக இருந்த ஒரு சில மேற்புலத்து வரலாற்று நிகழ்ச்சிகளும் அறிஞர்களின் பெயர்களும் குறிப்பிடத்தக்கவை. 'மாஞ்ஞாகார்த்தா' என்னும் பிரகடனம், ஆங்கில உரிமை தொகுப்பறிவிப்பு, பண்பாட்டு மறுமலர்ச்சிக்கால விழிப்புணர்வு, அறிவொளிக்கால கருத்தாடல்கள் போன்றவையும், பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப்புரட்சி என்பனவும் நவீன காலத்து மக்களுக்கான, மக்களாலான ஆட்சி முறைக்கு வித்திட்டவை என்பதில் ஐயமில்லை. ஜோண் லொக், மொன்ரெஸ்கியூ, கொண்டோர்சே, ரூஸ்ஸோ, ஜே.எஸ் மில் போன்றோரின் சமஉரிமை பற்றிய கருத்துக்களும் மேற்புலத்தில் மக்களாட்சி முறை வேரூன்ற வழிவகுத்தன.

மக்களாட்சி, 'பெரும்பான்மை'யின் நெறிகெட்ட ஆட்சியாக மாறி, மொழியால், சமயத்தால், பண்பாட்டால், இனத்தால், நிறத்தால் சிறுபான்மை என கணிக்கப்படும் மக் களின் நலன்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் பல்லாண்டு களாக அறிஞர் மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. அமெரிக்காவில் மடிசன் போன்றோர் இதை நன்குணர்ந்து, அதை தவிர்க்கும் முகமாக ஒரு சில விதிமுறைகளை அமெரிக்க நாட்டு அரசியல் அமைப்பில் புகுத்தினார்கள். இங்கி லாந்து, சுவிற்செலாந்து போன்ற நாடுகளிலும் பெரும்பான்மையின் அதீதப் போக்கை தடுப்பதற் கான வழிமுறைகளை தத்தமது நாடுகளின் அரசியல் அமைப்பில் அடித்தளங்களாக அமைத்தி ருக்கின்றார்கள்.

பல் வளங்களும் செழித்து செறிந்து

கனவுலகாக விளங்கும் அமெரிக்க நாடு, வியக்கப் படத்தக்கது என்பது அங்கு செல்பவர்களுக்குப் புரியும். அதனது குறுகிய கால வரலாற்றில், அதன் ஆட்சியாளர் எத்தனையோ நன்மைகளுக்கும், சொல்லமுடியா தீமைகளுக்கும் காரணிகளாக இருந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. ஹிரோஷிமா, நாகசாக்கி என்ற ஜப்பானிய நகரங்களின் அழிவும், பழம்பெருமை வாய்ந்த ஈராக் நாட்டின் சிதைவும், குவாந்தானமொ விரிகுடாவில் கைதிகள் படும் சித்திரவதைகளும் பெருமைக்குரிய வரலாற்றுக் குறிப்புகள் அல்ல. 'பயங்கரவாதம்' என்னும் மந்திரத்திற்கு தாம் விரும்பும் முத்திரையை பொறித்து அகில உலக இஸ்லாம் சமூகத்தையும் சந்தேக குவிமையத்தினுள் புகுத்தி குழப்பம் ஏற்படுத்தியதும், அடிப்படை சிக்கல்களை அலசிப் பாராது ஆயுதத்தால் அடக்கிவிடலாம் என்ற தவறான நடைமுறையும் போற்றுதற்குரியதன்று. இருந்தும், அமெரிக்காவில் பேணப்படும் தனிமனித சுதந்திர உணர்வும், குடிமக்களுக்கு அளிக்கப்படும் சமவாய்ப்புகளும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், சிறுபான்மை - பெரும்பான்மை முரண்பாடுகளை சீர் செய்ய தளம் கொடுக்கும் அரசியல் அமைப்பும் மெச்சத்தக்கவை. மக்களாட்சி என்பது மக்களால், மக்களுக்கான ஆட்சி முறையே என்பதில் ஆணித்தரமான உறுதியும், பிறப்பாலோ, நிறத்தாலோ, சமயத்தாலோ, இனத்தாலோ, பொருள்வளத்தாலோ, அறிவுத்தரத்தாலோ ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் சட்டத்திற்கு முன்பும், மனித உரிமை அளவுகோலின் முன்பும் செல்லுபடியாகாதவை என்ற கொள்கையும் போற்றுதற்குரியவை பின்பற்றுவதற்கும் உகந்தது.

உலகம் முழுவதும் நவம்பர் திங்களில் நடக்கப்போகும் அமெரிக்க தேர்தலையும், அதற்கு முன்பதாக நடந்து கொண்டிருக்கும் கருத்து மோதல்களையும், உன்னிப்பாகவும் அக்கறையுடனும் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அங்கு ஒரு புரட்சி நடக்கலாம் என்ற பெரும் எதிர்பார்ப்பு மக்கள் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது. அடிமைகளாய் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்டு, முழுமையான குடியுரிமைகளை 1965 ஆம் ஆண்டு வரையும் பெறாமல் இருந்த கறுப்பின அமெரிக்கர்களில் ஒரு குடிமகன் - ஒபாமா - இன்று உலக வல்லரசாக விளங்கும் அமெரிக்காவை ஆளும் உயர்தலைமைப் பதவிக்கு போட்டியிட்டு வெல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்ற செய்தி உலக மக்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளது.

பறக் ஒபாமா அமெரிக்க நாட்டைப்போன்றே விசித்திரமான கலப்புடையவர். தந்தை கெனியா நாட்டை சேர்ந்தவர்; பல பெண்களை மணம் முடித்தவர். தாய் அமெரிக்காவின் கன்சஸ் மாகாணத்தை சேர்ந்தவர். விவாகரத்து செய்தபின், இந்தோனேசியர் ஒருவரை மணம்முடித்து, சந்தர்ப்ப சூழ்நிலையால் அவரிடமிருந்தும் பிரிந்து தனிமையிலேயே உலகத்தை வலம் வந்தவர். ஒபாமாவின் கிட்டிய உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் ஆபிரிக்காவின் சேரிகளிலும் அமெரிக்காவின் மாநகரங்களிலும் வாழ்ந்துவருகின்றனர். வெள்ளையர்களான தாயின் பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட ஒபாமா, தாய் வழியாலும் தந்தை வழியாலும் தமக்கு இரத்த முறையான உடன்பிறப்புக்களும் உறவினர்களும் மூன்று கண்டங்களில் வாழ்கின்றனர் என்று பெருமையுடன் கூறுகின்றார். அவரது தந்தை சமயமற்றவர். தந்தைவழிப் பேரன் ஒரு முஸ்லிம். ஒபாமா சிறுவனாக இந்தோனேசியாவில் தாயுடன் வாழ்ந்தபோது, முஸ்லிம் பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றார். ஆனால் தாய் வழியால் பெற்ற சமயத்திலிருந்து மாறவில்லை. ஹாவாய் தீவில் இளமைக்காலத்தை செலவிட்டார். அமெரிக்க நாட்டின் கொலம்பியா, ஹாவட் போன்ற கல்வி மையங்களில் படித்து, சட்டசபை உறுப்பினராயும் பணி செய்தார். சட்டத் துறையில் பட்டம் பெற்ற மிஷல் என்பவரை திருமணம் செய்து, இரு பிள்ளைகளின் தந்தையாக விளங்குகின்றார்.

அமெரிக்காவில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனும் கருத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிடும் ஒபாமா வெற்றியீட்ட ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. அது நடப்பின், மனிதத்திற்கு எதிராக எழுப்பப்படும் தளைகள் அனைத்தையும் தகர்த்து, மனித மாண்பு தனது உயர் தகமையை உலகளாவிய முறையில் நிலைநாட்டும் எனக் கொள்ளலாம். மேலும், இவ் எடுத்துக்காட்டால் உலகின் பல பாகங்களிலும் மக்களாட்சி முறை புத்துயிர் பெறக்கூடும். ஒருவேளை, அமெரிக்காவின் சுயநலப்போக்குகளினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கும், இனங்களுக்கும், மக்கள் குழுமங்களுக்கும் காலப்போக்கில் நன்மை ஏற்படலாம் என்றும் நம்ப இடமிருக்கின்றது.

**நீ. மரியசேவியர் அடிகள்**

### வாசகர்களுக்கு...

**இதுவரை 80 ரூபாவாக இருந்த 'கலைமுகம்' பிரதி ஒன்றின் விலை இந்த இதழிலிருந்து 100 ரூபாவாக விலை அதிகரிப்புச் செய்யப்படுகின்றது. அத்துடன் சந்தா கட்டணங்களும் மாற்றப்பட்டுள்ளன. எனினும் முன்னரே சந்தாதாரர்களாக இணைந்து இன்னமும் சந்தா காலம் முடிவுறாது உள்ளவர்களுக்கு பழைய கட்டணங்களின்படியே 'கலைமுகம்' அனுப்பி வைக்கப்படும். சந்தாவைப் புதுப்பிப்பவர்களும், புதிதாக சந்தாதாரர்களாக இணைந்து கொள்பவர்களும் புதிய கட்டணங்களைப் பின்பற்றவும். புதிய சந்தா விபரங்களை மறுபக்கத்தில் பார்க்கலாம்.**

**தபால் செலவு உட்பட இதழுக்கான பல்வேறு செலவினங்களின் அதிகரிப்பால் இம்மாற்றங்கள் செய்யப்படுகின்றது. இதனைப் புரிந்துகொண்டு கலைமுகத்தின் வாசகர்கள் முன்பு வழங்கிய ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம். இனி வருகின்ற இதழ்கள் இன்னும் புதிய விடயங்களைத் தாங்கி வெளிவரும்.**

# ‘கலைமுகம்’ கலை இலக்கிய சமூக இதழ்

## சந்தா விபரங்கள்

(தபால் செலவு உட்பட)

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு : | ஒரு வருடம் | 600.00 | |
| | இரண்டு வருடம் | 1200.00 | |
| வெளிநாடு : | ஒரு வருடம் | 2000.00 | இலங்கை ரூபா |
| | இரண்டு வருடம் | 4000.00 | |

பிரதி ஒன்றின் விலை - 100.00

**சந்தா மாதிரி விண்ணப்பப் படிவம்**

பெயர் :.....................................................................................................

முகவரி :.....................................................................................................

.....................................................................................................

தொலைபேசி :.....................................................................................................

மின் அஞ்சல் :.....................................................................................................

நான் ‘கலைமுகம்’ சஞ்சிகையின் சந்தாதாரராக இணைந்து கொள்வதில் மகிழ்வடைகிறேன். இத்துடன் ஓராண்டுச் / ஈராண்டுச் சந்தாவாக ............................ .............................................. வுக்குரிய காசுக்கட்டளையை (இல.............................) / காசோலையை (இல...........................) அனுப்பிவைக்கிறேன்.

............................ ..........................................

திகதி சந்தாதாரரின் ஒப்பம்

- சந்தாதாரர்களாக இணைந்துகொள்ள விரும்பும் வாசகர்கள் மேலே உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று சுயமாகப் படிவத்தைத் தயாரித்து தங்கள் விபரங்களை அனுப்பி வைக்கலாம்.
- ‘கலைமுகம்’ வருடத்திற்கு நான்கு இதழ்கள் வெளிவரும். தவிர்க்கமுடியாத காரணங்களால் நான்கு இதழ்கள் வெளிவராதுவிட்டால், அடுத்த ஆண்டு வெளிவரும் இதழ்களுடன் இணைக்கப்பட்டு வருடச்சந்தா கணிக்கப்படும்.
- சந்தா கட்டணத்தை பணமாகச் செலுத்த விரும்புகிறவர்கள் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்திலோ, அல்லது எமது சந்தா முகவர்களிடமோ செலுத்தலாம்.
- காசுக்கட்டளை *(Money order)* அனுப்புபவர்கள் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக *‘The Editor, Kalaimugam’* என்னும் பெயருக்கும், காசோலை *(Cheque)* அனுப்புபவர்கள் *‘Centre for Performing Arts’* என்னும் பெயருக்கும் எழுதி அனுப்புதல் வேண்டும்.
- வங்கிக் கணக்கு மூலம் அனுப்ப விரும்புபவர்கள் ***‘Centre for Performing Arts, AC. No. 89985011, Hatton National Bank, Jaffna’*** என்னும் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்து அதற்குரிய வங்கிப் பற்றுச்சீட்டை அனுப்புதல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

ஆசிரியர் ‘கலைமுகம்’, திருமறைக் கலாமன்றம்,

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2393




# வலிகளுடன் மிகவும் தனிமையில்

மித்ரா

தமிழில் தீவிரமாக வாசிப்பவர்களுக்கு Frida khaloமிகவும் பரிச்சயமானதொரு பெயராகவே இருக்க முடியும். தமிழின் முக்கிய கலைஞர்கள், படைப்பாளிகள் பலரும் Frida குறித்து பேசியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். உலகு தழுவிய சர்ரியலிசக் கலைஞர்களுக்கு ஃபிரிடா தவிர்க்கவியலாத ஆதர்சம். பெண்ணிய இயக்கத்தின் ஆரம்ப நாட்களில் மிகவும் பரவலாக கொண்டாடப்பட்ட பெயர்களில் முக்கியமானது ஃபிரிடாவினுடையது. 80களில் ஈழத்தில் மிகவும் மதிக்கப்பட்ட மாற்கு மாஸ்டரின் ஆதர்ச ஓவியையாக ஃபிரிடா இருந்திருக்கிறார் என்று சொல்வார்கள். தமிழின் முக்கிய நாவல்களில் ஒன்றான ஷோபா சக்தியின் 'கொரில்லா'வின் இறுதிப் பக்கங்களில் ஃபிரிடாவின் சுயபிரதிமையொன்றும் அதன் உடல்வலியும் வன்முறையை எதிர்கொள்தலின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும். சுவரில் தொங்கும் ஃபிரிடாவின் பிரதிமையின் மார்புப் பகுதியில் மணிக்கூட்டு முட்கள் சுழல்வதான அவ் விபரிப்பு காலச்சுழல்களெங்கும் உடல் எதிர்கொள்ளும் வாதையைக் குறிக்கிறது. இதைப் போலவே கற்பகம் யசோதரவின் 'knives and collapses I' கவிதையில் ஃபிரிடாவின் Broken Column ஓவியத்தின் வலி சங்கேதப்படுத்தப்பட்டிருக்கும். சைத்ரிகனின் 'காதலியைப் போல முத்தமிடுதல்' கவிதையில் ஃபிரிடாவின் காதலும் அவள் எதிர்கொண்ட புறக்கணிப்புகளும் நினைவுபடுத்தப்படுகிறது.

ஷோபா சக்தி, கற்பகம் யசோதர மற்றும் சைத்ரிகனுக்கு இருப்பதைப் போலவே, உலகெங்கிலும் உள்ள கலைஞர்கள் பலருக்கும் ஃபிரிடாவின் வாழ்வும் கலையும் விருப்பத்துக்குரிய, ஈடுபாட்டுக்குரிய விடயங்களாக இருக்கின்றன.

20ஆம் நூற்றாண்டின் முக்கிய ஓவியர்களில் ஒருவரும், பல தனித்துவங்களுக்குச் சொந்தக்காரியுமான ஃபிரிடா கலோ மெக்சிகோவைச் சேர்ந்தவர். ஃபிரிடாவின் ஓவியங்கள் தனித்து அடையாளங்காணப்பட முடியுமளவுக்கு தனித்துவமானவை. சமகால ஓவியப் போக்குகளில்[1] இருந்து மாறுபட்டு மிகவும் விசேடமான குறியீடுகள், படிமங்கள், சங்கேதங்களுடன் தனது உடலை, தன் வலியை, ஆன்மாவை வரைந்தவர் ஃபிரிடா கலோ.

ஃபிரிடா மார்க்சிசக் கொள்கைகளில் ஈர்ப்புடைய ஒருவர். இடதுசாரி அரசியலில் மிகவும் மதிக்கப்படுகிற லியோன் ட்ரொட்ஸ்கியுடன் ஃபிரிடாவுக்கு நெருங்கியதும், உடல் சார்ந்ததுமான தொடர்பு இருந்தது. அதைவிட, ஃபிரிடாவின் கணவர் டியாகோ ரிவேரா, லெஸ்பியன் துணையான ரினா மொடொற்றி இதர நண்பர்கள் எல்லோருமே மெக்சிக்கோவின் புரட்சி பற்றி கனவுகளுடனும் சூடான விவாதங்களுடனும் அலைபவர்கள். மார்க்சிய அரசியலுடனும் அழகியலுடனும் தம்மை இறுகப் பிணைத்துக்கொண்ட கலைஞர்களுடன் வாழ்ந்த போதிலும் ஃபிரிடாவிடம் மார்க்சியக் கலைக்கோட்பாட்டின் தாக்கம் (அதன் வரட்சியான அர்த்தத்தில்) இருந்ததில்லை. ஃபிரிடாவின் கரிசனை மிகவும் அகவயமான வலி தொடர்பிலானது, அக்கரிசனை மிகவும் தனித்தே இயங்கிற்று.

Julie Taymore இன் இயக்கத்தில் Salma Hayek ஃபிரிடாவாகப் பாத்திரமேற்று நடிக்கும் Frida(2001, Miramax)[2] திரைப்படம் ஃபிரிடாவின் சுயபிரதிமைகளின் பின்னிருக்கிற ஆன்மவாதையை, மூர்க்கத்தை வலியோடுணர்த்துகிறது.

***


ஒரு வார்த்தையிற் சொல்வதானால் இத்திரைப்படம் மெக்சிக்க ஓவியையான ஃபிரிடாவின் வாழ்வை விபரிக்கிறது. ஓர் ஆளுமையின் வாழ்க்கை வரலாற்றை சம்பவ ஒழுங்குகளின் அடிப்படையில் (in chronological order) சொல்லிச் செல்வதையே வழக்கமான biopicகுகளில் காண்கிறோம். ஃபிரிடா திரைப்படம் வழக்கமான biopicகுகளில் இருந்து நிறையவே வித்தியாசமானது. நேர்த்தியான சம்பவ ஒழுங்கும் கால ஒழுங்கும் சிதையாமற் பேணப்பட்டிருப்பினும்கூட ஆவணப்படத்தின் சலிப்பூட்டக்கூடிய தன்மைகளற்று ஃபிரிடாவின் கலைக்கு நிகரான கலைத்துவத்துடன் மிளிர்கிறது திரைப்படம்.

1922இல் மெக்சிக்கோவின் இளம் மாணவியாய், துடிதுடிப்பும் குறும்பும் மிக்க சிறு பெண்ணாய் ஃபிரிடாவின் தருணங்கள் ஆரம்பத்தில் புகைப்படக் கலைஞரான தந்தை, குறும்புகளுக்கு சிறு கண்டிப்புடன் துணை போகும் அக்கா, கண்டிப்பான அம்மா, காதலன், cross dressing ஆடை விருப்பங்கள், மார்க்ஸ் ஹெகல் விவாதங்கள் என நகர்கிற வாழ்வில் வலியும் தனிமையும் கூரிய கத்திமுனையென ஊடுருவுகின்றன. பஸ் விபத்தொன்றில் ஃபிரிடாவின் உடல் முழுதும் பாரிய ரணங்கள்.

ஃபிரிடாவின் இயல்பு வாழ்க்கையை மிகவும்

மோசமாகப் பாதித்த இவ்விபத்து திரையில் மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்யப்படுகிறது. விபத்தின் போது தள்ளாடுகிற பஸ், ஃபிரிடாவின் கையிலிருந்து சிதறும் தங்கத் துகள்கள், பறந்து போகும் நீல வண்ணப் பறவை, விழுந்து நசியும் தோடம்பழங்கள், சிதறுண்டு துண்டுகளாய் கொட்டுண்ணும் கண்ணாடியென ஒவ்வொரு பொருளும் கமெராவின் தனிக் கவனத்துக்குட்படுகிறது. Slow motion, real motion, fast motion என மூன்று உத்திகளிலும் படம்பிடித்து இணைத்திருக்கிறார்கள். விபத்துக் காட்சியின் இறுதியில் குருதியும் தசையும் சிதம்பிக் கிடக்கிற பெண்ணுடல், நசிந்த தோடம்பழங்கள், மர உடைசல்கள் அவற்றுக்கு மேலாய்க் கொட்டுண்ணுகிற தங்கத் துகள்கள், நீலவண்ணப் பறவைச் சிறகு என அசையாநிலைக் காட்சிப் படிமம் மிகவும் அரூபமானது.

விபத்தில் உயிர்தப்புகிற ஃபிரிடாவின் உடலை வலி அப்படியே ஆக்கிரமித்துக் கொள்கிறது. உடலில் இறுகச் சுற்றிக் கட்டப்பட்ட பண்டேஜ் துணிகளுடன் இரவு பகலாக அசைவுகளின்றி இரண்டு வருடங்கள். "இப்போது எப்படி உணர்கிறாய்?" போன்ற நலம் விசாரிப்புகளில் ஃபிரிடாவுக்குச் சிரிப்பு வருகிறது. "வலியில்லாமல் இருந்த



பொழுதுகள் எப்படியிருந்தன என்பதை என்னால் நினைவு கூர முடியவில்லை" என்கிறாள் ஓரிடத்தில். வலியற்றிருப்பது என்றால் என்னவென்பதே மறந்து போகுமளவுக்கு சர்வநிச்சயமான வலி.

கட்டிலுக்கு நேர் மேலாகப் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடியில் சலனமற்ற நோய் பிடித்த தன்னுடலின் விம்பத்தைச் சகித்தபடி தனிமைக்குள் இரண்டு வருடங்கள். மருத்துவச் செலவுகளுக்காய் தாய் தந்தைக்கிடையில் முணுமுணுப்புகள், படுக்கையில் கிடப்பவளுக்கு தத்துவ நூல்களைப் பரிசளித்து லண்டனுக்கு நழுவுகிற காதலன்... ஃபிரிடா தனித்துக் கைவிடப்படுகிறாள். மீளமுடியாத துயரத்துக்குள், வலிக்குள் வலி மட்டுமேயான இருட்டான அறையில் கைவிடப்பட்டு புறக்கணிக்கப்பட்ட ஆன்மாவும் உடலும்...

ஃபிரிடா தனது வலியையும் தனிமையையும் பழக்கப்படுத்திக் கொள்ள, புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறாள். ஃபிரிடாவின் இந்த உத்தரிப்பை Salma Hayek மிக அழகாகப் பின்வருமாறு கூறுகிறார்: 'She enjoyed every moment of her life, so intensely... Even the sufferings. She endured the pain, smelled and tasted eve part of it...' (அவள் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் அனுபவித்தாள் மிகவும் நெருக்கமாக, வலியைக் கூட. அவள் வாதையை உத்தரித்தாள், அதன் ஒவ்வொரு பகுதியையும் முகர்ந்தும் ருசித்தும் கொண்டு...)

தகப்பனால் பரிசளிக்கப்பட்ட கன்வாஸும் தூரிகைகளும் மாத்திரமே அவளுக்கென்றிருந்த ஆறுதல். துயரம் வர்ணங்களாய், கோடுகளாய் மூர்க்கத்துடன் கன்வாஸில் படிகிறது. தீர்க்கமான, அழுத்தமான கோடுகளும் வண்ணங்களும் கொண்டு வரையப்படுகிற இக்காலத்திய சுயபிரதிமைகள் உணர்ச்சிகளெதுவுமற்ற இறுகிய பாவம் கொண்டவை.

இரண்டு வருட உத்தரிப்புக்குப் பின்னராக மெல்ல மெல்ல குணமடைகிற ஃபிரிடாவில் வாதைமிகும் தருணங்கள் மிக அழுந்திப் பதிந்து போய்விடுகின்றன. தான் தனது பெற்றாருக்குச் சுமையாக இருக்கக் கூடாது, தான் தானாக, சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பது போன்ற யோசனைகள் உந்தித் தள்ள ஃபிரிடா தனது சுய பிரதிமைகளுடன் வீதிகளில் இறங்குகிறாள்.

இங்குதான், கம்யூனிஸ்ட்டும் சக யதார்த்தபாணி ஓவியனுமான டியாகோ ரிவேராவைச் சந்திக்க நேர்கிறது. டியாகோ ரிவேரா மெக்சிக்கோவின் புகழ்மிக்க புரட்சிகர ஓவியனாய் இருந்த காலமது. ஃபிரிடா விட்டுக்கொடுக்காதவளாக, உறுதி மிக்கவளாக, விமர்சனங்களை எதிர்பார்ப்பவளாக இருக்கிறாள். டியாகோ ரிவேரா ஃபிரிடாவால் மிகவும் கவரப்படுகிறான்.

இதன் பின்னர் ஃபிரிடாவின் வாழ்க்கை, அவளது பயணங்கள், டியாகோ ரிவேராவுடனான விலகல், லெஸ்பியன் ஈர்ப்புகள் (ரீனா மொடொற்றி, சவேலா வர்காஸ்), ட்றொட்ஸ்கியுடனான உறவும் காதலும், மீண்டும் மீண்டும் வலி என நகர்கிறது.

***

ரிவேராவுக்கான நிபந்தனைகள் மிக்க காதல், இடதுசாரி அரசியல், வலிகளுடனிருத்தல், படைப்பூக்கம் என ஃபிரிடாவின் உலகம் சுழல அவ்வுலகிலிருந்த மிகவும் சுவாரசியமான துண்டங்களை ஜுலி ரேமொர் பொறுக்கி இணைக்கிறார்.

ஃபிரிடாவின் ஓவியங்கள் ஒவ்வொன்றுமே அவளுடைய சொந்த வாழ்வின் அத்தியாயங்கள் தாம். தன் வாழ்வனுபவங்களில் இருந்து தனது படைப்புகளுக்கான சங்கேதங்களை, குறியீடுகளை, உந்துசக்தியை ஃபிரிடா பெற்றுக்கொண்டாள். இதை ஜுலி ரேமொர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஃபிரிடாவின் முக்கிய ஓவியங்கள் சிலதை அவளது வாழ்வின் முக்கிய அத்தியாயங்களுடன் அழகாக இணைப்பதன் மூலம் கதை நகர்கிறது.

நான் முதலில் கூறியது போலவே இத்திரைப்படம் ஃபிரிடாவின் கலைக்கு நிகரான தன்மைகள் கொண்டது.

நேரடித்தன்மைகள் கொண்ட சுயபிரதிமைகள் வரையப்பட்ட ஆரம்பகாலக் காட்சிகள் தீர்க்கமான நேரடியான ஒளிச்செறிவுடனும் வர்ணங்களுடனும் படம் பிடிக்கப்பட்டிருக்கும். சற்றுக்காலம் செல்ல ஃபிரிடாவின் ஓவியங்கள் சர்ரியலிஸ, அரூபத்தன்மைகளைப் பெறுகிற போது காட்சியமைப்பின் தன்மைகள் மாறுபடுகின்றன.

ரிவேரா ஓரிடத்தில் கூறுகிறார்: "நான் எதைப் பார்க்கிறேனோ அதை வரைகிறேன். ஆனால் நீ... நீ இங்கிருந்து வரைகிறாய் (ஃபிரிடாவின் நெஞ்சைத் தொட்டு)." அகம் சார்ந்த உலகின் யதார்த்தம் பயங்கரமானதும் இருண்மையானதுமாகும். இக்காலகட்டத்தைச் சித்திரிக்கும் திரைப்படக் காட்சிகளில் அரூபமான மீயதார்த்தக் குறியீடுகள் கையாளப்பட்டிருக்கும்.


ஃபிரிடாவின் ஓவியங்களில் வர்ணப் பயன்படுத்தல்கள் காலத்துக்குக் காலம் மாறி வந்திருப்பதை[3] ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். திரைப்படத்திலும் குறிப்பிட்ட காலங்களில் குறித்த வர்ணச் செறிவுகள், வெளிச்சங்கள், ஒளிச்செறிவுகள் பயன்படுத்தப்பட்டு ஃபிரிடாவின் அக உலக மாற்றங்கள் சுட்டப்பட்டிருக்கும்.

இதே காலப்பிரக்ஞையை, படத்தின் காட்சிப் பின்புலங்களில் உள்ள சிறுசிறு பொருட்களிலும் ஜூலி ரேமொர் பிரயோகித்திருக்கிறார். ஆரம்பத்தில் ஃபிரிடாவும் ரிவேராவும் லெனின், ஸ்ராலின், ட்ரொஸ்கி என வழக்கமான இடதுசாரித் தலைவர்களின்பால் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். காலத்துக்குக் காலம் இந்த ஈர்ப்பு மாறுகிறது. 50களில் ஃபிரிடாவின் நோய் மிகுந்த காலத்தில் இந்த இடதுசாரி ஈர்ப்பு சீனாவின் மாஓ சேதுங்கை நோக்கித் திரும்புகிறது. படத்தின் முதல்பாதியிலேயே அரசியல் விவாதங்கள் முடிந்துபோய் ஃபிரிடாவின் தனிப்பட்டவாதை கவனத்துக்குரியதாக மாறிவிட்டதில் மாவோவை விவாதிக்க திரையில் காட்சிகள் வைக்க முடியாது. ஜூலி ரேமொரின் உத்தியைக் கவனிக்கலாம்: ஃபிரிடா கட்டிலில் படுத்திருக்கிறார், கணவரான டியாகோ ரிவேரா உரையாடல் முடிந்து வெளியேறுகையில் கதவருகே சுவரில் மாட்டப் பட்டிருக்கிற மாஓவின் புகைப்படம் நம் பார்வையில் படுகிறது. கமெரா அப் புகைப்படத்தை ஓர் முக்கிய பொருளாகக் காட்ட முனையாமல் இயல்பாக நகர்கிறது. ஃபிரிடாவின் அரசியல் சார்புகளை அறிந்த ஒருவருக்கு இப்புகைப்படம் காட்சியில் வந்துபோகிற நூற்றுக்கணக் கான பொருள்களில் ஒன்றாக இருக்க முடியாது. இதைப் போலவே, அவ்வறைக்குள் இருக்கும் ஒவ்வொரு பொருள்களின் பின்னும் களைப்பைத் தரும் ஆராய்ச்சி மறைந்திருக்கிறது. ஃபிரிடாவின் மிக விநோதமான உலகத்தைத் திரையில் கொணர்வது சுலபமான காரியமில்லை.

ஓவியங்களை வாழ்க்கையுடன் ஜூலி ரேமொர் பிணைக்கும் விதம் அற்புதமானது. அமெரிக்காவில் டியாகோவுடனான பொழுதுகள் கசந்து போக ஃபிரிடா மெக்சிக்கோவுக்குத் திரும்ப விரும்புகிறாள். சூடான வாய்த்தர்க்கத்தின் பின்னர் ஆத்திரத்துடனும் கண்ணீருடனும் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறாள். கொட்டுகிற பனிக்குள் கொடியொன்றில் மெக்சிக்க அங்கியொன்று தொங்கி அசைகிறது. கற்பனையான இத்தருணத்தில் இருந்து பெறப்படும் இக் குறியீடே பிற்பாடு 'My dress hangs there' எனும் ஓவியமாகிறது.

what the water gave me, Portait of the cropped hair, Broken Column உட்பட பல ஓவியங்களின் உருவாக்கம் கவித்துவமான காட்சிப்படுத்தல்களூடாய் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆவணப்படங்களில் படைப்பு உருவான விதம் குறித்து நீள நீள வசனங்களில் விளக்கிக் கொண்டிருப்பார்கள். இங்கு அவ்வாறன்றி, பொருத்தமான பகுதிகளுடன் ஓவியத்தின் உருவாக்க நிலைகள் பொருத்தி இணைக்கப்பட்டு படைப்பாக்கம் சித்திரிக்கப்படுகிறது.


திரைப்படத்தின் இறுதியில் ஃபிரிடாவின் மரணத்தைச் சுட்டும் முகமாய் எடுக்கப்பட்ட காட்சியில் உடல்களோ உரையாடல்களோ இல்லை. ஃபிரிடாவின் ஓவியமான Dream இன் நகலான முப்பரிமாண Installation ஐப் பயன்படுத்துகிறார் ஜூலி ரேமொர். மரணம் பற்றிய ஃபிரிடாவின் மேற்கோளொன்று திரையில் அசைந்து மறைகிறது. பின்னர் இரண்டடுக்குப் படுக்கையொன்றின் மேற்தட்டில் ஒழுங்கு குலைந்து பொருத்தப்பட்ட எலும்புக்கூடொன்றும், கீழ்தட்டில் நித்திரை செய்கிற ஃபிரிடாவின் சுயபிரதிமையும் காட்டப்படுகிறது. ஃபிரிடாவின் உடல்மீது பசிய தாவர இலைகள் படர்ந்திருக்கிறது. அந்தரத்தில்



ஆதாரங்களற்று அசைகிற கட்டில் சில விநாடிகளில் வெடித்துத் தீப்பிடிக்க ஆரம்பிக்கிறது. ஃபிரிடாவின் உடலெங்கும் பரவும் தீயில் அவள் கருகுவதில்லை, சுவாலையின் உக்கிரம் அதிகரிக்க ஃபிரிடாவின் முகத்தில் பிரகாசமும் புன்னகையும் அதிகரிக்கின்றன. இந்த மெல்லசைவுக் காட்சி மெதுவாக அசையாநிலைக்கு வந்து end credits காட்டப்படுகிறது. end credits மாறுகையில் ஓவியத்தின் வர்ணங்கள் மாறுபடுகின்றன. படம் முடிகிறது.

நியூயோர்க், பாரிஸ் போன்ற இடங்களில் ஃபிரிடாவின் அனுபவங்களைத் திரையில் காட்ட பொருத்தமான காட்சிகளுடன் பின்னணியில் ஃபிரிடாவின் நாட்குறிப்புகள் மற்றும் கடிதங்களில் இருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் ஒலிக்கும் படி செய்திருப்பார் இயக்குநர். ஆவணப்படங்களின் உத்திதான் என்கிற போதிலும் அவ்வாறு உணர நேர்வதில்லை.

கண்காட்சியில் பேசும் ரிவேரா சொல்கிறார்.



"வரலாற்றில் இதற்கு முன் வேறொருத்தியும் துயரமிக்க கவிதையை கன்வாஸில் கொணர்ந்தது இல்லை (agonized poetry on canvas)". வாதைமிகும் கவிதையான ஃபிரிடாவைத் திரையில் உயிர்ப்பிக்க ஜூலி ரேமொர் - இன் வலிமையான படிமங்கள், visual sense என்பவற்றோடு Salma Hayekஇன் ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் கூடிய நடிப்பு, வலிமிக்க பாரம்பரிய மெக்சிக்க இசை, சிறந்த திரைக்கதையமைப்பு, ஒளிப்பதிவு என அனைத்துமே சிறப்பான முறையில் ஒருங்கிணைந்திருப்பது மிகவும் சிறப்பானது.

வசனங்கள் மிகவும் கவித்துவச் செறிவுள்ளவை. ட்ரொட்ஸ்கியுடனான ஃபிரிடாவின் உறவில் முக்கியமான அம்சம் அவர்களிருவரும் மிகவும் ஆழமான வலிகளைப் பகிர்ந்து கொண்டார்கள் என்பதுதான். ட்ரொஸ்கியின் இழப்புகள், அலைச்சல்களின் வலியுடன் ஃபிரிடாவின் ஆன்மா தன்னை ஏதோ ஒரு விதத்தில் அடையாளம் கண்டுகொள்கிறது. ட்ரொட்ஸ்கி ஓவியங்களைப் பற்றிக் கூறுகிறார் "they convey a message to everyone that they are so alone in pain" ஃபிரிடாவும் ட்ரொட்ஸ்கியும் ஒருவிதத்தில் mutual painஐப் பகிர்ந்துகொள்கிறவர்கள் என்பதை உணர்ந்த பார்வையாளர்களுக்கு இவ்வசனங்கள் முக்கியமானவை. ஃபிரிடா தன்னுடலுக்கு நடந்த அறுவைச் சிகிச்சைகள், ஏற்பட்ட ரணங்கள் குறித்து ட்ரொட்ஸ்கிக்குக் கூறுகிறாள்: "நான் உடைந்துபோய் பொருத்தப்பட்டிருக்கிறேன். உடைந்து பின் மீளப் பொருத்தப்பட்ட என்னுடல் உடைந்த துண்டுகளாலானது" ஃபிரிடாவின் படைப்புகளில் இருக்கிற சிதறுண்ட தன்மையை, அவ்வுடைவின் சிக்கலான வலியை, புதிர்மையை மிக அழகாக அவள் சொல்கிறாள்: "I'm like a jigsaw puzzle"

ரிவேரா ஃபிரிடாவிடம் மன்னிப்புக் கேட்டு, மீளவும் இணைந்து வாழ விரும்புவதாகச் சொல்லும் போது "I miss us" என்கிறான். வழக்கமாகக் காதல் பிரிவுகளில் சொல்லப்படுகிற "I miss you" வைப் போலல்லாது இது மிகவும் ஆழமான அர்த்தவிரிவுகள் கொண்டது. ஃபிரிடாவும் டியாகோவும் பிரிந்திருத்தலின் மூலம் இணைந்திருந்த காலங்களின் நேசத்தை அதன் அழகை இழந்து போகிறார்கள். டியாகோ வேதனையுடன் கூறுகிறான்: "I miss us"

ஃபிரிடாவாக நடித்திருக்கும் சல்மா ஹயக்கும் மெக்சிக்க பின்னணி கொண்ட ஒருவர். ஃபிரிடாவை மிக அற்புதமாக உயிர்ப்பிக்க முடிகிறது சல்மாவுக்கு. ஃபிரிடாவின் கலை மீது சல்மா ஹயக் கொண்டிருக்கும் அபார ஈடுபாடுதான் இதற்கு காரணமாக இருக்க முடியும். ஹொலிவூட்டின் மிக விரும்பப்படும் அழகிகள் வரிசையில் இருந்தாலும் கூட சல்மா மிகவும் மாறுபட்ட இரசனைகள் கொண்டவர். ஜெனிபர் லோப்பெஸ், இவா லொங்கொரியா போன்ற இதர லத்தின் அமெரிக்கப் பின்னணி கொண்ட நடிகைகளைப் போலல்லாது தனது மெக்சிக்க அடையாளம் குறித்து பெருமை கொள்பவர் சல்மா. 12 வயதிலிருந்தே ஃபிரிடா கலோவின் ஓவியங்களுடன் தனக்குப் பரிச்சயம் உண்டெனக் கூறும் சல்மா ஹயக் தனது 20களில் இத்திரைப் படம் பற்றிய திட்டங்களுடன் தயாரிப்பு நிறுவனங்களில் ஏறி இறங்கி அலைந்திருக்கிறார். 8 வருட அலைச்சலின் பின் ஃபிரிடாவின் கலையை நேசிக்கும் சிலரினதும் தனதும் கைக்காசைப் போட்டு மிராமக்ஸ் நிறுவனத்தின் சிறிய உதவியுடன் படத்தை ஆரம்பிக்கிறார்.

ஃபிரிடாவின் மிக விசேடமான உலகைப் புரிந்துகொள்ளக்கூடிய, அவளுடைய வலியை படிமங்களால் செதுக்கக் கூடிய ஓர் இயக்குநரை எட்டு வருடங்களாகத் தேடியலைந்ததாய்க் குறிப்பிடுகிறார் சல்மா. ஜூலி ரேமொர் அதைச் சாத்தியமாக்கியிருக்கிறார்.

***

வழக்கமான ஹொலிவூட் தயாரிப்புகளில் இடம் பெறுகிற அரசியல் குழறுபடிகள் இத்திரைப்படத்தில் இயன்றளவு தவிர்க்கப்பட்டிருக்கிறதைப் பாராட்டியாக வேண்டும். கதாபாத்திரங்களின் இடதுசாரி அரசியல் நிலைப்பாடுகள் எவ்வித ஊறுபாடுகளுமின்றி காட்டப்பட்டிருப்பது முக்கிய அம்சம். டியாகோ ரிவேராவின் கொள்கையுறுதியை விட்டுக்கொடுக்காத தன்மையை ரொக்பெல்லர் பவுண்டேஷன் ஓவியம் தொடர்பிலான காட்சிகளில் நாம் காண்கிறோம். ட்ரொட்ஸ்கியை ஒரு sexual being ஆக சித்திரிக்கையில் அவ்வுறவு கொச்சைப் படுத்தப்படாமல் காண்பிக்கப்படுகிறது. ஃபிரிடாவின் முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுகளும் படத்தில் காண்பிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் வந்து பேட்டி தருகிறபோது ஃபிரிடா சொல்கிறாள் "அமெரிக்க சொகுசு என்பது ஒரு மாயை (American comfort is a myth)". பாரிஸில் ஃபிரிடாவின் கண்காட்சிக்குப் பலத்த வரவேற்புக் கிடைக்கிறது. ஃபாஷன் சஞ்சிகையான Vogue இன் அட்டைப்படத்தில் ஃபிரிடாவின் மெக்சிக்க பாணி அலங்காரம் பிரசுரமாகிறது. ஆனால் ஃபிரிடா கிறிஸ்டீனாவுக்கு எழுதும் கடிதத்தில் "மெக்சிக்க சுயம் இங்கொரு புதினப் பொருளாயிருக்கிறது. நான் பிரெஞ்சுக்காரர்களில் Object of curiosity ஆக இருக்கிறேன்."

டியாகோ - ஃபிரிடா திருமணத்தின்போது கிறிஸ்தவ முறைப்படியான வெண்ணிற ஆடையில் அழகிய மணமகளாய் அலங்கரிக்கப்பட்ட ஃபிரிடா கடைசி நிமிடம் அவ்வாடையைக் களைந்து கிளிப்பச்சை நிறத்திலான பாரம்பரிய மெக்சிக்க அங்கியொன்றை அணிந்து கொள்கிறாள். மெக்சிக்க அடையாளங்கள் மீதான ஃபிரிடாவின் ஈர்ப்பு திரைப்படத்தில் பல இடங்களில் காட்டப்படுகிறது.

ஃபிரிடாவின் இருபாலுறவு விளைவுகளை (bisexu-

ality) அதிகம் அழுத்தம் தராமல் மேலோட்டமாகத் தொட்டிருப்பது மிகவும் பிரச்சினைக்குரியது. இத்திரைப் படத்தின் மிகவும் சிறந்த காட்சிகளில் ஒன்று ஃபிரிடாவின் ஓவியமான Portrait of the cropped hair உருவாகும் விதம். ஃபிரிடா மது அருந்தியபடி தனது தலைமுடியை வன்மையான முகபாவத்துடன் கத்தரிப்பார். பின்னணியில் உடைந்த ஆனால் கணீரென்ற குரலில் மெக்சிக்கப் பாடலொன்று இசைக்கப்படும். நிலம்முழுதும் சிதறிய மயிர்க்கறைகளுக்கு நடுவில் கதிரையில் ஆண் உடையில் ஆண்மைமிக்க முகத்துடன் ஃபிரிடா அமர்ந்திருப்பார். தலைமயிரை வெட்டுதல், ஆண் உடை அணிதல், ஆண்மையான முகபாவத்தை ஓவியங்களில் அழுத்தமாக்குதல் என்பவை மிகவும் வெளிப்படையாக ஃபிரிடாவின் masculine self சார்ந்தவை. திரைப்படத்தில் ஃபிரிடாவின் பாலியற் சிக்கலையும்; Portrait of the cropped hair ஓவியத்தையும் இணைக்கும் இழைகள் பூடகப்படுத்தப்பட்டேனும் இல்லை. ஆனால், ஃபிரிடாவின் ஓவியங்களின் gender ambiguity (பாலின அடையாளக் குழப்பம்) பெரிதும் அறியப்பட்ட, விவாதிக்கப்படுகிற ஒன்று. இதைப்போலவே புகைப்படக் கலைஞரான ரீனா மொடொற்றியுடனான லெஸ்பியன் உறவு ஒரு நடனக் காட்சியுடன் மட்டுப்படுகிறது. படத்தின் உப கதாபாத்திரங்களில் ஒன்றாக வந்து போகும் அற்புதமான மெக்சிக்க பாடகியும் 5 வருடங்கள் ஃபிரிடாவின் நெருங்கிய காதலியுமாய் இருந்த Chavela Vargas பற்றிய காட்சிகளும் படத்தில் இல்லை. இத்திரைப்படத்தில் இசைக்கப்படுகிற 'லா லையரோனா' பாடல் சவேலா வர்காஸால் பாடப்பட்ட ஒன்று. DVDயின் இணைப்பாக தரப்படும் நேர்காணல் வீடியோக்களில் ஒன்றில் சவேலா வர்காஸ் மிகவும் அழகாக ஃபிரிடா தனது குரலுடன் மூர்க்கமாகப் பிணைக்கப்பட்டிருந்ததை நினைவு கூர்கிறார். ஃபிரிடாவின் கலைக்கும் அவளது பெண் காதலிகளுக்கும் உள்ள தொடர்பு அளப்பரியது. ஜூலி ரேமொர் இந்த இடத்தில் மௌனம் சாதித்திருக்கிறார்.

இந்த மௌனம் பாரிய இழப்புத் தானெனினும் கூட ஃபிரிடாவின் கலையை, அவளது வாழ்வின் விசேடமான வித்தியாசங்களை உணர்வுபூர்வமாய்க் கொணர்வதில் ஜூலி ரேமொரும் சல்மா ஹய்க்கும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.



---

1 - அதிகமும் பிக்காஸோவின் கியூபிஸம் ஃபிரிடாவின் காலத்தின் முக்கிய போக்காக இருந்தது. Fridaவின் சுயபிரதிமைகளை சல்வடோர் டாலி, அந்த்ரே ப்ரெதனின் சர்ரியலிஸ பாணி ஓவிய வகைமாதிரிகளுடன் இணைந்து வாசிக்கவியலுமெனினும் கூட ஃபிரிடாவின் ஓவியங்களுக்கும் சர்ரியலிஸத்துக்கும் அவை வரையப்பட்ட காலங்களில் எவ்வித தொடர்புகளும் இருக்கவில்லை. அவை வரையப்பட்டு சில காலங்கள் கடந்து சர்ரியலிஸ்டுகள் தமது புரிதல்களுக்கேற்ப விளக்கமளித்ததன் மூலம் ஃபிரிடாவின் ஓவியங்களின் சர்ரியலிசத் தன்மைகள் கவனம் பெறலாயிற்று.

2 -Frida, Direction: Julie Taymore. Cast: Salma Hayck, Alfred Molina, Ashley Judd, Mia Maestro. Year: 2001, Release: Miramax

3 - பிக்காஸோவின் வர்ணக் காலங்கள் - blue period, pink period போல.

* Frida Paintings Source: Frontiers: A Journal of Women Studies, Vol. 13, No. 3. (1993), pp. 139 - 151.
Published by: University of Nebraska Press ◆

## எதிர்பார்க்கின்றோம்...

'கலைமுகம்' காலாண்டு கலை, இலக்கிய, சமூக இதழுக்கு படைப்பாளிகளிடமிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், கலை இலக்கியம் சார்ந்த சமகால நிகழ்வுகளின் பார்வைகள், தகவல்கள் என்பவற்றை எதிர்பார்க்கின்றோம்.

படைப்புக்களை அனுப்பும்போது உங்கள் முகவரியை தவறாது குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகின்றோம். முகவரியின்றி வருகின்ற படைப்புகள் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் உங்கள் படைப்புக்கள் எதுவானாலும் அவற்றை தெளிவான கையெழுத்தில் அல்லது கணினியில் ரைப் செய்து அனுப்புமாறு வேண்டுகின்றோம்.


அடுத்த இதழுக்கான உங்களது ஆக்கங்களை விரைவாக அனுப்பி வையுங்கள். மற்றும் 'கலைமுகம்' பற்றிய உங்களது கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள் மற்றும் கருத்துக்களை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
'கலைமுகம்'
திருமறைக் கலாமன்றம்
238 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# மலைகளின் மூதாட்டி

எப்பொழுதும்
நீ
கதைசொல்ல ஆரம்பிக்கும் இரவுகளின் முடிவில்
மலைகளிலிருந்து
இறங்கி வரத் தொடங்கும்
துயரத்தின் ஓடையொன்று

தாங்க முடியாச் சுமைகளின்
கனம் வலுக்கும் தருணங்களில்
பற்றியிருக்கும் பாறைகளை ஒவ்வொன்றாய்
நழுவவிடுவாய்
உணர்ச்சியின் விளிம்பில்
மரணத்தை அழைத்திடும் சரிவுகளைத் தாங்கி
நீ
அமைதியில் உறைந்திருப்பாய்



பூர்வீக குடிகள் விட்டுச் சென்ற தடயங்களைப்
பாறை இடுக்குகளில்
மூலிகைச் செடிகளிடையே பத்திரப் படுத்தியிருப்பாய்
வழிதவறிய ஆடுகளைத் தேடி வரும் சிறுவரிடம்
அற்புதங்களை மடியவிழ்ப்பாய்

நட்சத்திரங்கள்
வழிகாட்டும் இரவுகளில்
போகவிடாது பிணைத்திருக்கும்
ஆதி வேர்களை அசைத்துப் பார்ப்பாய்
உனையே பார்த்தவாறு ஓயாமல் கையசைக்கும்
வயல்காட்டு வெருளியோடு
மீறமுடியாத விதியதன்
நெடுங்கால வேதனையைப் பகிர்வாய்

ஈரத்தைக் குடிக்கவரும்
நிழல்தராச் சூரியனின் தண்டனைகளுக்குத்
தினந்தோறும் பயந்திருப்பாய்
மலையடிவாரத்து நீர்தேங்கிய கழனிகளில்
வீழ்ந்து நடுநடுங்கும்
மாபெரிய உன் விம்பம்.

**பஹீமா ஜஹான்**
*2008.02.18*

சிறுகதை

# பந்தயக் குதிரை

இயல்வாணன்

**வ**குப்பறையில் கடைசி வாங்கின் அந்தத்தில் ஓரமாக எப்போதும் அவனைக் காணலாம். உற்சாகம் கரை புரண்டு சத்த மிட்டபடி வகுப்பிற்குள் ஓடியாடித் திரியும் மாணவர்களிடையே எந்தவித சலனமு மில்லாமல் புத்தகமொன்றைப் புரட்டியபடி அவனிருப்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். குழப்படிக்காரர்கள் அவனது புத்தகத்தைப் பறித்துச் சீண்டினார்கள். அவ்வாறு சீண்டிய மாணவர்கள் பலரும் என்முன்னால் நிறுத்தப் பட்டனர். அவர்கள் தொடர்பில் அவன் என்னிடம் எப் போதும் குற்றச் சாட்டுக்களை முன்வைத்ததில்லை. சக மாணவர்கள்தான் அதை முன்வைத்தார்கள்.

அவன் அமைதியாக, தன்னடக்கமாக இருந்தான். அவனிடம் உற்சாகமான மனநிலையிருக்கவில்லையென்று நான் கருதினேன். ஆனால் அவனது உற்சாகம் அவனுடைய கண்களில் இருப்பதாகவே பின்னர் எனக்குத் தோன்றியது. புத்தகங்களைப் படிக்கும் போது அவனது விழிகளில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுவதை நான் அவதானித்திருக் கிறேன்.

எனது வகுப்பிலுள்ள மாணவர்களில் பெரும்பாலா னோர் நகரத்தின் பெரும் புள்ளிகளது பிள்ளைகள், மருத்து வர்கள், பொறியியலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், பெருவணிகர்கள் போன்றோரின் பிள்ளைகளாகவே அவர்கள் இருந்தனர். ஆடம்பரமும் கம்பீரமும் மிடுக்கும் அவர்களிடம் குடியிருந்தன. எல்லா வகைகளிலும் அவர்கள் போட்டிபோட்டுக் கொண்டிருந்தனர்.

புதிது புதிதாகப் புத்தகப்பைகளும், பயிற்சிப் புத்த கங்களும், சப்பாத்துக்களும் வாங்கி வருவார்கள். அவை பற்றித் தமக்குள் பெருமை பாராட்டுவார்கள். ஒருவன் வாங்கியதை விடச் சிறந்ததொன்றுடன் மற்றொருவன் வந்து அடுத்தநாள் அது பற்றிப் பெருமையாகக் கூறுவான். இப்படியே புதிய புதிய சங்கதிகள் ஒவ்வொரு நாளும் என் காதுக்கும் எட்டும்.

பெரும்பாலான மாணவர்கள் வீட்டில் பெற்றோரு டன் அலசிய விடயங்களைச் சொல்வார்கள். அவை சுயதம்பட்டங்களாகவோ, மற்றவரை ஏளனப்படுத்துவன வாகவோ இருந்தன. பிள்ளைகளின் கதைகளை நான் அலட்சியம் செய்வதில்லை. அதிக ஆர்வம் காட்டுவது மில்லை. ஆனால் மற்றவர்கள் போல அவன் ஒருபோதும் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. தன்னைப் பற்றியோ, வேறு சம்பவங்கள் பற்றியோ கூட அவன் எதையும் சொன்ன தில்லை. மற்றவர்கள் பிரலாபிக்கும் வேளைகளில் அவற்றில் அவன் ஆர்வம் காட்டியதில்லை.

நான் கற்பிக்கும் வேளைகளில் நிட்சண்யத்துடன் அவன் என்னை நோக்குவதை அவதானித்திருக்கிறேன். மற்றவேளைகளில் தலையைக் குனிந்தபடி புத்தகங்களில் கண்களை மேய விட்டிருப்பான். இல்லையென்றால் சாளரங்களூடாக நேரே தென்படும் மைதானத்தையோ, அதன் ஓரமாக நெடிதுயர்ந்து நிற்கும் புளியமரத்தையோ பார்த்துக் கொண்டிருப் பான். ஆரம்பத்தில் ஓரிரு தடவைகள் அப்படிப் பார்ப்பதையிட்டு அவனைக் கடிந்து பேசியிருக்கிறேன். அந்தக் கணங்களில் திடுக்குற்று மிரள விழித்து, என்னைப் பார்ப்பான். பிறகு தலையைக் குனிந்து கொள்வான்.

"என்னசேர்... உங்கடை வகுப்பிலிருக்கிற சைதன்யன் பாட்டுப் பாடுறானில்லை. கல்லுளி மங்கன் போலை பேசாமல் நிற்கிறான்" என்ற குற்றச்சாட்டை அழகியல் கற்பிக்கும் மேரி ரீச்சர் முதலில் முன்வைத்தார். பின்னர் சிறுவர் நாடகப் போட்டிக்கு மாணவர்களைத் தேர்வு செய்த ஆசிரியரும் அவனிடமிருந்து எந்த வெளிப்பாடுமில்லையென்று குறை கூறினார். வரவுப் பதிவின்போது "பிரசன்ற் சேர்" என்று கூறுவதைத் தவிர அவனது குரலைக் கேட்க முடியவில்லைத்தான்.

அதன் பின்னர் அவனுடன் வாய்மொழித் தொடர் பாடலை அடிக்கடி மேற்கொண்டேன். வினாக்களை எழுப்பி,

"ம்... சைதன்யன்... சொல்லும்" என்பேன்.

பல வேளைகளில் திடுக்கிட்டு "ம்..." என இழுத்திருக்கிறான். காலப் போக்கில் வினாக்களைக் கேட்டவுடன் விடையளிக்கும் தயார் நிலைக்கு முன் னேறியிருந்தான். வகுப்பறையில் பேச்சுக்களைப்பேசும் சந்தர்ப்பங்களில் தனது கீச்சுக் குரலால் உரத்துப் பேசும் நிலைக்கு வந்திருந்தான்.

அவனது அமைதிக்குப் பின்னால் ஒளிரும் திறமையை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் அவன் என்னை ஆகர்ஷித்தான். ஆனாலும் வகுப்பில் அவனால் முன்னணிக்கு வரமுடியவில்லை. தனது பிள்ளைகளின் வினாப் பத்திரங்களைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒற்றைப் புள்ளிக்காகச் சண்டையிடும் நிலையில் பெற்றோர்கள் இருந்தார்கள். குறித்த பிரபலங்களின் பிள்ளைகளின் நிலை என்ன என்று வினவி, அவர்களை முன்னணிக்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை அதிபரும், உபஅதிபரும், பகுதித் தலைவரும் அடிக்கடி இடித்துரைத்துக் கொண்டிருந் தார்கள். எனவே, சைதன்யனால் முன்னணிக்கு வரமுடிய வில்லை. நிலை அடிப்படையில் கடைசியிலிருந்தாலும் புள்ளிகளில் அவன் உயர் நிலையில் இருந்தான் என்ற அளவில் மகிழ்ச்சியாக இருந்தது.

❖❖

சைதன்யன் இப்போது ஐந்தாம் வகுப்பிலிருந்தான். படுக்கையைத் தவிர ஓய்வொழிச்சலில்லாமல் எல்லோரும்

> “நான் கற்பிக்கும் வேளைகளில் தீட்சண்யத்துடன் அவன் என்னை நோக்குவதை அவதானித்திருக்கிறேன். மற்றவேளைகளில் தலையைக் குனிந்தபடி புத்தகங்களில் கண்களை மேயவிட்டிருப்பான். இல்லையென்றால் சாளரங்களூடாக நேரே தென்படும் மைதானத்தையோ, அதன் ஓரமாக நெடிதுயர்ந்து நிற்கும் புளிய மரத்தையோ பார்த்துக் கொண்டிருப்பான்.”

படித்துக் கொண்டிருந்தனர். புலமைப் பரிசில் பரீட்சையோடு தனது சீவன் அடங்கிவிடும் போலுள்ளதென்று சக ஆசிரியை புலம்பினார். காலை நான்கு மணிக்கே தானும் எழுந்து மகனையும் எழுப்பிப் படிக்க வைக்க வேண்டும். பின்னர் பாடசாலை, அது முடிய பிரபல ஆசிரியரது ரியூசன், அடுத்து வீட்டில் பிரத்தியேக வகுப்பு, பின்னர் இரவு பத்து மணி வரை படிப்பு, பிள்ளையுடன் தானே மாய்வதாகவும், கணவர் வங்கியையே கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் சலிப்புடன் சொன்னார். “ஸ்கொலஷிப் முடியுமட்டும் பாணும் கடைச் சாப்பாடுந் தான். இல்லையெண்டால் சேவன்ற் கேளை அரேஞ் பண்ணுங்கோ” என்று கணவனிடம் தீர்மானமாகக் கூறிவிட்டதாகவும் அவர் சொன்னார்.

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் கெட்டிக்காரர் எனப் பெயரெடுத்தவர். பாடசாலைக்குப் புறம்பாக பல ரீயூசன் களிலும் கற்பித்து வருபவர். பல இடங்களிலிருந்தும் அவரிடம் படிக்க வருபவர்களுக்கு வசதியாக பிரத்தியேக ரீயூசன் சென்ரர் ஒன்றையும் நிறுவியிருந்தார். சென்றமுறை கூட அவரிடம் படித்த பலர் சித்தியடைந்திருந்தனர். பாடசாலையில் தன்னிடம் கற்பவர்களைக் கட்டாயம் தனது ரியூசனிலும் படிக்குமாறு வற்புறுத்துவார். ஆரம்ப நாட்களில் சைதன்யன் ரியூசனுக்குச் செல்லவில்லை. அதற்காகப் பலமுறை வகுப்பாசிரியரிடம் ஏச்சு வாங்கியிருக்கிறான். பின்னர் ஏனையோர் போலவே அவனும் அவரது ரியூசனுக்குச் சென்றான். சிறிது காலத்தில் அதிலிருந்து விலகி விட்டான்.

“ஏன் விலகினாய்?” என்று அவனிடம் கேட்டேன்.

பாடசாலையைவிட ரியூசன் மோசமாக இருப்பதாக அவன் சொன்னான். தினமும் கடுமையான அடிகளை வாங்க வேண்டியிருப்பதாகவும் நிறையச் செலவு செய்ய வேண்டியிருந்ததாகவும் அவன் கூறினான்.

“வீட்டிலிருந்தபடி ஸ்கொலசிப்புக்கு படிக்க முடியாதா சேர்?” என்று அவன் கேட்டான்.

“ஏன் முடியாது... என்றாலும் ரியூசனிலும் மேலதிகமாகப் படிக்கலாம்... இல்லையா...?” என்றேன்.

“என்னால் இப்பிடிப் படிக்க முடியாது, சேர்” அவனது விழிகளின் தீட்சண்யம் என்னைத் தைத்தது. அவனது சுதந்திர உணர்வை அது வெளிப்படுத்தியது. நான் வற்புறுத்தவில்லை. அவன் போய் விட்டான்.

❖❖

புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சில நாள்களே இருந்தன. பந்தயக் குதிரைகளோடு களத்தில் நிற்பவர்கள் போலப் பெற்றோரும், ஆசிரியர்களும், ரியூசன்காரர்களும் இயங்கிக் கொண்டிருந்தனர். மாணவர்களுக்கு மூச்சுவிடவே நேரமில்லை. எல்லோரும் ஏதோவொரு போதையில் மிதப்பதாக எனக்குப்பட்டது. எல்லோருக்கும் பந்தயக் குதிரைகளின் வெற்றியில் உரிமை கொண்டாடும் ஆர்வமே மேலோங்கியிருந்தது.

ஒருநாள் சைதன்யனின் வகுப்புக்குப் போனேன். அங்கே ஒரே அமர்க்களம். வகுப்பாசிரியர் தனது மானத்தைக் கெடுக்க வேண்டாமென்று வேண்டி, பிள்ளைகளை வைது கொண்டிருந்தார். சைதன்யன் சலனமேதுமின்றி ஒரு புத்தகத்தில் ஒன்றியிருந்தான். ஆசிரியருடன் பேசிவிட்டுப் புறப்படும்போது அவர் சொன்னார்.

“உங்கடை சைதன்யனும் வேறை மூன்று பேருந்தான் இந்தமுறை என்ரை கழுத்தை அறுக்கப் போறாங்கள்” நான்காம் வகுப்புவரை எல்லோருந்தான் எனது மாணவர்களாக இருந்தனர். மற்றவர்களை விட்டுச் சைதன்யனைச் சுட்டியது கேலியாகத் தோன்றியது. ஒரு புன்னகையுடன் பேசாமல் வந்து விட்டேன்.

❖❖

புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. பலரும் முண்டியடித்து இணையத்தில் பார்த்துக் கொண்டிருந்தனர். எனக்குச் சைதன்யனின் பெறுபேற்றைப் பார்க்க ஆவலாயிருந்தது. அவனோ அதைப் பற்றிப் பொருட்படுத்தவேயில்லை. “வருந்தானே” என்ற ஒற்றை வார்த்தையுடன் பேசாதிருந்தான்.

மாலையில் பாடசாலை தனக்கான பெறுபேற்றைப் பெற்றிருந்தது. வகுப்பாசிரியர் முதலில் பார்த்துவிட்டு மகிழ்ச்சியோடு வந்தார். என்னைக் கண்டதும் முகத்தைத் திருப்பி வேறுபக்கம் பார்த்தபடி சென்றுவிட்டார். பாடசாலையில் சைதன்யனே அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தான். மாவட்டத்திலும் அவனே முதலிடம். தேசிய ரீதியில் மூன்றாமிடம். கேட்கவே மகிழ்ச்சியாக இருந்தது.

அதிபர் பத்திரிகைகளுக்கு தமது பெருமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். நான் அங்கிருந்து புறப்பட்டு சைதன்யனுக்கு விருப்பமான புத்தகப் பொதியொன்றுடன் அவனது வீட்டிற்குச் சென்றேன். அங்கே அவனது வகுப்பாசிரியர் உட்கார்ந்திருந்தார். சைதன்யனில் தான் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்ததாகவும், அவன் முதலாவதாக வருவானென்று தான் முன்னரே எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் கூறினார். என்னைக் கண்டதும், “வாங்கோ சேர்” என விழித்த அவர், சைதன்யனின் பெற்றோரைப் பார்த்து,

“இந்த வெற்றிக்கு நான் மட்டுமில்லை, மூன்றாம், நான்காம் வகுப்பில் படிப்பித்த இந்த சேருந்தான் காரணம்” என்றார். அதைக் கேட்க அருவருப்பாக இருந்தது. கூடவே கோபமும் வந்தது. முகத்தைக் கடுமையாக்கியபடி பேசமால் இருந்தேன். “என்ன மனிசர்கள்...” மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

அவர் புறப்பட்டபின்னர் சைதன்யனைப் பாராட்டினேன். “இந்த வெற்றி உனது தனியாற்றலுக்குக் கிடைத்த வெற்றி. இதிலை நாங்கள் யாரும் உரிமை பாராட்ட முடியாது” என்று சொன்னேன். ஆனால் அவனோ அதை மறுத்து ஆசிரியரும் பெற்றோரும் தனது வெற்றிக்குக்

காரணமென்று பணிவோடு கூறினான்.

நான் புறப்பட்டு வந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் பத்திரிகைகளில் அவனது படம் வந்திருந்தது. கூடவே பாடசாலை பாராட்டி வாழ்த்திப் பெருமையை வெளிப்படுத்தியிருந்தது. வகுப்பாசிரியரது பிரத்தியேக ரியூசனும் தமது நிறுவனத்தின் சிறப்பான மாணவனாக சைதன்யனை இனங்காட்டி, அவனது சாதனையைப் பாராட்டி விளம்பரம் தேடியிருந்தது.

> “அவனது அமைதிக்குப் பின்னால் ஒளிரும் திறமையை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் அவன் என்னை ஆகர்ஷித்தான். ஆனாலும் வகுப்பில் அவனால் முன்னணிக்கு வரமுடியவில்லை. தனது பிள்ளைகளின் வினாப் பத்திரங்களைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒற்றைப் புள்ளிக்காகச் சண்டையிடும் நிலையில் பெற்றோர்கள் இருந்தார்கள்.”

❖❖

சைதன்யன் இப்போது தேசியப் பாடசாலையொன்றில் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, பிரபலங்களின் பிள்ளைகள் பலரும் அவனுடன் கூடப் படித்தனர். அவனிடம் முன்பைவிட உற்சாகமும் துருதுருப்பும் கூடியிருந்தன. எனினும் புத்தக வாசிப்பும் அவனுடன் கூடவேயிருந்தது.

“உனது நண்பர்கள் யார்?” என்று ஒருமுறை அவனிடம் கேட்டேன்.

“எனக்கு எல்லோரும் நண்பர்கள்தான். ஆனால் அவர்கள்தான் என்னைத் தங்களுடை நண்பர்களாகக் கருதவில்லை.” என்று அவன் பதிலிறுத்தான். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. மீண்டும் அவன் தொடர்பில் அக்கறை காட்டினேன். அப்போதுதான் அவனது பெறுபேறே அவனுக்கு எதிரியாயிருந்ததைக் கண்டு கொண்டேன்.

அவனுக்குக் கற்பிக்கும் ஆசிரியரொருவரும் ரியூசன் சென்ரர் வைத்திருந்தார். அதில் சேருமாறு சைதன்யனைப் பலமுறை கேட்டும் அவன் சேரவில்லை. அதனால் அவர் அடிக்கடி அவனை இகழ்ந்து பேசுவதாகச் சக மாணவனொருவன் என்னிடம் சொன்னான். “காசு கட்டியா நீ ஸ்கொலஷிப் பாஸ் பண்ணினாய்?” என்றும் அவர் கேட்டாராம். எனக்கு இதைக் கேட்கும் போதே கோபமாயிருந்தது. கண்களும் கலங்கின. தவணைப் பரீட்சையில் அந்த ஆசிரியரது பாடத்தில் அவன் புள்ளிகளில் பின்தள்ளப்பட்டான். உயர் புள்ளி பெற்றவனோ “நீ காசாலை என்னை முந்தினாய். இப்ப நான் உண்மையாய் முந்தீட்டன்... பார்த்தியா?” என்று ஏளனஞ் செய்தான். அவனைப் போலவே சக மாணவர்கள் பலரும் சைதன்யனை பொறாமையோடுதான் நோக்கினர்.

எனக்குச் சங்கடமாயிருந்தது. இப்படியே விட்டால் அவனது உளநிலை பாதிக்கப்பட்டுவிடும். வேறு பாடசாலைக்கு அவனை மாற்றுவது நல்லதெனப்பட்டது. அவனை அணுகி ஆறுதல் கூறினேன். வேறு பாடசாலைக்கு மாறிவிடுமாறு வற்புறுத்தினேன். அவனோ அதைப் பொருட்படுத்தாமல் சிரித்தான்.

“சேர், நல்ல மனப்பாங்கு பற்றி இந்தச் சேர்தான் எனக்குச் சொல்லித் தந்தவர். என்னட்டை அது இருக்குது. இவரிட்டையும், மற்ற மாணவரிடத்திலையும் அது குறைவாக இருக்குப் போலை... அதுக்காக நான் ஏன் மாறவேணும்?” அவனது முதிர்ந்த வார்த்தைகளூடே விழிகளின் தீட்சண்யம், ஒளிர்ந்து, சூரியக் கதிர்களாகப் பிரகாசித்து என்னை நிலை குலைய வைத்தது. ◆

## கொழும்பில் நடந்த ‘கலைமுகம்’ அறிமுக நிகழ்வு

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் திருமறைக் கலாமன்ற வெளியீடுகளான ‘கலைமுகம்’ - கலை, இலக்கிய, சமூக இதழின் 47 ஆவது இதழ் மற்றும் ‘இசைநாடகப் பாடல் மெட்டுகள்’ நூல் - இறுவட்டு ஆகியவற்றிற்கான அறிமுக நிகழ்வு 31.08.2008 மாலையில் கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு 13, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் பணிமனையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தேசிய கலை, இலக்கியப் பேரவையின் பொதுச்செயலாளர் திரு. சோ. தேவராஜா தலைமைதாங்கினார்.

வெளியீடுகளுக்கான அறிமுக உரைகளை கலைமுகம் சஞ்சிகைக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோ. யோண்சன் ராஜ்குமாரும், ‘இசைநாடகப் பாடல் மெட்டுகள்’ நூல் - இறுவட்டிற்கு அதன் தொகுப்பாளர்களில் ஒருவரான திரு. தை. யஸ்ரின் ஜெலூட்டும் வழங்கினார்கள். ஆய்வுரைகளை திருமதி வசந்தி தயாபரன், திரு. வதிரி இரவீந்திரன் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து அறிமுக முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, இசைநாடக பாடல் மெட்டுக்கள் நூல் - இறுவட்டு பிரதிகளை நிகழ்வின் தலைவர் சோ. தேவராஜாவும், ‘கலைமுகம்’ சஞ்சிகை பிரதிகளை வதிரி இரவீந்திரனும் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து யோ. யோண்சன் ராஜ்குமார், தை. யஸ்ரின் ஜெலூட் ஆகியோர் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

நிகழ்வில் வரவேற்புரையை கொழும்பு திருமறைக் கலாமன்ற எழுதுவினைஞர் திரு. கு. சதீஸ்குமாரும், நன்றியுரையை கொழும்பு திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திரு. அம்புறோஸ் பீற்றரும் வழங்கினார்கள்.



# பாடசாலைகளிலிருந்து முகிழ்ந்தெழும் சஞ்சிகைகள்

## ஒரு பார்வை

தமின்

"கையில என்ன ?"

விடுப்புக் கேட்ட நண்பரின் விழிகள் என் பதிலைக் கேட்டதும் வியப்பால் விரிந்தன.

"பள்ளிக்கூடப் பிள்ளையள் விடுகிற சஞ்சிகை!"

நான் வைத்திருந்த சஞ்சிகைகளை வாங்கிப் பக்கங்களைப் புரட்டியவரின் ஆச்சரியம் குறைவதற்குப் பதிலாக இன்னும் அதிகமாயிற்று.

"இது பள்ளிக்கூடப் பிள்ளையள் விடுகிற சஞ்சிகையோ? நம்பேலாமல் கிடக்கு!"

தொடர்ந்தும் ஆச்சரியத்துக்குள் மூழ்குகின்ற என் நண்பரைப் போலவே, பலரையும் புருவம் உயர்த்திப் பார்க்க வைத்த இந்தப் பாடசாலைச் சஞ்சிகைகள் பற்றி பேசுவதற்கான எத்தனித்தல் இயல்பாகவே எழுகின்றது.

ooo

பாடசாலைகளில் அவ்வப்போது செயற்பாட்டு இருப்பினை நிரூபிப்பதற்காக, கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியிடப்படுவதுண்டு. அவையும் அநேகமாக ஓராண்டுக்கு ஒருமுறை மட்டுமே. சில வசதிபடைத்த பாடசாலைகள் அச்சு வடிவிலும் அவற்றைத் தயார் செய்வதுண்டு. தமிழ் மன்றம், வணிக மன்றம், விஞ்ஞான மன்றம் என்பன இவ்வகைச் செயற்பாடுகளில் முன்நிற்பன. இம் மன்றங்களைச் சார்ந்த மாணவர்கள் கடை, கடையாய் ஏறி, இறங்கி விளம்பரங்களைச் சேகரிப்பர். நூறுபக்க இதழில் அதிகமான பக்கங்களில் விளம்பரங்கள் அணிவகுக்கும். எஞ்சிய பக்கங்களில் அதிபர், கல்விப் பணிப்பாளர்கள், மதகுருமார்களின் ஆசியுரைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்து பழைய மாணவர் சங்கம் வரையிலான குறித்த பாடசாலையில் உள்ள அமைப்புக்களின் வாழ்த்துரைகள் என இன்னும் ஒரு பத்துப் பக்கங்கள் நிறைக்கப்படும். அதன் பின்னரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள் போன்றோரின் படைப்புக்கள் பெரும்பாலான பக்கங்களை விழுங்கிவிடும். எஞ்சிய ஒருசில பக்கங்களே மாணவர்களின் ஆக்கங்களைச் சுமப்பதற்காகக் காத்திருக்கும். அதுவும் இதழுக்குப் பொறுப்பான ஆசிரியரின் 'அணைவைப்' பெற்ற மாணவர்களுக்கே அந்தப் பாக்கியமும் கிட்டும். ஏனைய மாணவர்கள் இந்த இதழுக்கு விளம்பர முகவர்களாக செயற்பட்டதையெண்ணித் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். கடைசியாய் மாணவர்களின் இதழ் என்ற விளம்பரப்படுத்தலுடன் மிக அதிகமான விலைக்கு அந்த மாணவர்களிடமே விற்பனை செய்யப்படும். எஞ்சியவை வெகு பத்திரமாக பாடசாலை அலுமாரிக்குள் அல்லது ஒதுக்குப் புறமான அறை ஒன்றுக்குள் காலங்காலமாய் அடுக்கி வைக்கப்பட்டபடியே இருக்கும். இதுதான் இதுவரைக்கும் பாடசாலைகளின் சஞ்சிகை வெளியீடு.

இதைவிட உண்மையிலேயே மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணர்வதாக பாடசாலை கையெழுத்துச் சஞ்சிகைகள் விளங்குகின்றன. இவையும் பரம்பலான வாசக வட்டத்தை சென்றடையாது குறித்த பாடசாலைக்கு உள்ளேயே அல்லது அந்த வகுப்பறைக்குள்ளேயே முடங்கிப்போய் விடுகின்றன. கல்வி அமைச்சினால் எப்போதாவது கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி



நடத்தப்படும்போது மட்டும் விழுந்தடித்துக்கொண்டு எல்லாப் பாடசாலைகளும் கையெழுத்துச் சஞ்சிகைகளைத் தயார் பண்ணுகின்றன. மற்றைய நேரங்களில் இவை இலக்கியத்தின் மீதும் மாணவர்கள் மீதும் அக்கறைகொண்ட ஆசிரியர்களாலும், இலக்கியத் துடிப்புக் கொண்ட மாணவர்களாலும் தயாரிக்கப்படுகின்றது. ஈழத்து எழுத்தாளர்கள் பலரும் தம்முடைய பள்ளிக் காலங்களில் இவ்வாறான சஞ்சிகை வெளியீட்டில் ஆர்வமாய் ஈடுபட்டிருந்தனர் என்பது கண்கூடு.

ooo

இந்தப் பின்னணியில் அண்மைக் காலமாய் சில பாடசாலைகளில் இருந்து பாடசாலை மாணவர்களது ஆக்கங்கள், செய்திகள் என்பவற்றைத் தாங்கி கையடக்க மான வடிவில் சஞ்சிகைகள், செய்தி மடல்கள், கவிதைத் தொகுப்பு என்பன வெளிவரத் தொடங்கி உள்ளன, அதுவும் அச்சுருவில்.

1. பண்டத்தரிப்பு இந்துமகளிர் கல்லூரியின் 'பண் மகள்' இதழ்.
2. வேலணை மத்திய கல்லூரி 10 - B மாணவர்களின் 'மொழி' சஞ்சிகை.
3. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் 'சுவடுகள்' எனும் செய்தி மடல்.
4. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் 'தூறல்' கவிதைத் தொகுப்பு.

இவற்றைத் தற்செயலாகப் பார்வையிட நேர்ந்த போது பெரும் வியப்பு ஏற்பட்டது. மிக நேர்த்தியான சஞ்சிகைகளை ஒத்த அம்சங்களை உள்வாங்கி இவை வெளிவந்திருந்தன. இதற்கு முன்னரும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இருந்து 'அதாவது' என்னும் மாணவப் பருவ இதழ் வெளி வந்து தற்போது நின்று போயுள்ளது. எமக்கு வாசிக்கக் கிட்டியதை விடவும் வேறு சில பாடசாலைகளிலிருந்தும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடிகின்றது. எனினும் அவை பற்றிய விபரங்களை இன்றைய சூழ்நிலையின் மட்டுப்பாடுகளால் பெற இயலவில்லை. இத்தகைய மாணவர்களின் ஆக்கங்களை, அவர்களைப் பற்றிய செய்திகளை ஏந்தி வருகின்ற இப்பருவ இதழ்கள் நிச்சயமாய் வரவேற்கப்பட வேண்டியவை. சிறு பிள்ளை வேளாண்மையும் வீடு வந்துசேரும் என்று தமிழ்ச் சமூகத்திற்கு எடுத்துக்கூறும் எத்தனங்களாக இவ் இதழ்களின் வெளியீடு தொடர்ச்சியான முறையில் அமைதல் வேண்டும். அப்போது தமிழ் இலக்கியச் சூழலும் பலம் பெறும் சாத்தியம் உண்டு. ஏனெனில் இளந்தலை முறையினரிடையே இலக்கியம் பற்றிய ஆர்வம், தேடல், புரிதல் என்பவற்றை வளர்த்தெடுக்க இச்சஞ்சிகைகள் ஊக்கிகளாக தொழிற்படுவது நிதர்சனமானது.

பிற்காலத்தில் இச் சஞ்சிகை வெளியீட்டில் உறவு நிலை காரணமாக வீச்சுள்ள ஒரு தலைமுறை இலக்கிய உலகில் வேர்கொள்ளமுடியும். மேலும் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல், இலைமறை காயாக உள்ளவர்களின் திறமையை வெளிக்கொணர்தல், இலக்கிய தொடர்புகளை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் என்பனபோன்ற பன்முகத் தன்மைகொண்ட ஆளுமையினை வளர்க்கவும் இச் சஞ்சிகை வெளியீடுகள் உதவி புரிவனவாகவுள்ளன. இன்னொரு புறத்தில் மாணவர்களுடைய படைப்புத்திறனை வளர்த்தெடுக்கவும், இலக்கியம் தொடர்பான புரிதல்களை அவர்களிடம் உண்டுபண்ணவும் மேற் கொள்ளப்படுகின்ற இவ்வாறான வெளியீட்டு முயற்சிகள் சில தவறான போக்குகளுக்கு இட்டுச் செல்லவும் கூடும்.

1. ஏதாவதொரு படைப்பாவது தமது பெயரில் வரவேண்டும் என்ற ஆசையில் ஏற்கெனவே பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த ஆக்கங்களை அப்படியே பிரதிபண்ணி தமது பெயர்களில் பிரசுரம் செய்ய மாணவர்கள் சிலர் முனைதல்.
2. 'மாணவர்களின் முதல் முயற்சிதானே!' என்ற உணர்வில் வழுக்கள் நிறைந்த மாணவர் படைப்புகளையும் பிரசுரிக்கும் நிலை.
3. இனங்காணப்பட்ட சில மாணவர்களின் படைப்புகளே தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுத லும் ஏனைய மாணவர்கள் இம்முயற்சியிலிருந்து ஒதுக்கப்படுதலும்.

இவற்றினை இயலுமானவரை தவிர்ப்பதற்கு இவ்விதழ்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் முயல வேண்டும். மாணவர்களின் படைப்புகளை சுய ஆக்கங்களா எனப் பரிசீலித்து, படைப்புகளிலுள்ள தவறுகளை மாணவர்களுக்குப் புரியக்கூடிய வகையில் எடுத்துக்காட்டி, அவர்களைச் சரியான திசையை நோக்கி பயணிக்கச் செய்யும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உண்டு. அதேவேளை சகல மாணவர்களும் சுழற்சிமுறையில் சஞ்சிகை வெளியீட்டில் பங்கேற்பதற்கான வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

எனக்கு கிடைத்த சஞ்சிகைகளைப் பார்க்கும்போது மாணவர்களை விளம்பர முகவர்கள் ஆக்காது ஆக்க கர்த்தாக்களாகவே பயன்படுத்தியுள்ளமை புலனாகின்றது.

ooo

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் இருந்து 'சுவடுகள்' என்ற செய்திமடல் வெளியிடப்படுகின்றது. இதன் இரு வெளியீடுகளை பார்க்க முடிந்தது. பாடசாலை மாணவர்களின் சமீபத்திய சாதனைகள், பாடசாலையில் இடம் பெற்ற, இடம்பெறவுள்ள நிகழ்வுக்குறிப்புகள், அமரர்கள் ஆகிவிட்ட ஆசிரியர்கள் பற்றிய நினைவுக் கவிதைகள் என்பவற்றை 12 பக்கங்களில் சிறிய குறிப்பேடாகத் தந்துள்ளார்கள். இந்தச் செய்திமடலின் இன்னொரு சிறப்பு என்னவெனில் இலவசமாக விநியோகிக்கப்படுவது. இதனால் செய்தி மடலின் பரம்பல் விரைவாக விரிவடையலாம். இச் செய்தி மடல் மாணவர்களின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு களமமைக்காது விடினும் இதனுடைய தொடர்ச்சியான வெளியீடு கிரமமாக நிகழுமாயின் அதற்கான சாத்தியப்பாடுகளையும் எதிர் பார்க்கும் சாத்தியமுள்ளது.

ooo

'பண்மகள்' எனும் பருவ இதழ் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையிலிருந்து வெளிவரு

கின்றது. சு.ஸ்ரீகுமரன் என்னும் பாடசாலை ஆசிரியரை பிரதம ஆசிரியராகக்கொண்ட இவ்விதழ் பாடசாலை பற்றிய செய்திகளோடு, கவிதை, கட்டுரை, சிறுகதை, புதிர்கள், பொது அறிவுப் போட்டி என்பன போன்ற மாணவர் ஆக்கங்களை அதிகளவாக உள்வாங்கி வெளிவந்துள்ளது. இதுவரையிலும் மூன்று இதழ்கள் வெளிவந்துள்ளன. கையடக்க அமைப்பில், சிறு சஞ்சிகைகளின் வடிவமைப்பை ஒத்த தன்மையுடன் வெளியிடப்பட்டுள்ளது. பத்து ரூபாய் பெறுமதியான இவ்விதழ் அயற்பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப் படுவதால் விற்பனை ரீதியிலான சுமையும் வெளியீடு வோருக்கு ஏற்படாமல் போகின்றது. இச் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள படைப்புகளின் தரம் - அவற்றைப் படைத்தவர்களின் வயதோடு ஒப்பிடும்போது - உயர்வான நிலையில் உள்ளதாகவே படுகின்றது. ஆக்கங்களைப் பிரசுரத்திற்கேற்பதில் சகல மாணவருக்கும் சமவுரிமை யளிக்கப்பட்டதாக இதன் பிரதம ஆசிரியரூடாக அறிய முடிந்தது.

ooo

'மொழி' இது வேலணை மத்திய கல்லூரியிலிருந்து வெளிவருகின்றது. இங்கு குறிப்பிடப்படுகின்ற மூன்று பாடசாலை இதழ்களுள்ளும் வடிவமைப்பு, படைப்புத் தேர்வு என்பவற்றில் மிகச் சிறப்பான தன்மையினைப் பெற்றதாக இதுபடுகின்றது. கூடவே இதிலுள்ள இன்னொரு வித்தியாசமான அம்சமும் உள்ளது. மற்றைய இரு இதழ்களும் ஒட்டுமொத்த பாடசாலையின் குரலாகவே இருக்க, 'மொழி' ஒரு வகுப்பறையின் தொனியாய் ஓங்கி ஒலிக்கின்றது. அதுவும் 10B வகுப்பிலிருந்து, வழமையாக A பிரிவு மாணவர்களே ஆளுமை மிக்கவர்கள் என்ற எண்ணப் பாட்டினைத் தகர்த்த ஆயுதமாகவும் 'B' பிரிவு மாணவர் களாலும் சாதிக்க முடியுமென்ற தன்னம்பிக்கையின் ஒளியாகவும் 'மொழி' விளங்குகின்றது. இவ் விதழின் தோற்றப்பாட்டிற்கு தி. செல்வ மனோகரன் என்ற பாடசாலை ஆசிரியர் பின்னணியிலிருப்பதை அறிய முடிகின்றது.

ooo

சஞ்சிகை வெளியீடுகள் பாடசாலை மட்டத்தில் திடீரென முளைகொண்டெழுவதற்குக் காரணம், இலக்கியத் தின் மீதும் சஞ்சிகை வெளியீட்டின் பாலும் தீவிர ஆர்வம் கொண்டவர்கள் பலர் ஆசிரியப் பணிகளில் உள்வாங்கப்பட்டிருத்தலாகும். 'மொழி' சஞ்சிகையின் தி. செல்வ மனோகரன் ஏற்கெனவே 'தூண்டி' என்னும் கலை, இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டதோடு கலை, இலக்கியத் தளத்தினுள் வீச்சோடு இயங்கியவர். 'பண்மகள்' இதழின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ குமரனும் இலக்கியப் பின்புலம் உடையவர். 'சிட்டு' எனும் இதழின் ஆசிரியருங் கூட. அதேபோன்று 'தூறல்' கவிதைத் தொகுப்பினை தொகுத்த ந.குகபரனும் 'புலரி' என்னும் இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டவர். இலக்கியத்தின் பால் நாட்டமுள்ளவர். முன்னரெல்லாம் ஈழத்தின் அதிகளவான எழுத்தாளர்கள் நிர்வாகசேவையில் இருந்தனர். இப்போது அதேபோன்ற தன்மை ஆசிரியப் பணிகளில் உள்வாங்கப் பட்டோரிடம் ஏற்பட்டுள்ளது. இன்னும் பல பாடசாலை களிலும் புதிதாக சஞ்சிகை வெளியீட்டு முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டிருப்பதான செய்திகள் வரவே செய்கின் றன. வெறும் ஏட்டுச்சுரைக்காய் கல்விப் போதனையையும், பயன்பாடற்ற திணிப்புத் தன்மை கொண்ட செயற்திட்டங் களையும் வழங்குகின்ற பாடசாலைகள், இனியாவது விழித்துக்கொண்டு இவ்வாறான சஞ்சிகை வெளியீடுகள் போன்ற பிரயோசனமான - அர்த்தமுள்ள செயற்பாடுகளில் ஈடுபட முன்வர வேண்டும். ◆

## ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியோர்கள் - பேச்சுப்போட்டி

இளந்தலைமுறையினரிடையே பேச்சாற்றலை வளர்க்கும் முகமாகவும், தமிழுக்குப் பணிசெய்து நம்மத்தி யில் பரவலாக அறியப்படாமல் உள்ள பெரியார்களை வெளிக்கொணரும் முகமாகவும் திருமறைக் கலாமன்றத் தால் பேச்சுப்போட்டியொன்று 20.09.2008 இல் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலைய கத்தில் நடத்தப்பட்டது.

18 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றக்கூடியதாக அமைந்த இப்பேச்சுப்போட்டியில் பேச்சுக்கான நேரம் 5 நிமிடங்களாக அமைந்திருந்தது. இதற்கான விண்ணப்பங்கள் 10.08.2008 இல் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மூலமாகக் கோரப்பட்டன. நூற்றுக்கணக் கானோர் இப்போட்டிக்கு விண்ணப்பித்திருந்தபோதிலும் போட்டியின்போது 27 பேர் மட்டுமே பங்குபற்றியிருந் தார்கள்.

போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய பாணியில் சிறப்பாகப் பேசி னார்கள். இவர்களிலிருந்து இருவர் சிறந்த பேச்சாளர்களாக நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதற்கமைவாக முதலாம் இடத்தை அளவெட்டி வடக்கு, அளவெட்டியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவும், இரண்டாம் இடத்தை யாழ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் ஹார்சனும் பெற்றுக்கொண்டார்கள். இவர்க ளுக்கான பரிசில்களாக முதலாம் இடம் பெற்றவருக்கு 'கலைமுகம்' சஞ்சிகை வழங்கும் 10,000 ரூபாவும், இரண் டாம் இடம் பெற்றவருக்கு 'ஆற்றுகை' சஞ்சிகை வழங்கும் 5,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இப்போட் டியில் பங்குபற்றிய அனைவருக்கும் ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இப்பரிசளிப்பு நிகழ்வு டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

பேச்சுப்போட்டிக்கான நடுவர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க. அருந்தாகரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, வித்துவான் புலவர் வேல்மாறன் ஆகியோர் பணியாற்றி னார்கள்.

அரூபமான நுண்ணுணர்வின் தளத்தில் கட்டமைக்கப்பட்டு மொழியின் அதீத சாத்தியப்பாடுகளைக் கொண்டியங்கும் நவீன கவிதை ஈழத்தில் கால்நூற்றாண்டு காலமாய் போரின் குரூர முகங்களையும் மனிதவாழ்வின் அவலங்களையும் பெரும்பான்மையாய் பாடுவதாக அமைந்தது. அசாதாரண சூழலில் நிகழ்காலப்பயணியாய் இருந்து ஈழத்தின் வன்முறைகளைப் பதிவுசெய்த சந்திரபோஸ் சுதாகர் மறைந்து ஓராண்டு கடந்துவிட்டபோதிலும் ஸ்தூல வெளியில் நவீன கவிதையின் அதீத புனைவின் சிறப்புப் பிரதியாய் தன்னை முன்நிறுத்தி ஆழவேரூன்றி அழியா சுவடு பதிக்கிறது. செறிவான மொழிப்பிரயோகம், மிகையற்ற உயிரோட்டமான காட்சிப்படுத்தல், குறியீட்டு குழுமங்களுக்கூடான பிரக்ஞை பூர்வமான முன்வைப்பு என சந்திரபோஸ் சுதாகரின் கவிதைப்புலம் கட்டமைகிறது. 1990 களில் கவிஞராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட எஸ் போஸ்; நிலம், தமிழ் உலகம் என்னும் சஞ்சிகைகளின் இதழாசிரியராகவும் (*Tamilulakam - Co - Editor*) சிறுகதை ஆசிரியராகவும் பத்திரிகையாசிரியராகவும் பல்வேறு தளங்களில் இயங்கினார். ஈழத்தின் சமூக இயக்கத்தின் புறவெளிப்பாடுகளை, தோலுரித்துக்காட்டும் போஸின் கவிதைகள் வெளிச்சம், ஈழநாதம், வீரகேசரி, சரிநிகர், இன்னுமொரு காலடி, யுகம் மாறும், காலச்சுவடு, மூன்றாவது மனிதன், தமிழ் உலகம், நிலம், தடம் போன்ற

என்னும் வரிகளில் புறவெளிக்காட்சிப் படிமம் வெகு துல்லியமாக வெளிப்படுகின்றது.

முள்வெளிக்குள் சிக்குண்டு முகம் தொலைந்த சமூகமொன்றின் துயரின் பகிர்வே 'செம்மணித் தொகுப்பில்' இடம்பெறும் 'முள்வெளி' என்னும் கவிதையாகும். ஆதிமனிதனின் மரணநிகழ்வுக்கூடாக தொன்மத்தின் சிதைவை முன்மொழியும் இக்கவிதை வெளிக்களக் காட்சிகளுக்கூடாக நிகழ்கால யதார்த்தத்தை பிரக்ஞை பூர்வமாக பதிவு செய்கின்றது.

இருப்பிழந்து இடம் பெயர்ந்து வந்தவேளையில் உறவுகளைப் பறிகொடுத்த ஆத்மாவொன்றின் வேதனைக் குரலே வெளிச்சம் தொகுப்பில் இடம்பெறும் 'புதைக்கப்பட்ட வைரங்கள்' என்னும் கவிதை.

"பிள்ளையைப் புதைத்தாயிற்று
பெத்தவள்
சன்னியில் செத்துப்போனாள்
எனது நிலம்
எனது சிலுவை
எனது சுடலை
எடுத்து வந்தவை எதுவுமே இல்லை."

என இழப்பின் துயர் மனதை நெருடும் வகையில் உயிர்ப்புடன் காட்சிப்படுத்தப்படுகிறது. முறிந்து நகரும்

## சந்திரபோஸ் சுதாகரின்

# கவிதைகளை முன்வைத்து ஒரு வாசகப் பார்வை

**சாங்கிருத்தியன்**

பல்வேறு பத்திரிகைகள், தொகுப்புகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. வேற்றாகி நின்ற வெளி, செம்மணி, வெளிச்சம் கவிதைகள், காலச்சுவடு கவிதைகள் என்னும் கவிதைத் தொகுப்புக்களும் சந்திரபோஸ் சுதாகரின் கவிதைகளை உள்வாங்கி வெளிவந்தன.

யதார்த்த வாழ்வில் போரினால் புறக்கணிக்கப்பட்டு அஞ்சி ஒடுங்கி நடுங்கி வாழும் மனிதனின் உள்ளத்து உணர்வுகளை படிமத்துக்கூடாகக் காட்சிப்படுத்தும் நிகழ்வு பற்றிய இரண்டு கவிதைகள் 'வேற்றாகி நின்ற வெளி' என்னும் கவிதைத்தொகுப்பில் வெளிவந்தது. இருப்பியலின் அச்சுறுத்தல், எலும்புகளின் நெடி, ஆயுத முனையில் கவியும் இருள், வதைகளின் சுமைகளை சுமந்து நிற்கும் காலமென கொடிய யுத்தத்தையும் அது ஏற்படுத்திய ரணங்களின் வடுக்களையும் பதிவு செய்யும் இக்கவிதை ஈழத்தின் நடப்பியல் சார் இயங்கியலைக் கண்முன் காட்சிப்படுத்துகிறது.

திரை மறைவுக்குள் புதையுண்டிருக்கும் மனித வாழ்வின் அவலத்தையும் வாழ்தல் குறித்தான நம்பிக்கையின்மையையும்

"யாரோ பிடுங்கி நதியில் கரைத்த
சுவடுகளில்
மழை தனது துயரை நட்டு வைத்திருக்கிறது
இன்னும்"

சொற்சேர்க்கையால் நுட்பமான மொழி இயைபுக்குள் கட்டமையும் இக்கவிதை மொழியின் புதிய புதிய சாத்தியப்பாடுகளினூடாக நுகர்வோன் மனதில் அதீத அழுத்தத்தையும் ஏற்படுத்தி நிற்கிறது.

நிழல் முறிந்தமரம், கூரையற்ற மனிதனின் மூன்றாவது கதவு, கனவுகளின் அழுகையொலி, எஸ்போஸ் கவிதை 1, 2, 3, போன்ற கவிதைகள் 'மூன்றாவது மனிதன்' இதழ் தோறும் வெளிவந்த கவிதைகளாகும்.

விடைகளை உள்வாங்கி வினாக்களின் தொகுப்புக்களுக்கூடாக கட்டமைக்கப்படும் 'நிழல் முறிந்த மரம்' சாமியாடல் என்னும் சடங்கினை குறியீடாகக் கொண்டு புறம் தள்ளிய மனிதவாழ்வை பேசுகிறது. இனத்தின் முரண் இணைவில் சாத்தியமின்மையை

"தொட்டுப்பார்க்கும் தூரம் கூட இல்லை இரு
வருக்கும் எனினும்
ஒரு தெருவில் அவர்களும்
இன்னொன்றில் இவர்களுமாய்
நீள்கிறது எமக்கான தூரம்"

என்னும் வரிகள் தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

சாவின் அமைதி பிணமெரியும் தேசம், அழியுண்ட கனவுகளில் வெறுமையில் உழலும் மனிதக் கூடுகளின் துயரம், சாபத்தின் எல்லைகளை உள்வாங்கி நகரும் காலம்

என விரியும் 'கனவுகளின் அழுகையொலி' என்னும் கவிதை யதார்த்த நடப்பியலுக்கூடாக ஈழத்தின் இருப்பியலின் இயங்கியலைக் காட்சிப்படுத்துகிறது.

"மரணம் தூங்கும் சுவர்களில்
இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறது
காலப் பேய் நிழல்"

என படிமத்துக்கூடாக எழும் கவிதை "அழியுண்ட கனவுகளின் அழுகைச்சத்திக்குள் போய்விழுகிறது சிறகிழந்த பறவைகளின் வாழ்வு" என வன்மங்களுக்குள் சிக்கி உழலும் வாழ்வின் யதார்த்தத்தை காட்சிப் படிமமாக முன்மொழிகிறது.

'கூரையற்ற மனிதனின் மூன்றாவது கதவு' என்னும் கவிதை சாக்கடவுளின் உயிரோட்டமான விம்பத்தையும் அவ்விம்பத்தின் உடைவுக்கூடாக மனிதவாழ்வின் நிதர்சன மற்ற இருப்பையும் எடுத்துரைக்கிறது. 2002 இல் வெளிச்சம் இதழில் தலைப்பின்றி பிரசுரமான இக்கவிதை பெப்ரவரி - மார்ச் 2003 மூன்றாவது மனிதன் இதழில் சிற்சில மாற்றங்களுடன் பிரசுரமானது.

சாவின் துயரம்
"நாம் கடவுளைக் காணவில்லையாயினும்
எம்முன் கடவுளாய் ஒளிர்கிறது"

அழகியல் கூடான சொல்லிணைவுகளின் மூலம் இயங்கும் இக்கவிதை சாவு குறித்தான பிரக்ஞை பூர்வமான முன் வைப்பின் மூலம் சாவை சாக்கடவுளின் விம்பமாய் முன்னிறுத்தி வாழ்வின் அபத்தத்தை அங்கதமாய்க் காட்சிப் படுத்துகிறது.

பல கவிதைகளின் கூட்டிணைப்பே 'எஸ் போஸ் கவிதை' ஆகும். 182 வரிகள் நீளமுடைய இக்கவிதை 'தவிர' இதழ் 1 இல் வெளியான கவிதை ஒன்றின் சிலபகுதிகளைக் கொண்டும் 19.11.2006 இல் வீரகேசரியின் உயிர் எழுத்துப் பகுதியில் வெளியான 'மரணம் பற்றிய சிறு குறிப்பு' என்னும் கவிதையை இணைத்தும் வரையப்பட்டுள்ளது. இவ் இணைப்பு சரளமான கவிதையோட்டத்தில் எவ்விதப் பங்கத்தையும் ஏற்படுத்தவில்லை. யுத்தக் கவிதைகளின் பிரசன்னத்தையும் அது அவாவி நிற்கும் வன்முறையின் அழிவுகளையும் எதிர்காலத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டிநிற்கும் இக்கவிதை பொதுத்தர்க்கம் சார்ந்த புறவயத் தன்மையுடன் வரையறுத்து மட்டிடமுடியா விரிந்த தளத்தில் தன்னைக் கட்டமைத்துக்கொள்ளுகிறது.

பரஸ்பர புரிந்துணர்வின்மையையும் அதன் நிமித்தம் விளையும் துன்பியல் நிகழ்வையும் படிமத்துக் கூடாகக் காட்சிப்படுத்தும் 'இரங்கற்பா' என்னும் கவிதை பிரத்தியேகமான மொழிக்கட்டுமானத்துக்குள் தன்னை வடிவமைத்துக் கொள்கின்றது.

"நீ விரும்பாத எனது சிறகுகள் ஒரு
வேட்டை நாயை
வளர்த்து விட்டிருக்கின்றன உன்னுள்..."

(தமிழ் உலகம் - ஜுலை 2005)

பத்மநாபஐயரின் 'யுகம் மாறும்' இலக்கியத் தொகுப்பில் இடம்பெற்ற 'வலை' என்னும் கவிதை சிலந்தி என்னும் கட்புலப்படிமக் குறியீட்டுக்கூடாக பேரினவாத சக்திகளின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு சோபையிழந்து சிதைந்த தேசத்தைப் பாடி நிற்கிறது. ஐயரின் பிறிதொரு இலக்கியத் தொகுப்பான "இன்னுமொரு காலடி' யில் இடம்பெறும் 'சுகித்தல்' என்னும் கவிதை வன்முறைக்குள் சிக்கி உழன்று தவிக்கும் ஆன்மா அதற்குள் வாழத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளலை வெளியுலகிற்கு உணர்த்தி நிற்கிறது. போரின் அபத்தங்களுக்குள் இயங்கும் யதார்த்த இயங்கியல் உணர்வுகளின் ஸ்தூலமாக இவ்விரு கவிதைகளிலும் வெளிக்கொணரப்படுகின்றது.

வாழ்வின் முடிவுத்தூரத்தில் கடைசிப்பயணியின் நிகழ் பற்றிய பதிவின் குறிப்புக்களே வெளிச்சம் பவள இதழில் பிரசுரமான 'கடைசிப்பயணியின் குறிப்புக்கள்' என்னும் கவிதையாகும்.

"எனது இன்றைய நாட்களோ
துயரமும் கண்ணீருமானவை
வேதனை துலங்கும் இந்நாளில்
குயில்கள் இறந்து கிடக்கின்றன.
ஆட்டு மந்தைகளின் புற்களால் நிறைந்த தோட்டம்
சிதைந்து போயிற்று
மனிதர் வீதிக்கு வருகிறார்களில்லை
உள்ளே
நெஞ்சு வெடிக்கும் துயருடன்
குடில்கள் குலுங்குகின்றன..."

போர் விழுங்கிய பொழுதுகள் நிகழ்வின் காட்சிக் கூடாக உள்ளார்த்தமான மனப் பதிவின் ஸ்படிகமாக வெளிப்படுத்தப்படுகிறது. சிதைவுகளின் ஒழுங்கமைப்பில் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் இக்கவிதை "வழியனுப்ப யாரும் வராத இந்தப் பயணத்தில்/நான் எனது வழிகளையும்/ இரண்டு துளி காதலையும் மட்டுமே உணர்ந்தேன்/" என தன்னுணர்வுத்தடத்தில் தன் பிரதியை முடித்துக் கொள்கிறது.

சந்திரபோஸ் சுதாகரின் பலகவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்த சஞ்சிகையாகக் காலச்சுவட்டைக் கூறலாம். சுயம் (இதழ் 27 அக். - டிசெ, 99) ஒளி சுடர்ந்த என் மனமும் நெருப்பெரிந்த உன்மனமும் (இதழ் 29 ஏப். - ஜுன். 2000) இன்னும் சேகரிக்கப்படாத புறாவின் சிறகுகளும் தெருவின் நிழலில் கரையும் நாங்களும் (இதழ் 32 நவ. - டிசெ. 2000) கடவுளைத் தின்ற நாள் மற்றும் ஒரு நாட்குறிப்பு (இதழ் 65, மே 2005) போன்ற கவிதைகள் காலச்சுவட்டில் வெளிவந்தவையாகும்.

ஈழத்தில் பேச்சு சுதந்திரம் மறுக்கப்பட்டு சுயம் இழந்து முகம் தேடும் மனிதனின் ஆத்மாவின் குரலே 'சுயம்' என்னும் கவிதையாகும். பேச்சுச் சுதந்திரமற்ற ஈழத்தின் தார்மீக நிகழ்காலப்பெருவெளியை தன்னுணர்வுத் தளத்திலிருந்து தூலக்காட்சி கருப் பொருண்மைக் கூடாக இக்கவிதை வெளிப்படுத்துகிறது.

கடவுளைத்தின்ற நாள் மற்றும் ஒரு நாட்குறிப்பு என்னும் கவிதை தொன்மம் சார் படிமக் குறியீட்டு உத்திக் கூடாக அனுபவம்சார் நிகழ்வின் பிரதியாக தன்னை முன்னிறுத்துகிறது. இரவை அள்ளிச் செல்லும் மரண ஓலங்கள் குருதி நனைக்கும் சிறைக்கூண்டு அதில் தலை

கீழாய் தொங்கும் மனிதஉடல்கள் சரீரத்தை புசிக்கும் காலம் என மனிதவதைகளின் குரூரம் கவிதையெங்கும் வியாபித்து நிற்கிறது. ஈசல் என்னும் வன்முறையின் குறியீட்டுப்படி மத்துக்கூடாக கட்டமைக்கப்படும் இக்கவிதை தேவாலயத் தில் பகிரப்படும் அப்பமும் திராட்சை ரசமும் மனித சரீரத்தி னதும் குருதியினதும் நிழல் பிரதிமையின் படிமமாகத் தன்னை வெளிப்படுத்தி நிகழ்வின் விளைவு, செயல் என்னும் மையச்சரட்டில் இயங்குகிறது.

எஸ்போஸின் உள்ளுணர்வுத்தளத்தில் இயங்கும் அகம் சார் கவிதைகள் காதலையும் அது நுண்ணுணர்வின் உள்வெளியில் ஏற்படுத்தும் அதீத பிரேமையையும், ரொமாண்டிச மற்றும் நடைமுறை வாழ்வுக்கூடாகக் காட்சிப்படுத்துகிறது. ஈழத்தில் அகவுணர்வுத்தளத்தில் எழும் பெரும்பாலான கவிதைகள் போரின் அனர்த்தத் துக்குள் சிக்கி கைகூடாததாய்ப் போன காதலையே பாடு பொருளாய் கொண்டமைந்தன. இவ்வகையில் அகம்சார் தன்னுணர்வுத் தளத்தில் எழும் எஸ்போஸின் கவிதைகளும் பிரிவாற்றாமை, காத்திருப்பு இறுதி விடைபெறுதல் எனத் துன்பியல் சார் உணர்வுக் கூடாகவே கட்டமைக்கப் பட்டுள்ளன.

அன்பின் மென் உணர்வுகளின் இழைகளில் கட்டுறும் 'ஒளி சுடர்ந்த என் மனமும்' நெருப்பெரிந்த உன் மனமும் என்னும் கவிதை அகவெளியில் பெண் விம்பம் ஏற்படுத்தும் அதிர்வை கால காட்சிப்படிமங்களுக்கூடாக அலங்காரமற்ற சொற் சேர்க்கையாய் தன்னை முன்நிறுத்து கிறது.

"உனது முகம் பற்றிய படிமம்
உனது புன்னகையாய் வண்ணத்துப்பூச்சியொன்றின்
சிறகைப் போல என்னுள் படபடக்கிறது"

அகவெளியின் நுண்ணுணர்வில் விம்பம் ஏற்ப டுத்தும் சலனம் புறம் சார் பிரதிமைகளுக்கூடாகக் காட்சிப் படுத்தப்படுகிறது.

'இன்னும் சேகரிக்கப்படாத புறாவின் சிறகுகளும் தெருவின் நிழலில் கரையும் நாங்களும்' என்னும் கவிதை இயல்பு நிலை குன்றிய வாழ்வின் குரூரத்தையும் அதன் நிமித்தம் நிராகரிக்கப்படும் காதலையும் அலங்காரத் தன்மையற்று நடப்பியல் சார் வாழ்வுக்கூடாக காட்சிப் படுத்துகிறது. இழை அறுந்து வாழ்விலிருந்து விடுபடலும் ஒன்றிணைந்த உள்ளங்கள் வாழமுடியாத துர்ப்பாக்கியமும் துன்பியல்சார் நிகழ்வுக் கூடாக விவரணமற்று எளிமையாக தன்னுணர்வுத்தடத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

வாழ்தல் குறித்தான நம்பிக்கைகள் தகர்ந்து தேய்ந்து முற்றுப்பெறும் கணத்தில் உயிர் ஒன்றின் மரண சாசனமாகத் தன்னை ஆவணப்படுத்தும் 'சூரியனைக் கவர்ந்து சென்ற மிருகம்' என்னும் கவிதை 'நிலம்' மூன்றாவது இதழில் பிரசுரமானது. கைது செய்யப்பட்டதன் பின்னரோ அல்லது கடத்தப்பட்டதன் பின்னரோ வாழ்வு நிட்சயமற்றது என்பதை உயிர்த்துடிப்புடன் தோழனுக்கு உரைக்கும் இக்கவிதை அகம் சார்ந்த மென்னுணர்வுத்தளத் தில் இயங்கும் காதலை நடப்பியலுக்கூடாக பிறிதொரு தளத்தில் முன்நிறுத்துகிறது.

நுண்ணிய மனவெளியில் பெண்குரல் ஏற்படுத்தும் அக உணர்வுகளின் சலனமே 'தடம்' இதழில் பிரசுரமான 'வெளி', 'உனது குரல் பற்றிய ரகஸியத்தில் மிதக்கும் கடல்' என்னும் கவிதைகளாகும்.

"எங்கிருந்து தொடங்கப் போகின்றன உனது
வார்த்தைகள்
சமுத்திரத்தின் முடிவற்ற நீட்சியிலிருந்தா
உடைந்து சிதறிய ஈசல்களின் சிறகுகளிலிருந்தா
காடுகளின் மீது ஓயாது பாடிக் கொண்டிருக்கும்
துணையற்ற குயில்களின் இருண்ட குரல்களி
லிருந்தா"

முடிவற்ற நீட்சியின் பெண்குரல் வலிதரும் துயரத்தின் ஆதார சுருதி என்பதை 'வெளி' என்னும் கவிதை துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

வாழ்வு குறித்தான வெறுமையும் காதல் குறித்தான நம்பிக்கையின்மையும் 'உனது குரல் பற்றிய ரகஸியத்தில் மிதக்கும் கடல்' என்னும் கவிதையில் நுட்பமாக வெளிப் படுத்தப்படுகிறது. துன்புற்றுத் துவண்டுபோய் முகம் தொலைந்த அகவெளியின் காட்சிப்படிமம்

"எல்லாக்கனவுகளும் சிதறி உடைய
என் மேல் கவிந்த இரவின் சாயலில்
சிறு புள்ளியுமற்றுப் போனேன் நான்"

என்னும் வரிகளில் முழுமைத்தன்மையுடன் கட்டுறுகிறது.

மொழிச்சிக்கனமும் ஒத்திசைவும், செய்நேர்த்தியும் கொண்ட எஸ்போஸின் அகவெளி பிரக்ஞை பூர்வமான அனுபவ கருத்துருவின் திருந்திய வடிவமாகும். ஈழத்து வன்முறையின் குரூரத்தை சமூக இருப்பியலுக்கூடாக அதீத புனைவற்று வெளிப்படுத்தும் இக்கவிதைகள் ஒரு மறை பிரதியாய் நின்று தன்னைக்கட்டுரைக்காது அனுபவத்தின் நேரடிப்பிரதியாய் தன்னை முன்நிறுத்திக் கட்டுரைக் கிறது. ◆

## வருந்துகின்றோம்

'கலைமுகம்' இதழ் 47 இல் வெளியான இ. ஜீவகாருண்யன் அவர்களின் 'ஈழத்து நவீன இலக்கிய விமர்சனம்: ஆழ் நோக்கிற்கான ஆரம்பக் குறிப்புகள்' என்னும் கட்டுரையின் ஆரம்ப வரிகள் தவறுதலாக விடுபட்டுவிட்டன. அவை பின்வருமாறு:

**ஈழத்தில் நவீன இலக்கிய விமர்சனம் என்று சொல்லுகின்றபோது, நாம் பெரும்பாலும் நாவல், சிறுகதை, கவிதை, என்ற மூன்று துறைகள் பற்றிய விமர்சனங்களையே கருத்திற் கொள்வோம். நாவல், சிறுகதை இரண்டும் நவீன இலக்கியங்கள்...** எனத் தொடர்ந்து கட்டுரை அமைந்திருக்க வேண்டும்.

இத்தவறால் கட்டுரையாசிரியருக்கும், வாசகர் களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமத்திற்காக வருந்து கின்றோம்.

# பாலை

அனார்

வருடத்தின் இறுதிப் பருவகாலம்
மெல்ல மெல்லக் கழிகின்றது
கரையோரங்களிலிருந்து
திரும்பிவிட்டன நீர்ப்பறவைகள்

குலாவித் திரிந்த ரீங்காரங்களை
முயங்கிக் கலந்த குறுகுறுப்பை
அந்தர வெளியில் விட்டு
இப்போது வெறுமையுற்றிருக்கும் கூடுகளுக்குள்
ஞாபகங்களாய்
மெது மெதுப்பாய் இறைந்துக்கிடக்கின்றன
அவற்றின் சில சிறகுகள்

~~வேர்விட்டு உறுதியாகி~~
பூரித்துக் கிடந்த சோலையின் வனப்பை
உறுஞ்சத் தொடங்கியிருக்கின்றன
கோடையின் துன்புறுத்தும் நாவுகள்

அழகுதிர்க்கும் மரங்களோ
செழிப்படைவதை நிறுத்தியுள்ளன
நோய் பிடித்துச் சோர்ந்து
காய்ந்த நிலத்தினை மேய்ந்து
காற்று நாறியது

காலத்தின் கண்முன்னே கரைகின்றது
நினைவின் பொற்காலம்

சங்கமிக்கும் அந்தரங்க ஒளித் தாரைகள்
காதல் நிரம்பிய பொழுதுகளின் ரம்மியம்
வசந்தகாலத்திற்கேயுரிய திண்மையும் அரவணைப்பும்
கோலம் குறைந்து முடிவுக்கு ஆயத்தம் கொள்கின்றன

உத்தரவிற்காக காத்திருக்கின்ற
கடைசி நிமிடங்களின் பதை பதைப்புகளோடு
விரக்தியுற்றிருக்கும் இறுதி மனோபாவத்தோடு
ஓடி மறையும் வசந்தகாலத்தின் கைகளுக்குள் வைக்கிறேன்
உணர்வு பீறிட்டிருக்கின்ற என் கண்ணீரை
தீராத அன்பின் காணிக்கையை

பிரளயங்களைத் தோன்றச்செய்யாமல்
நேசத்தின் தடயங்களை அழித்துச்செல்கிறது வசந்தகாலம்.





# காலத்தின் கண்ணாடியாக ஒரு காவியம்

**— சோ. பத்மநாதன்**

மதுரைப் பண்டிதர், கவியரசு, கலாநிதி க. சச்சிதா னந்தன். எழுபதாண்டு எழுத்துலக வாழ்க்கையைக் கண்ட பெரியவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை உடையவர். உளநூல், கணிதம், வானியல் முதலிய துறைகளிலும் நுழைந்தவர். தந்தை செல்வநாயகம் முன்னெடுத்த தமிழுரிமைப் போராட்டத் தில் ஈடுபட்டு வீட்டுக் காவல் உள்ளிட்ட துன்பங்களை ஏற்றவர்.

"சாவிலில் தமிழ் படித்துச்
சாக வேண்டும் - என்
சாம்பல் தமிழ் மணந்து
வேக வேண்டும்"

என்று பாடி தமிழுணர்ச்சி கிளர்ந்தெழச் செய்தவர்.

'ஆனந்தத் தேன்' தொடக்கம் 'எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும்' ஈறாக பல தொகுதிகளையும் காவியங்களையும் பாடிய இக் கவியரசர் 21.03.2008 இல் காலமாகிவிட்டார். அவரது நினைவாக அவருடைய 'பருவப் பாலியர்' என்ற இலங்கைக் காவியம் பற்றி இச் சிறுகுறிப்பை எழுதுகிறேன்.

"இக் காவியம் வளரிளம் பருவத்தினரது உளப் போராட்டம்" பற்றியது என்று ஆசிரியர் கூறினாலும், இதன் பகைப்புலம் 1970 தொடக்கம் 1994 வரையிலான இனவிடுதலைப் போராட்டமேயாகும். இதன் முக்கியமான பாத்திரங்கள் வலிகாமப் பகுதியிலுள்ள ஒரு முன்னணிக் (கற்பனைக்) கல்லூரியில் கற்கும் மாணவ, மாணவியர். வலிகாமம், வடமராட்சி, முறிகண்டி, கொழும்பு, கண்டி, ஊவா மாகாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, ஆனையிறவு, சிலாபம், முன்னேஸ்வரம், மன்னார், இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா ஆகியவை காவியம் நிகழிடங்கள்.

பல இயக்கங்கள் தொழிற்பட்ட காலம் அது. கல்லூரி மாணவர்களை இலக்கு வைத்துப் பிரசாரக் கூட்டங்கள். "நடப்பது வர்க்கப் போரே" என்று அடித்துச் சொல்லும் மாக்ஸிய வாதிகள். போர்க்கருவி ஏந்தி விடுதலை காண விழையும் ஈழவாதிகள். மற்றும் மதவாதிகள்.

"ஒருவரை ஒருவர் வெல்வார் உரைத்திறன்
வசியத்தாலே"

"கரந்தடு கின்றபோரின் விதிமுறை சொல்லிக்
காக்கும்
நிரந்தர நெறியும் சொல்லி நெகிழ்க்கிறார்
நெஞ்சை..."

குடத்தனையூரின் வீடுகள் போரால் அழிந்து கிடப்பதைச் சித்திரிக்கும் கவிஞர், அங்கு மணற் குன்றுகள்மேல் நாவல்கள் கருநீலக் கனிகளாகிய கண்கள் கொண்டு நோக்கும் அழகையும் பதிவு செய்கிறார்.

"பஞ்சடுக்கிய வெண்மணற் பரப்பினிற் சரிந்து
நெஞ்சடுக்கிய நாவல்கள் நிறைகனி நீல
அஞ்சனக் கரு விழி கொடு பார்ப்பன அழிந்த
எஞ்சிருக்கைகள் எந்தையர் குடத்தனை நகரில்"

பண்டாரநாயக்காவின் ஆட்சியில் தமிழருக் கெதிரான வன்முறை வெடித்தபோது, ஏழு மாகாணங் களிலும் வாழ்ந்த தமிழர், தமது தாய்மடி இலங்கையின் வடக்கும் கிழக்கும் என உணர்ந்தனர் :-

"ஏழு மாகாணம் எங்கிலும் இருந்தவர் தமிழர்
வாழ தற்கொரு தாய்மடி வடக்கொடு கிழக்காய்
ஆழ நெஞ்சினில் உணர்ந்தனர், அன்னையை நாடி
மீள வந்திடும் குழந்தையைப் போலவே
விரைந்தார்"

1974 ஆம் ஆண்டு நடந்த தமிழாராய்ச்சி மாநாட் டின் நிறைவில் ஏற்பட்ட அனர்த்தங்களைப் பாடுகிறார் கவிஞர்:

"வீதியெலாங் காலணிகள், விட்டெறிந்த
கைப்பைகள்
பாதி கிழிந்திருந்த பட்டாடை; செங்குருதி
மீதி நடந்தவரின் காற்சுவடு: வெள்ளெலும்பில்
பாதி கிழிந்த தசைகள்; பசிநாய்கள்!"

"மகர தோரணங்களும் மாலை தூக்கிய
சிகரநீள் வளைவொடு சித்திரங்களும்
நிகரிலாத் தமிழ் விழா நின்ற பந்தரில்
நூரர மாந் தர்பிணப் பந்தல் நாட்டினார்!"

குண்டு வீச்சுக்கு ஆற்றாது இடம் பெயரும் மக்கட்கூட்டம் பற்றிய சித்திரம் யதார்த்தமானது. உடுப்புப்

பெட்டிகள், சமையற் கலங்கள், மரமும் கிடுகும் ஏற்றிய உழவுயந்திரங்கள், மெத்தையில் இருந்து பயணிக்கும் குட்டி நாய்கள் என ஒரு பேரணி முட்டி மோதிச் செல்கிறது.

"போகப் போக முடியா இலட்சியம் போலவே!"

இடம் பெயர்ந்து போனவர்கள், இயல்பு நிலை ஏற்பட்டதும் திரும்பவருகின்றனர். அவர்களில் ஒருவர் கணபதியார். அவர்காணும் காட்சியை வடிக்கிறார் கவிஞர்:

"ஓட்டொடு மரமில்லாக் கூரை; உண்ணிலை
நாட்டிய கதிவிலா அறைகள்; நாற்புறம்
பூட்டிலாப் பேழைகள்; வெறுமை என்பது
காட்டிடு வனவலாற் காண்ப தேதுகொல்?"

"காத தூரத்தினில் கதவிருந்ததாம்
பாதி யாய்ப்பரண் அமைந்த பாங்கினில்
மீதி போய்க் கிடப்பதாம் விரிந்த சாளரம்
மீது மண் முடிப்புகள் கிடக்கும் வீதியில்"

பாரதர் வந்திறங்கிய படலமும், ஊரடங்கு படலமும், பஞ்சப் படலமும், கோவிலில் முடங்கிய படலமும் நடந்தவைகளைச் சத்திய ஆவேசத்தோடு கூறுகின்றன.

பாரதப் படையோடு போர் மூண்டுவிட்டது. துன்னாலைக் குமரன் என்ற போராளி தேடப்படுகிறான். பவளம் தன் வீட்டுப் புகைபோக்கிக்குள் அவனை ஒளித்துக் காப்பாற்றுகிறாள். இக் காதலர்கள் பிரிய நேர்கிறது. பவளம் சொல்கிறாள் :

"காத்திருப் பேன் உனக் காகவே காலமெல்லாம்
பூத்திருப் பேன்விழி காலடி போகுமொலி
காத்திருப் பேன்செவி உன்றன் குளிர்விழிக்காய்
மூத்திருப் பேன்குழல் வெண்ணரை
மொய்த்திடினும்"

ஆயுதக் குழுவினால் தேடப்படும் குமரன் பல ஊர்கள் அலைகிறான். பலருடைய சோகக் கதைகளைக் கேட்ட கிளைக் கதைகளுள் ஒன்று தான் சுநீதா என்ற சிங்களப் பெண்ணின் கதை. அவள் தாய் பொடிகாமி அவளைப் பெற்ற வேளை மருத்துவம் பார்த்தவர் ஒரு தமிழ் டொக்டர். இனக்கலவரம் மூண்ட போது அவரைக் காட்டு வழியே அழைத்துச் சென்று காப்பாற்றியவர் சுநீதாவின் தந்தை.

இலங்கைக் காவியத்தின் அச்சேறிய பகுதி இவ்வளவே. "ஏனைய பகுதிகள் பின்னர் அச்சேறும்" என்று சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார்.

சச்சிதானந்தன் தமது காவியத்தில், ஆங்காங்கே யாழ்ப்பாணப் பண்பாட்டுக் கோலங்களைக் காட்டிச் செல்வார்; பனை ஓலையிற் கோலிய பிளாவில் இருக்கும் கள்ளை, அதில் மிதக்கும் வண்டுகளை ஊதி விலக்கிக் குடிக்கும் காட்சி :-

"கள்ளார்நந்த ஓலைக் கலத்தினைக் கையிரண்டும்
உள்ளார்ந்து தாங்கவாய் ஊதிக் கருவண்டு
தள்ளூர வாய்நனைப்பார் சம்பல் இடை தொட்டுச்
சுள்ளோடு மெல்லச் சுவைத்துச் சுவைத்திட்டே"

('சுள்' என்பது இக் காலத்தில் teste எனப்படுகிறது)

ஆறுமுகச் சோதிடர் அறுபத்து நாலு வயதினர். நீறு பொலிந்த நெற்றி, வீசும் சந்தன வாசம், மூக்குக் கண்ணாடி பிரச்சினைகளோடு வருவோர் அவரைத் தூரத்திற் கண்ட மாத்திரத்தே பாதித் துன்பம் நீங்கப் பெறுவர். அவரோடு பேசத் தொடங்க மீதியும் விலகும். அவருடைய சொல்லாகிய தெப்பத்தின் துணை கொண்ட துக்கக் கடல் தாண்ட வருகிறார்களாம் மக்கள்.

அவர்கள் கஷ்டங்களுக்குக் காரணமான கோள்களைக் குறிப்பிடுவதோடு, அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதற்கு செய்யவேண்டியவற்றையும் சொல்கிறார் ஆறுமுகம்:

"எள்ளிடு கிழியினை எரித்தலாற்சனி
வெள்ளியின் கிழமைகள் விரதம் நோற்றலால்
தள்ளிடும் கோள்களின் பகைமை, சாந்தியாம்!"

தமிழ் மக்கள் வாழ்வில் மிகமுக்கியமான ஒரு காலகட்டத்தை அக்கட்டத்தில் வாழ நேர்ந்து, துன்ப துயரங்களை அனுபவித்த இளைஞர் கதையை, தமிழன்னைக்குக் காணிக்கையாக்கிய கவியரசைச் சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

# ஆண்டு விழாவில் இலக்கியச் சிறப்புரைகள்

அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான ஆண்டுவிழாவும், பரிசளிப்பு விழாவும் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை சங்கத்தின் தலைவர் சொல்வேந்தர் பொன் சுகந்தனின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது விசேட நிகழ்வுகளாக நாடகக் கலைஞர் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு, பொன் சுகந்தன் சமூக அரங்கம், கனடா ஒட்டவா பல்கலைக்கழக மாணவர்களின் நன்கொடையான ஐம்பதாயிரம் ரூபாவைத் தேர்ந்தெடுக்கப்பட்ட நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு ஆகியவற்றுடன் இலக்கியச் சிறப்புரைகளை 'ஈழத்து நாவல்கள்' என்னும் தலைப்பில் எழுத்தாளர் தெணியானும், 'சிறுகதைகள் பற்றிய ஒரு நோக்கு' என்னும் தலைப்பில் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனும், 'மரபுக் கவிதைகள்' என்னும் தலைப்பில் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனும், 'ஈழத்து நாடக அரங்க வளர்ச்சி' என்னும் தலைப்பில் க.திலகநாதனும் வழங்கினார்கள்.

# க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இலங்கைத் தமிழை பிரகாசமாக ஒளிரச் செய்தவர்



பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த துரைராசா குலசிங்கம் எண்பதுகளிலிருந்து உதயன் புத்தக நிலையத்தை நடத்தி தமிழக மற்றும் ஈழத்துச் சிற்றிதழ்கள் மற்றும் இலக்கிய நூல்களைப் பரவலாக்கியவர். 'அறிவோர் கூடல்' என்னும் நிகழ்வினைத் தொடங்கி கலை, இலக்கிய, சமூக, அறிவியல், பொருளாதார, அரசியல் கருத்தரங்குகளை நிகழ்த்தி இலக்கிய ஆர்வலர் மத்தியில் பயன்தரு விவாதங்களுக்கு வழிவகுத்தவர். இவர் அண்மையில் வெளிவந்துள்ள 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' யின் விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்புக்கு; ஈழத்தின் வட்டார வழக்கிலுள்ள 1700 சொற்களைச் சேகரித்துக் கொடுத்து பங்களிப்புச் செய்துள்ளார். இது பற்றி க்ரியா எஸ். ராமகிருஷ்ணன் க்ரியாவின் திருத்திய பதிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" ......இலங்கைத் தமிழ், தமிழின் சிறப்பான வெளிப்பாடு. இலங்கைத் தமிழின் தனித்துவம் அகராதியில் முழு வீச்சுடன் வெளிப்பட வேண்டும் என்று விரும்பினோம். ஆகவே தொடக்கத்திலிருந்தே இலங்கைத் தமிழ் எழுத்துக்களிலிருந்து விரிவாகத் தரவுகளையும் எடுத்துக்காட்டு வாக்கியங்களையும் தொகுத்து வைத்திருந்தோம். இருந்தாலும், அவற்றைப் பதிவுகளாக மாற்றும்போது எழுந்த கேள்விகள் ஏராளம். எங்களுடன் இணைந்து உதவி செய்வதற்குத் தகுந்த நபரைத் தேடிக் களைத்திருந்த சமயத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த இ.து.குலசிங்கம் பெரும் அதிர்ஷ்டம்போல் எங்களுக்குக் கிடைத்தார். குலசிங்கத்துக்கும் க்ரியாவுக்கும் சுமார் 30 ஆண்டுகள் உறவு உண்டு. சொந்த அலுவலை முன்னிட்டுச் சென்னைக்கு வந்திருந்த அவர், எங்கள் தேவையைப் புரிந்துகொண்டு, மிகுந்த உற்சாகத்துடன் சுமார் இரண்டு மாதங்கள் கிட்டத் தட்ட தினமும் காலையிலிருந்து மாலைவரை எங்களுடன் இருந்து இலங்கைத் தமிழுக்குள் எங்களை அழைத்துச் சென்றார். அவருடைய ஈடுபாடும், அர்ப்பணிப்பும் இந்த இரண்டாம் பதிப்புக்குக் கிடைத்த பெரும்பேறு. புத்தகங்களுடன் ஆழ்ந்த தொடர்பு கொண்டிருக்கும் குலசிங்கம் நாங்கள் தொகுத்து வைத்திருந்ததற்கு அப்பால், மொழியில் அவருக்கு இருக்கும் இயல்பான பிடிப்பின் காரணமாக, எங்களுக்குத் தரவுகளும் சொற்களும் நிறையக் கிடைப்பதற்கு உதவிசெய்தார். இந்தப் பதிப்பில் இலங்கைத் தமிழ் பிரகாசமாக ஒளிர்கிறது என்றால் அதற்குக் குலசிங்கம்தான் காரணம். அவருடைய தரவுகளின் அடிப்படையில் மேற்கொண்டு வேலைசெய்யும்போது எழுந்த மொழியியல் சார்ந்த சந்தேகங்களுக்கு எங்களுக்கு விரிவாக விளக்கங்கள் அளித்து உதவியிருப்பவர் ஞா.ஜெயசீலன். சென்னையில் ஆராய்ச்சி மாணவராக வந்திருக்கும் ஜெயசீலன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் கற்பிக்கிறார். சி.டி.இந்திரா அவரை இந்த அகராதித் திட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரும் நாங்கள் கேட்டுக்கொண்டபோதெல்லாம் வந்து எங்களுடன் இருந்து தொடர்ந்து எங்களுடைய கேள்விகளுக்குச் சளைக்காமல் பதில்தந்து உதவியிருக்கிறார். தேவைப்படும் சமயங்களில் தன் நண்பர்களுக்கு எழுதியும், அவர்களைக் கேட்டும் தகவல்களை உறுதி செய்திருக்கிறார்..."




இதையிட்டு ஈழத்தவர் என்ற வகையில் இப்பணியில் ஈடுபட்ட திரு.குலசிங்கம் அவர்களுக்கும், ஜெயசீலன் அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

க்ரியா நிறுவனம் 1999 இல் ஆரம்பித்து 2006 வரையிலான எட்டாண்டுகால கடும் உழைப்பில் அகராதியின் இத் திருத்திய பதிப்பை இவ்வாண்டில் வெளியிட்டுள்ளது.

# வாழ்க்கை

இயல்பூக்கங்களினதும்
ஆசைகளினதும், சூழ்நிலைகளினதும்
கைதியாய்
நாமே சிருஷ்டித்து
அரங்கேற்றும் நாடகம்
நம் வாழ்க்கை.

சுயத்தின் பார்வையில்
நாடகம் நாடகமே.
*Shakespeare* இன்
*Macbeth,*
*Julius Caesar*
அல்லது
*The Merchant of Venice* போல்

நாம் பாத்திரங்கள்.

பேரியற்கையின்
இயல்பும் போக்கும்
புலப்பட
வாழ்க்கை
புதிய தரிசனங்களோடு
வேகம் கொள்ளும்

கடமையும் செயற்பாடும்
உண்மையான அர்த்தத்தில்

நெறியாளர்
தானே நடித்து
உடன் பாத்திரங்களை
உன்னத சிருஷ்டியாக்கும்
அற்புதக்கலை
வாழ்க்கை.

சூழ்நிலையின் கைதியாய் நாம்
இருக்கிறோம்
என்பது
உண்மை.
சூழ்நிலையை நாம் கைதியாக்க
முடியும்
என்பது
மாபெரும் உண்மை.

**ஞ. ஜீவகாருண்யன்**

# சாதனைகள் செய்யும் பிள்ளைகளை பாராட்டுதல்

## ஓர் உளவியல் நோக்கு

ந. சி.ஸ்ரீ. நதிபரன்

**சா**தனையானது செயற்கரிய செயலைச் செய்தால் சாதனைதான். இன்று உலகில் விஞ்ஞானத்தின் விந்தையால் பல்தளப் பரிணாமத்தில் சாதனைகள் பல நிகழ்ந்து வருகின்றன. மருத்துவத்திலும் சரி, தகவல் தொழில்நுட்பத்திலும் சரி, வர்த்தகத் துறையிலும் சரி எந்தத் துறையிலும் சாதனைப் பயணங்கள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. இத்தகைய சாதனைகளுக்காக சாதனை செய்தவர்களைப் பாராட்டு தல் என்பது வித்தியாசமானவை, அறிவுபூர்வமானவை. அவர்களது சாதனை நிகழ்வுகள் பிறருக்கு நன்மை விளைவிப்பவை. பயனுறுதி வாய்ந்தவை என பலவாறு பலதளங்களினின்று நோக்கலாம். ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் சாதனைகள் என்பது சற்று வித்தியாசமானதுதான். அவர்களது சாதனைகள் பெரும்பால னவை தன்னைப்பற்றியதாகவே சுயத்தை மதிப்பிடும் கருவியாக சாதனைகள் அமைவதை நோக்கலாம். அதைப்பற்றி அலசுவது நோக்கமல்ல. இங்கு சிறுவர்களது, பாடசாலைப் பிள்ளைகளது சாதனை முயற்சிகளை பாராட்டுதல் சரியா தவறா என்பது தான் இக்கட்டுரையின் பிரதான விடயம்.

யாழ். குடாநாட்டு மாணவர்களின் கல்வித்துறையில் வீழ்ச்சிநிலை காணப்படுவதை கடந்தகால பரீட்சைப் பெறுபேறுகளின் மூலம் அறியலாம். எனினும் ஒரு சிலரது சாதனைகளும் குறிப்பிடத்தக்கவாறு நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன.

இன்று மாணவர்களின் கல்வி சுதந்திரமற்றதாக பெற்றோர்களால், ஆசிரியர்களால் வலுக் கட்டாயமாக திணிக்கப்படுவதாக காணப்படுகிறது. மாறாக கல்வியென்பது மாணவர்கள் தமது அறிவை, பலத்தை, கடமையை உணரக் கூடியதாக அமைய வேண் டும். தற்போது இங்கு நடைமுறையி லுள்ள திணிக்கப்பட்ட கல்வியில் பரீட்சைக்கான கல்விப் புலத்தில் வெற்றி பெறும் அதிஷ்டசாலிப் பிள்ளைகளை பாராட்டுவதில் நாம் போட்டி போட்டு பிள்ளைகளின் திறமையை, அறிவை, ஆற்றலை விளம்பரப்படுத்தி பத்திரிகையில் பிரசுரிக்கிறோம். பெற்றோர்கள் இதற்கென்று கற்பித்த ஆசிரியர்கள் வரை தம்மையும் விளம்பரப் படுத்துவதற்காக பிள்ளைகளை பகடைக்காயாக பாவிப்பதை யாரிடம் நோவது? யாரை நோவது? யார்க் கெடுத்துரைப்பது? புகழ்ச்சி குழந்தைகளின் தற்துணிவையும், பாதுகாப்புணர்வையும் வளர்த்து விடும் என்று பலரும் நினைக்கலாம். ஆனால் பிற்கால உளவியல் நிபுணர்களது கருத்துப்படி அது நடைமுறையில் மன அதிர்ச்சியையும் தவறான நடவடிக்கைகளையும் கூட ஏற்படுத்திவிடும் அபாயம் உண்டு என எச்சரித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள பெற்றோரில் பெரும்பாலானோர் அறிவுத்தனமான விருப்பங்கள், ஆசைகளையுடையவர்களாக இருப்பதுண்டு. தன் பிள்ளைதான் படிக்க வேண்டும் முன்னேற வேண்டும் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும். மற்றையவர்களின் பிள்ளைகள் முன்னேறக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சி மிக்க பெற்றோர்களைப் பார்க்கிறோம். இக்காழ்ப்புணர்ச்சியை பிஞ்சு உள்ளங்களில் நஞ்சுவிதையாக தமது பிள்ளைகளுக்கும் விதைக்கிறோம். இக் கொடூர சிந்தனையால் பிள்ளைகளும் எதிர்காலத்தில் பாதிக்கப்படுகிறார்கள். இத்தகையவர்கள் தமது பிள்ளை (பரீட்சையில்) சாதனை படைக்கும் போது பாராட்டுகிறார்கள். இப்பாராட்டுதல்கள் குழந்தைகளின் மனதில் விபரீதத்தைக்கூட ஏற்படுத்தலாம் என உளவியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அளவுக்கு மீறி பாராட்டும் போது - புகழும் போது அக்குழந்தையால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனெனில் தன்னைப் பற்றிய அபிப்பிராயம் வேறானதாக இருக்கிறது. அதன் பார்வையில் தான் ஒரு போதும் நல்ல பிள்ளையாக இருக்க முடியாது என எண்ணுகிறது. உண்மையில் எவ்வளவுக்கு எவ்வளவு குழந்தை புகழப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தனது உள்ளக வடிவைக் காட்டுவதாக துடுக்குத்தனமாக நடந்து கொள்கிறது.

பிள்ளை தான் செய்த நல்ல செயலுக்காகப் புகழப்பட்டதும் அந்த புகழ்ச்சியை உண்மையல்ல என்று நிரூபிப்பதற்காக மோசமாக நடந்து கொள்கிறது. இவ்வாறு செயலில் காட்டுவது தன்னைப் பற்றிய வெளியுலகின் அபிப்பிராய பேதங்களைக் குறித்த உடன்பாடின்மையை வெளிப்படுத்த குழந்தைகள் பயன்படுத்தும் வழிமுறையாக இருக்கக்கூடும்.

இவ்வுண்மை எதைக் காட்டுகிறது? புகழ்ச்சி தேவையில்லை என்பதல்ல மாறாக புகழ்ச்சியானது சக்தி வாய்ந்த மருந்தைப் போல பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளும் விதி முறைகளும் கால இடைவெளிகளும் என அதன்

பாவனை முறை இறுக்கமானதைப் போல புகழ்ச்சியும் எப்போதும் பிள்ளைகளின் முயற்சியையும் செயலையும் பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர பிள்ளைகளின் ஆளுமை குறித்தோ அல்லது இயல்பு குறித்தோ இருக்கக்கூடாது.

உதாரணமாக, ஒருபிள்ளை வீட்டைச் சுத்தம் செய்திருந்தால் பெற்றோர் அப்பிள்ளையை பாராட்டும் போது முன்னர் இவ் வீடு எவ்வளவு அசிங்கமாக இருந்தது இப்போது எவ்வளவு அழகாக சுத்தமாக இருக்கிறது போன்ற பாராட்டுகளைத் தெரிவிப்பது இயல்பானது. ஆனால் 'அவன் எவ்வளவு நல்ல பிள்ளை' எனக்கூறுவது எவ்விதத்திலும் பொருத்தமில்லை என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர், ஏனெனில் புகழ்ச்சி வார்த்தை குழந்தைகளுக்கு கண்ணாடி பார்ப்பதுபோல ஓர் உண்மையான தோற்றத்தை ஏற்படுத்த வேண்டுமே தவிர ஆளுமை குறித்ததொரு தெளிவற்ற கற்பனைத் தன்மையை வழங்கக்கூடாது.

மேலும் சில பெற்றோர் தமது பிள்ளைகளை புகழும்போது "நீ எவ்வளவு, அருமையான பிள்ளை, மற்றையவர்களது பிள்ளைகளை போலல்லாது நீ மிகவும் கெட்டிக்காரன், நீ இல்லாமல் அம்மாவுக்கு என்னதான் செய்ய இயலும்; அம்மாவின் செல்லக்குட்டி..."

இப்படியான புகழ் உரைகள் குழந்தைக்கு மனமருட்சியை ஏற்படுத்துவதுடன் ஒருவகை அங்கலாய்ப்பையும் ஏற்படுத்திவிடக்கூடும். அது, தான் ஒன்றும் அருமையான பிள்ளையில்லை இப்படியான பெயருடன் தன்னால் இருக்க முடியாது என உணரவும் கூடும். குழந்தை வளர வளர இந்த நல்லுரைகள் எப்போதாவது உடைந்து மங்கி மறைந்து விடுமோ தனது உள்ளச்சொரூபம் தெரியவருமே என்ற ஒருவகை அச்சத்துடன் அந்த நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்து மனச்சுமையை இறக்கி வைப்பதற்காக துடுக்கான செயலில் ஈடுபட்டு தனது நிலையினின்றும் பிறழ்கின்றது.

தவிரவும், பெற்றோர் ஏனைய பிள்ளைகளுடன் தம்பிள்ளைகளை ஒப்பிட்டு பேசும்போது தன்னைவிட சிறந்த பிள்ளை இல்லை என இயல்பான கர்வம் கொண்டு மற்றைய பிள்ளைகளுடனான உறவை முறித்துக் கொள்ளவும் வாய்ப்புண்டு. எனவே பிள்ளையின் ஆளுமை குறித்த நேரடிப் புகழ்ச்சியானது, நேரடியாக பிறக்கும் சூரிய ஒளியைப் போல அசௌகரியமாக இருப்பதுடன் விபரீதமாகவும் இருக்கும் என உளவியலாளர் கூறுகின்றனர். இந்த விடயத்தை நாம் எமக்கும் பரீட்சித்துப் பார்க்கலாம். ஒருவரை அடக்கமானவன், கோபமில்லாதவன், கண்ணியமானவன், அற்புதமானவன் என்று ஒருவர் புகழுகையில் அதில் ஒரு பகுதியையாவது மறுத்துரைக்கவே விரும்புவர். அவர் பகிரங்கமாக நீங்கள் கூறியவற்றை ஏற்றுக்கொள்கிறேன் நன்றி எனக் கூறமாட்டார். அப்படிக்கூறினால் அவருக்கு மனதில் ஒரு கோளாறு இருப்பதாகவே அர்த்தப்படுத்திவிடும். தனக்குத் தானே கூட நேர்மையானவன், ஒழுக்கசீலன் என்று சொல்லமுடியாது. மாறாக அவர் செய்யும் காரியங்கள் பற்றி, சேவைகள் பற்றி புகழுகையில் நிச்சயமாக அவரின் மனம் சந்தோசமடையும். எனவே ஒருவர் குறித்தான ஆளுமை பற்றிய புகழ்ச்சியை விட பிள்ளைகளது ஆளுமையின் பயனான அதன் வெளிப்பாடாக விளங்கும் அவர்களது செய்கைகளைப் பற்றிப் புகழும் போது அவரின் மனம் புழகாங்கிதமடையும் என்பது உளவியல் வல்லுநரது கருத்து.

எனவே, குழந்தைகளைப் புகழும் போது நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். குறிப்பாக, பெற்றோரும் ஆசிரியர்களும் இதுவிடயத்தில் கவனமெடுக்க வேண்டும். அவர்களது புகழ்ச்சி பிள்ளைகளின் இயல்பு அல்லது ஆளுமைபற்றியதாக இருப்பதற்குப் பதிலாக அவர்கள் செய்யும் முயற்சி சாதனை பற்றியதாக இருக்க வேண்டும். எமது அபிப்பிரயங்கள் மூலமாக குழந்தைகள் தம்மைப்பற்றித் தாமே முடிவு செய்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ◆

## இளவாலைத் திருமறைக் கலாமன்றத்திற்கு புதிய கட்டடம்

இளவாலை திருமறைக் கலாமன்றம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் உதவியுடன் கல்லூரி வீதி, இளவாலையில் புதிதாக அமைத்த மண்டபத்தின் திறப்புவிழா *05.07.2008* பிற்பகலில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் கலந்துகொண்டதுடன் கட்டடத்தையும் திறந்துவைத்தார்.

நிகழ்வுக்கு இளவாலை மாரீசன்கூடல் றோ. க. வித்தியாலய அதிபர் திரு எஸ். என். உதயகுமார் தலைமை தாங்கினார். தொடர்ந்து விருந்தினர்கள், இளவாலை திருமறைக் கலாமன்ற இணைப்பாளர், இணை இணைப்பாளரின் உரைகளும், அந்த மன்றத்தைச் சேர்ந்த கவின்கலைகள் பயிலக, சிறுவர் கலைக்கூட மாணவர் களின் நடனங்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இளவாலை மற்றும், யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்தார்கள்.

எள்ளாய் விழுந்து
எண்ணெயாய்த் திரளுவோம்
பொய்யாம்
மொழிப்புலவர்தம் பனுவல்

புலத்திருந்து பெயர்த்தெறியச்
சில்லம் பல்லமாய்ப் பறந்தனர்
மனிதர்

வெடித்துச் சிதறிக்
காற்றுடன் பரவும் வெடிபலவன்களாய்
நிகழ்காலம் நடத்தி
எதிர்காலம் விரிக்கும் முனைப்பு

எனினும் வெடித்துச் சிதறிக்
காற்றைக் கிழித்து வீழும்
வெடிகுண்டுச் சிதறல்களாய்
ஆயிற்று எம் வாழ்க்கை

வெட்டி வெளியேற்றப்பட
பகடைகளாய்
பெறுமதி இழந்தனர் மனிதர்

வாய்க்கும் இடமெலாம்
கண்மூடித் தூங்கிவிடும் பூனையாய்
சுருண்டு கிடக்கிறது நியாயம்
உலகம்
மீளவும் தட்டையாக்கப்பட்டது
அரசியல் நெறிமுறையின்
சதுரங்கப் பலகையாய்...

பெப்ரவரி 2008



அள்ளியெடுத்து ஆரத்தழுவுக
உள்ளம் சிலிர்க்கும் மெல்லிளஞ்சூட்டில்
மகிழ்க
மனம் குளிர்ந்து

மெல்லப் பொழியும் மதலைப் பொழிவில்
நனைந்து
கிறங்கி மகிழ்கவென
கொஞ்சும் விரற் கைகள் உயர்த்தி
எம்பெம்பிக் கெக்கெளி கொட்டும்
குழந்தைக் கைகளில்

வல்லாயுதம் விளையும் வாழ்க்கை
ஏன் விடிய?!

பெப்ரவரி 2008

# சி. ஜெயசங்கர் கவிதைகள்

குரும்பை வீழ
அணில்களன்றிப் பதற்றம் அறியாத;

அணில்கள் பதறிக் குரல்தெறிக்க
புலுனிகளின்றிப் பரபரப்பு அறியாத;

மற்றும்
அருந்தலான அகால மரணமொன்று
கிராமத்துக் காவியமாய்
நினைவழியாதிருந்த காலமொன்று

நினைவடுக்குகளில் மட்டும்
எத்தனை காலந்தான்
தூசுகட்டிப் புதைந்திருக்க?!

இணைய வெளிகளில்
கணங்கணம் விரியும் விசித்திரங்களுக்கும்
புனைவுகளாய்
நினைவடுக்குகளில் பதைபதைக்கும்
வாழ்வை மறைய விட;
அயர்ந்து நிற்கும் மனிதரோ நாம்?!

ஜூலை 2008



வல்லாண்மை காணும்
சித்து விளையாட்டு
நாணயத்தின் பம்பரச் சுழற்சியில்
கரைந்து மறைகின்ற
பயங்கரவாத சனநாயகப் பக்கங்கள்

அழித்தலில் வாழ்வு தேடும்
இல்லாது ஒழித்தலில் வல்லமை எய்தும்
நிலைகுலைத்தலில் நிம்மதி கொள்ளும்
ஆதிக்கத்தில் ஆனந்தம் அடையும்
சாணக்கிய அரசியல்

அரசியல் விஞ்ஞானமாகி
வெடிக்கிறது
வானத்தில் பூமியில்
நிலத்தடியில் நீர்ப்பரப்பில்
கட்டடங்களில் காடுகளில்
காதுகளில் நெற்றிப் பொட்டுக்களில்

ஒடுக்குமுறைகள் ஒடுக்குமுறை எதிர்ப்புகள்
எல்லாவற்றையும்
எல்லாவற்றையும் விழுங்கி விழுங்கி
எழுகிறது வல்லரசியல்

பெப்ரவரி 2008

# சிற்பி சிவசரவ
# பவளவிழா

ஈழத்தின் மூத்த படைப்பாளியும், கலைச் **செல்வி** சஞ்சிகையின் ஆசிரியருமான சிற்பி சிவசரவண**பவன்** அவர்களின் பவளவிழா 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலகத்தில் நடைபெற்றது.

யாழ். இலக்கிய வட்டமும் ஞானம் சஞ்சிகையும் இணைந்து நடத்திய இப்பவள விழா நிகழ்வுக்கு யாழ். இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் தலைமை வகித்தார்.

"ஈழத்திலக்கியத்தில் முன்னணியில் திகழும் எழுத்தாளர்கள் பலரை கலைச் செல்வி மூலம் இனங்காட்டியவர் சிற்பி அவர்கள். ஈழத்துச் சிறுகதைகள் தொகுதியை முதலில் வெளிக் கொணர்ந்தவர் அவர். அவரை நீக்கிவிட்டு ஈழத்து இலக்கியத்தைக் கூறமுடியாது. அத்தகைய பெரியாரது பவளவிழாவைக் கொண்டாடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்" என்று செங்கை ஆழியான் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

ஞானம் சஞ்சிகையின் சிற்பி பவளவிழா மலரை வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் அவர்கள் வெளியிட்டு வைத்து பவளவிழா நாயகரிடம் கையளித்தார்.

"அனுப்புகின்ற கதைகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்காத நிலையிலிருந்த எனது ஆரம்ப காலத்தில் எனது சிறுகதையை வெளியிட்டு இலக்கிய உலகுக்கு என்னை அறிமுகப்படுத்திய குருநாதர் சிற்பி ஐயா. அவரது கலைச் செல்வியைப் படித்துச் சுவைத்த உத்வேகத்திலேயே பக்கச்சார்பற்ற ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டு ஞானத்தை வெளியிட்டேன். இப்பவளவிழா மலரைக் குருநாதருக்குச் சமர்ப்பிப்பதில் பெருமையும் நிறைவும் அடைகிறேன்" என தி.ஞானசேகரன் அவர்கள் தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டார்.

'நினைவுகள் மடிவதில்லை' என்ற பெயரிலான சிற்பியின் சிறுகதைத் தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் வெளியிட்டு வைத்தார். சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் செ.மகாதேவா அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

வரவேற்புரையை ஓய்வுபெற்ற உதவித் தபால் அதிபர் ஆ.சி.கணேசவேல் அவர்களும், ஆசியுரையை சிவஸ்ரீ ச.சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களும், வாழ்த்துரையை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் அவர்களும், பாராட்டுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், எழுத்தாளர் கோப்பாய் சிவம், கவிஞர் சு.துரைசிங்கம், எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆகியோரும் நிகழ்த்தினர். ஏற்புரையினை பவளவிழா நாயகன் சிற்பி வழங்கினார்.

நன்றியுரையினை சிற்பி அவர்களின் புதல்வர் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் நிகழ்த்தினார். பல்வேறு நிறுவனங்களாலும், இலக்கிய அபிமானிகளாலும் பொன்னாடை போர்த்தியும், மாலை அணிவித்தும், நினைவுச் சின்னங்கள் வழங்கியும் பவளவிழா நாயகர் கௌரவிக்கப் பட்டார்.

**சு.ஸ்ரீகுமரன்**

# அந்நியனும் 'காலம்' பற்றிய பிரக்ஞையும்

பா. துவாரகன்



*2001,* யாழ்ப்பாணம். பலாலி வீதிவழியே இராமரூபனும் நானும் தனித்தனி சைக்கிளிற் செல்கின்றோம். எமக்கிடையிலான உரையாடலின்போது, இராமரூபனிடம் அவனுக்குப் பிடித்த புத்தகங்களைப் பற்றிக் கேட்டேன். ஆங்கிலத்திற் படித்த ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலியையும், 'அந்நியன்' நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பையும் தன்னைக் கவர்ந்த புத்தகங்களாகக் குறிப்பிட்டான். அந்நியனைப் படிக்கும்போது, பிரெஞ்சு மூலமொழியிலே அதனைப் படிக்கவேண்டும் என்ற விருப்புத் தனக்கு ஏற்பட்டதாகவும் இராமரூபன் கூறியிருந்தான். 'அந்நியன்' பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட நாவல்.

✶

2001இல் இரு தடவை அந்நியனைப் படித்தேன். படிக்கின்ற போது என்னை ஈர்த்த சில வசனங்களை எழுதிவைத்தேன். பின்னரும் அந்நியனைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இருந்தது. 2007 இல் படிக்கவேண்டும் என்ற உந்துதல் மிக அதிகமாகவே இருந்தது. சிலநாட்களுக்கு முன்னர்தான் நிறைவு செய்தேன். இதை எழுத ஆரம்பித்து 4 மாதங்கள் ஆகிவிட்டது.

✶

ஆல்பெர் காம்யு *(Albert Camus)* பிரெஞ்சில் எழுதியதை வெ.ஸ்ரீராம் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். க்ரியா வெளியீடாக 1980 இல் இதன் முதற்பதிப்பு வெளிவந்தது.

நாவலில் இரு சம்பவங்கள்: ஒன்று நாவல் ஆரம்பமாகும் முன்னரே நிகழ்ந்துவிட்டது. மற்றையது தான் நாவலில் நிகழ்கின்றது. அதுவுமே முடிந்த கதைதான். மெர்சோ (அந்நியன்) சிறையில் மரணதண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். அந்த நிலையில் அவனது மன உணர்வுகளை, நினைவுகளை காம்யு நாவலாக்குகின்றார்.

தாயாருடைய மரணம் - அந்தச் செய்தி மெர்சோவுக்குக் கிடைப்பதுடன் நாவல் ஆரம்பமாகிச் சில நாட்களுக்குப் பிறகு நண்பனான ரேமோனுடனும் நண்பியான மாரியுடனும் கடற்கரைக்குச் சென்று பொழுதைக் கழித்த வேளை ஏற்பட்ட ஓர் அசம்பாவிதத்திலே மெர்சோ ஒரு அராபியனைச் சுட்டுக் கொல்ல நேரிடுகின்றது. அதனைத்தொடர்ந்து மெர்சோவின் சிறை வாழ்வு, நீதிமன்ற விசாரணை என்று நகர்கிறது நாவல். 150 பக்கங்களுக்குச் சற்றுக் குறைவான இந்நூல் முழுவதுமே மெர்சோவின் நினைவுகள்தான்.

மெர்சோவின் நினைவிலே அவனது தாயாருடைய இறுதி ஊர்வலத்திற் கலந்துகொண்ட திரு. பெரேயின் முகம், அந்தப் பிரதேசம், வெயில், மாதா கோயில், கல்லறைகளின் மேலிருந்த சிவப்புப் பூக்கள் நிழலாடுகின்றன. தாயாரின் மரணச் செய்தி கிடைத்ததுமுதல், வேலைத்தளத்தில் இருந்து தாயார் வசித்துவந்த முதியோர் இல்லத்திற்கான பயணம் என்றவாறு நல்லடக்கம் முடியும்வரை முதல் அத்தியாயம் நீள்கின்றது.

நாவல் பின்வருமாறுதான் ஆரம்பமாகிறது,

"இன்று அம்மா இறந்து விட்டாள். ஒருவேளை நேற்றாகவும் இருக்கலாம். எனக்குத் தெரியாது. முதியோர் இல்லத்திலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. "தாயார் மரணம். நாளை அடக்கம். ஆழ்ந்த அனுதாபங்கள்." இதற்கு ஒன்றும் அர்த்தமில்லை. ஒருவேளை நேற்றே நிகழ்ந்திருக்கலாம்."

✶

நீதிமன்ற விசாரணை,

தாயாருடைய மரணச்சடங்கிலே கலந்து கொண்ட போதே மெர்சோவிற்கு அராபியனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக அரசாங்க வக்கீல் வாதிடுகிறார். மரணச்சடங்கிலே மெர்சோ அழாததும், தாயாருடைய உடலுக்கருகிற் புகைப்பிடித்ததும், கோப்பி அருந்தியதும், மறுநாள் சினிமாவிற்குப் போனதும், மாரியுடன் உறவு கொண்டதும் அராபியனைக் கொன்றதற்கான குற்றச்சாட்டுக்களாக முன் வைக்கப்படுகின்றன!

விசாரணையின் ஒரு கட்டத்தில் மெர்சோவிடம் நீதிபதி கேட்கிறார், ஏதாவது சொல்ல விரும்புகிறாயா என்று. அதற்கு மெர்சோ,

தனக்கு அராபியனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை என்கிறான். தொடர்ந்து மெர்சோவின் செய்கைக்கு உண்மையான உந்துதல் என்ன என்று கேட்கின்றபோது, தான் கேலிக்குள்ளாக்கப்படுவதாக உணர்ந்த அவன், வெயில் தான் காரணம் என்கிறான்.

✶

எனது நண்பர் ஒருவருடன் ஒரு நாள் தொலைபேசி மூலமாக உரையாடுகின்றபோது அந்நியனைப் பற்றிய பேச்சு வந்தது. நண்பர், "ஒரு மனிதனைக் கொல்வதற்கு வெயில் தான் காரணம் என்று எப்படிச் சொல்லாம்" என்று என்னிடம் கேட்டார். நண்பரது அந்தக் கேள்வி மிக அதிர்ச்சியாக இருந்தது.

நான் அவருக்குக் கூறவிரும்புவது,

தன்னிடம் இருந்த துப்பாக்கியால் எந்தக் காரணமுமில்லாமல் மெர்சோ அராபியனைச் சுடநேர்ந்ததா? மெர்சோவிற்கு எப்படித் துப்பாக்கி கிடைத்தது? முந்தைய சந்தர்ப்பம் ஒன்றிலே ரேமோன் அராபியனைச் சுட்டுக் கொன்றுவிடுவான் என்பதற்காக ரேமோனிடம் இருந்த துப்பாக்கியை வாங்கி மெர்சோ தான் வைத்திருந்ததையும் நோக்க வேண்டும்.

மெர்சோ கடற்கரைக்குத் தனியாகச் சென்றது ஒரு தற்செயல் நிகழ்வு. அப்போது அவரிடம் துப்பாக்கியிருந்ததும் ஒரு தற்செயல் நிகழ்வுதான். அன்றியும் ரேமோனுடன் சண்டையிட்ட அராபியன், மெர்சோ கடற்கரைக்குச் சென்றபோது அங்கே கடற்கரையிலே படுத்திருந்ததும் ஒரு தற்செயலே. மேலும் அராபியன் கத்தியை எடுத்தால் சுடுவதாகத் தீர்மானிக்கின்றான் மெர்சோ.

இதையெல்லாம் 'மெர்சோ' திரும்பவும் நீதிமன்றில் சொல்வது மீளமீளச் சொல்வதாகிவிடும். மெர்சோவை காம்யு எப்படியானவனாக் காண்பிக்கிறார் என்பதை, 'வெயில்தான் காரணம்' என்ற ஒரு வசனத்தை மட்டுமேகொண்டு தீர்மானித்துவிடுவது நன்றன்று.

**மெர்சோ அராபியனைக் கொல்ல நேர்ந்த சூழலுக்கான பின்புலத்தைப்பாருங்கள்,**

**"பேசாமல் திரும்பிச் சென்று விட்டால் இந்த விவகாரம் இத்துடன் முடிந்து விடும் என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் வெயில் தகித்துக் கொண்டிந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு எனக்குப் பின்னால் இருந்தது".**

**மெர்சோவின் இந்த வார்த்தைகள் மிகக் கவர்ச்சியானவை. அதாவது வெயில் தகித்துக் கொண்டிருந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு தனக்குப் பின்னால் இருந்ததை உணர்ந்த மெர்சோ அராபியனை நோக்கி அடியெடுத்து வைக்கின்றான்.**

வெயில் - அதன் வெப்பத்தை மெர்சோ பல தடவை உணர்கிறான்.

மாஜிஸ்ட்ரேட் உடனான உரையாடலில்,

"சற்றுநேரம் கழித்து மறுபடியும் என்னை மாஜிஸ்ட் ரேட்டின் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது பகல் இரண்டு மணி. அறை மிகவும் பிரகாசமாக இருந்தது; மெல்லிய ஒரு திரைச்சீலை. உள்ளே வெப்பம் மிக அதிகமாக இருந்தது..." (பக்கம் 83)

"அவருடைய தர்க்கத்தை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை காரணம், முதலாவதாக அங்கிருந்த வெப்பச் சூழ்நிலை பொறுக்க முடியாததாக இருந்தது." (பக்கம் 85)

ஒருநாள் நீதிமன்ற விசாரணையிலே வெப்பம் எப்படியிருந்தது என்பதை, பிற்பகல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றபோது நினைவு கூருகிறான் மெர்சோ,

"அதே இடம், அதே முகங்கள், ஒரே ஒரு வித்தியாசம் வெயில் இன்னும் அதிகமாயிருந்தது. மாயாஜால வித்தைகளில் நடப்பது போல, ஜூரிகள், என்வக்கீல், அரசாங்க வக்கீல், சில பத்திரிகையாளர்கள்- அனைவரும் ஆளுக்கொரு விசிறி வைத்துக் கொண்டிருந்தனர்." (பக்கம் 108)

வெயில் ஏன் ஒரு காரணமாக இருக்கக் கூடாது? எனது இந்தக் கட்டுரையின் பிற்பகுதியில் மேற்கோள் காட்டியுள்ளதை வாசிக்கின்றபோது (அந்நியன், பக்கம் 74,75) நீங்கள் உணர வாய்ப்புள்ளது.

உண்மையில், காம்யுவின் அந்நியனில் எந்தவிதக் காரணத்தையும் தேட முடியாது. மெர்சோ என்ற பாத்திரத்திற்கு கொலை செய்வதற்கு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. மெர்சோவைப் பொறுத்தவரை அராபியனைக் கொன்றதும் கொல்லாதிருப்பதும் ஒன்றுதான். நீங்கள் ஏன் உணவருந்துகின்றீர்கள்? என்று எவராவது கேட்டால், அந்தக் கேள்விக்கு ஏதாவது அர்த்தம் அல்லது பதில் இருக்குமென்றால், காம்யுவின் அந்நியனிற்கும் ஒரு பதில் இருக்கும். மெர்சோவிடம், நீ கொலை செய்வதற்கு என்ன காரணம் என்று கேட்டால், அது நீங்கள் ஏன் உணவருந்துகின்றீர்கள் என்று கேட்கப்படும் அபத்தமான கேள்வியைப் போன்றதுதான். அதற்கு நிலத்தில் பாதத்தைச் சுட்ட வெயில் தான் காரணம் என்று சொல்வது, பசி என்பதால் சாப்பிட்டேன் என்பதைப் போன்றது. காம்யு அந்நியனை அவ்வாறு தான் சித்திரிக்கின்றார். அதாவது மெர்சோ விருப்பு வெறுப்பு அற்றவர். அவனுக்கு எல்லாமே ஒன்றுதான்.[1]

நீங்கள் கொலை செய்வதும், செய்யாதிருப்பதும் ஒன்றென்று நினைக்கின்றீர்களா என்று என்னிடம் எவராவது கேட்டால் அந்நியனுடைய தத்துவார்த்தத் தளத்தில், சூழ்நிலையில் நின்று அந்நியன் என்ற பாத்திரத்திற்கு ஒன்றுதான் என்பேன். தவிர்க்க முடியாதது; தற்செயலானது; அது 'ஒரு அசம்பாவிதமே.'

மெர்சோ அராபியனைக் கொல்ல நேர்ந்த சூழலுக்கான பின்புலத்தைப்பாருங்கள்,

"பேசாமல் திரும்பிச் சென்று விட்டால் இந்த விவகாரம் இத்துடன் முடிந்து விடும் என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் வெயில் தகித்துக் கொண்டிந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு எனக்குப் பின்னால் இருந்தது".

மெர்சோவின் இந்த வார்த்தைகள் மிகக் கவர்ச்சியானவை. அதாவது வெயில் தகித்துக் கொண்டிருந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு தனக்குப் பின்னால் இருந்ததை உணர்ந்த மெர்சோ அராபியனை நோக்கி அடியெடுத்து வைக்கின்றான்.

வெயில் மட்டுமல்ல, அவனுக்குப் பின்னாலிருந்த பெரிய கடற்பரப்பும் அவனைத் தூண்டுகிறது; துணையாகப் பின்னாலே இருக்கிறது.

✶

நாவல் நிகழ்களம் அல்ஜீரியா, தாயருடைய சவ அடக்கம் முடிந்து வேலைக்குத் திரும்பிய சில நாள்களின்பின் ஒரு நாள் மெர்சோவிடம் அவனது முதலாளி, பாரிஸில் ஒரு நிறுவனத்தை நிறுவ விரும்புவதாகவும் இளைஞனாக

இருப்பதால் பாரிஸுக்குப் போவது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்குமே என்கிறார்.

அதற்கு மெர்சோ, நீங்கள் சொல்வது சரிதான் என்றும் "என்னைப் பொறுத்தவரை எல்லாமே எனக்கு ஒன்றுதான்" என்கிறார். இந்தப்பதில் பல சந்தர்ப்பங்களில் மெர்சோவிடம் இருந்து வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

தொடர்ந்து முதலாளி,

"அப்படியானால் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்படுவதில் உங்களுக்கு விருப்பமில்லையா" என்றார். அதற்கு, யாருமே அவர்களுடைய உண்மையான வாழ்க்கையை மாற்றிக் கொள்வதில்லை என்றும், எந்த ஒரு வாழ்க்கையும் மற்றயதை விட எந்தவிதத்திலும் குறைந்து போவதில்லை என்றும் மேலும் இப்போதிருக்கும் வாழ்க்கையில் எனக்கு எவ்வித மகிழ்ச்சிக் குறைவுமில்லை என்றும் (அந்நியன் 2ஆவது பதிப்பில்: எல்லா வாழ்க்கையுமே மதிக்கத் தக்கவைதான் என்றும்) மெர்சோ கூறுகிறான். இதனுள்ளார்ந்த தத்துவத்தை, இலக்கிய நயத்தை வாசகனே கண்டு கொள்ளவேண்டும்.

ஊரிலே பெண்களை வைத்துப் பிழைப்பு நடத்துபவன்

**அதற்கு யாருமே அவர்களுடைய உண்மையான வாழ்க்கையை மாற்றிக் கொள்வதில்லை என்றும், எந்த ஒரு வாழ்க்கையும் மற்றயதைவிட எந்தவிதத்திலும் குறைந்து போவதில்லை என்றும் மேலும் இப்போதிருக்கும் வாழ்க்கையில் எனக்கு எவ்வித மகிழ்ச்சிக் குறைவுமில்லை என்றும் (அந்நியன் 2ஆவது பதிப்பில்: எல்லா வாழ்க்கையுமே மதிக்கத் தக்கவைதான் என்றும்) மெர்சோ கூறுகிறான்**

என்று கூறப்படும் ரேமோனைப் பற்றி மெர்சோ குறிப்பிடுகையில்; "பொதுவாக அவனைக் கண்டால் யாருக்குமே பிடிக்காது. ஆனால் அவன் என்னிடம் வந்து அடிக்கடி பேசுவான். சில சமயம் என் வீட்டிற்கு வந்து சற்று நேரம் இருந்து விட்டுச் செல்வான். அவனுக்குக் காது கொடுத்துக் கேட்பேன். அவன் சொல்வதும் சுவராஸ்யமாக இருக்கும். (அந்நியன் 2ஆவது பதிப்பு: ஏனென்றால் அவன் சொல்வதை நான் சுவாரஸியமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன்.) மேலும் அவனுடன் பேசாமல் இருந்ததற்கு எக்காரணமும் இருந்ததாக எனக்குப் படவில்லை". மெர்சோவினுடைய தனித்துவமான இயல்பை இவ்விடத்திலும் காணலாம்.

ஒருநாள் ரேமோன், மெர்சோவிடம் "அவள் எனக்குத் துரோகம் செய்து விட்டதாக நீ நினைக்கிறாயா" என்று கேட்டதற்கு அப்படித்தான் தனக்குத் தோன்றுவதாக மெர்சோ கூறினான்.

> "அப்படியானால் அவளைத் தண்டிப்பது சரிதானா என்றும் அவன் நிலைமையில் நான் இருந்தால் என்ன செய்திருப்பேன் என்றும் அபிப்பிராயம் கேட்டான். இம் மாதிரிச் சந்தர்ப்பங்களில் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று எவராலும் சொல்ல முடியாதென்றும், ஆனாலும் அவளைத் தண்டிக்க விளையும் மனநிலை எனக்கு நன்றாகப் புரிகிறதென்றும் சொன்னேன்" (மெர்சோ).

இந்த இடத்தில் மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள முயலும் மெர்சோ என்னைக் கவர்கிறான்.

நீதிமன்ற விசாரணைகளில் பலர் சாட்சியமளிக்க வருகின்றனர். மெர்சோ வழமையாக உணவருந்தச் செல்லும் உணவு விடுதியின் உரிமையாளனான செலஸ்டின் சாட்சிய மளிக்கிறான்:

> "மெர்சோவைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்று வக்கீல் கேட்டதற்கு, அவன் ஒரு மனிதன் என்றான். என்ன அர்த்தத்தில் அப்படிச் சொல்கிறாய் என்றதற்கு, அதற்கு என்ன அர்த்தம் என்று எல்லோருக்குமே தெரியும் என்று பதிலளித்தான். மெர்சோவின் குற்றத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்று கேட்டதற்கு ஓர் உரை நிகழ்த்தத் தயாராக இருப்பவன் போல் இப்போது தோன்றினான் (செலஸ்ட்). 'என்னைக் கேட்டால் இது அவருக்கு ஏற்பட்ட ஒரு அசம்பாவிதம். இப்படி ஒரு அசம்பாவிதத்திற்கு இலக்காவது என்றால் என்ன என்று எல்லோருக்கும் தெரியும். அதிலிருந்து எப்படியும் தப்ப முடியாது. வேறு என்ன சொல்ல? என்னைப் பொறுத்தவரை "இது ஒரு அசம்பாவிதமே" அவன் இதே தொனியில் தொடர்ந்து பேசியிருப்பான் ஆனால் தலைமை நீதிபதி நிறுத்தி விட்டார்."

தொடரும் அந்தக் கணப்பொழுதை மெர்சோ பின்வருமாறு நினைவு கூருகின்றான்,

> "அவன் (செலஸ்ட்) கண்கள் பனித்து உதடுகள் துடிப்பதாக எனக்குத் தோன்றியது. நான் ஒன்றும் சொல்லாமல் அசையாமல் இருந்தேன். ஆனாலும் இப்போதுதான் என் வாழ்க்கையில் முதன் முறையாக ஒரு மனிதனைக் கட்டித் தழுவி முத்தமிட வேண்டும்போல் தோன்றியது".

இந்த இடத்திலே மெர்சோ, செலஸ்டினைத் தனக்குள் கண்டுகொள்கிறான்.

செலஸ்டினது இந்த சாட்சியமும், மேலே மெர்சோ ரேமோனுக்கு சொன்ன பதிலும் எந்தவித கற்பிதங்களும் அற்றவை. இந்த மாதிரியான தருணங்களில் ஒரு மனிதன் இவ்வாறு தான் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த மாதிரியான தருணங்கள் எவருக்கும் ஏற்படலாம். இத்தகைய தருணங்களில் அந்தச் செயல்களிற்கான மனநிலையைப் புரிந்து கொள்ளலே முக்கியமானது, என்று நான் கருதுகின்றேன்; அந்நியனிலிருந்து உணர்கின்றேன்.

✶

மெர்சோ இயல்பானவன். மிக இயல்பானவன் என்று சொல்வது தவறு. தான் கொலை செய்வதற்கு ஒரு காரணம் அல்லது நியாயம் இருந்ததாக அவன் தன்சார்பாக வாதங்களை முன்வைக்கவில்லை. தனக்காக ஒரு வக்கீலை வைத்துக் கொள்ளக்கூட அவன் விரும்பவில்லை. மாஜிஸ்ட்ரேட் உடனான விசாரணையின்போது துப்பாக்கியாற் சுடநேர்ந்த

அந்தச் சூழலை அப்படியே வர்ணிக்கிறான்.

மெர்சோவிற்காக நியமிக்கப்பட்ட வக்கீல், சிறைச்சாலையில் அவனோடு உரையாடுகின்ற போது, அம்மாவை அடக்கம் செய்த அன்று வருத்தமாக இருந்ததா என்று கேட்கிறார். அப்போது மெர்சோ,

> "நான் இதற்கு பதில் சொல்வது கடினமென்றும் சொன்னேன். நான் அம்மாவிடம் மிகுந்த அன்புடன் இருந்தேன். ஆனால் அதற்கு இங்கு என்ன அர்த்தமிருக்கிறது? ஆரோக்கியமாக இருக்கும் யாருமே சில சமயங்களில் தமக்குப் பிடித்தமானவர் களின் மரணத்தை மனத்தளவில் விழைவதுண்டு என்று கூறிய போது இடைமறித்த வக்கீல் இது போன்ற விடயங்களைக் கோர்ட்டாரிடமோ பார்வையா ளர்களிடமோ சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்." (பக்கம் 81)

காம்யுவினுடைய இந்த வார்த்தைகளை விளங்கிக் கொள்வது என்பது, ஒரு தத்துவத்தை விளங்குவதே.

சிறைச்சாலையில் ஆரம்ப நாள்களிலே தனக்கிருந்த பிரச்சினை நேரத்தைக் கழிப்பது தான் என்று நினைவு கூரும் மெர்சோ,

> "கடந்த காலத்தை நினைவு கூர்ந்து பார்க்கக் கற்றுக் கொண்டதிலிருந்து இந்தப் பிரச்சினையும் எனக்கு அவ்வளவாக இருக்கவில்லை. சிலசமயங்களில் நான் முன்பு வசித்த அறையை நினைத்துக் கொண் டேன். என் மனக்கற்பனையில் என்னுடைய அறை யின் ஒரு மூலையிலிருந்து தொடங்கி, பார்வையை ஒரு சுற்று விட்டு, பிறகு அங்கேயே திரும்பி வந்தேன். அப்போது என் மனக்கண் முன் தோன்றிய பொருட்களையெல்லாம் கணக்கெடுத்தேன்."

> "…. என் கற்பனையும் நீண்டு கொண்டே போயிற்று. அங்கிருந்த ஒவ்வொரு மரச்சாமானும், அதன் மேலிருந்த ஒவ்வொரு பொருளும், அதன் ஒவ்வொரு சிறு அம்சமும் நினைவுக்கு வந்தன. ஒவ்வொரு சிறு ஒடுக்கல், நசுக்கல், கீறல் பிய்ந்து போன சிறு துண்டுகள் அவற்றின் நிறம் – இவையெல்லாம் சிறிது சிறிதாக நினைவுக்கு வந்தன. இந்த நினைவுகள் முழுமை பெறப்பெற சில வாரங்களுக்குப் பிறகு என்னால் பல மணி நேரம் இப்படியே கழிக்க முடிந்தது. இது போன்று என் படுக்கையறையை நினைவுபடுத்திப் பார்க்கும்போது எவ்வளவோ மறந்துபோன, அல்லது சரியாகக் கவனிக்கப்படாத அம்சங்கள் எனக்குத் தெரிய வந்தன. ஒருவன் வெளியுலகில் ஒருநாள் முழுமையாக வாழ்ந்தி ருந்தால் போதும், அவனால் நூறு வருடங்கள் கூடச் சிறையில் இருக்க முடியும் என்று அப்போதுதான் புரிந்து கொண்டேன்." (பக்கம் 96,97)

இங்கே தனக்குள்ளே அகவயமாகத் திரும்புகிறான் மெர்சோ; சிறையின் தனிமையைத் துரத்தி விட்டன பழைய நினைவுகள். அவன் வாழ்ந்த அறையைச் சுற்றித் திரும்பிய நினைவு பின்னர் ஒவ்வொரு பொருட்களிலும், அவற்றின் நிறத்திலும் சூழல, கவனிக்காமலே விட்ட பல விடயங்கள் அவன் நினைவுக்கு வருகிறது.

பொருட்கள், புத்தகங்கள், எதுவுமேயில்லாத சிறைவாழ்வு, ஒரு மனிதன் – தனது வாழ்வை நுண்மையாக அவதானிக்க வழியமைத்துக் கொடுக்கின்றது! மனிதர்கள் தங்களது வாழ்வில் எப்போதும் ஏதாவது செய்து கொண்டேயிருப்பார்கள். சிலர் ஒரு கட்டத்தில் புத்தகங்களுள் தங்களை, புதிய விடயங்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நாம் கடந்த காலத்தில் கவனிக்கப்படாத பல விடயங்கள் இருப்பதை நினைக்க, உணர வாய்ப்பே இல்லாமல் இன்னொரு புதிய நாளுக்குள் நுழைந்து விடுகின்றோம்.

✶

சிறைச்சாலையில் தனது அறையிலே ஒட்டப்பட்டி ருந்த செய்தித்தாள் பற்றி மெர்சோ,

> 'ஒரு நாள், என் ஓலைப் படுக்கைக்கும் கட்டிலின் மரப்பலகைக்கும் இடையே ஒரு பழைய செய்தித்தாளின் ஒரு பகுதி ஒட்டப் பட்டிருப்பதைப் பார்த்தேன்."

மெர்சோ இந்தச் செய்தியை விவரிப்பதை வாசித்த போது அதிர்ச்சியாக இருந்தது. அதிலே சொல்லப்பட்ட செய்தி என்ன என்பதை விட

**அம்மாவை அடக்கம் செய்த அன்று வருத்தமாக இருந்ததா என்று கேட்கிறார். அப்போது மெர்சோ,**

**'நான் இதற்கு பதில் சொல்வது கடினமென்றும் சொன்னேன். நான் அம்மாவிடம் மிகுந்த அன்புடன் இருந்தேன். ஆனால் அதற்கு இங்கு என்ன அர்த்த மிருக்கிறது? ஆரோக்கியமாக இருக்கும் யாருமே சில சமயங்களில் தமக்குப் பிடித்தமானவர்களின் மரணத்தை மனத்தளவில் விழைவதுண்டு என்று கூறிய போது இடைமறித்த வக்கீல் இது போன்ற விடயங்களைக் கோர்ட்டாரிடமோ பார்வையாளர்களிடமோ சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்."**

காம்யு அதற்கூடாக சொல்ல விரும்பும் அபத்தமான மனிதனை, 'மனிதத்தன்மையை' உணர்கின்றபோது, மனித வாழ்வை என்வென்று சொல்வது?

செக்கோஸ்லாவாகியாவில் நடந்த ஒரு கொலை பற்றியது அச்செய்தி.

> "செக்கோஸ்லாவாகியாவின் கிராமத்திலிருந்து ஒருவன், பணம் சம்பாதிக்கவேண்டி வெளியூருக்குச் சென்றிருக்கிறான். இருபத்தைந்து வருடங்களுக் குப்பிறகு தன் மனைவி, ஒரு குழந்தையுடனும் தான் சம்பாதித்த செல்வத்துடனும் சொந்த ஊருக்குத் திரும்பியிருக்கிறான். அந்த ஊரில் அவனுடைய தாயாரும், அவன் சகோதரியும் ஒரு விடுதி நடத்தி வருகிறார்கள். அவர்களை வியப்பில் ஆழ்த்த வேண்டு மென்று மனைவியையும், குழந்தையையும் வேறு ஒரு இடத்தில் தங்கவைத்துவிட்டு, இவனுடைய தாயார் நடத்தும் விடுதிக்குச் சென்றிருக்கிறான். அந்தத் தாயார் தன் மகனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இவனும், விளையாட்டாக அங்கே

ஒரு அறை எடுத்துத் தங்கியிருக்கிறான். அதற்காகப் பர்சை எடுத்த அவன், தன்னிடம் உள்ள பணத்தைக் காண்பித்தும் இருக்கிறான். அப்பணத்தை அபகரிக்க வேண்டுமென்று அவன் தாயாரும் சகோதரியும் அன்றிரவு அவனைச் சுத்தியலால் அடித்துக் கொன்றுவிட்டு, அவன் உடலை அங்குள்ள ஆற்றில் தூக்கி எறிந்துவிட்டிருக்கிறார்கள். மறுநாள் அங்கு வந்த அவன் மனைவி, என்ன நடந்திருக்கிறது என்று தெரியாமல், அவன் யார் என்று தெரியப்படுத்துகிறாள். தாயார் தூக்கிலிட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்கிறாள். சகோதரி கிணற்றில் குதித்து இறக்கிறாள். இந்தச்செய்தியை நான் ஆயிரம் தடவை படித்திருப்பேன். ஒரு விதத்தில் பார்த்தால், இது ஒரு நம்பமுடியாத சம்பவம்; மற்றொரு விதத்தில் இயற்கையானதுதான்." (பக்கம் 98)

இந்தப் பத்திரிகைச் செய்தி அந்நியனில் ஒரு கிளைக் கதை போன்றது. வாசகன் அதனை விரித்துச் செல்லலாம். இது ஒரு தத்துவார்த்த நாவல். மனிதர்களிடத்தில் உள்ள அன்பு மற்றும் மனிதவிழுமியங்கள் பொருட்களுக்குமுன் அற்றுப்போகின்றது. இங்கே வரும் தாயும் சகோதரியும் அந்நியமானவர்கள் அல்ல. இந்த மனநிலை எவருக்கும் ஏற்படலாம். அன்பு செய்வதற்கும் துன்புறுத்துவதற்கும் இடையில் அதிக வித்தியாசம் இல்லை. ஜென் பௌத்தமும் இதைத் தான் சொல்கிறது. இதுதான் மனிதவாழ்வின், மனிதமனத்தின் அபத்தம்!!!

✶

மெர்சோவின் தலை பொது இடத்தில் வைத்துத் துண்டிக்கப்படும் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர், ஒரு நாள் சிறைப் பாதிரியார் அவனது சிறைக் கூண்டிற்கு வருகிறார். அவனது பாவத்தை, குற்றத்தைக் குறித்துப் பேசுகிறார். பாதிரியாரின் கருத்துக்கள் அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை விடக் கொடுமையானவை.

"உங்கள் இதயம் இருளில் ஆழ்ந்திருக்கிறது. உங்களுக்காகப் பிரார்த்திக்கிறேன்." என்ற பாதிரியாரின் வார்த்தைகள் மெர்சோவை உடைந்து போக வைக்கின்றன.

பாதிரியாரின் கழுத்துப் பட்டையை இறுகப் பிடித்து எனக்காக நீங்கள் பிரார்த்திக்க வேண்டியதில்லை என்று தொடங்கி தனது உணர்வுகளை கொட்டித் தீர்க்கும் பகுதி, உலகத்தின் அலட்சியம், கேலிக்குரிய நீதிமன்ற விசாரணை என்று எல்லாவற்றின் மீதான வெறுப்பாகவும் வெளிப்படுகின்றது மெர்சோவிடமிருந்து.

அப்போது பாதிரியாரை விளித்துச் சொல்கின்றான்,

"இவரும் ஒரு நாள் தண்டிக்கப்படுவார். ஒரு கொலைகாரனாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தன் அன்னையின் சவ அடக்கத்தில் அவர் அழவில்லை என்பதற்காக அவர் தலை துண்டிக்கப்பட்டாலும் எனக்கு என்ன அக்கறை?"

கவனிக்க.

மெர்சோ சொல்கிறான், அராபியனைச் சுட்டுக் கொல்லக் காரணம் வெயில் என்று. மெர்சோ உணர்கிறான், தான் அன்னையின் சவ அடக்கத்தில் அழவில்லை என்பதற்காக தனது தலை துண்டிக்கப்பட இருப்பதாக.

✶

அந்நியனுடைய மொழிபெயர்ப்பின் நடை தமிழிற்குச் சிறப்பான ஒன்றாகச் சொல்லப்படுவது உண்மையே. எளிமையான வசனங்கள். பல இடங்களில் ஓரிரு சொற்களுடன் வசனம் முடிவடைகிறது. நாவல் சொல்லப்படும் முறை, மெர்சோ அந்த நாவல் முழுவதையும் அதாவது தனதுகதையைத் தானே சொல்வதும் கூட ஒரு சிறப்பான உத்தி.

காம்யு, மெர்சோ அராபியனைச் சுட்டுக் கொல்லும் அந்தக் கணச் சூழலை வர்ணித்துச் செல்லும் பகுதியின் மொழிநடை, நவீன தமிழ் இலக்கியத்திலே அழகான ஒன்று. சம்பவத்தை விவரித்துச் செல்லும் நேர்த்தி பிசிறில்லாமல் படிப்படியாக நகர்ந்து உச்சத்துக்குச் செல்கின்றது. புகழ் காம்யுவிற்கும் உரியது.

அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி, அப்படியே தருகிறேன்,

"பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டால் இந்த விவகாரம் இத்துடன் முடிந்துவிடும் என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் வெயில் தகித்துக் கொண்டிருந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு எனக்குப் பின்னால் இருந்தது. அந்த நீரூற்றை நோக்கி ஓரிரு அடியெடுத்து வைத்தேன். அராபியன் நகராமல் இருந்தான். ஆனாலும் எங்களிடையே கணிசமான இடைவெளி இருந்தது. அவன் முகம் நிழலில் இருந்ததால் சிரித்துக்கொண்டிருப்பது போல் தோன்றியது. நான் அப்படியே நின்றேன். என் கன்னங்களில் வெயிலின் சூடு ஏறிக் கொண்டிருந்தது. வியர்வைத் துளிகள் புருவங்களின் மேல் சேர ஆரம்பித்தன. என் அம்மாவை அடக்கம் செய்த அன்று இருந்தது போன்ற அதே வெயில். அப்போது

**அப்போதுதான் எல்லாமே சுழல ஆரம்பித்தன. கடலிலிருந்து கனமான வேகமான காற்று வீசியது. ஆகாயம் அப்படியே குறுக்காகக் கிழிபட்டு அனல் மழை பெய்யும் போல் தோன்றியது. என் உடல் முழுவதும் சற்றே விறைக்க, துப்பாக்கியின் மீது என் பிடி இறுகியது. துப்பாக்கியின் விசை விடுபட்டது; அதன் வழுவழுப்பான அடிவயிறு உள்ளங்கையில் அழுந்தியது. அந்த ஈரமற்ற காதடைக்கும் ஒலியில் தான் எல்லாமே ஆரம்பமாயிற்று. ஒரே குலுக்கலில் வியர்வையையும் வெயிலின் கொடுமையையும் உதறித் தள்ளினேன். அப்பகற்பொழுதின் சீரான நிதானத்தை அழித்துவிட்டேன் என்பதை உணர்ந்தேன். நான் ஆனந்தமாக இருந்த இக்கடற்கரையின் அசாதாரணமான அமைதி அழிந்து விட்டது. அப்படியே மேலும் நான்கு முறை சுட்டேன். அசைவற்றிருந்த உடலில் சுவடேதும் தோற்றாமல் பதிந்தன தோட்டாக்கள். அதுவே நான் என் துரதிருஷ்டத்தின் வாயிற் கதவில் நான்கு முறை தட்டியது போலிருந்தது.**

இருந்தது போலவே முன் நெற்றியில் ஒரே வலி. நெற்றிப்பொட்டில் ரத்த நாளங்கள் ஒன்று சேர, வெடித்துவிடும் போல் துடித்தன. இப்படி வெயிலில் வாடுவது பொறுக்க முடியாமல் ஓரடி முன்னே எடுத்து வைத்தேன். அப்படி ஓரடி எடுத்து வைப்பதன் மூலம் வெயிலில் இருந்து தப்ப முடியாது என்றும், அது ஒரு மடத்தனமான செயல்தான் என்றும் தெரிந்திருந்தது. இருந்தாலும் ஒரு அடி முன்னோக்கிச் சென்றேன். ஒரே ஒரு அடிதான். இம்முறை அவன், அந்த அராபியன் இடத்தை விட்டு நகராமல் கத்தியை உருவி என்முன் நீட்டினான். வெயிலில் இருந்தது அக்கத்தி. அதன் எஃகுப் பகுதியிலிருந்து பிரதிபலித்த ஒளிக்கற்றை பளபளக்கும் ஒரு கத்தியின் நாக்குப் போல் பாய்ந்து வந்து என் நெற்றியைத் தாக்குவது போல் தோன்றியது. அதே சமயம் புருவங்களின் மேல் கோர்த்திருந்த வியர்வைத்துளிகள் இமைகளின் மேல் சொட்டுச் சொட்டாக இறங்கவும், அங்கே ஒரு வெதுவெதுப்பான, கனமான திரை விழுந்தது. கண்ணீர், வியர்வைத்துளி இவற்றினாலான இத்திரை என் கண்களை மறைத்துவிட்டிருந்தது. தாம்பாள மாகப் பளபளக்கும் சூரியன் நெற்றியில் தாக்குவதை மட்டுமே உணர்ந்தேன். தகித்துக்கொண்டிருந்த ஒளிக்கதிர் என் புருவங்களைச் சுட்டுப் பொசுக்கி ஏற்கெனவே வலித்துக்கொண்டிருந்த என் கண்க ளில் ஊடுருவிப் பாய்ந்தது. அப்போதுதான் எல்லாமே சுழல ஆரம்பித்தன. கடலிலிருந்து கனமான வேகமான காற்று வீசியது. ஆகாயம் அப்படியே குறுக்காகக் கிழிபட்டு அனல் மழை பெய்யும் போல் தோன்றியது. என் உடல் முழுவதும் சற்றே விறைக்க, துப்பாக்கியின் மீது என் பிடி இறுகியது. துப்பாக்கியின் விசை விடுபட்டது. அதன் வழுவழுப்பான அடிவயிறு உள்ளங்கையில் அழுந்தியது. அந்த ஈரமற்ற காதடைக்கும் ஒலியில்தான் எல்லாமே ஆரம்பமா யிற்று. ஒரே குலுக்கலில் வியர்வையையும் வெயிலின் கொடுமையையும் உதறித் தள்ளினேன். அப்பகற் பொழுதின் சீரான நிதானத்தை அழித்து விட்டேன் என்பதை உணர்ந்தேன். நான் ஆனந்தமாக இருந்த இக்கடற்கரையின் அசாதாரணமான அமைதி அழிந்து விட்டது. அப்படியே மேலும் நான்கு முறை சுட்டேன். அசைவற்றிருந்த உடலில் சுவடேதும் தோற்றாமல் பதிந்தன தோட்டாக்கள். அதுவே நான் என் துரதிருஷ்டத்தின் வாயிற் கதவில் நான்கு முறை தட்டியது போலிருந்தது." (பக்கம் 74,75)

பாருங்கள், "அப்போதுதான் எல்லாமே சுழல ஆரம்பித்தன. கடலிலிருந்து கனமான வேகமான காற்று வீசியது. ஆகாயம் அப்படியே குறுக்காகக் கிழிபட்டு அனல் மழை பெய்யும் போல் தோன்றியது...". என்பதிலிருந்து உச்சமடைய ஆரம்பித்து, சம்பவச் சூழலும் இறுக்கமான மொழியும் ஒத்திசைவதை.

இது போன்ற அழகிய மொழிப் பிரயோகங்களையும், சொல்லும் நேர்த்தியையும், அகவயப்பட்ட கிளர்வைத் தரும் சிந்தனைகளையும் பல இடங்களிலே காணலாம்.

ஒரு நாள் விசாரணை முடிவடைந்து சிறைக் கூண்டுக்குத் திரும்புகையில், மெர்சோ மனதிலே தோன்றிய எண்ணத்தை நினைவு கூரும் விதம், அதிலே ஒரு வரி - 3ஆவது அத்தியாயத்தின் இறுதி வாசகம்,

"... வேனிற்கால மாலைப் பொழுதின் பழக்கப்பட்ட பாதைகள் நிர்மலமான தூக்கத்திற்கு அழைத்துச் செல்வது போலவே சிறைச்சாலைக்கும் அழைத்துச் செல்லலாம்".

✶

மெர்சோ,

"சிறை வாசத்தில் காலப் பரிமாணத்தைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் போய் விடுகிறதென்று நான் எங்கேயோ படித்திருக்கிறேன்... நேற்று, நாளை போன்ற சொற்கள் மட்டுமே எனக்கு அர்த்தமுள்ள னவாகத் தோன்றின. என்னைப் பொறுத்தவரை அச்சிறையில் எனக்காக விடிவது ஒரே ஒரு பொழுது தான் என்றும் நான் செய்வது ஒரே ஒரு தொழில் தான் என்றும் உணர்ந்தேன்." (பக்கம் 99)

('மௌபிம' என்ற சிங்களப் பத்திரிகையில் கடமையாற்றிய பரமேஸ்வரி என்ற பெண் பத்திரிகையாளர் சில வருடங்களுக்கு முன் தென் இலங்கைச் சிறையொன்றில் காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 6 மாதங்களின் பின் விடுவிக்கப்பட்டபோது அவர் தெரிவித்தார்: "கடந்த 6 மாதங்களாக எனக்குப் பத்திரிகைகள் எதுவுமே வழங்கப் படவில்லை. வானொலி, தொலைக்காட்சி எதுவுமே இல்லை. சூரியன் எப்போது உதிக்கிறது, எப்போது மறைகிறது என்று எதையுமே அறியமுடியவில்லை".)

மெர்சோ காலப் பிரக்ஞையற்று இருப்பது சிறையில் மட்டுமல்ல, அவன் இப்போதும் தாயின் கருப்பையில் இருப்பதாகவே உணர்கிறான்.

2006, ஆவணி 11 இற்கு முன்பு யாழ்ப்பாணம் சென்ற போது இராமரூபனுடனான உரையாடலில் அந்நியனைப் பற்றிய கதை எழுந்தது. அவன் சொன்னான்,

"யாழ்ப்பாணத்தில் உள்ள அலியான்ஸ் பிரான்சேஸிஸ் இல் பிரெஞ்சு கற்பித்த ஆசிரியர் அந்நியனைத் திரும்பப் படிக்க விரும்புவதாகவும், 2004 சுனாமிக்குப் பின்னர் மீண்டும் படிக்க வேண்டும் போல் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். சுனாமிக்கு யாருமே எதிர்வு கூறவில்லை. அந்நியனையும் எதிர்வு கூற முடியாத, காரணம் கூற இயலாத ஒரு படைப்பா கவும், பாத்திரமாகவும் அவர் காண்கிறார்.

"மெர்சோ காலம் பற்றிய பிரக்ஞை இல்லாமல் இருந்ததை முதல் வசனத்திலேயே காம்யு குறிப்பிடுவதாகச் சொன்னார். அதாவது 'அம்மா இறந்து விட்டாள். ஒருவேளை நேற்றாகவும் இருக்கலாம்" என்ற ஆரம்ப வாக்கியங்களே மெர்சோ காலம் பற்றிய பிரக்ஞை அற்றவனாக உள்ளதை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

ஓரிடத்தில் மெர்சோ, மாரியின் வயிற்றில் தலையை வைத்துப் படுக்கிறான்,

"என் தலையை அவள் வயிற்றின் மேல் வைத்துப் படுத்தேன். அவள் ஒன்றும் சொல்லவில்லை. நானும் அப்படியே இருந்தேன். வானம் முழுவதும் என் கண்களுக்குள் நீலமாகவும், பொன்னிறமாகவும்

படர்ந்திருந்தது. பிடரியில், மாரியின் வயிற்றுப் பகுதி லேசாகத் துடிப்பதை உணர்ந்தேன்."

என்ற மெர்சோவின் வார்த்தைகள் அவன் இப்போதும் தாயின் கருப்பையில் இருப்பதுபோல உணர்கிறான் என்பதைக் காட்டுகிறது, என்பதையும் பிரெஞ்சு கற்பித்த ஆசிரியர் தெரிவித்தார்.

✶

மெர்சோ,

"மரண தண்டனை பற்றி அச்சில் வெளியாகியிருந்தவற்றைக் கவனித்துப் படிக்காமல் இருக்கின்றேன் என்பதற்காக என் மீதே நான் கோபம் கொண்டேன். இது போன்ற விசயங்களில் அக்கறை கொள்வது நல்லது. யாருக்கு என்ன நேரம் என்ன நடக்கும் என்று எவருக்குமே தெரியாது..."(பக்கம் 130)

இது, இந்தக் காலத்திற்கு எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது.

மனிதர்கள் தாங்கள் என்ன காரணத்திற்காகக் கொல்லப்படுகிறோம் என்று தெரியாமலே மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்ற காலத்திலே நாம் வாழ்கின்றோம்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியிலே கொல்லப்படுகின்ற மனிதர்களைப் பற்றிய செய்தி தினமும் வருகிறது.

எவ்வளவு பெரிய துக்கம், தாங்கள் என்ன காரணத்திற்காக கொல்லப்படுகிறோம் என்று தெரியாமலேயே இறந்து போவது என்பது.

இன்று மரணதண்டனைகள் வழங்கப்படுகின்றன.

சாதாரண மனிதர்கள் அரசியற் காரணங்களுக்காகக் கொல்லப்படுகின்றனர். இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகப் பொய் கூறி போர் தொடுத்து இலட்சக் கணக்கில் மக்களைக் கொல்வது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

விடுதலைக்கான யுத்தம், மனிதாபிமான நடவடிக்கை என்று கூறி மக்களை குண்டு வீசியும், சுட்டும் கொல்கின்றனர்.

தங்களது சொற்களைக் கேளாமற் செயற்பட்டதற்காகவும் கொல்கின்றனர்.

இவை எல்லாமே, மெர்சோ தாயருடைய மரணச் சடங்கிலே அழாத காரணத்தினால் வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை நினைவுபடுத்துபவை.

அதிக தூரம் போய்ச் சிந்திக்க வேண்டியதில்லை. அன்றாடம் நிகழும் அபத்தமான உரையாடல்கள், தங்களைச் சிந்தனையாளர்களாகக் கருதிக் கொள்பவர்கள், சகநண்பர்கள் கேட்கும் கேள்விகள் கூட அந்நியனை விளங்கிக் கொள்ள உதவும்.

அந்நியனைப் பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம் நீண்ட நாள்களாக இருந்தது. ஆனாலும் பத்மநாப ஐயர் கேட்டிருக்காவிடில் இதை எழுதியிருக்க வாய்ப்பில்லை. எழுதியதன் மூலம் அந்நியனை - காம்யு சொல்ல வந்ததை இடையூறு படுத்திவிட்டேன் என்ற உணர்வுதான் ஏற்படுகின்றது. அந்நியனைப் பற்றி எழுதுவது என்றால் - முதற் சொல்லிலிருந்து இறுதி வார்த்தை வரை நாவலை அப்படியே எழுதுவதே. அந்நியனை விமரிசிக்க இயலாது; விளங்கிக் கொள்ளவேண்டும்; காம்யு எப்படி அந்தப் பாத்திரத்தை உருவாக்கி, தத்துவார்த்தமாக நகர்த்திச் செல்கிறார் என்று பார்க்கவேண்டும்.

அந்நியன் எழுதப்பட்டு 60 வருடங்களுக்கு மேலாகி விட்டது. ◆

## குறிப்புக்கள்:

- ❖ தற்போது என்னிடம் இருப்பது அந்நியனது மொழிபெயர்ப்பின் முதற்பதிப்பு, இது 1980 இல் வெளிவந்தது. நான் முதலிற் படித்தது 2ஆவது பதிப்பு. 2ஆவது பதிப்பு செப்பனிடப்பட்டு வெளியாகியிருப்பதை எனது குறிப்புப் புத்தகத்தில் உள்ள குறிப்புக்களை ஒப்பு நோக்கிய போது அவதானிக்க முடிந்தது.
- ❖ கறுப்பு என்பதை 'கருப்பு' என்றும், பொறுத்தவரை என்பதை பொருத்தவரை என்றும் எழுதியுள்ளார்கள். சில இடங்களில் சொற்புணர்ச்சியில் வல்லினம் மிகாமல் உள்ளது.
- ❖ "கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள்" (தொல்காப்பியம்- சொல்லதிகாரம்- 372) என்று தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் வருகிறது. கறுப்பு - நிறத்தையும் குறிக்கும். கோபத்தையும் குறிக்கும். சிவப்பும் அவ்வாறே. தொல்காப்பியத்திலே வல்லின 'று' னா வைத்தான் உபயோகித்துள்ளனர். கறுப்பையும் கருமையையும் குழப்பிக்கொள்ளத் தேவையில்லை.
- ❖ "அசைவற்ற உடலில் சுவடேதும் தோற்றாமல் பதிந்தன தோட்டாக்கள்" (பக்கம் 75) என்ற வசனம் அசைவற்ற உடலில் சுவடேதும் இல்லாமல் பதிந்தன தோட்டாக்கள் என்றோ அல்லது வேறு முறையிலோ அமைந்திருந்தால் பொருத்தமாய் இருந்திருக்கும், என்று கருதுகிறேன்.

1. இதே கருத்தை இராமரூபனும் கொண்டிருந்தான்.

## அமரர் து. வைத்திலிங்கம் நினைவு நிகழ்வு

மறைந்த எழுத்தாளர் து. வைத்திலிங்கத்தை நினைவுகூரும் முகமாக யாழ். இலக்கிய வட்டம் நினைவஞ்சலி நிகழ்வொன்றை 02.08.2008 இல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடத்தியது.

யாழ். இலக்கிய வட்டத்தின் தலைவர் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமரர் து. வைத்திலிங்கம் குறித்த அஞ்சலி உரையை எழுத்தாளர் தெணியான் நிகழ்த்தினார். நன்றியுரையை யாழ். இலக்கிய வட்டத்தின் செயலாளர் திரு. கி. கிருபானந்தா வழங்கினார்.

இந்நிகழ்வில் 'ஜீவநதி' சஞ்சிகைக்கான மீள் பார்வையும் இடம்பெற்றது.

முயற்சி செய்யும்வரை
உங்களால் என்ன முடியுமென்று
உங்களுக்கே தெரியாது
**-ஹென்றி ஜேம்ஸ்**

# மூன்று பொம்மைகள்



விளையாட்டுக் குழந்தை
பாகம் பாகமாய்ப் பிரித்துப் ஒரு
பொம்மையை
சரி செய்யும் பணியில்
நீயும் நானும்.
கழுத்தோடு நிற்கமறுத்து
அல்லாடுகிறது பொம்மைத்தலை
கால்களும் கைகளும்
பொருத்தப் போன இடங்களை
நிராகரித்து அடம்பிடிக்கின்றன.
குழந்தைத்தனமாய்
ஒருவாறு எல்லாவற்றையும்
சரிகட்டி நிமிர்கையில்
கண்ணிற்படுகிறது
கடந்து கொண்டிருந்த
வருடவரிசையில்
மேலுமொன்றினது முதுகு
ஓசையெழாமல்
குழாய் வழி வழிந்து
வெளியேறி விட்ட
தாங்கித் தண்ணீராய்
வீணாகிப் போன வாழ்வு பற்றி
ஒரு கணம் துணுக்குறும் நெஞ்சு
வேலைகளோடும்
தூக்கத்தினூடும்
எல்லாவற்றையும் (?)
மறக்கின்ற எத்தனத்தில்
காலத்தைக் கரையவிட்டு
தலைவெளுப்பைப் பறைசாற்றும்
நிலைக் கண்ணாடியோடு
பைத்தியமாகி
உரையாடுகின்றேன் நான்
உன் தலையில் நரைமுடி தேடிப்
பிடுங்கியபடியிருக்கிறாய் நீ

ந. சத்தியபாலன்

**சஞ்சிகை**

## வெள்ளி மலை

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அரியதோர் முயற்சியாக 'வெள்ளி மலை' என்னும் காலாண்டுச் சஞ்சிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவர ஆரம்பித்துள்ளது. இதன் முதல் இதழ் சித்திரை - ஆடி 2007 காலப் பகுதிக்குரியதாக வெளிவந்திருந்தது. இதுவரை மூன்று இதழ்கள் வெளிவந்துள்ளன. மூன்றாவது இதழ் சித்திரை 2008 இல் உலக புத்தக நாளை மையப்படுத்தி நூல், நூலகம், அச்சுத்துறை சார்ந்த விடயங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. க.சௌந்தரராஜன், கு.பா.விஜயகுமார் ஆகியோரை இணை ஆசிரியர்களாகவும், ஆசிரியர் குழுவில் இன்னும் பலரைக்கொண்டும் வெளிவரும் இச்சஞ்சிகை வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்களை வெளிக்காட்டும் சஞ்சிகையாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. பிரதேச சபையொன்று தனது பல்வேறுபட்ட பணிகளுடன் தனது நூலகத்துடன் இணைந்து இத்தகைய சஞ்சிகையையும் வெளியிட ஆரம்பித்துள்ளமை பாராட்டுக்குரிய முன்மாதிரியான விடயமாகும். இத்தகைய முயற்சிகளை ஏனைய பிரதேச சபைகளும் முன்னெடுத்தால் அதனால் ஏற்படும் பயன்கள் அதிகமாகவே இருக்கும். 'வெள்ளி மலை' சஞ்சிகையில் கலை, இலக்கியம், சமூகம் சார்ந்த பல்வேறு பயன்தரத்தக்க விடயங்கள்* இடம்பெற்றுவருகின்றன. 'வெள்ளி மலை' தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துகின்றோம்.




தொடர்புகளுக்கு;
'வெள்ளி மலை' சுன்னாகம் பொது நூலகம், சுன்னாகம்.

சிறுகதை

# அம்ருதாவின் புதிர் வட்டங்கள்

அம்ருதா தன்னிடமிருந்து என்னிடம் வந்திருந்தாள். அவளது பார்வையில் ஓரிரு பறவைகள் எப்போதும் சிறகடித்துப் பறந்த படியே இருக்கும். எனக்கும் அவளுக்குமான விவாதங்கள் சொற்களின் உச்சத் தொனியில் நிகழத் தொடங்கினாலும் எல்லாம் பூச்சியத்தில் தான் போய் முடியும். பூச்சியத்திலிருந்து ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்து அவமானத்தால் தலை குனிவோம் அல்லது மீளத்திரும்பாத புன்னகைகளைக் காற்றில் எறிவோம். பிறகு எதுவுமே நடக்காதது போலப் பாசாங்கு செய்யத் தொடங்கி விடுவோம்.

கடலின் கரை அலைகளால் துடைத்து அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. யுகங்களாய் தொடரும் இந்த துடைத்தழிப்பை அன்று தான் பார்ப்பவள் போல் அம்ருதா அமர்ந்திருந்தாள். அநேகம் சந்தடியில்லாத கடற்கரையையும் சனங்கள் நிரம்பிவழியும் கடற்கரையாகவே அவள் பாவனை செய்வாள். ஏதும் பேசாமல் மௌனித்திருந்தவள் தன் சுட்டு விரலினால் மணலில் வட்டம் ஒன்றை வரைந்தாள். அந்த வட்டம் நெளிந்த கோடுகளால் ஆனபோதும் அவளது வட்டம் வட்டமாகவே இருப்பதாய் அவள் பெருமிதப்பட்டிருக்கக்கூடும். திடீரெனக் கேட்டாள்.

"நீ வட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்" நான் அவளது கேள்வியின் உள்ளர்த்தம் பிடிபடாமல்

"எந்த வட்டம்" என்றேன்.

"பொதுவாக வட்டம்"

"பொதுவாக எல்லாத் தளவடிவங்களை விடவும் வட்டம் அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்" என்றேன்.

"அவ்வளவு தானா"

"ஆம்"

சற்று நிலைத்த மௌனத்தின் பிறகு நிதானமாய் அவள் சொன்னாள்

"வட்டம் என்பது நேர்த்தியான கோடுகளோ அல்லது வெறும் அழகோ அல்ல. அதனது உள்ளார்ந்த அர்த்தம் பல பரிமாணங்களையுடையது. நீ எல்லாவற்றையும் நேர்ப் பொருளாய்ப் பார்த்துப் பழகியவன். உன்னிடத்தில் ஆழ்ந்த கருத்துகள் தோன்றாது".

மிகவும் பெரிதான அலையொன்று எழுந்து வந்து எங்கள் கால்களை சுழுவிக்கொண்டு வட்டத்தையும் உள்ளிழுத்துப் போனது. அவள் கடலையே கூர்ந்து கவனித்த படியிருந்தாள். அவளது கண்களில் ஓரிரு பறவைகள் சிறகடித்துப் பறந்த படியிருந்தன. அவள் சொன்னாள்

"நீயும் இந்தக் கடலின் அலையும் ஒன்றுதான்"

"ஏன்"

"இலகுவாக எல்லாவற்றையும் மூழ்கடித்து விடுகிறது அலை உன்னைப் போலவே. எதன் வலியையும் வேதனையையும் புரிந்து கொள்ளும் மனம் அலைகளிடமும் இல்லை உன்னிடமும் இல்லை".

நான் எப்போதும் என்னை அலைக் கழித்த படியே இருக்கும் "அலைகளைச் சொல்லி பிரயோசனமில்லை கடல் இருக்கிறவரை" என்ற நகுலனின் கவிதையைச் சொன்னேன்.

அவள் ஒரு சித்தப் பாவனையில் கண்களை மூடித் திறந்தவளாய்ச் சொன்னாள்.

"நகுலனின் கவிதை அலைகள் பற்றியதல்ல கடல் பற்றியது. உன்னுடைய பார்வை அலைகளை நியாயப்படுத்துவது"


"இல்லை. அது அலைகளையும் பற்றியது. உன் வட்டத்தை இழுத்துப் போனது கடலின் அலைகள் தான். நீ கடலையும் அலைகளையும் வேறுபடுத்துகிறாய். கடலின் கொந்தளிப்புத்தான் அலைகள். உனது மனதின் வலியை வாதையை வார்த்தைகள் பிரதிபலிப்பது போல கடலின் சொற்கள் தான் அலைகள்". என்றேன்.

"நகுலன் எல்லாக் குற்றங்களையும் கடலின் மீதுதான் குவிக்கிறார் அலைகள் மீதில்லை".

"அம்ருதா எல்லாவற்றையும் நேர்ப்பொருளாய்ப் பார்ப்பவள் நீ தான், என்னுடைய பார்வையில் நேர்த்தியும் அழகும் தொனிக்கின்றன. உனது பார்வையில் ஒன்றுமில்லை வெறும் சூனியம்"

சித்தாந்தன்

அவளது கண்களில் ஓரிரு பறவைகள் சிறகடித்தபடியிருந்தன. மிதமான மௌனத்தினால் அலைக்கழிக்கப்பட்டவள் போலானாள். எழுந்து கடற்கரையில் பாதங்களைப் பதிக்கத்



தொடங்கினாள். பிறகு வந்தமர்ந்து கொண்டு தனது பாதச் சுவடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சற்றுக்கெல்லாம் ஒரு அலை வந்து அவளது பாதச் சுவடுகளை இழுத்துச் சென்றது. அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவளது பார்வை தன் கருத்தை மீளவும் வலியுறுத்துவது போலிருந்தது. எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

இன்று அமருதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. ஒரு வீட்டுக்குள் வாழ்பவர்கள் கடிதம் மூலம் கருத்துப் பரிமாறுவது வேடிக்கையானது தான். கடிதத்தை அவசரமாகப் பிரித்தேன். அதில் வார்த்தைகள் காணாமல் போயிருந்தன. வெள்ளைத் தாளின் மையத்தில் பெரிதாய்ப் புள்ளியிட்டு வரையப்பட்ட வட்டமிருந்தது. வட்டத்தின் உள்ளே ஒரு மனித உருவும், விளிம்பில் இன்னொரு மனித உருவும் வரையப்பட்டிருந்தன. உருவங்கள் இரண்டிற்கும் ஆண் பெண் பேதம் தரப்பட்டிருக்கவில்லை.

உண்மையில் அந்த வட்டமும் இரண்டு உருவங்களும் ஏதோ ஒரு புதிர்க்கணக்கை எனக்குத் தந்துவிட்டு விடையை அவிழ்க்கும்படி நிர்ப்பந்தித்திருப்பது போலிருந்தது. கடிதம் என் கரம் கிடைத்த கணத்திலிருந்து அம்ருதாவின் செய்கைகள் ஒவ்வொன்றும் விசித்திரமானவையாக இருந்தன. சூரியனுக்குக் கீழே நின்று கடலை வெறிப்பவள் போல இருந்தாள். காற்றின் அனைத்துப் பரிணாமங்களையும் உள்வாங்கியவளைப்போல அறையெங்கும் சுற்றித் திரிந்தாள். யன்னல்களைச் சாத்துவதும் திறப்பதுமாயிருந்தாள். வானொலியை அதன் ஒலி எல்லை வரை கூட்டி வைத்தாள். தனக்குத் தெரிந்த பாடல் வரிகளையெல்லாம் பாடிக்கொண்டு திரிந்தாள். முக்கியமாக என்னை அலைக் கழித்துக் கொண்டிருந்தாள். நான் திசைகளில் அலைந்தவனைப் போல களைப்புறத் தொடங்கியிருந்தேன்.

அம்ருதாவுடனான என் வாழ்க்கையிலிருந்துதான் அவளது புதிர்க் கடிதத்தின் வாசல்களைத் திறந்து கொண்டேன். அவளது கடிதத்திற்கு இருவேறு விளக்கங்களை என்னால் பெற முடிந்தது.

1. அம்ருதா வட்டத்தின் உள்ளே வரைந்திருப்பது தன்னை என்றால் விளிம்பில் வரைந்திருப்பது என்னை.

விளக்கம்:-

வட்டத்தினுள் இருக்கும் தான் தன் உறவுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு வட்டத்துள் அடைபட்டவளாய் வாழ்வதாயும், வட்டத்தின் விளிம்பில் நிற்கும் நான் தன்னை வேடிக்கை பார்க்கும் அதே சமயம் என்னைச் சூழ்ந்திருக்கும் உறவுகளுடன் மகிழ்ந்திருப்பதாகவும் கருத இடந்தருகிறது.

2. அம்ருதா வட்டத்தின் உள்ளே வரைந்திருப்பது நான் என்றால் விளிம்பில் வரைந்திருப்பது தன்னை.

விளக்கம்:-

வட்டத்தினுள் இருக்கும் நான் என் பார்வையை வட்டத்துக்குள்ளேயே சுருக்கி வைத்திருப்பதாகவும் வெளியுலகம் எதுவும் தெரியாதவனாய் என் கருத்துக்கள் மட்டுமே சரியென முரண்டு பிடிக்கும் கிணற்றுத் தவளை வாழ்க்கையை வாழ்வதாகவும், தான் விளிம்பில் நின்றுகொண்டு வட்டத்துள் இருக்கும் என்னையும் பரந்து விரிந்த உலகையும் புரிந்து கொண்டவளாக இருப்பதாகவும் கருத இடந்தருகிறது.

அம்ருதாவின் புதிருக்கான என் விடையவிழ்ப்பு எந்த வகையில் சரியானது என என்னால் உறுதியாகக் கூற

**"ஏன் மௌனமாக இருக்கிறாய்"**

**"புரியவில்லை"**

**"எது புரியவில்லை?"**

**"உனது வட்டங்கள் பற்றிய வாதங்களும் வட்டங்கள் மீதான உனது ஈர்ப்பும்."**

**"இதில் உனக்குப் புரிந்துகொள்ள என்ன இருக்கிறது. எனக்குப் புரிந்து கொள்கிறது நான் வரைகிறேன். உனக்குப் புரியாதபோது புரியாமலிருப்பதுதான் நல்லது. புரியும்போது புரிந்து கொள்வாய்."**

**"எதைப் புரியும்போது?"**

**"வாழ்க்கையை"**

**"வாழ்க்கைக்கும் வட்டத்துக்கும் என்ன தொடர்பிருக்கிறது"**

**"அதை வாழும்போதுதான் புரிந்து கொள்வாய்"**

**"அப்படியென்றால்"**

**"வாழ்க்கையை வாழும் போது"**

முடியாதபோதும் வாழ்பனுபவங்களின் அடிப்படையில் அம்ருதா கருதியது இவற்றில் ஒன்றாக இருக்கலாம் அல்லது இரண்டுமாகவும் இருக்கலாம்.

அம்ருதாவை நான் ஒரு மழைக் காலத்தில் சந்தித்தேன். அப்போதவள் எண்ணற்ற வட்டங்களை வரைந்தபடியிருந்தாள். வட்டங்களுக்கென்றே ஒரு குறிப்புப் புத்தகத்தை ஒதுக்கி ஓய்வு நேரங்களிலெல்லாம் வட்டங்களை வரைந்தாள். நான் அவளுடன் உரையாடலைத் தொடங்கியபோது தூறலிட்டுக்கொண்டிருந்த மழை பெரு மழையாகக் கொட்டத் தொடங்கியது. அம்ருதா குமிழியிட்டுடையும் மழைக் குமிழ்களைக் கூர்ந்து பார்த்து அவற்றைத் தனது குறிப்புப் புத்தகத்தில் வட்டங்களாக வரைந்து கொண்டிருந்தாள். அம்ருதா... என்றேன். அவளதைப் பொருட்படுத்தவில்லை. அந்த ஒற்றைச்சொல் மழைக் குமிழி போலவே உடைந்து போனது. நான் அவளது கண்களின் புதிரசைவுகளில் மெல்ல மெல்லக் கரையத் தொடங்கினேன். மழை இன்னும் பெருமழையாகிக் கொண்டிருந்தது.

அம்ருதா ..... என்றேன் மறுபடியும்.

அவள் வட்டங்களிலிருந்து விடுபட்டு என்னிடம் வந்தாள். அவளின் கண்களில் ஓரிரு பறவைகள் சிறகடித்துப் பறந்தன. பரவசம் திளைக்கும் அந்தக் கணத்தில் ஒரு பறவையை வருடிக் கொடுக்கும் இதத்துடன் என்ன என்றாள்.

நீ ஏன் வட்டங்களையே எப்போதும் வரைந்து கொள்கிறாய்? வட்டங்கள் மீது என்ன அவ்வளவு ஈர்ப்பு? என்றேன்.

அவள் தனக்கேயுரித்தான சிரிப்பை சில கணம் உதிர்த்தவளாய்

“வட்டங்கள் புதிர் நிரம்பியவை அதனால்தான் வரைகின்றேன்” என்றாள்.

“வட்டங்களில் அப்படியென்ன புதிர்கள் நிறைந்து கிடக்கின்றன?”

அவள் சற்று மௌனமானாள். பிறகு சொன்னாள்

“வட்டத்தின் மையமும் விளிம்பும் புதிர்களால் ஆனவை”.

“அப்படி என்ன ‘புதிர்’ மையத்திலும் விளிம்பிலும் இருக்கிறது.”

“வட்டத்தின் விளிம்பு எதில் தொடங்கி எதில் முடிகிறது என உன்னால் கூறமுடியுமா? வட்டத்தின் மையம் வட்டத்தின் விளிம்பை கண்ணுக்கு புலப்படா வகையில் ஈர்த்து வைத்திருப்பதை உன்னால் உணர முடிகிறதா?”

வட்டம் குறித்த எனது பார்வையை அவளின் கேள்விகள் மீள்பரிசீலனை செய்ய வைத்தன. அவளோ மேலும் வட்டங்களை வரைந்தபடியிருந்தாள். வெவ்வேறு அளவுகளிலான வட்டங்கள். ஒவ்வொரு வட்டமும் கண்ணுக்குப் புலப்படா மையங்களைக் கொண்டிருந்தன. அவளே பேச்சைத் தொடர்ந்தாள்.

“ஏன் மௌனமாக இருக்கிறாய்”

“புரியவில்லை”

“எது புரியவில்லை?”

“உனது வட்டங்கள் பற்றிய வாதங்களும் வட்டங்கள் மீதான உனது ஈர்ப்பும்.”

“இதில் உனக்குப் புரிந்துகொள்ள என்ன இருக்கிறது. எனக்குப் புரிந்து கொள்கிறது நான் வரைகிறேன். உனக்குப் புரியாதபோது புரியாமலிருப்பதுதான் நல்லது. புரியும்போது புரிந்து கொள்வாய்.”

“எதைப் புரியும்போது?”

“வாழ்க்கையை”

“வாழ்க்கைக்கும் வட்டத்துக்கும் என்ன தொடர்பிருக்கிறது”

“அதை வாழும்போதுதான் புரிந்து கொள்வாய்”

“அப்படியென்றால்”

“வாழ்க்கையை வாழும் போது”

அவள் தனது குறிப்புப் புத்தகத்துடன் எழுந்து நடக்கத் தொடங்கினாள். அவளது பாதங்கள் வட்டப் பாதையில் நடந்து கொண்டிருப்பதாய் எனக்குப்பட்டது. வட்டப் பாதையின் மையத்தில் நின்றபடி வாழ்க்கை என்ற ஒற்றைச் சொல்லை சுமந்து கொண்டிருந்தேன். அதன் கனம் என் தோள்களில் இறங்கி பாதங்களை வலிகொள்ள வைத்தது. அவ்விடத்தின் நிலக் காட்சிகள் கரையத் தொடங்கவும் நான் நடக்கத் தொடங்கினேன். எனது பாதச் சுவடுகள் வட்டப் பாதையில் என்னைச் சுற்றியே நடந்தபடியிருப்பதான மனப்படிவு கவிந்தது. நான் நடந்தபடியே இருந்தேன். என்னிடமிருந்து என்னிடம் வருவதற்குள் மீண்டும் நிலக் காட்சிகள் மாறத் தொடங்கின.

நான் இரவின் புதிர்களான பாதைகளில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். அம்ருதா இரவின் அடர்வனத்திலிருந்தபடி கனவுகளின் இழைகளைப் படச் சுருள்களாக இழுத்துக் குலைந்தபடி இருக்கிறாள். இரவின் அடர்வனம் அவளது கண்களின் ஒளியில் மின்னுகின்றது. நான் புலன் ஒடுங்கி மூர்ச்சையாகிக் கிடக்கிறேன். இராட்சதப் பல்லி ஒன்று உரத்துச் சொல்லுகிறது. ச்... ச் சகுனம் தப்பிய ஆத்திரத்தில் அம்ருதா பல்லியைச் சபிக்கிறாள். அது வாலை அறுத்துவிட்டு இருளாகிக் கரைகிறது. இருளின் திரவம் என் மீது படர நான் விழிக்கிறேன். அம்ருதா வீடெங்கிலும் அலைந்தபடி இருக்கிறாள். வானொலியின் சத்தம் காதைப் பிளக்கிறது. இன்னும் அழுத்தமான குரலில் அவள் பாடிக்கொண்டேயிருக்கிறாள்.

அம்ருதாவின் புதிர்க் கடிதத்துக்கான பதிலை நான் எழுதப்போவதில்லை. எனது எந்தப் பதிலும் அவளை திருப்தியுறச் செய்வதுமில்லை. என்னால் செய்ய முடிந்தது ஒன்று மட்டுந்தான். அறையின் யன்னல்களும் கதவுகளு மற்ற சுவர்களில் பெரிய பெரிய வட்டங்களை வரைந்தேன். வெறும் வட்டங்கள் எனினும் வீடு முழுவதும் வட்டங்களால் சூழப்பட்டதான பிரமையில் இருந்தேன். வட்டங்களின் மையங்கள் ஒவ்வொன்றிலும் நானும் அம்ருதாவும் கைகளால் வாய்களைப் பொத்தியபடி முழங்காலில் முகம் புதைத்திருப்பதாய் நினைத்துக் கொண்டே உறங்கிப் போயிருந்தேன்.

மறுநாள் காலையில் விழித்தெழுந்து வட்டங்களைப் பார்த்தேன். ஒவ்வொரு வட்டங்களுக்குள்ளும் ஒவ்வொரு சிறுவட்டங்கள் வரையப்பட்டிருந்தன. அம்ருதா இரவு விழித்திருந்து அவற்றை வரைந்திருந்தாள். கோடுகள்

ஒன்றின்மேல் ஒன்றாக பலதடவைகள் வரையப்பட்டிருந் தன. தவிரவும் கோடுகள் நேர்த்தியற்று வளைந்தும் இருந்தன. அவை நித்திரைக் கலக்கத்தோடு வரையப் பட்டவையாக எனக்குத் தோன்றியது.

அம்ருதா என்னை அவிழ்க்க முடியாத புதிர்களை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கிறாள். ஒரு புதிரை இன்னொரு புதிரால் மூடுகிறாள். புதிர்களின் இராணியைப் போலவே இருக்கிறாள். அம்ருதா போடும் புதிர்கள் எல்லாம் வட்டங்களாலேயே போடப்படுகின்றன. அவளது புதிர்கள் பலவும் எனது மூளையை அனலாக்குபவை. அல்லது மனதை ஆறுதலற்று வாழ்க்கையின் தடங்கள் முழுவதிலும் மீள நடந்து அலைக்கழிய வைப்பவை.

நான் அவளது படுக்கை அறைக்குச் சென்று பார்த்தேன். அவள் குழந்தையைப்போல உறங்கிக் கொண்டிருந்தாள். அவளது கண்களில் ஓரிரு பறவைகள் உறங்கிக் கொண்டிருப்பது போலிருந்தது அறையின் மங்கலான பசிய ஒளி அவளைப் புதிர்களின் இராணி போலவே பிரதிபலித்தது. அவள் இடையிடை சிரித்த படியே உறங்கிக் கொண்டிருந்தாள்.

பூக்களும் புலரத்தொடங்காத அந்தக் காலையில் நான் நெடுஞ்சாலை வழியே நடந்து கொண்டிருந்தேன். புருவங்களுக்குள் விழியேறி பெருவட்டமாக பாதைகள் வளைந்து சூழல பாதையில் விழுந்தேன். வாலறுந்த பல்லி என் உச்சந்தலையில் விழுந்து துள்ளி நின்றது. அம்ருதா இல்லாத எனது பயணத் தெருக்கள் வட்டங்களாக சுருங்கி விடுகின்றன. திரும்பவும் திரும்பவும் ஒரு பாதையிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறேன். எண்ணிச் சொல்ல முடியாத தடவைகள் வால் அறுந்த பல்லியையே சந்தித்துக் கொண்டு மிருக்கிறேன்.

பல்லி இரண்டு கால்களில் எழுந்து நின்றபடி இராட்சதக் கால்களால் சாலைகளை மிதித்து ஓடுகிறது. அதன் கால் பதித்த தடங்களில் கரிய நீரூற்றுச் சுரக்கிறது. அது பெருகி கறுப்பு நதியாக என்னை நோக்கி ஓடி வருகின்றது. நான் பதற்றத்துடன் எழுந்தோடுகிறேன். அன்றைய மாலையில் பூக்கள் உதிர்ந்து சருகாகிக் கொண்டிருந்தன.

நான் வரைந்த பெரிய வட்டங்களுக்குள் அம்ருதா வரைந்த் சிறிய வட்டங்கள் குறித்து என்னால் இரண்டு அபிப்பிராயங்களை முன்வைக்க முடிகிறது.

1. நான் வரைந்த பெரிய வட்டங்கள் நான் என்றால் அம்ருதா வரைந்த சிறிய வட்டங்கள் அவள்.

விளக்கம்:-

என்னை பெருவட்டமாகக் காணுமவள் நான் தன் இருப்பை மறுப்பதாகவும் என் ஆளுமையின் கீழ் தன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதாகவும் தன் சுயத்தை தனக்கான அடையாளத்தை இழந்து எனது ஆட்படுகையிலிருந்து வெளியேறமுடியா திருப்பவளாய் உணர்வதாகவும் எத்திசை நோக்கி நடந்தாலும் என் வட்ட விளிம்புகளில் மோதி ஒரு பந்தைப்போலத் தான் அலைக்களிக்கப்படுவதாக வும் அவள் கருத இடந்தருகிறது.

2. நான் வரைந்த பெரிய வட்டம் அம்ருதா என்றால் அவள் வரைந்த சிறிய வட்டங்கள் நான்.

விளக்கம்:-

தன்னை பெரு வட்டமாகக் காணுமவள் தன்னை திமிர்மிக்க பெண்ணாகவும் எனது எல்லாச் செயற்பாடுகளையும் தானே வடிவமைப்பவளா கவும் குறிப்பாக என்னை எனது உறக்கங்களிலி ருந்து துரத்துபவளாகவும் என் கனவுகளை குலைப்பவளாகவும் எப்போதும் எனக்கு கட்டளை களைப் பிறப்பிப்பவளாகவும் நான் தனக்கு சேவகம் செய்ய வேண்டியவனாகவும் இருப்பதா கவும் கருத இடந்தருகிறது.

எனது இந்த இரு அபிப்பிராயங்களும் அம்ருதா கருதியவற்றுக்கு ஒத்ததாகவோ அல்லது மாறுபட்ட தாகவோ இருக்கலாம்.

கோடையின் அனல் தெருக்களில் படிந்திருந்த மதியத்தில் அம்ருதாவின் அறைக்குச் சென்றிருந்தேன். சாத்தப்பட்டிருந்த கதவை தட்டிக்கொண்டிருந்தேன். அவள் பதற்றத்துடன் கதவைத் திறந்து என்னை ஏறிட்டாள். அவளது உதடுகளில் மலர்ச்சி வழியவில்லை. கண்களில் இரண்டு பறவைகள் குறுகிக் கிடந்தன. உள்ளே வரும்படி சைகை செய்தவளாய்

"என்ன இந்த நேரத்தில்" என்றாள்

சட்டைப் பையிலிருந்த காகிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

"என்ன இது"

"நான் வரைந்த வட்டங்கள்."

அவள் அதைப் பிரித்துப் பார்த்தாள். மறுகணம் என் கைகளில் அதை அழுத்தித் திணித்துவிட்டு

"என்ன பைத்தியக்காரத்தனம்" என்றாள்

"எது பைத்தியக்காரத்தனம்?"

"ஏன் சதுரத்துக்குள்ளும் சதுரத்தின் உச்சிகளை தொடுமாறும் வட்டங்களை வரைந்திருக்கிறாய்"

"இவை உள்வட்டங்களும் வெளிவட்டங்களும்"

"வட்டத்தில் என்ன உள்வட்டம் வெளி வட்டம்; வட்டம் வட்டந்தான்"

"வட்டத்தின் விளிம்பு சதுரத்தின் விளிம்புகளை தொடுமாறு வரைவது உள்வட்டம். சதுரத்தின் உச்சிகளைத் தொடுமாறு வரைவது வெளிவட்டம்."

அவள் கண்களைச் சில தடவைகள் இமைத்தாள். இரண்டு பறவைகள் சிறகடித்தபடியிருந்தன.

"நீ வட்டத்தின் முழுமையைச் சிதைக்கிறாய். அதை சதுரத்தினுள் அடைத்து அதன் பரிமாணங்களை மூடுகி றாய்" என்றாள்.

"நான் வட்டங்களை வரைந்திருக்கிறேனே தவிர பரிமாணங்களை வரையவில்லை. பரிமாணம் என்பது அவரவர் பார்வையைப் பொறுத்தது."

"அப்படியில்லை வட்டங்களை வரையும்போது பரிமாணங்களையும் நீ முன் வகுக்க வேண்டும்."

"வட்டத்தின் பரிமாணம் வட்டத்துக்குரியது. எனது பரிமாண வகுப்பை வட்டத்தின் மீது திணிக்க முடியாது."

"அப்படியென்றால் வட்டம் வரையும் நீ யார்?"

"நான் கருத்தா"

"கருத்தாக்குரிய கடமை வட்டங்களை வரைவது தானா?"

"ஆம்"

"நீ கருத்தாவல்ல தவறும் ஜடம். ஜடத்திடமிருந்து கருத்துக்கள் பிறப்பதில்லை"

அம்ருதா வார்த்தைகளால் வெடிக்கத் தொடங்கினாள். அவளது சொற்கள் மின்னலாய்த் தெறித்தன. வார்த்தைச் சுழல் வட்டம், புயலாகக் கிளம்பி அந்த பொழுதை இழுத்தடித்தவண்ணம் இருந்தது.

"அம்ருதா உன் வார்த்தைகளில் நிதானம் உலரத் தொடங்கிவிட்டது." என்றேன்.

"என் வார்த்தைகளில் நிதானமும் அர்த்தமும் இருக்கின்றன."

"நீ பாசாங்கு காட்டுகிறாய். அர்த்தமற்ற சொற்களை நோக்கி என்னை இழுக்கிறாய்"

"நான் அர்த்தமற்ற சொற்களை நோக்கி இழுக்கவில்லை. வாழ்க்கையின் பரிமாணங்களை நோக்கி உன்னைத் திருப்புகிறேன்."

"வாழ்க்கையின் பரிமாணங்களை நீ எனக்கு புரியவைக்கத் தேவையில்லை."

அம்ருதாவின் அறையிலிருந்து வெளியேறினேன். கொழுத்தும் கோடையின் அனல் முகத்தில் எரிந்து கொண்டிருந்தது. முடிவற்ற தெருக்களில் அலைந்து திரிந்தேன். மாலையானதும் வெறுப்புணர்வு படிந்த மனதுடன் என் அறையை அடைந்தேன். அறைக் கதவில் செதுக்கப்பட்டிருந்த வட்டங்கள் கதவிலிருந்து இறங்கி தரையெங்கும் பரந்து கிடந்தன. அவற்றைப் பொறுக்கி மீண்டும் பொருத்தத் தொடங்கினேன். வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தி பறக்கத் தொடங்கின. அவை வண்ணத்துப் பூச்சிகளின் சாயலிலும் கருங் குழவியின் சாயலிலுமாக பறந்தபடியிருந்தன.

வாலறுந்த பல்லி அறைச் சுவர்களில் குதித்துக் குதித்து ஓடித் திரிகிறது. முன்பு அதற்கு வால் இருந்ததற்கான தடையமும் அற்றிருந்தது. அதன் ரேகைகள் சுவர் முழுதும் படிந்திருந்தன. அழுத்தமான அதன் ரேகைகளில் கனவுகளின் கரிய குரல் முனங்கிக்கொண்டிருந்தது. குரல்களின் அதிர்வில் சுவர் மெல்ல மெல்ல வர்ணமிழக்கத் தொடங்கியிருந்தது. சுவரின் வர்ணங்கள் உதிர்ந்து புழுதியாச் சுழல ஆரம்பித்தன. புழுதி அறைகளைத் தாண்டி வீடு முழுமையுமாகப் படர்ந்து அடங்குகையில் கரியதான புழுதி கடலாகியது. கடலில் நானும் அம்ருதாவும் மிதந்து கொண்டிருக்கிறோம். வாலறுந்த பல்லி அகாலத்திலிருந்து குரலெழுப்பத் துவங்கியது. ச்... ச்... பல்லியின் குரலால் சகுனம் பிழைத்ததாய் கோபத்தில் அம்ருதா சபிக்கத் தொடங்கினாள் பல்லி கரிய கடலில் குதித்தெழுந்தது. அதன் உடல் முழுதும் வட்ட வட்டமாக செதில்கள் முளைத்திருந்தன. செதில்கள் சேர்ந்து இறக்கைகளாக பல்லி பறக்கத் தொடங்கியது. கடல் வற்றிய கருஞ்சேற்றில் புதைந்து கிடந்தோம் நானும் அம்ருதாவும்.

வெள்ளிக்கிழமைகளில் வீட்டின் முற்றத்தில் கோலம் போடுவதை அம்ருதா வழக்கமாகவே கொண்டிருக்கிறாள். அவளது கோலங்கள் ஒவ்வொரு முறையும் புதிது புதிதாகவே இருக்கும். அவளுக்கும் எனக்கும் எவ்வளவோ முரண்பாடுகள் இருந்தபோதும் அவளைப் பாராட்டுவதான வார்த்தைகளைப் போகிறபோக்கில் காற்றில் மிதக்கவிடுவேன். ஆனால் அவளிடமிருந்து எந்தப் பதிலும் வெளி வராது. நானும் எதிர்பார்ப்பதுமில்லை. கோலத்தின் கோடுகளின் நேர்த்தியும் வளைவுகளும் முற்றத்தை புத்தெழிலுடன் மினுங்க வைக்கும். வீட்டுக்கு வருவோர்கள் கோலத்தை மிதித்தழித்து விடாதிருக்க கடும் வர்ணங்களால் கோலத்தை போடுவாள். கண்களை ஆக்கிரமிக்கும் அந்த வர்ணங்கள் வருவோரை நிதானப்படுத்தும்.

அம்ருதாவின் கோலத்தை வீட்டுக்கு வரும் எவரும் பாராட்டாமல் விட்டதில்லை. அவளை கோலக்கலையின் நிபுணியாகவே எல்லோரும் கூறினார்கள்.

இம்முறை அம்ருதா வரைந்த கோலம் விசித்திரமாக இருந்தது. வழமையாக எந்தக் கோலத்திலும் வட்டங்களை அவள் பயன்படுத்துவதில்லை. இன்றைய கோலம் அவள் தனது விதியை மீறி விட்டதாகவே எனக்குத் தோன்றியது. கோலத்திலும் தனது புதிர் விளையாட்டை தொடங்கியிருந்தாள்.

இரண்டு வட்டங்களை ஒன்றுடன் ஒன்று பொருந்தும்படி வரைந்திருந்தாள். ஒரு வட்டத்தின் விளிம்பை மற்றைய வட்டத்தின் விளிம்பு தொடுவது போலவும் தொடாதது போலவும் கருதுமாறு வட்டங்கள் வரையப்பட்டிருந்தன. உள்வட்டத்தை வெளிவட்டம் சிறைப்பிடித்து வைப்பது போல அவளது கோலம் அமைந்திருந்தது.

இந்தக் கோலம் முற்றத்தின் அழகு முழுமையையும் தின்று விட்டிருந்தது. முற்றம் ஒரு பாலைவனமாகியிருப்பதான பிரமையை தோற்றுவித்தது. வீட்டுக்கு இம்முறை எவரும் வரவில்லை. அது அம்ருதாவின் விம்பத்தை உடையவிடாமல் காத்துக்கொண்டிருந்தது. அவளும் யாரையும் எதிர்பார்க்கவுமில்லை. வழமைக்கு மாறாக வீடு அமைதியில் ஊறிக் கிடந்தது.

இந்த வட்ட அடுக்குக் கோலம் பற்றி நான் பலவாறும் பலவழிகளில் பல தடவையும் யோசித்தேன். கோலத்தின் மூலம் அவள் எனக்கு உரைக்கும் செய்திகள் எவை? அவற்றின் பரிமாணங்கள் எத்தனை? எண்ண இழைகளில் இழுபட்டபடியே அலைந்தேன்.

சர்வசாதாரணமாக வாலறுந்த பல்லி வீட்டின் வரவேற்புக்கூடத்தில் அமர்ந்திருந்தது. அதன் கருத்து முழுமையையும் எது நிறைந்திருந்ததோ தெரியவில்லை. திடீரென எழுந்தது. கூத்தாடத் தொடங்கியது பிரபஞ்சம். புரண்டசையும் கூத்து ஆட்டத்தின் வேகத்தில் அதனது கால் விரல்களில் நகங்கள் முளையிடுகின்றன. வேகம் கூடக் கூட நகங்கள் நீண்டு வளர்ந்தபடியே இருக்கின்றன. கூத்து தாண்டவமாக உருமாறுகிறது. நரம்புகள் விம்பிப்புடைத்து வெடிக்கின்றன. அது ஆடுகிறது. அதனது கரிய இரத்தம் வரவேற்புக் கூடமெங்கும் பெருகியோடுகிறது. அதனது ஆட்டத்தின் தொடக்கப்புள்ளி எதில் தொடங்கியது என்றே அது மறந்திருக்க வேண்டும். நிறுத்தும் வழி தெரியாது ஆடிக்கொண்டே இருக்கிறது. எல்லையற்ற ஆட்டத்தின் உச்சத்தில் சுழன்று கீழே விழுந்தது. வரவேற்புக் கூடத்தின்

நிறம் மாறத் தொடங்கிவிட்டது. பல்லி புள்ளியாக சிறுத்துக் காணாமல் போனது. அதன் கரிய திரவம் மட்டும் சாம்பல் புழுதியாய் சுழன்றடித்தது.

அம்ருதா தனது வட்ட அடுக்குக் கோலம் பற்றி அவளே ஒரு குறிப்பை எழுதி வரவேற்புக் கூடத்தில் ஒட்டியிருந்தாள். என்னால் அப் புதிரை அவிழ்க்க முடியா திருப்பதாய் அவள் நினைத்திருக்கக்கூடும். அவள் கோலம் போட்ட நாள்களிலிருந்து அநேக இரவுகளை விழிந்திருந்த படியே கழித்துக் கொண்டிருந்தேன். மின்சார விளக்குகளின் ஒளி ஏதோ என் இரகசியங்களை அரித்துத் தின்று கொள்வது போலிருந்ததால் அதனையும் அணைத்து விட்டிருந்தேன். ஒளியற்ற பொழுதுகள் எனக்கு நெருக்க மான உணர்வு களைத் தந்தன. இருளின் மீது மிதந்து கொண்டிருப்பவனாய் இருந்தேன்.

அம்ருதாவின் குறிப்பை நான் வாசிக்கத் தொடங்கி னேன். எல்லா எழுத்துக்களும் சர்ப்பங்களாக வளைந்து வளைந்து ஊர்ந்தன. முதலாவது எழுத்தை வாசிப்பதற்குள் இறுதி எழுத்து முன்நகர்ந்து அதன் அர்த்தங்களைக் குழப்பிக் கொண்டே இருந்தது. நீண்ட நேரமும் அதீத சிரமங்க ளுடனும் அதை வாசித்தேன்.

அவளின் குறிப்பு.

நான் வரைந்திருக்கும் இந்த வட்டக் கோலம் உன் புரிதலுக்கு ஏற்ற ஒன்றல்ல. உனது நேரடியான கருத்துக் கொள்ளலுக்கு முற்றிலும் மாறுபட்டது. நீ சிந்தனை மாற்றங்களுக்கு உள்ளாகும்போது மட்டுந்தான் கோலத் தின் அர்த்தம் பிடிபடும். நீயோ உனது சிந்தனைகளை குறுக்கி வைத்திருக்கிறாய். உனது அறையின் இருளின் கனதி போலவே உனது சிந்தனையும்.

எனது கோலம் கொண்டிருக்கும் இரண்டு வட்டங் களில் எதை வேண்டுமானாலும் நீ உன்னைப் பாவனை செய்யலாம். இரண்டு வட்டங்களும் விளிம்புகளால் அண்மித்திருப்பவை. ஒரு வட்டம் இன்னொரு வட்டத்தி லிருந்து பிரிந்து செல்லவோ விலகியிருக்கவோ முடியாது. ஒரு வட்டத்திலிருந்து மற்றைய வட்டத்தை பிரித்தெடுப்ப தும் சாத்தியமில்லை. வெளிவட்டத்துக்குள் உள்வட்டம் சுருங்கிக் கிடப்பதாகவும் நீ கருதலாம் அல்லது உள்வட்டம் வெளிவட்டத்தை நகர முடியாமல் இழுத்து வைத்திருப்ப தாகவும் நீ கருதலாம்.

நீ உனது சிந்தனைக் கருதுகோள்களின்படி எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளமுடியும். ஆனால் வட்டங்களை பிரித்தெடுக்க முடியாது. நிஜத்தில் கோலத் தின் வட்டங்கள் கோடுகளின் நேர்த்தியின்படி அழகாகவே எனக்குப்படுகிறது. நீ முகம் சுழித்தபடி பார்த்ததை நான் கவனித்தேன். தவிரவும் வட்டங்களின் பச்சை சிவப்பு நிறத்தைக்கண்டு நீ மண்டையை உடைக்கத் தேவையில்லை அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. வட்டங்கள்தான் முக்கியமானவை. வட்டங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் அல்லது வட்டங்களாகவே நீயும் நானும் இருக்கிறோம்."

இந்தக் குறிப்பை வாசித்த பிறகு தான் என் மூளை முன்னரிலும் வேகமாகச் சூடேறிக் கொண்டிருந்தது. பெரும்பான்மையும் அவளின் முன்னைய வட்டப் புதிர்களுடன் எனது கருதுகோள்களும் பொருந்தியேயுள் ளன. அம்ருதாவின் மூளை புதிர் நரம்புகளால் வடிவமைக்கப் பட்டதாயிருக்க வேண்டும். அவளால் நுண்மையாக கருத்தமைக்கப்படும் வட்டங்கள் எல்லாவற்றிலும் மையங் களில் குவிபவனாகவோ கோடுகளில் வளைபவனா கவோ நானிருக்கிறேன். அவளும் அவ்வாறுதான் இருக்கிறாள். ஒரே குவியத்தில் இரண்டுபேரை மாறுபட்ட மனமுடைய வர்களை எப்படி அவளால் வரையமுடிகின்றது.

எனது சிந்தனைகளும் கேள்விகளும் எனக்குப் புதிர்களாயின. என்னைச் சுற்றி நானே புதிர்க் கோடுகளை வரையலானேன் எவற்றிலும் நேர்த்தியில்லை.

வாலறுந்த பல்லி தனது கண்களை உருட்டியபடி அகாலத்திலிருந்து ஊர்ந்து வருகிறது. நீண்டு நெளியும் அதனது வயிறு பெருத்திருக்கிறது. அது இரை தேடத் தொடங்கிவிட்டது. அதன் வாய் அகல விரிந்திருக்க சுவரிலிருந்து இறங்குகிறது. அதன் பார்வை வட்டமாய்ச் சுழன்று மையமாகிக் கிடக்கும் என்னில் நிலைக்கவும் என்னருகில் வந்து என் இரகசியங்களை ஊர்ந்து ஊர்ந்து கடக்கிறது.

திடீரென பல்லி இரண்டு கால்களில் எழுந்து நிற்கிறது. அம்ருதா எனது அறையின் திரைச்சீலையில் நிழலாக அசைகிறாள். அவளது நிழலில் எண்ணற்ற வட்டங்கள் எனது அறையில் குவிகின்றன. ஒன்றோடு ஒன்று சங்கிலியாகப் பிணைகின்றன. பல்லி எழுந்து சங்கிலியின் முனையைத் தேடியெடுத்து வாயினுள் வைத்து உள்ளு றுஞ்சுகிறது. வட்டச் சங்கிலி அதன் வயிற்றை நிறைக்கிறது. அம்ருதாவின் மிரண்டமுகமாய் திரைச் சீலை அசைகிறது. பல்லி அறைச் கதவைத் திறந்து வரவேற்புக் கூடம் வழியே வெளியேறுகிறது. அதன் கால்த்தடங்களில் கரிய திரவம் சுரந்து கடலாகிறது. வீடு முழுமையும் கரிய திரவக் கடலில் நிறைகிறது. பல்லி தடயமற்று வெளியேறிவிட்டது.

வரவேற்புக் கூடத்தில் அம்ருதா அமர்ந்து புத்தகம் படித்தபடியிருக்கிறாள். வட்டப் புதிர்கள் பற்றிய புத்தகம். அதன் அட்டைப்படம் வட்டங்களால் நிறைந்து தெரிகிறது. அவள் தீவிரமான வாசகியாய் படித்த படியிருக்கிறாள். அவளின் முன்னால் ஒரு வெள்ளைத் தாளும் வர்ணப் பெட்டியும் பென்சிலும் இருக்கின்றன. அவள் இரவாவதற் குள் இன்னொரு புதிரை வரைந்து விடுவாள். நான் வரவேற்புக் கூடத்தில் நிலை கொள்ள முடியாதவனாய் படுக்கை அறையை நோக்கிச் செல்கிறேன். ◆

**வாசகர்களுக்கு**

**யோ. யோண்சன் ராஜ்குமாரின் 'திருமறைக் கலாமன்றத்தின் கடல் கடந்த கலைப் பயணங்கள்', விபரீதனின் 'நடைவழிக் குறிப்புகள்', மற்றும் 'கடிதங்கள்' ஆகியன அடுத்த இதழில் வெளிவரும்.**

நாம் இந்த உலகில்
எங்கே நிற்கிறோம் என்பதல்ல -
எந்தத் திசையில் நகர்கிறோம்
என்பதுதான் முக்கியம்.
**- ஆலிவர் ஹோம்ஸ்**

## நான்கு கவிதைகள்

ஜெஸ்லினி

### என்னைப் போலவே...

என்முன் கிளைபரப்பி
வேர்விடுகிறது ஒரு 'மரம்'
அதில்
கூடுகட்டியமர்ந்து ஆயிரம்
சிந்துகளை இயற்றவே விரும்புகிறேன்.
ஆனாலும்,
இலையுதிர்த்து சூடிக்கொள்ள,
நாசித் துவாரங்களை நிறைத்திட
ஒற்றைப் பூவாகிலும் இல்லை
சில நாட்களின் பின்தான்
அறிந்து கொண்டேன்
அதுவும்
என்னைப் போலவே
ஒரு 'மலட்டு மரம்'.



### ஒரு நொ(வெ) டியில்...

துப்பாக்கியொன்றின்
கூரியமுனை என் நெஞ்சிற்கு
அருகில்
மிக மிக அருகில்...

சொல்ல வேண்டிய வார்த்தைகளும்
செய்ய எஞ்சியிருந்த வேலைகளும்
எழுத வேண்டிய மடலொன்றும்
நினைவு தெரிந்த நாள்முதலாய்
மனதோடு பதுங்கிக் கொண்ட
ஆசைகளும், கூடவே சில கனவுகளும்...
தீர்ந்து போயிற்று,
அனைத்துமே
ஒரு நொ(வெ) டியில்...

### நானும் நீயும்

இந்த நெடிய இரவின்
இருளின் ஆழ்மையத்தில்
புதைந்து போகின்றேன்!

ஆந்தைகளின் அலறல்களில்
புதைந்து கொண்டிருந்த நடுநிசிப் பொழுதில்
நீ வருவாய்.
சப்த நாடிகளையும் அழுத்தி பிடித்து
ஒற்றை முத்தம் தருவாய்.

உன்,
விஷப்பற்களின் வீரியத்தில்
சிறைபட்டு செத்துப் போவேன் 'நான்'
விஷமேறி நீலம்பாரித்த
என்னுடலைச் சுமந்து
நீரிடை புகுவாய்,
மீனின் மிருதிச் சுவாசத்தில்
உயிர்த்தெழுவேன் 'நான்'

மீண்டும்
என்னை அழைத்துச் செல்வாய்
நெடிய இரவின் ஆழத்திற்கு...

### கனாக்காலம்

அந்த தெருவின்
நீட்சியெங்கும் புன்னை மரங்கள்
செழித்திருந்தன.
அது எங்கள் 'கனாக்காலம்'

அந்த தெருவின் மருங்கில் தான்
கருங்காலி மரப்பலகை மீது
அனைவரும் இணைந்திருந்து
இன்பம் கண்டோம்!
வாகைப் பூக்களின்
மஞ்சள் வர்ணத்தை
சுகித்திருந்தோம்!

புன்னைச் சருகுகள்
இரத்தம் தோய்ந்து காய்ந்திருந்தன
அன்றொரு நாள் ·
அக்குருதியின் நெடியில்
எங்கள் கனாக்காலத்தின்
வசந்தங்கள் கரைந்திருந்தன!

இப்பொழுதெல்லாம் நாங்கள்
இணைந்திருப்பதும்
இன்பங் காணுவதும், ஏன்
வாகைகள் பூப்பதும் கூட
கனவாகி விட்டது!




# தேசிய கலை, இலக்கியப் பேரவையின் தேசிய மாநாடும், 35 ஆவது ஆண்டு விழாவும்

தேசிய கலை, இலக்கியப் பேரவையின் தேசிய மாநாடும், 35 ஆவது ஆண்டு விழாவும் ஓகஸ்ட் மாதம் 23ஆம், 24 ஆம் திகதிகளில் கொழும்பு, வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றன.

தேசிய கலை, இலக்கியப் பேரவையின் 35 ஆவது ஆண்டு மலரான 'புது வசந்தம்' வெளியீடு, ஈழத்து கலை இலக்கிய ஆய்வரங்கு, நாடக அளிக்கைகள், பாடல்கள் என்றவாறாக இந்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

முதலாவது நாள் நிகழ்வுகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகின. இதன் முக்கிய நிகழ்வாக தேசிய கலை, இலக்கியப் பேரவையின் 35 ஆவது ஆண்டு மலரான 'புது வசந்தம்' வெளியீடு செய்யப்பட்டது. இந்நிகழ்வுக்கு பேராசிரியர் சி. சிவசேகரம் தலைமை தாங்கினார். வரவேற்புரையை சட்டத்தரணி சோ. தேவராஜாவும், அறிமுக உரையை தெ. ஞா. மீநிலங்கோவும், வெளியீட்டுரையை பேராசிரியர் சோ. சந்திரசேகரமும், நன்றி உரையை மிதுன் ராகுலும் நிகழ்த்தினார்கள். 'புது வசந்தம்' மலரின் முதற்பிரதி மூத்த கவிஞரான இ. முருகையனுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், 'மக்கள் களரி'யின் பொகவந்தலாவ பிரதேச நாடகக் குழுவினரின் பராக்கிரம நிரியெல்லவின் நெறியாள்கையில் உருவான 'தாகம்' என்னும் நாடகமும், மற்றும் 'கண்களில் ஈரம்' என்னும் நாடகமும் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வில் நாடக ஆசிரியர் பராக்கிரம நிரியெல்லவும் உரையாற்றினார்.

இரண்டாவது நாள் நிகழ்வுகள் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை முழுநாள் நிகழ்வுகளாக இடம்பெற்றன. இதன்போது பகல் முழுவதும் பல்வேறு தலைப்புகளில் இலக்கிய ஆய்வரங்குகள் இடம்பெற்றன. இவ் ஆய்வரங்குகள் மறைந்த இலக்கியவாதிகளான க. கைலாசபதி, கே. டானியல், சி.வி. வேலுப்பிள்ளை, சுபைர் இளங்கீரன், சுபத்திரன் ஆகியவர்களின் நினைவாக அவர்களின் பெயர்களில் அமைக்கப்பட்ட சிறப்பு அரங்குகளில் இடம்பெற்றன. ஆய்வுரைகளை துறைசார்ந்த அறிஞர்கள் பலர் நிகழ்த்தினார்கள்.

காலை 6 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற கலை நிகழ்வுகள் சிங்கள - தமிழ் கலை நிகழ்வுகளாக அரங்கேறின. இதில் 'வாழ்க்கை' என்னும் அரங்க ஆற்றுகையும் 'நடமாடும் கலைஞர்களின்' சுனந்த புஸ்பகுமார வழங்கிய பாடல்களும், 'எதிர்காலத்திற்கான நண்பர்கள்' வழங்கிய 'பாட்டும் நாடகமும்' என்பன இடம்பெற்றன.

**சஞ்சிகை**

## நீங்களும் எழுதலாம்

**(இரு மாத கவிதை இதழ்)**




எஸ். ஆர். தனபாலசிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கடந்த ஓராண்டாக திருகோணமலை மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது 'நீங்களும் எழுதலாம்' என்னும் கவிதைக்கான இருமாத இதழ். திருகோணமலை மண்ணின் தற்போதைய அசாதாரணச் சூழலுக்குள்ளேயே பிறந்து, அந்தச் சூழலுக்குள்ளேயே ஓராண்டையும் இச் சஞ்சிகை பூர்த்திசெய்திருப்பது பாராட்டுக்குரியது. 'தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி' என்னும் விருது வாக்குடன் வெளிவரும் இந்தக் கவிதைக்கான இதழ்; அதன் ஆண்டு மலரைத் தவிர ஏனைய இதழ்கள் அனைத்தும் வழமையான சஞ்சிகை அமைப்பிலிருந்து மாறுபட்ட அளவில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வளரும் புதிய கவிஞர்கள் தொடக்கம் வளர்ந்துவிட்ட கவிஞர்கள் வரை பலர் இச்சஞ்சிகையில் தமது கவிதைகளைப் படைத்து வருகிறார்கள். கவிதைகளுடன் கவிதை சம்மந்தமான கட்டுரைகள், நூல் விமர்சனங்களும் இச்சஞ்சிகையில் இடம்பெறுகின்றன. 'நீங்களும் எழுதலாம்' தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்.

தொடர்புகளுக்கு;
ஆசிரியர், 'நீங்களும் எழுதலாம்'
103 /1, திருமால் வீதி, திருகோணமலை.

# யாழ்ப்பாணத்தில் வெளியீடுகள்

**யா**ழ்ப்பாணத்தில் இடர்மிகுந்த சூழலிலும் ஏராள மான நூல்கள் ஒலி, ஒளி இறுவட்டுகள் அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்படுகின்றன. இவற்றில் சிலவற்றிற்கு வெளியீட்டு விழாக்களும் சிலவற்றிற்கு அறிமுக விழாக்களும் நடைபெறுகின்றன.

எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவ்வாண்டு ஆரம்பம் முதல் செப்ரெம்பர் முதல் வாரம் வரை வெளியீடு செய்யப்பட்ட அல்லது அறிமுகம் செய்யப்பட்ட கலை, இலக்கியம் சார்ந்த வெளியீடுகளின் விபரங்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம். இது பலருக்கும் பயன்தரும் என நம்புகிறோம். சில வெளியீடுகள் குறித்த தகவல் தவறுதலாக விடுபட்டும் இருக்கலாம். அவற்றின் விபரங்களைத் தொடர்புடையவர்கள் அறியத் தந்தால் அடுத்த இதழில் வெளியிடுவதற்கு உதவியாக இருக்கும்.

*05-01-2008* - வெளியீட்டு விழா - அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை - 'சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம்', பாதுகாவலன் மண்டபம், யாழ்ப்பாணம்.

*02-02-2008* - வெளியீட்டு விழா - கலாவித்தகர் சிவானந்தராஜா - 'கலைமுகங்கள் ஓர் அறிமுகம்', யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்.

*06-03-2008* - வெளியீட்டு விழா - யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் - 'பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்', (சிறுகதைத் தொகுதி), கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.

*19.04.2008* - வெளியீட்டு விழா - எஸ். என். ஜே. மரியாம்பிள்ளை 'குருநகர் யோகியின் படைப்புக்கள்' (சிறுகதைகள், கவிதை, நாடகம்), புனித கார்மேல் மாதா மண்டபம், குருநகர்.

*27-04-2008* - வெளியீட்டு விழா - க.தெய்வேந்திரன் (கோபதி) - 'கோபதியின் கதைகள்' (சிறுகதைத் தொகுதி), திருஞானசம்மந்த ஆதின மண்டபம், நல்லூர்.

*11-05-2008* - விமர்சன அரங்கு - க.சட்டநாதன் - 'புதியவர்கள்' (சிறுகதைத் தொகுதி), புவியியற்றுறை விரிவுரை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.

*24-05-2008* - வெளியீட்டு விழா - கலையார்வன் கு.இராயப்பு - 'ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்' (வரலாறு), புனித கார்மேல் மாதா மண்டபம், குருநகர்.

*28-05-2008* - வெளியீட்டு விழா - மொழிபெயர்ப்பு: சோ.பத்மநாதன் - 'சண்முகலிங்கம் நாடகங்கள்' (ஆங்கில நூல்), புவியியற்றுறை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.

*07-06-2008* - வெளியீட்டு விழா - தொகுப்பு: வி.பி. தனேந்திரா - 'நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்' புனித யாக்கோபு ஆலய மண்டபம், நல்லூர்.

*15.06.2008* - வெளியீட்டு விழா - சிவசரவணபவன் (சிற்பி) - 'நினைவுகள் மடிவதில்லை' (சிறுகதைத் தொகுதி), ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.

*20.06.2008* - அறிமுகவிழா - குமுதா சோமசுந்தரக் குருக்கள் - 'யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக் கட்டடக்கலையும்', சா. சிவரூபன் - 'பதிப்போவியம் : ஓர் அறிமுகம்', முகப்பிடம், புதிய கலைப்பீட கட்டடத் தொகுதி, யாழ். பல்கலைக்கழகம்.

*22-06-2008* - அறிமுக அரங்கு - த.ஆனந்தமயில் - 'ஓர் எழுதுவினைஞனின் டயறி' (சிறுகதைத் தொகுதி), புவியியற்றுறை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.

*06.07.2008* - வெளியீட்டு விழா - தவநாதன் றொபேட் - 'விரலிசை' (ஹார்மோனியக் கற்றலுக்கான நூல்), கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.

*12.07.2008* - அறிமுகவிழா - பொ. சண்முகநாதன் (சண் அங்கிள்) - 'நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள்' (நகைச்சுவைக் கட்டுரைகள்), ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

*20.07.2008* - வெளியீட்டு விழா - கந்தையா ஸ்ரீகந்தவேள் - 'தேரார் வீதியில்' (நாடக எழுத்துருக்கள்), அறிவாலயம், இணுவில்.

*22.07.2008* - அறிமுகவிழா - கந்தையா ஸ்ரீகணேசன் - 'Santhan's World in a flash' (a collection of criticism) (ஆங்கில நூல்), புவியியற்றுறை விரிவுரை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.

*27.07.2008* - வெளியீட்டு விழா - திருமறைக் கலாமன்றம் - 'இசை நாடகப் பாடல் மெட்டுகள்' (நூல், பாடல் இறுவட்டு), கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

*02.08.2008* - வெளியீட்டு விழா- இசைவேந்தன் பிலிப் ஜோண்கபாஸ், இசைமாணி தவநாதன் றொபேட் (ஹார்மோனியக் கச்சேரி ஒலி - ஒளி இறுவட்டு), துர்க்கா மணிமண்டபம், நல்லூர்.

*03.08.2008* - வெளியீட்டுவிழா - நாடக அரங்கக் கல்லூரி - 'ஆர்கொலோ சதுரர்' (நடன நாடக நூல், ஒலி இறுவட்டு), கைலாசபதி கலையரங்கம், யாழ் பல்கலைக்கழகம்.

04.08.2008 - வெளியீட்டு விழா - சு. ஸ்ரீகுமரன் - 'செல்லையா தாத்தாவும், செல்லக் குழந்தைகளும்' (சிறுவர் கதை), பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, பண்டத்தரிப்பு.

10.08.2008 - வெளியீட்டு விழா - துவாரகன் - 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்' (கவிதைகள்), வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை மண்டபம், நெல்லியடி.

10.08.2008 - வெளியீட்டு விழா - கவிஞர் துரையர் - 'எங்களுக்காக' (சிறுவர் பாடல்நூல்) - கதிரமலைச் சிவன் ஆலய திருமண மண்டபம், சுன்னாகம்.

11.08.2008 - அறிமுக விழா - பாஷையூர் புலவர் அமரர் ஆ. தே. செகராஜசிங்கம் - 'தண்டமிழ்த் தண்டலை' (பாலர் கல்விப் பாடல்கள்), பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், யாழ்ப்பாணம்.

24.08.2008 - அறிமுக விழா - சு. ஸ்ரீகுமரன் - 'செல் லையா தாத்தாவும், செல்லக் குழந்தைகளும்' (சிறுவர் கதை), பொது நூலகம், சுன்னாகம்.

02.09.2008 - அறிமுக விழா - சுப்பிரமணியம் வரதகுமார் (வரதன்) - 'எதுவரை' (தமிழ் நாடகம், குறும்பட விமர்சனங்கள்) - பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், பருத்தித்துறை.


**மீண்டும்**
**விரைவில்**
**வெளிவரவுள்ளது**




**அங்குசம்**

கலை, இலக்கிய, சமூக, அறிவியல்
இதழின் மூன்றாவது இதழ்

இதழுக்கான ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்படுகின்றன.




தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
அங்குசம்
இல. 226, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


# காலமானார்கள்

## இலங்கை

* ஈழத்தின் தலைசிறந்த சைவத் தமிழ் அறிஞரும், சமய சமூக சேவகியுமான கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 15.06.2008 இல் காலமானார்.
* ஈழத்தின் மரபுசார் தமிழறிஞர்களில் ஒருவரான புலவர்மணி பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் 09.08.2008 இல் காலமானார்.
* ஈழத்தின் நவீன கவிதைகளின் உருவாக்கத்தில் முதன்மைமிக்கவர்களில் ஒருவரான கவிஞர் தா. இராமலிங்கம் 25.08.2008 இல் காலமானார்.
* இலங்கையின் பிரபல தாளவாத்தியக் கலைஞரும், இசையமைப்பாளருமான நேசன் தியாகராஜா 28.08.2008 இல் காலமானார்.
* ஈழத்தின் பிரபல நாதஸ்வர சக்கரவர்த்திகளில் ஒருவரான வி. கே. கானமூர்த்தி 10.09.2008 இல் காலமானார்.

## இந்தியா


* தலைசிறந்த நவீன நாடக ஆசிரியர்களுள் ஒருவரான விஜய் டென்டுல்கர் 19.05.2008 இல் காலமானார்.
* பிரபல வயலின் இசைக் கலைஞரான குன்னக்குடி வைத்தியநாதன் 08.09.2008 இல் காலமானார்.

## பாலஸ்தீனம்

* பாலஸ்தீனத்தின் பிரபல கவிஞரும், உலக அளவில் அறியப்பட்டவருமான மஹ்மூத் தர்வீஸ் 09.08.2008 இல் காலமானார்.

# இலக்கியக் கருத்தரங்கு

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையினால் நடத்தப்படும் இலக்கியக் கருத்தரங்கின் இரண்டாவது அமர்வு 06.07.2008 காலை முதல் நண்பகல் வரை கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இதன்போது 'தமிழ் இலக்கியத்தினை விளங்கிக்கொள்ளல் - நாவல்' என்னும் பொருளில் நாகம்மாள் நாவலை அடிப்படையாகக்கொண்டு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க. அருந்தாகரன் கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கில் க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்மொழியைப் பாடமாகப் பயிலும் மாணவர்கள் அதிகளவில் பங்குபற்றியிருந்தார்கள். 'தமிழ் இலக்கியத்தினை விளங்கிக்கொள்ளல் - சிறுகதை' என்னும் பொருளில் 01.03.2008 இல் இடம்பெற்ற கருத்தரங்கின் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



### நேர்காணல்

# "பத்திரிகையாளனுக்கு நேர்மை முக்கியமானது..."

**மூத்த பத்திரிகையாளர்**
**சி.பெருமாள்**

சிபெரு, பன்னீரன், வர்ணம், பேனா, எஸ்பி. பெரு எனப் பல புனைபெயர்களுள் மறைந்திருந்து கவிதைகளையும், சிறுகதைகளையும், கட்டுரைகளையும், பத்திகளையும் வரைந்த சி. பெருமாள் இவ்வாண்டு பவளவிழாக் காண்கிறார்.

21.12.1933 இல் மலையகத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள எழில் சூழ்ந்த கிராமமான இறக்குவானையில் பிறந்த பெருமாள் அவர்கள் வீரகேசரியில் பத்திரிகையாளனாகப் பணியில் அமர்ந்து படிப்படியாக பத்திரிகைத் துறையின் பல்வேறு பதவிகளையும் அலங்கரித்தவர்.

ஈழநாடு பத்திரிகையின் வாரமலர் ஆசிரியராக இருந்து வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் படைப்பாளிகள் பலரை உருவாக்கியதோடு இலக்கிய சுவைமிக்க பல ஆக்கங்களை எழுதியும், வெளியிட்டும் உள்ளார். இவரது படைப்புக்கள் வீரகேசரி, தினகரன், ஈழநாடு, செய்தி முதலான பத்திரிகைகளிலும், மல்லிகை, விவேகி முதலிய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. தெளிவத்தை யோசப் தொகுத்த 'மலையகச் சிறுகதைகள்' நூலில் இவரது 'நம்பிக்கை' சிறுகதை இடம்பெற்றுள்ளது. செங்கைஆழியான் தொகுத்து வெளிவரவுள்ள 'ஈழநாடு சிறுகதைகள்' தொகுதியிலும் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.

ஈழநாட்டில் பணிபுரிந்தவேளை யாழ்ப்பாணத்திலேயே திருமணம் முடித்து தொடர்ந்தும் இங்கே வசித்து வருகிறார். மனைவி ஈஸ்வரி; ஈழநாடு, உதயன் பத்திரிகைகளில் விளம்பரப் பிரிவில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இவர்களுக்கு ஒரு மகனும் உள்ளார். இப்போதும் உற்சாகம் குன்றாமல் ஒரு பத்திரிகையாளராக மிளிரும் பெருமாள் அவர்கள் ஆங்கிலத்திலும் புலமையுடையவராவார். தற்போது 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் பணியாற்றும் அவர் பல கட்டுரைகளையும், மொழியாக்கங் களையும் எழுதிவருகிறார்.

'பத்திரிகைத்துறை: சில நினைவுக் குறிப்புகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ள பெருமாள் அவர்கள் 'பத்திரிகையியல் ஒழுக்கங்கள்' தொடர்பில் அந்நூலில் அழுத்திக் கூறியுள்ளார்.

கட்டையான சின்ன உருவம், அமைதியான சுபாவம், எதையும் ஆழ்ந்து நோக்கும் திறன் என்பன அவரை அடையாளப்படுத்துவனவாகும். அவரது நேர்காணல் இங்கே பதிவுசெய்யப்படுகிறது.

நேர்காணல் : சு.ஸ்ரீகுமரன்
படங்கள் : து. பிரபாகரன்

**○ உங்களது பிறப்பு, குடும்பப் பின்னணி பற்றிக் கூறுங்கள்?**

நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் மலையகத்திலே - இயற்கை அழகு கொஞ்சும் றக்குவானை பிரதேசத்தில் நான் வளர்ந்தேன். சிங்களவர்களும் தமிழர்களும் கூடி ஒன்றாக வாழ்ந்த ஒரு பிரதேசம். ஒரு சிறு குன்றின் மீது எங்கள் குடியிருப்பு இருந்தது - ஒரு பக்கம் அடர்ந்த காடு - அது பின்னர் அழிக்கப்பட்டு குடியேற்றமாயிற்று. மறுபக்கம் நகரம். இன்னொரு பக்கம் ஒரு மலைப்பாறை. அதன் நடுவில் எப்போதும் அருவியொன்று கீற்றாக வழிந்தோடிக் கொண்டிருக்கும். அது பெருக்கெடுக்கும் காலத்தில் 'சோ'

வென்ற ஓசை அப்பிரதேசமெங்குமே எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாகவே வாழ்ந் தார்கள். அதனால் சிங்களச் சிறுவர்களுடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பு எனக்கு அதிகமாகவே இருந்தது. சிங்கள மொழியை சிறு வயதிலேயே சரளமாகப் பேசும் திறமை எனக்கு ஏற்பட்டது.

எனது பெற்றோர் தோட்டத்தில் இருந்தார்கள். தந்தையார் தமிழ் ஆர்வமிக்கவராகவும் தமிழ் நாடகப் பிரியராகவும் இருந்தமையால் எனக்கும் தமிழ் ஆர்வம் இயற்கையாகவே ஏற்பட்டது. எனது தந்தையார் பெயர் பெரியசாமி சின்னக்கண்ணு, தாயார் சின்னம்மாள். எனக்கு மூத்த சகோதரர் ஒருவரும் இரண்டு சகோதரிகளும் இருந் தார்கள். என்னை எவ்வாறாயினும் கற்பிக்க வேண்டும் என்று எனது பெற்றோர் விரும்பினார்கள். அதன் காரணமாக பெரும் சிரமங்களுக்கிடையிலும் ஆங்கிலக் கல்லூரியொன் றில் சேர்த்துவிட்டார்கள்.

அந்தக் கல்லூரியின் பெயர் றக்குவானை புனித அந்தோனியார் கல்லூரி. அங்கே தமிழ், சிங்கள, முஸ்லிம் பிள்ளைகள் மட்டுமன்றி பறங்கிப் பிள்ளைகளும் ஒன்றா கவே படித்தார்கள். ஆங்கிலம் மூலம் கல்வி என்பதால் இவ்வாறு பலதரப்பட்ட இனத்தவர்களும், மதத்தவர்களும் பாகுபாடு இன்றி ஒன்றாகப் பழக முடிந்தது.

1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த நிலைமை மாறிவிட்டமை வேறு விடயம்.

எஸ்.எஸ்.ஸி என்று கூறப்படும் சிரேஷ்ட பாட சாலை தராதரபத்திர வகுப்பு வரை நான் படித்து அந்த வகுப்பின் தராதரத்தையும் ஜி.சி.ஈ தராதரத்தையும் (ஆங்கில மூலம்) பெற்றேன்.எங்கள் கல்லூரியில் இருந்து தோற்றிய சுமார் 24 பேரில் நானும் இன்னொரு சிங்கள மாணவனும் மாத்திரமே அந்த ஆண்டில் (1956) எஸ்.எஸ்.ஸி சித்தியடைந் திருந்தோம்.

பிரஜாவுரிமை பிரச்சினை எழுந்தமையால் அர சாங்க உத்தியோகம் எதிலும் சேரமுடியவில்லை. தோட்டங்களில் பணிபுரிவதையும் நான் விரும்பவில்லை. எழுத்துத்துறையில் எனக்கு ஏற்கெனவே ஆர்வம் இருந்த மையால் அந்த வகையில் ஏதாகிலும் செய்யலாம் என்று நினைத்த வேளையில் மலையக காந்தி திரு. கே. இராஜ லிங்கம் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. வீரகேசரியில் ஆட்கள் எடுக்கிறார்கள் என்றும் என்னை முயற்சி செய்து பார்க்கும்படியும் அவரே ஆர்வமூட்டியவர்.

பின்னர் ஈழநாட்டில் பணியாற்ற யாழ்ப்பாணம் வந்தேன். அங்கு விளம்பரப் பிரிவில் பணிபுரிந்த ஈஸ்வரியை காதலித்துத் திருமணம் செய்து கொண்டேன்.அதனால் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிக் கொண்டேன்.

**○ நீங்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்.கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட ஒரு மண்ணிலிருந்து ஒரு பத்திரிகையாளராக எவ்வாறு உருவாகினீர்கள்?**

பத்திரிகையாளன் உருவாகின்றானா? உருவாக்கப் படுகின்றானா என்பது ஒரு உருசிகரமான கேள்வி. ஏனென்றால் இந்தக் காலத்தில் பத்திரிகையாளர்களை உருவாக்குவதற்கென்று (பயிற்சியளிக்க) கல்லூரிகளும் நிறுவனங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.பல்கலைக் கழகங் களில் இத்துறைக்கென்றே பிரிவுகள் உண்டு.

ஆனால் அக் காலத்தில் பத்திரிகையாளர்களாக தாமே உருவானவர்களும் உண்டு - பத்திரிகைகளில் சேர்ந்து உருவாக்கப்பட்டவர்களும் உண்டு. கல்லூரிக் காலத்தி லேயே எனக்கு பத்திரிகைத் துறையில் ஆர்வம் இருந்தது. கல்லூரி இலக்கிய மன்றத்தின் பத்திராதிபராக பல தடவைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். தினகரன் , சுதந்திரன் பத்திரிகைகளில் மாணவர் மலர்களுக்கும் எழுதிவந்தேன். இந்த நிலையில் வீரகேசரியில் ஆசிரிய பீடத்தில் பழகுநராக பயிற்சி பெற சந்தர்ப்பம் கிடைத்தது பெரும்பேறுதான். அந்தக் காலத்தில் கே.பி.ஹரன் , கே.வி.எஸ்.வாஸ், லோகநாதன், ராமசாமி, ஆதித்தியன், வெங்கட்ராம ஐயர், எஸ்.எம்.கோபாலரத்தினம்,டேவிட் ராஜு, இப்றாகிம் போன்ற சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் பணிபுரிந்தார்கள்.

நீங்கள் கூறுவதுபோல் கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட ஒரு மண்ணிலிருந்து அதாவது மிக மிகப் பின் தங்கிய ஒரு சமுதாயத்திலிருந்து பத்திரிகைத் துறையில் ஓரளவுக்கு பெயர் கொள்ளும் நிலைக்கு என்னால் வரமுடிந்தமைக்கு விதியும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. எதுவானாலும் ஆரம்பத் திலிருந்தே என்னை இத்துறையில் வளர்த்துக் கொள்ள மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டேன் என்பதைச் சொல்ல வேண்டும்.

சிலர் பத்திரிகையாளனாகவே பிறந்துவிடுகிறார்கள் என்று கூறப்படுகின்றது. இது வெறும் புகழ்ச்சியன்றி வேறு இல்லை. ஓரளவுக்குப் படித்தவர்கள் ஆர்வமும் ஆற்றலும் இருப்பின் பத்திரிகைத் துறையில் முன்னேறிவிடலாம் என்பது பத்திரிகைத்துறை அறிஞர்களின் கருத்து.

வீரகேசரியில் நான் சேர்ந்த விபரம் பற்றி எனது 'பத்திரிகைத்துறை: சில நினைவுக் குறிப்புகள்' என்ற நூலில் விளக்கியுள்ளேன்.

**○ ஓரளவுக்குத் தேசியத் தன்மை வாய்ந்த பத்திரிகையாக விளங்கிய வீரகேசரியில் உங்களது பத்திரிகைப் பயணம் ஆரம்பமானது. உங்களது ஆளுமையை வளர்த்ததில் வீரகேசரி எவ்வாறு பங்காற்றியது?**

வீரகேசரி எனது ஆளுமையை வளர்த்ததா இல் லையா என்பதைவிட எனக்கு இத்துறையில் நல்ல பயிற்சி யைக் கொடுத்தது என்பதுதான் சரியாகும். பயிற்சி முடிந்து நான் தனித்துவமாகச் செயற்படத் தொடங்கிய காலத்தில் அங்கு ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சினை எங்களில் பலரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டது என்றாலும் அங்கிருந்த காலத்தில் பல்துறைப்பட்டவர்களை சந்திப்பதற்கும் பேட்டிகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்குபற்றி முன்னேறுவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன என்பதை மறுக்கவியலாது.

**○ எவ்வாறு ஈழநாட்டிற்குள் நுழைந்தீர்கள்?**

'ஈழநாடு' பத்திரிகையில் நுழைந்த கதை பெரியது.



அதைச் சுருக்கமாகக் கூறிவிடுகின்றேன். வீரகேசரியில் சேர்வதற்கு திரு.கே.இராஜலிங்கம் காரணமாய் இருந்தார் என்று கூறுனேன் அல்லவா, அதேபோல் 'ஈழநாடு'வில் நான் இணைவதற்கும் அவர்தான் முக்கிய காரணமாய் இருந்தார்.

வீரகேசரியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு கதவடைப்பும் நிகழ்ந்ததின் பின்னர் கருங்காலிகளையும் புதிய ஊழியர்களையும் கொண்டு மீண்டும் பத்திரிகையை வெளியிடுவதற்கு முயற்சிகள் நடைபெற்ற சமயம் அந் நிறுவனத்துக்கு எதிராக வெளியில் சிலபல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.இந் நிலையில் திரு.கே.இராஜலிங் கத்தை சந்தித்து ஆலோசனை கேட்டேன்.யாழ்ப்பாணத்தில் புதிதாக பத்திரிகையொன்றை ஆரம்பிக்கப் போகிறார்கள் அங்கே போகிறாயா என்று கேட்டார்.நான் சரியென்றேன். இளைஞர்களான உன் போன்றவர்களுக்கு துணிச்சலான அனுபவங்கள் தேவை, போய்வா என்றார்.

நான் யாழ்ப்பாணம் வந்து திரு.கோபாலரத்தினம் வீட்டில் தங்கி ஈழநாடுவில் பணிபுரியலானேன்.அக் காலத் தில் 'ஈழநாடு'வில் மேலாண்மை ஆசிரியராக திரு.கே.பி ஹரன் இருந்தார். வீரகேசரியில் ஏற்பட்ட ஒரு முரண்பாட் டையடுத்து அவர் அங்கிருந்து விலகி யாழ்ப்பாணம் வந்து ஈழநாடு மேலாண்மை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டி ருந்தார். திரு.ராஜ அரியரத்தினம் ஆசிரியராகவும், திரு.எஸ்.எம்.கோபாலரத்தினம் செய்தி ஆசிரியராகவும் இருந்தார்கள். டி.எம்.முருகையாவும் நானும் வீரகேசரியி லிருந்து வந்த உதவி ஆசிரியர்களாக இருந்தோம். திரு.கே.கணேசலிங்கம் ஆரம்பம் முதலே அங்கு பணிபுரிந்து வந்தார். வீரகேசரியில் சிரேஷ்ட ஒப்புநோக்காளராகவிருந்து விலகிய எஸ்.சபாரத்தினமும் வந்து இணைந்து கொண்டார். இந்தக் காலத்தில்தான் திரு.கே.ஜி.மகாதேவா, எம்.மாணிக் கம் போன்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.மாணிக்கம் ஒப்புநோக்காளராகவும் மகாதேவா ஆசிரியர் பகுதி பழகுநராகவும் சேர்க்கப்பட்டனர். இவர்களில் மாணிக்கம் இயக்கங்கள் தீவிரமாகச் செயற்பட்ட காலத்தில் சிரேஷ்ட செய்தியாளராகவும், மகாதேவா செய்தி ஆசிரியராகவும் பதவி உயர்வு பெற்றிருந்தனர்.

சில மாதங்களின் பின் திரு.ஹரன் அவர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் என்னை மீளவும் வீரகேசரியில் இணைய வைப்பதற்கு சில அன்பர்கள் திரு.தொண்டமான் மூலம் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாகவும் நான் கொழும்பு திரும்பினேன். ஆனால் வீரகேசரியில் எனது பழைய சேவைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாதென்றும் புதிய ஊழியனாகவே கணிக்கப்படுவேன் என்றும் அப்போதைய பணிப்பாளர் கேசவன் கூறிவிட்டமையால் அதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சிறிது காலம் ஒரு தனியார் நிறுவனத்திலும், பின்னர் இ.தொ.காங்கிரசில் அமைப்பாளராகவும் பின்னர் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினேன். 1965ஆம் ஆண்டு திரு.கே.சி.தங்கராஜா என்னை அழைத்து மீண்டும் ஈழநாடுவில் வந்து பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார். இதற்குப் பின்புலமாக திரு.எஸ்.எம்.கோபாலரத்தினம், எழுத்தாளர் தளத்தோயா கணேஷ், பொன் பாலசுந்தரம் முதலியவர்கள் இருந்துள்ளார்கள். அதன் பேரில் மீண்டும் நான் யாழ்ப்பாணம் வந்து ஈழநாடுவில் இணைந்தேன். அன்றிலிருந்து 1988 இல் ஈழநாடு குண்டுவைத்து தகர்க்கப் படும் வரை அங்கு பல நிலைகளில் பணிபுரிந்து வந்துள் ளேன்.

உதவி ஆசிரியர், இரவுப் பொறுப்பாசிரியர், வெளி நாட்டு செய்தி ஆசிரியர், வாரமலர் ஆசிரியர், பதில் ஆசிரியர் என்ற நிலைகளில் பணிபுரிந்துள்ளேன்.நான் வாரமலர் ஆசிரியராக இருந்த காலத்தில் பல புதிய எழுத்தாளர்கள் உருவாவதற்கு வழிவகுக்கப்பட்டது. அக் காலத்தில் எழுதத் தொடங்கிய இளைஞர்கள் பலர் இன்று புகழுடன் விளங்குகிறார்கள். -

**○ ஈழநாடு தமிழ்த் தேசியவாத உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய பத்திரிகையாகும்.அவ்வகையில் ஈழநாட்டின் முக்கிய பணிகளாக எவற்றை அடையாளம் காண்கிறீர்கள்?**

'ஈழநாடு' யாழ்ப்பாணத்தில் - முக்கியமாக தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் விடயங்களை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தது. இரண்டாவது, சிங்கள மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு 'லங்காதீப' பத்திரிகை முன்னின்று உழைத்ததுபோல் தமிழிலும் ஒரு பத்திரிகை வேண்டும் என்ற நிறுவுனர்களின் உணர்வினை செயல்படுத்தியதாகவே இது அமைந்தது எனலாம்.

கொழும்பிலிருந்து தமிழ் பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தாலும் தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் செய்திகளை உடனுக்குடன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பத்திரிகையால் கொடுக்க முடிந்தது.

அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் விரிவான வகையில் பிரதேச மக்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதாக 'ஈழநாடு' விளங்கியது. குறிப்பாக யாழ்ப்பாணத்து இளம் கலைஞர்களும் எழுத்தாளர்களும் இதனை வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.இன்று ஈழத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் புகழோடு விளங்கும் கலைஞர்கள்,எழுத்தாளர்கள் பலரும் ஈழநாடு பண்ணையில் வளர்ந்தவர்கள் என்று கூறலாம்.

ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் போது சகல தரப்புச் கருத்துக்களுக்கும் இப் பத்திரிகை களம் அமைத்துக்

கொடுத்தது என்பது போக தமிழ் மக்களின் எதிர்கால நன்மையைக் கருத்தில் கொண்டு தீர்க்கதரிசனத்தோடு அவ்வப்போது சரியான நிலைப்பாடுகளை எடுத்து வழி காட்டுவதாகவும் இருந்தது. அந்த வகையில் கதைகள், கட்டுரைகள் மற்றும் ஆசிரிய தலையங்கங்கள் தீட்டப் பட்டமையை இங்கு சுட்டிக்காட்டலாம். இதன் காரண மாக இரவில் ஆசிரியர் இருக்கையை நோக்கி குண்டெறியப் பட்டதும் தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படாததும் நினைவுகூரத்தக்கது.

தமிழர் பிரதேசத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படவேண்டுமென்ற தமிழ் மக்களின் கோரிக் கையை முன்வைத்து நடத்தப்பட்ட போராட்டத்தில் ஈழநாடு காத்திரமான அளவில் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளையில் மக்கள் கருத்தை ஒருங்கிணைக்கும் வகையிலும் வழி காட்டும் முறையிலும் அப் பத்திரிகை செயல்பட்டதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

இன்று வெளிநாட்டில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பணிபுரியும் ஈழத்து அன்பர்களில் ஈழநாடு பண்ணையில் வளர்ந்தவர்களை மிகுந்து காணலாம். அவர்களில் பலர் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஏன், இலங்கையில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் கூட முக்கிய பொறுப்புக்களில் ஈழநாடுவில் பயின்றவர்களே இருக்கிறார்கள். இது ஒன்றே போதும் 'ஈழநாடு' ஆற்றிய பெரும் பணியினை எடுத்துக் காட்டுவதற்கு.

**○ பத்திரிகைத் துறையில் மறக்கமுடியாத நபர்கள் மற்றும் சம்பவங்கள் பற்றிக் கூறுங்கள்.**

தமிழ்ப் பத்திரிகைத் துறையில், என்னைப் பொறுத்தவரை மறக்கமுடியாத ஒருவர் என்றால் கே.வி. எஸ்.வாஸ் அவர்களைத்தான் குறிப்பிடுவேன். பன்முக ஆளுமையுள்ள ஒரு பத்திரிகையாளர் அவர். அவர் செய்தி ஆசிரியராக இருந்தபோதுதான் நான் அங்கு போய்ச் சேர்ந்தேன். பின்னர் அவர் பிரதம ஆசிரியராக பதவி உயர்வு பெற்றிருந்தார். சென்னை இந்து மற்றும் கல்கி போன்ற பத்திரிகைகளுக்கு இலங்கைச் செய்தியாளராகப் பணியாற் றினார்.

நான் பத்திரிகையில் சேர்ந்த புதிதில் ஒரு சம்பவம் நடந்தது. இலங்கை அரசியல்வாதி ஒருவர் ரெலிபோனில் முக்கிய உரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். உரையாடல் முடிந்து சிறிது நேரத்தில் அன்றைய முதல் பதிப்புக்கான தலைப்புச் செய்தியும் தலைப்பும் அச்சுக்கு வந்துவிட்டன. அது மட்டுமல்ல வெளிநாட்டுக்கும் அவரே தட்டச்சு செய்து அனுப்பிவிட்டார். அவ்வளவு வேகமாக செயல்படுபவர் களை (பத்திரிகையாளர்களை) நான் பார்த்ததில்லை. செய்தித் துறையில் மட்டுமின்றி கதைகளும் எழுதுவார். பத்திரிகை விற்பனையில் தொய்வு ஏற்படும் காலத்தில் தினசரியில் தொடர் கதைகளை (துப்பறியும் கதைகளை) எழுதி அசத்துவார். விற்பனையும் அதிகரிக்கும்.

சம்பவங்கள் என்று சொல்வதானால் பல சம்பவங்கள் உண்டு. ஒன்றை மட்டும் கூறி முடிக்கிறேன். பயிற்சியாளனாய் இருந்தபோது இரவில் தனியாக பணியாற்ற வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒரு நகரின் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று முடிவுகளை அந்த ஊர் நிருபர் ரெலிபோனில் கொடுத்தார். எனக்கு அனுபவம் போதாது. தமிழரசுக் கட்சியை கம்யூனிஸ்ட் கட்சியென்றும், கம்யூனிஸ்ட் கட்சியை தமிழரசுக் கட்சியென்றும் மாற்றி செய்தியை எழுதி பிரசுரித்து விட்டேன். அடுத்த நாள் காரியாலயத்தில்பெரும் பிரச் சினை. முதிய பத்திரிகையாளர்கள் எல்லோரும் குறை கூறிக்கொண்டிருந்தார்கள். இப்படி பிழை விடுகிறவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் ஒருவர் கூறினார். பிழையான செய்தி குறித்து கட்சிப் பிரமுகர்கள் அடிக்கடி ஆசிரியருடன் தொடர்புகொண்டு குறைபட்டார்கள். எனக்கு அன்றோடு வேலை போய்விடும் என்று தோன் றியது. ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு விசாரிக்கும்போது பதவி விலகுவதற்கான கடிதத்தைக் கையளிப்பதற்கென எழுதி சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன்.

செய்தி ஆசிரியர் கே.வி.எஸ்.வாஸ் கூப்பிட்டனுப் பினார். நான் தயங்கியபடி அவருடைய அறைக்குள் போனேன். ராஜினாமாக் கடிதம் பாக்கெட்டில் தயாராகவே இருந்தது.

'ராத்திரி நீங்களா டியூட்டி' என்றார்.


'ஆம் சேர்' என்றேன்.

முதுநிலை நிருபர் ஒருவரின் பெயரைக் கூறி அவர் இருந்தாரா என்று கேட்டார்.

'இருந்தார் ஆனால் போய்விட்டார்' என்றேன்.

'சரி நீங்க போங்க' என்று கூறி அனுப்பிவிட்டார்.

முதுநிலை நிருபர் செய்தி எடுப்பதில் புதியவனான எனக்கு உதவி புரிந்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது அவரது குற்றம். அனுபவமும் ஆற்றலுமிக்க செய்தி ஆசிரியருக்கு இதெல்லாம் தெரியாதா என்ன? எனக்கு தண்டனை கிடைக்கப்போகிறது என்று எதிர்பார்த்தவர்கள் எல்லோரும் ஏமாற்றம் அடைந்தார்கள். இந்தச் சம்பவம் எனக்கு பல விடயங்களை தெளிவுபடுத்துவதாய் இருந்தது. செய்திகள் எழுதும்போது எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பதை எல்லாம் தெரிந்து கொண்டேன்.





**○ பத்திரிகைத்துறை ஒழுக்கங்கள் தொடர்பில் அண்மைக் காலத்தில் கவனிக்கப்படுவதில்லையென்று குற்றஞ் சாட்டப் படுகிறது. பத்திரிகையாளன் கொண்டிருக்க வேண்டிய தகைமை கள், ஒழுக்கங்கள் என எவற்றைக் கருதுகிறீர்கள்?**

பத்திரிகைத்துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக் கோவைகள் பத்திரிகை ஆசிரியர் கழகத்தினரால் அண்மையில் வெளியிடப்பட்டு அவை கடைப்பிடிக்கப் படுவதற்கான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. நான் வெளியிட்ட ஒரு நூலிலும் ஒழுக்க நெறிகள் என்ற தலைப் பில் சில கருத்துக்களை வழங்கியுள்ளேன். தனிப்பட்ட முறையில் பத்திரிகையாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களில் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப் பிடலாம்.

முதலாவது அவன் நேர்மையானவனாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். செய்தி எழுதுவதிலும் சரி, நேர்காணுவதிலும் சரி நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். தனது விருப்பு வெறுப்புக்களை ஆக்கங்களில் வலிந்து திணிக்கலாகாது. அவ்வாறு செய்யும் பத்திரிகை யாளன் விரைவிலேயே இனங்காணப்பட்டுவிடுவான்.

நேர்காணலின்போது சம்பந்தப்பட்டவர் பிரசுரிக்க வேண்டாம் என்று கூறி வெளியிடும் தகவல்களை அவர்களது அனுமதி பெறாமல் வெளியிடுவது நம்பிக்கைத் துரோகமாகும்.

செய்தி வெளியிடுவதன் மூலம் அல்லது மறைப்பது அல்லது திரித்து வெளியிடுவதன் மூலம் கையூட்டு பெறுவது என்பது பத்திரிகையாளனின் மதிப்பைக் குறைத்துவிடும். பத்திரிகையாளன் என்ற முறையில் வந்தடையும் செல்வாக் கினை சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

பொதுப் பத்திரிகைகளில் பணிபுரியும் பத்திரிகை யாளன் எப்பொழுதுமே நடுநிலையில் நின்று செயல்படுவது அவசியம். தனது சொந்த அரசியல் சார்புகளை செய்தியில் வெளிப்படுத்துவது தவறு.

சார்ந்திருக்கும் பத்திரிகையின் கொள்கைகளுக் கேற்ப விசுவாசத்துடன் பணியாற்ற வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவிடத்து வெளியேறிவிடுவதே உத்தமம்.

**○ நீங்கள் ஒரு படைப்பாளியுங்கூட. என்னென்ன புனைபெயர் களில் எழுதியுள்ளீர்கள்?**

பத்திரிகைத் துறையில் இருப்பவர்கள் ஆக்கத்து றையில் ஈடுபடுவதும் ஆக்கத்துறையில் ஈடுபடுபவர்கள் பத்திரிகையாளர்களாய் இருப்பதும் ஆச்சரியமில்லை. ஆனால் பத்திரிகைத் துறையின் ஒரு பிரிவான செய்திப் பத்திரிகைத் துறையென்பது ஒரு வித்தியாசமான துறையாகும். இந்தப் பிரிவைச் சேர்ந்த எல்லோரும் ஆக்கத் துறையில் ஈடுபடுபவர்களாய் இருப்பதில்லை. செய்தியை எடுப்பது சேகரிப்பது, முறையாக எழுதுவது மற்றும் அதற்கேற்ப தலைப்பிடுவது எல்லாம் பெரும்பாலும் பயிற்சியின் மூலமே பெறப்படுவதாகும். செய்திகளை அதன் அதன் தன்மைக்கேற்ப, எது எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது, எதற்கு பெரிய தலைப்புக்கள் இடுவது, எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்பதும் கூட பயிற்சியின் மூலமே பெறப்படுவதாகும். எனவே ஆக்க இலக்கிய வாதிகளால் பயிற்சியின்றி செய்திப் பத்திரிகைகளில் சோபிப்பது கடினம் என்றாலும் இரண்டு பிரிவுகளிலும் சோபிக்கும் ஆற்றல் பெற்றவர்களும் உண்டு. அந்த வகையில் ஆற்றல் பெற்றவர்களைக் குறிப்பிடுவதானால் கே.வி.எஸ்.வாஸ் அவர்களையே நான் குறிப்பிடுவேன். இன்னொருவர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

பத்திரிகைத்துறையில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்பே நான் ஆக்கத்துறையிலும் சில முயற்சிகளை செய்து பார்த்தேன். ஐம்பதுகளின் பிற்பகுதியிலும் அறுபதுகளிலும் சிறுகதைகள், நாடகங்கள் முதலியவற்றை எழுதினேன். நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பாயின. சிறுகதைகள் பெரும்பாலும் தினகரன் வார மலரில் வெளியாகின. இவை கள் பன்னீரன் என்ற புனை பெயரிலேயே வெளியாகின.

ஈழநாடுவில் சேர்ந்ததன் பின்னர் பல பெயர்களில் ஆக்கங்களைப் படைத்தேன். சிறுகதைகள் மட்டுமின்றி கவிதைகள், கட்டுரைகள் என்று பலவகையான ஆக்கங்கள் வெளியாகின. பன்னீரன், வர்ணம், பெரு, எஸ்.பி., பேனா, இ.பெ. மற்றும் சிபெரு என பல புனைபெயர்களில் சந்தர்ப்பத்துக்கும் விடயங்களுக்கும் ஏற்ப எழுதினேன்.

**○ உங்களது முதற் படைப்பு எது? சிறந்த படைப்பு எது?**

முதல் படைப்பு எது என்று சொல்வது கடினம். ஏனென்றால் கல்லூரியில் படிக்கும்போதே சிலபல ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளியானதுண்டு. அவை மறந்து போய்விட்டன. பத்திரிகையில் வெளிவந்த முதல் சிறுகதை என்றால் 'பெரியதுரை' என்ற கதையைத்தான் சொல்ல வேண்டும்.

சிறந்த படைப்பு எது என்று சொல்வது முடியாத விடயம். நான் படைத்த எல்லாமே ஏதோ ஒரு வகையில் எனக்குச் சிறப்பானவையே. நான் எழுதிய 'தேயிலையின் கண்ணீர்' என்ற நாடகம் பலராலும் பாராட்டப்பட்டது. இலங்கை வானொலியில் கிராமியச் சஞ்சிகைக்கு பொறுப்பாய் இருந்த வி.ஏ.சிவஞானம் அவர்கள் (Master piece) சிறந்த படைப்பு எனப் பாராட்டியமை நினை விருக்கிறது.

**○ உங்களது எழுத்துத்துறை வளர்ச்சிக்குப் பின்புலமாக**

**அமைந்த உங்களைக் கவர்ந்த எழுத்தாளர்கள் யாவர்?**

அக்காலத்தில் பிரபல்யமாய் இருந்த அனைத்து எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் பெரும்பாலும் கிடைத்த போதெல்லாம் படித்தேன். அதனால் அவர்களைப் போல் எழுதவேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது.தமிழ் எழுத்தாளர்கள் எவரையும் நான் முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் சார்ள்ஸ் டிக்கன்ஸ், மாப்பஸான்ட், எமிலிஸோலா, வால்டர் ஸ்கொட், மாக்ஸிம் கோர்க்கி போன்ற பெரியோர்களின் ஆக்கங்களில் ஈடுபாடு ஏற்பட்டது. ஷேக்ஸ்பியரையும் ஓரளவு படித்தேன். எனக்கிருந்த பொருளாதார நிலையிலும் இவர்களையெல்லாம் நூலகங்களிலும் நண்பர்களிடமிருந்துமே பெற்று வாசித்துவிட்டுத் திருப்பிக் கொடுக்க முடிந்தது. ஆழமாக இறங்கி ஆய்வு நிலையில் எதையும் செய்ய முடியவில்லை.இவர்களைப் படித்த அருட்சியில் எழுத ஆரம்பித்தேன் என்று சொல்வது பொருந்தும். சிறப்பாக ஓ ஹென்றியின் கதை சொல்லும் பாணி எனக்கு நிறையவும் பிடித்திருந்தது. அந்தப் பாணியில் சில கதைகளை எழுதியிருக்கிறேன். ஒரு நாவலை எழுத முற்பட்டு ஈழநாடு வார மலரில் தொடர் கதையாக வெளியிட்டேன். 'துடிப்பின் சுவடுகள்' என்பது அதன் பெயர்.

**O உங்களது படைப்புக்களை ஏன் நூலுருவாக்கவில்லை?**

என் படைப்புக்களை நூலாக உருவாக்க முடியாமல் போனமைக்கு எல்லோருக்கும் போலவே முதலில் பொருளாதாரப் பிரச்சினை. இரண்டாவது நூலுருவாக்குவதென்பது ஒரு ஆவண மயமாக்குதலாகவிருக்குமேயன்றி மடியில் உதைப்பதாகவே முடியும்.

என்றாலும் சுமார் 12 சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவதற்கென கோப்பில் வைத்திருந்தேன்.1981 ஆம் ஆண்டு 'ஈழநாடு' எரிக்கப்பட்டபோது அதுவும் சாம்பலாகிப் போயிற்று. அத்துடன் எனது வேறு ஆக்கங்களும் பொருள்களும் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் நூலுக்குரிய படைப்புகள் இல்லாமை அந்த முயற்சியில் ஈடுபட முடியாமல் செய்துவிட்டது.

**O ஈழநாடு வாரமலர் ஆசிரியராக இருந்துள்ளீர்கள்.உங்கள் காலத்தில் எவ்வகையில் வாரமலரைச் செயற்படுத்தினீர்கள்? யார் யாருக்கு களம் தந்து ஊக்குவித்தீர்கள்?**

ஈழநாடு வாரமலரை நான் பொறுப்பெடுத்தபோது ஏற்கெனவே இருந்த நடைமுறைகளையே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. இருந்தாலும் பல புதிய எழுத்தாளர்கள் உருவாக என்னால் களம் அமைத்துக் கொடுக்க முடிந்தது. அந்தக் காலத்தில் புதிதாக எழுதத் தொடங்கிய பல பெண் எழுத்தாளர்களும் பிற்காலத்தில் பிரபலமானார்கள்.

இன்று பிரபலமாகவுள்ள - ஈழநாடுவில் எழுதத் துவங்கிய பல எழுத்தாளர்களை - நான் மெருகூட்டி வளர்த்துவிட்டவர்கள் சிலர் மறக்காமல் இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

ஈழநாடு வாரமலர் வாயிலாக முதுபெரும் எழுத்தாளர் அ.செ.மு. அவர்களுக்கு நிதியொன்றை சேகரித்து வழங்கியமையானது அக் காலத்தில் எனது சொந்த முயற்சியில் நடந்த காரியம் என்று சொல்லலாம். ◆


விரைவில் வெளிவருகின்றது...

மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம்

கலைத்தூது செய்திப்பிரிவு

தயாரித்து வழங்கும்

வேண்டாம்

(Don't)

(குறுந்திரைச் சித்திரம்)

(சிறுவர் பாதுகாப்பு – சிறுவர் துஷ்பிரயோகம்
சம்மந்தமான விழிப்புணர்வை
ஏற்படுத்தும் முகமாக தயாரிக்கப்பட்டது)

திரைக் கதை, வசனம், நெறியாள்கை
அல்பிரட் தனஞ்சயன்

நடிகர்கள்
கொழும்பு, புத்தளம் திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள்

தயாரிப்பு மேற்பார்வை
வள்ளுவன் சுவாமிநாதன்

ஒளிப்பதிவு
சாமிந்த பெரேரா
சுரேஸ் ரட்ணகிரி

இசை ஒலிப்பதிவு
எஸ். எம். மோகனரூபன்

## சிலுவை

யமதர்மராஜன்
சிம்மாசனத்தில் உட்காந்திருக்கிறார்.
பக்கத்தில் சித்திரகுப்தனார்
இருப்பு எடுக்கப்படுகிறது
கணக்கு முடிப்பதற்காக.

முன்னால் நீண்ட வரிசையில் மக்கள்
பகல் பன்னிரண்டு மணி
வெயிலையும் பாராமல்
நானும் மனைவியும் நின்றுகொண்டிருக்கிறோம்
பாம்புபோல் வளைந்து செல்லும் வரிசையின்
வால்புறத்தில்.

அந்த வழியால் என் நண்பர் ஒருவர்
மோட்டார் சைக்கிளில்.
எங்களைக் கண்டு
சைக்கிளை ஓரத்தில் நிறுத்திவிட்டு
என்னருகில் வருகிறார்.
அவருக்குச் சித்திரகுப்தனாரின்
சங்கேத பாஷை தெரியும்.

அவர் சொன்னார்;
"வாருங்கள் உங்களை வீட்டுக்கு,
விரைவில் அனுப்பிவைக்க
வழிசெய்கிறேன்"
என்று.

"சரி" என்றேன்.
அப்போது என் மனைவி சொன்னாள்:
"எல்லோரும் வெயிலில் வெந்துகொண்டிருக்கையில்
நாம் மட்டும்... சரியில்லை"

நான் திகைத்தேன்.
நான் சொல்லியிருக்க வேண்டியதை
அவள் சொல்கிறாள்

Escapism.

நண்பருக்கு விடை கொடுத்து
வெயிலில் அவிந்துகொண்டிருக்கிறேன்
என் மனைவியுடன்,
நானும்.

கி. ஜீவகாருண்யன்



## அற்ப விஷயங்களுக்கான கடவுள் *

முற்றுகையிடப்பட்ட
எனது வெளிகள் நீளுகின்றன.
நான் ஒரு
பண்டைய தத்துவம்
வெற்று யூகங்களுடன்
கொங்கைகளிடமிருந்து
என் வாழ்வு இறங்கி வருகிறது.
என் சருமம் மென்மையானது
வாசனையுடையது.
நான்
பண்டைய அரசர்களின் கனவு.
அந்தபுரங்களில் அழகி.
நடை பாதை நெற்றியில்
ஒட்டை விழச் செய்யும் விபச்சாரி.
உடல் அங்கங்களின் மாற்றத்தில்,
கைதி.

அற்ப விஷயங்களுக்காக
நான் அகதியாக்கப் படலாம்.
மழைக்காலங்களில்
பிரகாசிக்கும் நட்சத்திரங்களின்
உச்சியிலிருந்தும்.
இருட்டின் அடியாழங்களிலிருந்தும் எழும்
என் திசைகள் நம்பிக்கையற்றவை.
எனது தோழிகள்
துரோகிகள்.
மலைகளின்
முகட்டில் அலைந்து
நீண்ட காலமாகிவிட்டது.

மலைகளின் உச்சியில்
மிருகங்கள் அலைகின்றன.

ராசு

* அருந்ததி ராயின் நாவல் 05/09/2007 இரவு-10.00

# சுவைத்தேன் - 6

**சௌஜன்யஷாகர்**

எமது மண்ணின் மிகப் பிரதானமான கவிஞர்களுள் ஒருவராக நிலைத்துள்ள கவிஞர் சு.வில்வரத்தினம் ஈழத்துக் கவிதைப் பரப்பில் தனக்கான ஒரு தனித்துவத்தைப் பேணிய ஒரு அரிய கவிஞர், இனிய மனிதர். அண்மைக் காலத்தில் எம்மைவிட்டுப் பிரிந்த - நாம் இழந்த ஒரு அற்புதமான கவிஞர் சு.வில்வரத்தினம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

கவிதையின் சொல் முறை, கவிதையில் அவர் கையாளும் மொழி, ஒரு தனி மேன்மைப் பண்பாய் அவர் பேணுகின்ற இனிமை, குழைவு, ஒரு ஈரலிப்புத் தன்மை, பழந் தமிழ்ச் சொல் கலந்து நவீனத்துவப் பார்வையோடு அவர் மேற்கொள்ளும் அளிப்பு முறை எல்லாமே சு.வி. அவர்களுக்கான ஆழ்ந்த அடையாளங்கள்.

கவிதையுலகத்துக்கு அவர் தந்துபோன ஒரு மேன்மையான தேட்டமாய்த் திகழுகின்ற அவரது, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்னும் முழுக் கவிதைகளின் தொகுப்பு ஒரு அரிய கவிதை நூல். அவர்,


எதையும் எதிர்கொள்<br>
முகந் திருப்பாதே;<br>
மனஞ் சலிக்காதே.<br>
..........<br>
ஓடிவரும் கிளை நதிகள்<br>
உட் தேக்கி<br>
வேகமாய்ப் பாய்<br>
வீச்சோடு.

என தனது 1985 இல் வெளிவந்த 'அகங்களும் முகங்களும்' தொகுப்பில் ஒரு உத்வேகமான கவிஞராய் அறிமுகமாகிறார். நிறைந்த இரக்கமும், ஜீவகாருண்யமும் கொண்ட ஒரு மனிதரான சு.வியின் பிடுங்கப்பட்ட ஒரு சூர்யகாந்திக்கான கவிதை;

பிடுங்கப்பட்ட ஒரிதயத்தின்<br>
பிரிவாற்றாது புண்ணுண்ட<br>
இந்தப் பூந்தண்டைப்பார்<br>
..........<br>
பிய்த்தெறிந்த அல்லிகளாய்<br>
சிதறுண்ட எனதகத்துள்<br>
பிடுங்குண்ட அந்த இதயத்தின்<br>
துடிப்பைப் பார்!

என - நெகிழ்கிறது.

பின்வந்த தொகுப்புகளான 'காற்றுவழிக் கிராமம்', 'நெற்றி மண்', 'காலத்துயர்' போன்றவற்றில் எமது வரலாற்றில் நாம் எதிர்கொண்ட துயரங்கள் கவிஞரால் கவிதை வடிவில் ஆவணப்படுத்தப்படுவதைக் காணலாம்.



மண் விளையாடிக் கொண்டிருந்த<br>
எனது மகன்<br>
ஓடிவந்தென் கையைப் பிடித்து<br>
மண்ணில் ஒருபிடி அள்ளிவைத்து,<br>
பிறகொரு புன்னகையின் பூவெறிந்து போனான்<br>
ஈரங்குழைந்த மண் சில்லிடச்<br>
சிலிர்த்த கை இன்னும் விரிந்த படியிருக்க<br>
மலர்ந்திருந்த கைப் பிடிமண்ணில்<br>
ஓர் உலகே விரிந்தது;<br>
இன்றோ<br>
எம் கண்முன்னே<br>
எல்லாம் சிதற<br>
இருந்த நிலம் நழுவிப்பெயர<br>
அந்தரத்தில் தொங்கும் அவலங்கள் எமதாக,<br>
கண நினைவின் நெகிழ்விலே<br>
கைப் பிடிமண் வழுவிவிழும்....<br>
கை தவறிப் போமா எல்லாம்...?

எனக் கவிஞர் விரிக்கும் காட்சி அழகு தமிழ்க் கவிதையாக விளங்குவது மட்டுமல்லாமல் எமது வாழ்வை எம் கண்முன் நிதர்சனமாக்குகிறது.

இவ்வாறு எடுத்துப் பேசப் பாடத்தக்க பல தனித்துவங்களோடு பல கவிதைகள் அவர் தம் முழுத் தொகுப்பிலும் உள்ளனவாயினும் பல காரணங்களால் எனது மனதை ஈர்த்த என்றென்றும் புதிதாய் இனிதாய்த் தெரியும் 'துளி முகத்துள் கங்கையை' என் தொடருக்காகத் தெரிவு செய்துள்ளேன். (உயிர்த்தெழும் காலத்துக்காக - பக்.83)

## சு. வில்வரத்தினத்தின் 'துளி முகத்துள் கங்கை'

**துளி முகத்துள் கங்கை**

உலகம் இன்று வறுமையுற்றுள்ளது<br>
அன்பிலே வறிய<br>
வன்பாலை உலகு செய்தோம்<br>
அன்பகத்தீர்<br>
தயவு செய்து ஒரு பிடி அன்பு செய்வீரா?<br>
பானையில் இருந்தால் தான்<br>
அகப்பையில் வரும்<br>
உனது பாத்திரத்தின் உள்ளே<br>
ஒட்டிக் கொண்டிருக்கும்<br>
அன்பின் அவிழ்பதம் கண்டாயா?<br>
ஆயின் நீ பாக்கியசாலி<br>
அன்பின் வறிய அயலான் ஒருவனுக்கு<br>
அதை வழங்கு.<br>
ஒரு துளி நேசிப்பில் தொடங்குகிறது<br>
அன்பின் இதழவிழ்தல்<br>
அன்பின் அவிழ்பதம் அளித்தாயா?<br>
அதன் எதிர் வரவு காத்திருக்காதே<br>
வரவை எதிர்வு காத்திருப்போன்<br>
வாழ்க்கையைக் கடைவிரிப்பாக்குகிறான்

வாழ்க்கையோ ஒரு தன்மலர்வின்
வெளியகம்...
காவிய மேகலையாள் தன்மலர்ந்த வாழ்வின்
பாத்திரமாகியபோது
அன்பின் குழைவை அள்ளியள்ளி
வழங்கிக் கொண்டேயிருந்தாள்
வற்றாத அன்பின் வாழ்வுடைமையில்
இது ஒன்றும் அதிசயமில்லை
ஆதலால் அன்பின் ஊற்று முகத்தை
திறந்துவை மானுடனே
தன் மலர்ந்த வாழ்வு உனதாகும்
துன்புறுவோரின் காற்தூசியையும் கழுவிவிடும்
அன்பின் ஊற்று
இன் பெருக்காய் எங்கும் அவிழ
அங்கழியும்
தான், தனதென்ற சிறு வட்டம்
சிறுவட்டம் தாண்டி எழுகின்ற பேரன்பு
ஆகாய கங்கையையும் பூமிக்கு இறக்கி வரும்
தூயஅன்பின் துளி போதும் தொடங்கு.

எல்லை கடந்த மனித நேயமும் வரம்புகளை மிதித்து நீளும் கருணைப் பார்வையும் அன்பு,காதல் என பலவற்றைப் பாடும் மனமும் அடுத்தவர்க்கு இரங்கும் பரந்த இதயமும் கொண்டவராக வாழ்நத சு.வி தனது துளி முகத்துள் கங்கையில் விரிக்கும் அன்பின் வெளி மிகப் பரந்தது.

..... அன்பிலே வறிய
வன் பாலை உலகு செய்தோம்
அன்பகத்திர்
தயவு செய்து ஒரு பிடி அன்பு செய்வீரா?

என்னும் இறைஞ்சுதலில் இதயம் தொடுகிறார் கவிஞர்.

- ஒரு துளி நேசிப்பில் தொடங்குகிறது
அன்பின் இதழவிழல்

என்பதில் எல்லோர் அகத்துள்ளும் இருந்தாலும் தூண்டப்படாத ஒரு விளக்காக இருக்கும் அடியாழ மனதின் அன்புணர்வையே*அவர் சுட்டிக் காட்டுகிறார்.

பெறுதலின் பொருட்டு வழங்கப்படுவதன்று அன்பு. எதிர்வரவு காத்திருத்தல் சிறுமை... ஆம் வாழ்க்கையே ஒரு தன் மலர்வின் வெளியகம். எம்முள் நிறைந்த அன்பை அளவின்றி வழங்கும் பக்குவம் நேரிடுமாயின் அது எமது ஆத்மாவின் பலமாகிறது. பிரதியுபகாரம் கிடைக்காத இடத்திலும் உபகர்ரம் தடையின்றி நிகழுமெனில் அதுவே மனித மேன்மை - அல்லவா?

துன்புறுவோரின் காற் தூசியையும் கழுவிவிடும்
அன்பின் ஊற்று
இன்பெருக்காய் எங்கும் அவிழ
அங்கழியும்
தான், தனதென்ற சிறுவட்டம் -

- தன்னைத் தாண்டிய பெருவெளிப் பயணம் பற்றிப் பேசும் சு.வி., வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் பரம்பரைக்கு உரியவர். புன்னியளவு பூச்சியின் மறைவுக்கு நொந்தவர் வழியில் வந்தவர்.

நெகிழ்ந்து நெகிழ்ந்துருகும்
வெண் பனியின் இதயம் படைத்த 'அவரால்தான்'
சிற்றெறும்பின் நசிவும் நோகிறது
என 'உணர்வின் மென்தண்டாகி' உருகமுடியும். ◆


## வாங்குங்கள்... வாசியுங்கள்...

# ஆற்றுகை

(நாடக அரங்கியலுக்கான இதழ்)




வெளியீடு:
நாடகப் பயிலகம்,
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

நாடக ஆர்வலர்கள்,
நாடகத்துறையில் ஈடுபடுவோர்,
நாடக அரங்கியலைக் கற்கும் மாணவர்கட்கு
அனைவருக்கும் பயனுள்ள இதழ்.

# இசைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த குன்னக்குடி வைத்தியநாதன்



கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு

இசையானது, உள்ளத்துணர்வோடு ஒன்றுகின்ற சுகானுபவத்தை அளிப்பது. குரல்களாலும், வார்த்தைகளாலும், வாத்தியங்களாலும் வெளிப்படுத்தக் கூடியது. மானுட வாழ்வின் பிறப்பு முதல் இறப்புவரை பிணைப்புற்று விளங்குவது. இசையால் வசமாகாத இதயங்கள் இருக்கவே முடியாது. அப்படியிருக்குமாயின் அவை வெறும் சடங்களாகவே கருதப்படும். 'இறைவன் இசைமயமானவன்' என நூலோர் கூறுவர். வெகுசனப் பண்பாட்டுக் கலைகளில் இசையின் பன்முகப் பரிமாணங்கள் பரந்து விரிந்து வியாபித்துள்ளன. இசைக் கலையின் நுட்பங்களும், அளிக்கைகளும் உலகமெங்கும் ஒன்றுபட்டும் மாறுபட்டும் காணப்படுகின்றன. சிறிய சமூகக் குழுமம் தொடக்கம் பெரிய பெரிய சமூகக் குழுமங்கள் வரை தனித்துவத்துடனும், அதே வேளையில் பொதுமையுடனும் இசைக்கலை வளர்ச்சி காணப்படுகிறது. இசையுலகம் இன்பமயமானது; அறிவு, ஆற்றல், அழகியல் முதலான பண்புகளின் இருப்பிடம் அது. இத்தகைய வல்லமை மிக்க இசையினை அடிப்படையாகக் கொண்டமைந்த வாழ்கைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டவர்தான், தென் இந்தியாவின் வயலின் இசை மேதையான புகழ்பெற்ற கலைஞர் குன்னக்குடி ஆர்.வைத்தியநாதன் அவர்கள்.காலந்தோறும் எத்தனையோ வாய்ப்பாட்டு - வாத்திய இசைக் கலைஞர்களைக் கர்நாடக இசைத்துறையில் தமிழகம் கண்டு வந்துள்ளது. இருப்பினும் விரல்விட்டு எண்ணத்தக்கவர்களே தமிழ் கூறும் நல்லுலகிலும், அதற்கப்பாலும் சாமான்ய மக்களாலும் அறியப்பட்டவர்களாகப் போற்றப்படுகின்றனர். அத்தகையவர்களில் ஒருவராகப் படித்தவர் முதல் பாமரர் வரை நேசிப்புக்குள்ளான, ஈர்ப்புக்குள்ளான வயலின் இசைக் கலைஞராக விளங்கியவர் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள். குன்னக்குடியின் வயலின் இசை என்று கூறியவிடத்து, ஊரின் பெயரைக் கொண்டே விளங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட இசை வித்துவானாக அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். ஒரு குறிப்பிட்ட வட்டத்தினருக்காகச் சட்டகஞ் செய்யப்பட்ட வரையறைகளை உடையதான இசை மரபினை மறுதலித்துவிட்டு, சாதாரண மக்களும் இரசிக்கும்படி தனது வயலின் இசையை நகர்த்தியவர் அவர். மரபினைத் தழுவியும், தேவைக்கேற்ப புதுமையைப் புகுத்தியும், பழைமை-புதுமை இரண்டினை இணைத்தும் செயற்பட்டதன் மூலம் பல்லாயிரக் கணக்கான இரசிகர்களைத் தனது இசை ஆகர்சிப்பின் கீழ் கொண்டு வந்தார். தமிழ் பண்பாட்டுச் செல்நெறியில் கர்நாடக இசை, மெல்லிசை, திரையிசை முதலான இசைக் கோலங்களை இட்டுச் சென்ற சனரஞ்சகமான கலைஞராகத் தன்னை நிலை நிறுத்தினார். அவரது கச்சேரிகளுக்குத் தாழ்நிலை இசை ரசிகர்களே அதிகம் வருகின்றனர் என்ற முணுமுணுப்புக்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாது, அனைத்து ரக இசையார்வலர்களையும் திருப்தி பண்ணும் நோக்கில் தமது கச்சேரிகளை ஒழுங்கமைத்து அதில் வெற்றியும் கண்டார்.

குன்னக்குடி வைத்தியநாதனின் பிறந்தவூர் குன்றக்குடி. ஆனால் பேச்சு வழக்கில் மருவி அது குன்னக்குடியாக அவரோடு சேர்ந்து கொண்டது. தமிழ் நாட்டின் காரைக்குடி-திருப்பத்தூர் சாலையில், காரைக்குடியிலிருந்து மேற்காகப் பத்து கிலோ மீற்றர் தூரத்தில் அருள்மிகு சண்முகநாதப் பெருமான் அழகிய கோயில் கொண்டருளிய திருவூர் இதுவாகும். வைத்தியநாதனின் தந்தையார் ராமசாமி சாஸ்திரிகள் ஹரிகதா காலட்சேப வல்லுநர். தாயார் பெயர் மீனாட்சி. பெற்றோருக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளுள் இவர் ஐந்தாவதாக 02.03.1935 இல் பிறந்தவர். மூத்த சகோதரர் கணபதி சுப்பிரமணியம் மிருதங்க வித்துவான். சகோதரிகள் சுப்புலட்சுமியும் சுந்தரலட்சுமியும் கர்நாடக இசை பயின்று குன்னக்குடி சகோதரிகள் என்ற பெயரில் கச்சேரி செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் வைத்தியநாதனோ படிப்போ, சங்கீதமோ வேண்டாமென்ற நிலையில் வளர்ந்து வந்தார்.

'முன் தலை சிரைக்கப்பட்டு பின்னே குடுமி... காதில் சிவப்புக் கடுக்கன்...கழுத்தில் உருத்திராட்ச மாலை...நெற்றியில் நீறு... இதுதான் அன்றைய வைத்தியநாதனின் கோலம்.' இவ்வாறு சிறுவனான குன்னக்குடியின் தோற்றம் பற்றி நவீனன் என்ற இந்திய

எழுத்தாளர் தமது 'திரை இசை அலைகள்' நூலில் வர்ணித்துள்ளார். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து நாற்புறமும் தென்னஞ் சோலைகள் சூழ்ந்த மதுராபுரிக் குளத்தில் நீராடுவது, சந்தியாவந்தனம் மற்றும் பிரார்த்தனை செய்வது, குளக்கரையிலுள்ள அரசமரத்தடிப் பிள்ளையாரை வழிபடுவது, வேத பாடசாலையில் சபேசகனபாடிகளின் அனுமதியுடன் பவளமல்லிப் பூக்களைக் கொய்து குடலையில் சேர்ப்பது, இன்னொரு குடலையில் வில்வ இலைகளைச் சேர்த்துக் கொள்வது, தாம் சேகரித்த பூசைக்குரிய மலர்களையும் இலைகளையும் தந்தையாரிடம் கொண்டு சென்று தருவது ஆகியவை வைத்தியநாதனின் அன்றாடப் பணிகளாயின. குன்றின் மேலுள்ள சண்முகப்பெருமான் சந்நிதியில் பழியாய்க் கிடப்பதும், சண்முகசகஸ்ரநாமம் ஓதும் குழுவினருடன் சேர்ந்து ஓதுவதன் மூலம் கிடைக்கின்ற சாதம், பலகாரம் ஓரணாப் பணம் முதலியவற்றைத் தாயிடம் கொடுப்பதுவுங்கூட நாளாந்தக் கடமையாகியது. இப்படியாகக் கல்வியிலோ, சங்கீதத்திலோ நாட்டமற்றுத் திரிவதால் ஊரவர் உருப்படாதவன் என வைத்தியநாதன் பற்றிக் கூறுகின்றனரே எனத் தாயார் கவலை கொண்டு,தனது கணவரான சாஸ்திரிகளிடம் ஒருநாள் 'இவன் மேல உங்க பார்வை ஏன் விழமாட்டேங்கிறது' என ஆதங்கத்துடன் கூறிவிட்டார். காலமும் கனிய வேண்டுமல்லவா? கடவுள் அனுக்கிரகமும் கூட வேண்டுமல்லவா? அந்த வேளையும் விரைவிலேயே வந்தது. குன்னக்குடி சகோதரிகளுக்கு வயலின் வாசித்துவந்த திருப்பத்தூர் ஹரிதாஸ் ராமச்சந்திராச்சார் என்பவர் ஒருமுறை குறித்த கச்சேரியொன்றுக்கு வராமையால் கோபங் கொண்டிருந்த குன்னக்குடியின் தந்தையார், அவரிடம் காரணம் கேட்டபோது வயலின்காரரால் கூறப்பட்ட அலட்சியமான பதிலினால்தான் வைத்தியநாதனை வயலின் வாசிக்கச் செய்யவேண்டுமென்ற வைராக்கியம் அவரிடத்தே பிறந்தது.தந்தையாரின் ஆசீர்வாதம், தாயார் காட்டிய பேரன்பு, உள்ளத்தில் ஊற்றெடுத்த கலையுணர்வு ஆகியவை ஒன்று சேர உற்சாகத்துடன் வயலின் வாத்தியத்தைக் கற்ற குன்னக்குடி வைத்தியநாதன் ஒரு வருடத்துக்குள்ளேயே சகோதரிகளின் கச்சேரி குன்னக்குடி முருகன் கோயிலில் நடைபெற்றபோது, அதற்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்து அரங்கேற்றம் செய்தார். இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர்; ஏதோ ஒரு விதத்தில் வைத்தியநாதன் என்ற கலைஞர் உருவாகக் காரணகர்த்தாவான ராமச்சந்திராச்சார் ஆவார். தந்தையார் தன்மீது கொண்டிருந்த நம்பிக்கை வீண்போகாத அளவில் குன்னக்குடியிலுள்ள குளங்கள், கோயில்கள் போன்ற எல்லா இடங்களிலும் வைத்தியநாதனின் வயலின் சாதகம் நடைபெற்றது. பதினொரு வயதிலேயே காரைக்குடி கிருஷ்ணன் கோயிலில் சங்கீதத்தில் மாபெரும் வித்துவானாகிய அரியக்குடி ராமானுஜ ஐய்யங்காரின் கச்சேரிக்கும், அதனைத் தொடர்ந்து ஓரிரு ஆண்டுகளில் மகாராஜபுரம் விசுவநாதஐயர், செம்மங்குடி சீனிவாச ஐயர் முதலான பல முன்னணி வித்துவான்களுக்கும் வயலின் வாசிக்கக் கூடிய பேறு கிட்டியது.

தனது தந்தையார் ராமசாமி சாஸ்திரிகளே தனது இசைக்கும் முதற்குருவாக விளங்கியதுடன், தனது ஆளுமை வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளாரெனப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குன்னக்குடி நினைவு கூர்ந்துள்ளார். வாய்ப்பாட்டிலும், புல்லாங்குழல், ஜலதரங்கம், வீணை முதலான வாத்தியங்கள் வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தவர் சாஸ்திரிகள்; அரியக்குடியவர்களின் இனிய நண்பர். ஒரு முறை ஊருக்குப் பக்கத்திலுள்ள காரைக்குடியில் இடம் பெற்ற அரியக்குடி அவர்களின் கச்சேரிக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசிப்பவர் வராமற் போகவே, ராமானுச ஐயங்காரிடம் வைத்தியநாதனை வாசிக்கச் சொல்லலாமே என்றார். உனக்கு எத்தனை கீர்த்தனைகள் வாசிக்கத் தெரியும் என்று மகனைக் கேட்டார். பத்துப் பதினைந்து கீர்த்தனைகளே எனக்குத் தெரியும் என்று மகன் பதிலிறுத்ததும், அப்படியானால் இந்தக் கச்சேரியிலும் உன்னால் வாசிக்க முடியும் எனக் கூறி வாசிக்கச் செய்தார். ஆரம்பமே பெரிய பெரிய இசை வித்துவான்களுக்கு வாசிக்கக் கிடைத்த அனுபவத்தால் வைத்தியநாதனின் இசையறிவும், வயலின் வாசிப்பும் மேன்மேலும் பிரகாசிக்கலாயிற்று. "கர்நாடக இசையுலகம் யாரையும் எளிதில் ஏற்காது. அதன் அசட்டைகளை வெல் லும் வகையில் செயற்பட்டு குன்னக்குடி வெற்றியும் கண்டுவிட்டார்" என்ற நவீனனின் கருத்துக்கிணங்க, தனது இசையானது பாமர மக்களைச் சென்றடையக் கூடிய உத்திகளைக் குன்னக்குடி கையாண்டார். சிறிய வயது முதலாகக் காரைக்குடியில் எந்தத் திரைப்படம் வந்தாலும் போய்ப் பார்த்த அனுபவம், ஜாலத்தனமிக்க திரையிசைப் பாடல்களில் மெய்மறந்த அனுபவம், கர்நாடக இசை தழுவிய திரைப்பாடல்களில் ஈர்ப்பு, சினிமா என்ற இந்திர ஜாலத்தின் மீதான பிரமிப்பு ஆகியவற்றால் திரைப்படத்துறை நோக்கிய நகர்வை மேற்கொண்டார். சேலம் மாடர்ன் தியேட்டஸில் வாத்தியக் கலைஞராக சேரக்கூடிய வாய்ப்பு, ஜலதரங்கம் வெங்கட்ரமணராவின் உதவியால் கிட்டியது. குடும்பத்தின் கஷ்டமான பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு தந்தையாரும் சம்மதித்து விட்டார். முதன் முதலில் இசை மேதை ஜி.ராமநாதன் முன்னிலையில் வயலினை வாசித்துக் காட்டி, அவரது திருப்தியுடன் மாதச் சம்பளத்தில் வேலை பெற்றுக் கொண்டார். அங்கே இசையமைப்பாளர்கள் ஜி.ராமநாதன், எஸ்.எம்.சுப்பையா நாயுடு போன்றவர்களிடம் பணியாற்றி இசைத்துறையில் மேலும் தன்னைப் புடம்போட்டுக் கொண்டார். 14 வயதில் கிடைத்த இந்த அரிய வாய்ப்பினால், தனது இசைச் சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்காக 1952 இல் சென்னைக்கு வந்தார் குன்னக்குடி. அங்கு திரையிசைக் கலைஞராகப் பணியாற்றியதுடன், சூலமங்கலம் சகோதரிகள், சீர்காழி கோவிந்தராஜன், டி.எம்.சௌந்தரராஜன் முதலானவர்களுக்கு இசைக் கச்சேரிகளில் வயலின் வாசித்தும் வந்தார். திரைத்

துறையிலும் சரி, கச்சேரி மேடைகளிலும்சரி வாய்ப்புகள் பெருகிவிடவில்லை. பக்திப் பாடல்களுக்கு இசையமைக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்றது. எச்.எம்.வி.நிறுவனத்திலேயே முதலில் இவ் வாய்ப்புக் கிட்டியது. சூலமங்கலம் சகோதரிகள் பாடிய 'திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா' என்னும் பூவை செங்குட்டுவன் பாடல் குன்னக்குடியவர்களின் இசையமைப்பில் வெளிவந்து, பட்டி தொட்டியெங்கும் சனரஞ்சகமாக ஒலித்தது. 1967 இல் வெளிவந்த ஏ.பி.நாகராஜனின் 'கந்தன் கருணை' திரைப்படத்தில் சூலமங்கலம் இராஜலட்சுமி, பி.சுசீலா ஆகியோர் பாடி, கே.வி.மகாதேவன் இசையமைப்பில் இப் பாடல் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. அதற்கான அனுமதியைக் குன்னக்குடி வழங்கியிருந்தார்.

1960 ஆம் ஆண்டிலிருந்து தனிக் கச்சேரியாக வயலின் வாசிப்பதை வைத்தியநாதன் அவர்கள் தொடங்கிவிட்டார். கூடவே பக்கவாத்தியக் கலைஞராகவும், திரையிசைக் கலைஞராகவும் பணிபுரிந்தார். 1967 இலிருந்து பக்கவாத்தியமாக வயலின் வாசிப்பதை நிறுத்திவிட்டார். ஒருசில நாடகங்களிலும் பணியாற்றியிருக்கிறார். பொருளாதாரத்தை வளப்படுத்தக் கூடிய சூழ்நிலை இன்னமும் அமையவில்லை. 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தனி வயலின் கச்சேரி பண்ணிய குன்னக்குடியவர்களுக்கு ஆரம்ப காலத்தில் பலத்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அதனைச் சவாலாக ஏற்றுக் கொண்டு, பரிசோதனை முயற்சியாக மக்கள் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற திரைப்படப் பாடல்களை, நாட்டுப்புறப் பாடல்களை, கர்நாடக இசைப் பாடல்களை வயலினில் வாசிக்கத் தொடங்கினார். பொருத்தமான முறையில் மரபுகளை மீறுவதற்குத் துணிந்து செயற்பட்டு வெற்றி கண்டார். இவர் தவிலுடன் இணைந்து வயலின் வாசித்ததை மக்கள் விரும்பி இரசித்தனர். வலையப்பட்டி சுப்பிரமணியத்தின் துணையுடன் அத்தகைய இசைப் பரீட்சையிலும் தேறிவிட்டார். 1974 - 1985 காலப் பகுதியில் சுமார் 3462 கச்சேரிகளில் தவில் வித்துவான்களுடன் பணியாற்றியதாகச் சமீப காலத்தில் இணையத்தளப் பேட்டியொன்றில் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

குன்னக்குடியவர்களின் இசைத்துறைப் பரிமாணங்களில் பலம் வாய்ந்ததாகவும், அவரைப் பிரபல்யப் படுத்தியதாகவும் திரைப்படங்களுக்கான இசையமைப்பு வாய்ப்புகள் அமைந்தன. 1968 இல் ஏ.பி.நாகராஜன் 'வா ராஜா வா' திரைப்படத்துக்காக வழங்கிய சந்தர்ப்பத்தால் பல வெற்றிப் பாடல்களை கொடுப்பதற்கு அவரால் முடிந்தது. 1969 இல் வெளிவந்த அந்தப் படமும் வெற்றி கண்டது.தொடர்ந்து திருமலை தென்குமரி, நம்ம வீட்டுத் தெய்வம், கண்காட்சி, அகத்தியர், அன்னை அபிராமி, தெய்வம், ராஜராஜசோழன், திருமலைத் தெய்வம், குமாஸ்தாவின் மகள், சிசுபாலன், மேல்நாட்டு மருமகள், மனிதனும் தெய்வமாகலாம், திருவருள், நவரத்தினம், கந்தர் அலங்காரம், ராக பந்தங்கள், தோடி ராகம், ( சொந்தத் தயாரிப்பு) ஆகிய இருபது திரைப்படங்களுக்கு 1969 - 1983 காலப் பகுதியில் இசையமைத்தார். படங்களின் வெற்றி தோல்விகள் ஒருபுறமிருக்க, குன்னக்குடி இசையமைத்த பாடல்கள் பலவும் மக்களிடையே பிரபல்யமடைந்தன. தமிழ்நாடு அரசினால் வழங்கப்படும் சிறந்த இசையமைப்பாளர் விருது 1970 இல் (திருமலை தென்குமரி) இவருக்குக் கிடைத்தது. 'இறைவன் படைத்த உலகை எல்லாம்', 'கல்லெல்லாம் சிலை செய்தான் பல்லவராஜா', 'கடலோரம் கோபுரம் மலைமேலே மண்டபம்', 'உண்மை எது பொய் எதென்னு' போன்ற, 'வா ராஜா வா' படப் பாடல்களால் கிடைத்த புகழ் பின்னும் தொடர்ந்தது. 'மதுரை அரசாளும் மீனாட்சி', 'திருப்பதி மலை வாழும் வெங்கடேசா', 'உலகமெல்லாம் படைச்சவளே ஓங்காரி', 'அனங்கன் அங்கஜன் அன்பன்' 'இசையாய், தமிழாய் இருப்பவனே', 'நடந்தாய் வாழி காவேரி', 'மலை நின்ற திருக்குமரா', 'வென்றிடுவேன் 'மருதமலை மாமணியே', 'திருச்செந்தூரின் கடலோரத்தில்', 'குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்', 'முத்தமிழில் பாடவந்தேன்', 'கந்தன் காலடியை வணங்கினால்', 'லைஃப் இஸ் ஏஃபிளவர்', 'சரிகமபதநி என்னும் சப்தசுர ஜாலம்', 'தோடியில் பாடுகிறேன்' முதலான பல திரைப்படப் பாடல்கள் குன்னக்குடியின் இசையமைப்பின் பெருமையை என்றும் பறைசாற்றக் கூடியவைகளாகும். குன்னக்குடியின் இசையில் அறிஞர் கி.வா.ஜகந்நாதனும் நம்ம வீட்டுத் தெய்வம் படத்துக்காகப் பாடல் எழுதினார். பல படங்களில் மேதைகளான பாலமுரளி கிருஷ்ணா, பித்துக்குளி முருகதாஸ், சீர்காழி கோவிந்தராஜன்,டி.எம்.எஸ், டி.என்.ஷேசகோபாலன் (குன்னக்குடியின் மாப்பிள்ளை) பெங்களூர் ரமணியம்மாள்,ராதா ஜெயலட்சுமி, சூலமங்கலம் ராஜலட்சுமி, கே.பி.சுந்தராமபாள் போன்றோரும் பாடியுள்ளனர்.

அவரது 'உலா வந்த நிலா' என்ற திரைப்பட முயற்சிகளுக்காகப் பாடல் ஒலிநாடா வெளிவந்தும் படம் வெளிவரவில்லை. ஏராளமான ஒலி - ஒளி நாடாக்கள் குன்னக்குடியின் வய்லின் இசை, திரையிசை, மெல்லிசை, கர்நாடக இசை கலந்து வெளிவந்துள்ளன. சுமார் அறுபது ஆண்டுகள் அவரோடு இசை பின்னிப் பிணைந்துள்ளது. அதுவே அவரது உயிர் மூச்சு.அந்தத் தெய்வீகப் பணியில் அவர் கண்ட வெற்றிகள் பல: தோல்விகளும் பல. எனினும் சளைக்காத முயற்சியினால் மக்கள் விரும்பும் இசையைத் தனது வயலின் மூலம் வழங்கி, அனைவரது பாராட்டுக்கும் உரியவரானார். 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே' என்ற திரைப் பாடலையே முதன் முதல் தான் வயலினில் வாசித்த திரையிசைப் பாடலாகக் கூறும் குன்னக்குடி அவர்கள், தமது கச்சேரிகளில் முதல் கர்நாடகப் பாடல்கள், பின்னர் பக்திப் பாடல்கள், அதன் பின்னர் திரையிசைப் பாடல்கள் என வகுத்துக் கொண்டு வாசித்தார். இராகத் தொடர்புகளை விளங்கப்படுத்தும் விதமாக ஒரே இராகத்திலமைந்த எல்லா ரகப்

பாடல்களையும் வாசித்து மகிழ்வூட்டினார். 2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம், நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அவரது கச்சேரி நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் அவரது வயலினிசையில் மூழ்கித் திளைத்தனர். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் பல தடவைகள் குன்னக்குடியவர்களின் வயலின் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன. இராக ஆராய்ச்சி நிலையத்தினை 8 வருடங்களுக்கு முன்னர் நிறுவியமை , முதல்வர் கருணாநிதியின் வேண்டுகோளின்படி 1982 இல் அமிர்தவர்ஷினி ராகத்தை வாசித்து சென்னையில் மழை வரச் செய்தமை, தனது 14 ஆவது வயதில் சுடும் நோயுற்றிருந்த தந்தையாரைக் குணப்படுத்தப் பல இராகங்களை வாசித்து வெற்றி கண்டமை, திருவையாறு தியாகராஜ மகோற்சவ சபாவின் செயலாளராகப் பலவாண்டுகள் பணியாற்றியமை, இருநூறுக்கு மேற்பட்ட இசைத்துறை விருதுகளைப் பெற்றுக் கொண்டமை, தமிழக அரசின் 'கலை மாமணி' விருது பெற்றமை, நடுவண் அரசின் 'பத்மஸ்ரீ' பட்டம் பெற்றமை, பல்லாயிரக் கணக்கான வயலின் கச்சேரிகளை நிகழ்த்தியமை ஆகியவற்றின் மூலம் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் இசைப் பெருமையை நாமுணரமுடியும்.

குன்னக்குடி அவர்கள் சென்னை, மந்தைவெளி, கிரீன்வேஸ் சாலையிலுள்ள இல்லத்தில் நீண்ட காலமாக வசித்து வந்தார். சில மாதங்களுக்கு முன்னரும் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, உடல் நலம் தேறி வீடு திரும்பியிருந்தார். இவ் வருடம் புரட்டாதி 06 ஆந் திகதியன்று திடீரென மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படவே, போரூர் இராமச்சந்திரா ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டார். இருந்தும் குணம்காண முடியாமல் நிலமை மோசமடைந்து, 08-09-2008 அன்று இரவு அவரது உயிர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்துவிட்டது. தனது வயலின் வாத்திய இசை கொண்டு இலட்சக்கணக்கான இரசிக உள்ளங்களை மயங்க வைத்த ஜீவன் அடங்கிவிட்டது.வயலின் மூலம் மாயாஜாலம் காட்டிய விரல்கள் ஓய்ந்துவிட்டன. இசையுலகின் வரலாற்றில் குன்னக்குடி வைத்தியநாதனுக்குரிய பக்கங்கள் காலத்தால் எழுதப்பட்டு என்றும் நித்தியமாக வாழும் என்பதில் ஐயமில்லை. ◆

## திரைப்படக் காட்சிகள்

திருமறைக் கலாமன்றத்தின் திரைப்படப் பிரிவின் ஏற்பாட்டில் மாதாந்தம் காண்பிக்கப்பட்டுவரும் நல்ல திரைப்படங்களின் வரிசையில் 20.07.2008 இல் 'மொழி' தமிழ்த் திரைப்படமும் 10.08.2008 இல் 'ஜெரேமியா' (Jeremiah) ஆங்கிலத் திரைப்படமும் 21.09.2008 இல் 'கர்ணன்' தமிழ்த் திரைப்படமும் திரையிடப்பட்டன.

மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அகலத் திரையில் இலவசமாகக் காண்பிக்கப்பட்ட இத்திரைப் படங்களை நூற்றுக்கணக்கானோர் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.



# இரு கவிதைகள்

சித்தாந்தன்

## சர்ப்பவெளிப் புணர்ச்சி

இந்தப் பாம்புகள் புணர்கின்றன
கலவிக்கிறக்கத்தில்
ஒன்றையொன்று கடித்துப்புரள்கின்றன

தாழைமரங்களின் மணம்
பொழுதை கலவியின் ஆழத்துள் புதைக்கிறது
காலை மாலை இரவு சாமமென
பொழுதுகளை மறந்து
வீதியில் கடப்போர்
மறைவிற்காக ஒதுங்குவோர் எவர் கண்களிலும்
படும்படியாகப் புணர்கின்றன

சிறுவர்கள் கூடி கல்லெறிகிறார்கள்
வளர்ந்தவர்கள்
இது கடவுளின் புணர்ச்சியென கண்டிக்கிறார்கள்
கடவுளர்களான பாம்புகள் புணர்கின்றன
தாழைமரங்கள் உணர்ச்சிக்கலகப்பித்தேறி
வானில் எழுந்து பறக்கின்றன
நிர்வாண வெளியில் பாலிமை பெருகிக்
கடலாக கடலாகப் பாம்புகள் புணர்கின்றன

ஒரு துளி உயிரணுவிலிருந்து வளர்கிறது
பாம்புகளின் கோயில்
மூலஸ்தான விக்கிரங்களான பாம்புகள் புணர்கின்றன
கலவி மயக்கம் மிதக்க
களிப்பிலூறிய கண்களுடன்
பக்தர்கள் வணங்குகிறார்கள்.

*02.03.2008*

## எரிதலின் வலி

நெருப்புப்போல் எரிகிறது விளக்கு
இப்படித்தான் நீ சொன்னாய்
மாலைப்பிரார்த்தனையில் நீயேற்றும்
தீபங்களின் ஒளியை
தின்றுவிடும் என்ற பயம் எனக்கு.

## நூல் மதிப்பீடுகள்

# நகையகம்*



| | |
|---|---|
| நூல் | : நகையகம் (தியான நாடக நூல்) |
| ஆசிரியர் | : கறொல் வொய்திவா |
| தமிழில் | : நீ. மரியசேவியர் அடிகள் |
| வெளியீடு | : திருமறைக் கலாமன்றம் |
| பதிப்பு | : 2007 |
| விலை | : 150.00 |

**த**மிழ் இலக்கியத்திலும் நாடகத் துறையிலும் தனக்கென ஓர் தனி இடத்தைப் பிடித்துள்ள மரிய சேவியர் அடிகளாரின் 'நகையகம்' என்கின்ற தமிழாக்கம் செய்யப் பட்ட அரும்பெரும் படைப்பிற் கான மதிப்பீட்டினை இரண்டு பகுதிகளாக நான் தொடர விரும்புகின்றேன். முதலாவது பகுதி இந்த நூலை ஆக்கிய கறொல் வொய்திவா என்று அழைக்கப்பட்ட முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பற்றியும் அவர் கவிதை வடிவில் வடிவமைத்த அவருடைய இப் படைப்பில் காணப்படும் திருமணத்தைப் பற்றிய உன்னத மான கருத்துக்களைப் பற்றியதாகும். இரண்டாவது பகுதியில் திருத்தந்தையுடைய இந்த மூலப்பிரதியை பொ. தபொர்ஸ்கி என்பவர் ஆங்கிலத்தில் 'The Jeweler's shop'என்று மொழி பெயர்க்க அதனை மரிய சேவியர் அடிகள் 'நகையகம்' என்று தன் இனிய தமிழில் தந்திருக் கின்ற இந்த மொழிபெயர்ப்புப் பற்றியும், இந்த மொழி பெயர்ப்பினூடாக அடிகளார் தமிழ் கூறும் நல் உலகிற்குத் தந்திருக்கின்ற இந்த அரும்பெரும் பொக்கிஷம் பற்றியும் அந்தப் பொக்கிஷத்தினூடாக வெளிப்படுகின்ற அடிகளா ரின் ஆளுமை பற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இது ஓர் தியான நாடகமாகும். ஆகவே இங்கே ஒருவர் மற்றவரோடு உரையாடுவது போலல்லாது ஒருவர் தனக்குள்ளே சத்தமாகச் சிந்திக்கின்ற (Thinking aloud) போன்ற பாங்கில் அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் பேசுகின்ற பொழுது அவரவருடைய உள்ளக் கிடக்கைகள் அழகாக வெளிக்கொணரப்படுகின்றன. இந்த உள்ளக் கிடக்கைகளுக்கூடாக அவர்களுடைய இருப்பும் அவர்களு டைய சுயமும் இன்னும் அவர்களுடைய விதியும் வெளிக் கொணரப்படுகிறது. இந்த நூலை வாசிக்கின்ற பொழுது ஒரு தியானம் ஒன்றை மேற்கொண்ட அனுபவம் நமக்குள் ஏற்படுகின்றது.

மேற்கொண்டு இந்த நூலைப்பற்றிக் கூறுவதற்கு முன்பாக இந்தத் தியான நாடகத்தின் கருப்பொருள் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறலாம். இந்த ஆக்கத்தின் கருப்பொருள் இரு மனங்கள் இணைந்து ஒரு மனமாகின்ற திருமணம் ஆகும். இந்த நாடகத்தில் மூன்று திருமண ஜோடிகள் காட்சிகளினூடாக வெளிக்கொணரப்படுகி றார்கள். இவர்களை விட இவர்களுடைய இந்தத் திருமண வாழ்வில் சேர்ந்து பயணித்து இவர்களுடைய மன உளைச்சல்களில் தெளிவைக் கொடுப்பவராக இன்னுமோர் பாத்திரமும் அமைக்கப்பட்டு மொத்தத்தில் ஏழு பேருடைய வாழ்வின் ஓர் அலசலாக இந்த நாடகம் நகர்ந்து செல்கிறது. இந் நாடகத்தில் வருகின்ற மூன்று ஜோடிகளும் திருமணத்தினூடாக இணைக்கப்படுகின்றார்கள். இவர்கள் மூவருடைய திருமணங்களும் வித விதமான திசைகளிலே சென்றாலும் இந்த மூவருக்கும் பொதுவாக அமைகின்ற ஒரு அம்சம் இந்த மூன்று ஜோடிகளும் தங்கள் திருமணத்திற் கான கணையாளியைச் செய்ய ஒரே நகையகத்திற்குப் போகிறார்கள். அந்த நகையகத்திலே இவர்கள் கணையா ளியைச் செய்கின்றபோது இந்த நகையகத்தின் உரிமையா ளர் இவர்களோடு பார்வையினாலே பல விடயங்களைப் பேசுகின்றார். அவர் வியாபார நோக்கம் கொண்ட ஒருவராக அல்ல தான் செய்யும் தொழிலின் புனிதத் தன்மையை உணர்ந்த ஒருவராக சித்திரிக்கப்படுகிறார். குறிப்பாக ஒவ்வொரு ஜோடிகளுக்கும் கணையாளிகளை செய்கின்ற போது அவர் அந்த ஜோடிகளை உற்றுநோக்குகின்ற அந்தப் பார்வையினூடாக அவர்களுக்குத் திருமணத்தைப் பற்றி சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்பவர் போல சித்திரிக்கப்படுகின்றார். இன்னும் நகையகத்தின் சாளரத்தி லுள்ள கண்ணாடியானது ஒவ்வொரு ஜோடியும் ஒருவரை மற்றவர் பார்ப்பதற்கு, அறிவதற்கு ஏற்ற ஓர் இடமாக சித்திரிக்கப்படுகிறது. மொத்தத்தில் இந்த மூன்று ஜோடிகளும் சந்திக்கின்ற தம்முடைய வாழ்வைத் தொடங்குகின்ற வாழ்க்கையில் சலனங்கள் ஏற்படுகின்ற பொழுது மீண்டும் புத்துயிர் பெற நாடுகின்ற ஒரு இடமாக இந்த நகையகம் சித்திரிக்கப்படுகிறது. இன்னும் திருமணத்தின் அன்பையும், அர்ப்பணத்தையும் அடையா ளப்படுத்துவது அவர்கள் மாற்றிக் கொள்ளுகின்ற கணையாளியாகும். அந்தக் கணையாளியைச் செய்கின்ற நகைமாடம் ஓர் உன்னதமான உணர்ச்சிகள் பொங்கி வழிகின்ற ஓர் இடமாக சித்திரிக்கப்படுகின்றதன் காரண மாகவே இந்தத் தியான நாடகம் 'நகையகம்' என்கின்ற தலைப்பைப் பெறுகிறது.

தொடர்ந்து இந் நாடகத்தில் வருகின்ற மூன்று

காட்சிகளும் வெளிப்படுத்துகின்ற மூன்று ஜோடிகளும் அவை வெளிப்படுத்துகின்ற திருமணம், திருமண அன்பு பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாக அலசிப்பார்ப்போம்.

**முதலாவது ஜோடி (காட்சி ஒன்று):**
**மலர்விழியும், அன்பழகனும்**

பல கனவுகளுடன் தங்களுடைய திருமண வாழ்வை மலர் விழியும் அன்பழகனும் ஆரம்பிக்கிறார்கள். 'கண்டதும் காதல்' என்ற கொள்கை இல்லாது "நீ என் வாழ்க்கைத் துணைவியாக இருக்க விரும்புகிறாயா?" என்ற ஆழமான கேள்வியோடு 'ஐம் புலன்களின் கவர்ச்சிக்கு' மேலாகத் தன் வாழ்வின் 'மறு சுயமாக' மாறக்கூடியவராக ஒருவர் மற்றவரைத் தேர்ந்தெடுக்கிறார். இவ்வாறு "இசைவான மனப்பாங்குகளோ, புலன் உணர்வுகளோ இருவரிடமும் இல்லாவிடினும் ஒருவர் மற்றவருக்கே உரித்தாக வேண்டும் என்ற நிலையில் இரு சுயங்களும் முட்டி மோதுவதே அன்பு." என்ற வரவிலக்கணத்திற்கு இணங்கத் தங்கள் வாழ்வை மகிழ்ச்சியோடு ஆரம்பிக்கி றார்கள். இவர்களுடைய மண வாழ்வில் பிறந்த குழந்தையே அருட் செல்வன் ஆகும். அருட்செல்வனுக்கு இரண்டு வயதாக இருக்கின்ற பொழுது அவனுடைய தந்தையாகிய அன்பழகன் போர் முனைக்குச் சென்றார். அங்கே அவர் கொல்லப்படுகின்றார். கணவன் போரில் மரணித்தாலும் கணவன் இன்னும் உயிருடன் வாழ்வது போலவே மலர்விழி சிந்திக்கின்றாள், வாழ்கிறாள். ஏனெனில் அவள் கையி லுள்ள கணையாளி ஊடாகவும் அவ்விருவரது ஒன்றிப்பின் உறவில் பிறந்த குழந்தை ஊடாகவும் அன்பழகன் வாழ்ந்து கொண்டேயிருந்தான். இவ்வாறு இறப்பிலும் தொடரு கின்ற ஒரு பந்தமாக மலர்விழி அன்பழகனின் திருமணம் முதலாவது காட்சியாக அமைகிறது.

**இரண்டாவது ஜோடி (காட்சி இரண்டு):**
**எழில் அரசியும், மணிவண்ணனும்**

மலர்விழி அன்பழகனைப் போலவே பல கனவுகளோடு அதே நகையகத்தில் கணையாளி செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திருமணம் அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத அதிர்ச்சியாக மாறுகிறது. இவ்வாறு இவர்களுடைய வாழ்வில் கசப்புணர்வே ஆன்மாவின் சுவையாக மாறுகிறது. இவர்களுக்கிடையிலே இருந்த மனத்தாங்கல்கள் விரிவுபடத் தொடங்கி அவர்க ளுக்குள் ஏற்படக்கூடிய பிரிவு தவிர்க்க முடியாத ஒன்று போல சித்திரிக்கப்படுகிறது. அன்பு என்பது இரு பக்க விட்டுக்கொடுப்பு என்பதை இருவரும் புரிந்து கொள்ள வில்லை. இவர்கள் இருவரும் ஆழ்துயருடன் அனுபவித்த அவர்களது அன்பின் விரிசல் அவர்களுடைய பிள்ளைகளது ஆன்மாவுக்குள்ளும் புகுந்து கொள்வதை இந்தக் காட்சி வெளிப்படுத்துகிறது. எனவே அவர்களுக்குப் பிறந்த தாமரைச் செல்வி என்கின்ற பாத்திரம் ஓர் பெற்றோரின் அன்பை அனுபவிக்காத, திருமணம் செய்வதற்கே பயப்படுகின்ற ஒரு பாத்திரமாக சித்திரிக்கப்படுகிறது. இவ்வாறாக இறுதியில் எழிலரசி தன்னுடைய திருமணத்தை முறித்துக்கொள்ளும் நோக்கத்தோடு கணையாளியை விற்பதற்காக நகையகம் சென்றபொழுது அந்தக் கணையா ளிகளைப் பற்றி அந்த நகையக உரிமையாளர் கூறிய வார்த்தைகள் எழிலரசியின் சிந்தனைப் போக்கை மாற்றி விடுகிறது. எனவே அவள் அங்கிருந்து வேறு வழியால் வீடு திரும்பினாள். அந்த வேளையில் அவள் சந்திக்கின்ற மதிவாணர் என்கின்ற ஒருவரது உதவியோடு ஒரு விவேகமுள்ள பெண்ணாக மாறி தன்னுடைய சிதைந்த நிலையில் இருக்கின்ற திருமணப் பந்தத்தை அவள் சரிசெய்கின்றாள். மீண்டும் மணிவண்ணனோடு இணைந்து மகிழ்வுடன் வாழ்கின்றாள்.

**மூன்றாவது ஜோடி (காட்சி மூன்று):**
**அருட்செல்வனும், தாமரைச் செல்வியும்**

இந்த மூன்றாவது காட்சியில் வருகின்ற இரண்டு கதாபாத்திரங்களும் மிகவும் சுவாரசியமானவை. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது இந்தக் காட்சியூடாக புலப்படு கின்றது. அருட்செல்வன் தன்னுடைய தந்தையை இரண்டு வயதில் இழந்த போதிலும் அதன் தாக்கம் அவனில் தெரியாதவாறு மலர்விழி அவனை வளர்த்துவந்தாள். அன்பழகன் மரணித்திருந்தாலும் இறப்பிலும் வாழ்வது போல அவர்களுடைய ஒன்றிப்பு என்றும் குலையாதிருந்தது. "போர் முனையில் எங்கோ மடிந்த போது அம்மாவில் அப்பா வாழ்ந்து வந்தார்." "அப்பாவின் கருத்து வடிவத்தை அம்மா என்னுள் படியச் செய்தாள்" என்று அருட்செல்வன் சொல்லுகின்ற வார்த்தைகள் தன் குழந்தைப் பருவத்தில் தான் தந்தையைப் பிரிந்த வேளையிலும் அதன் தாக்கத்தை உணரவைக்காதவாறு தன் தாய் எப்படித்தன்னை வளர்த்தி ருக்கிறாள் என்பதைக் காட்டுகிறது.

அதே வேளையில் எழிலரசி மணிவண்ணன் என்கிற தம்பதிகளின் திருமணத்தில் புரிந்துணர்வு அற்றுப்போனதன் காரணமாக பல தாக்கங்களை அனுபவித்த தாமரைச்செல்வி தான் அருட்செல்வனோடு ஆரம்பிக்கப்போகின்ற திருமண உறவையும் பயத்தோடு ஆரம்பிக்கின்றாள். "என்னுடைய பெற்றோர்களோ இரு அன்னியர்கள் போல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்", "என்னுடைய தந்தை செய்தது போல் நீயும் என்னை விட்டுப் பிரிந்துவிட மாட்டாயா?", "முன் பின் தெரியாதவளைப் போன்று மாறி, அம்மாவைப் போல் நானும் உன்னை விட்டு விலகிவிடுவேனா?" என்ற தாமரைச்செல்வியின் வார்த்தைகள் அவளுடைய பெற் றோர்களின் பிரிவு அவளின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களையும், அவள் திருமணத்தைப் பற்றி கொண்டி ருந்த அச்சத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறது.

இவ்வாறாக இரண்டு வெவ்வேறு பின்னணிகளில் பிறந்து இரு வேறான குழந்தைப் பருவ அனுபவங்களைப் பெற்ற தாமரைச்செல்வியும், அருட்செல்வனும் காலத்தால் ஆன்மாக்களில் குணப்படுத்தப்பட்டு மகிழ்வோடு தங்கள் திருமணத்தை ஆரம்பிப்பதாகவும், இந்தத் திருமணத்திலே எழிலரசியும் மணிவண்ணனும் ஒன்றிணைவது போலவும் மொத்தத்திலே மூன்று குடும்பங்களும் மகிழ்வோடு தம் அன்புப் பயணத்தைத் தொடர்வது போல் நாடகம் முடி

வடைகிறது.

இவ்வாறாக இந்த நூலில் திருமணம் பற்றி அரும்பெரும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

### இந்நூலில் காணப்படும் இறையியல் கருத்துக்கள்

கறொல் வொய்திவா இளைஞனாக இருந்த பொழுது ஆக்கிய இந்த ஆக்கத்தில் பல தன்மைகள் இருக்கின்ற போதும் இதற்குள் இருக்கின்ற திருமணத்தைப் பற்றிய அவருடைய கருத்துக்கள் இது ஒரு வெறும் கலைப்படைப்பாக மாத்திரமல்ல அவர் திருமணமென்பது ஒருமை, கட்டவிளாமை போன்ற பண்புகளை உடையது என்பதனைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இந்நூலினூடாக வெளிக்கொணர முயலுகின்றார். எனவே தான் திருமண உடன்படிக்கையின் ஓர் அடையாளமாக இருக்கின்ற கணையாளி என்கின்ற சொல் இந்த நூலில் மிக முக்கியமான ஓர் சொல்லாகும். இந்தச் சொல்லை மிக அழகாக ஆசிரியர் இந்த நூலில் கையாளுகின்றார். மிகவும் சுவையான ஒரு அம்சமாக எழிலரசி தன்னுடைய திருமண வாழ்வில் விரக்தியடைந்தவளாக தன் கணையாளியை விற்பனை செய்வதற்காக நகையகத்திற்குப் போன பொழுது நகையக முதலாளி அந்தக் கணையாளியையும், திருமணத் திகதியையும் பார்த்து விட்டு சொல்லுகின்ற வார்த்தைகள் மிக அழகானதாக அமைகின்றன. "இந்தக் கணையாளியில் எவ்வித நிறையும் இல்லை. பூச்சியத்திலிருந்து ஊசி சற்றும் அகலவில்லை. உமது கணவர் இன்னும் உயிரோடு தான் இருக்க வேண்டும். ஏனென்றால் உங்கள் இருவருடைய கணையாளிகளுக்கும் தனித்தனியே நிறுத்துக் காட்டும் போது எடையற்றவையாக இருக்கும். இரண்டும் சேர்ந்தால் மட்டும் அவைகளின் எடை பதிவு செய்யப்படும். எனது நகைத் தராசுக்கு ஒரு தனிவியல்புக் கூறு உண்டு. இது உலோகத்தை எடை போடாது. மனிதனின் இருப்பையும் விதியையும் எடை போடும்." இவ்வாறு திருமணத்தின் பின் இரண்டு கணையாளிகளும் இணைகின்ற பொழுதுதான் அதற்குப் பெறுமதி உண்டு என்கின்ற வார்த்தைகள் எழிலரசியின் திருமணம் பற்றிய தவறான சிந்தனைகளை மாற்றி, பிரிகின்ற நிலையில் இருக்கின்ற தாம்பத்திய வாழ்வை மீண்டும் இணைத்து அவளைப் புதிய உலகத்திற்கு கொண்டு செல்கிறது.

இவ்வாறாக திருமணத்தை, அதன் அன்பை மெய்யியல், உளவியல், இறையியல் ரீதியில் பார்த்து மிக அழகாக ஒருங்கிணைக்கின்ற பண்பை இந்த நூல் ஆசிரியர் கறொல் வொய்திவாவிடம் நாம் காணுகிறோம்.

உலகில் எத்தனையோ நாடுகளுண்டு. எத்தனையோ மொழிகளுண்டு. இத்தனை நாடுகளிலும் மொழிகளிலும் எத்தனையோ கலைப் படைப்புக்களுண்டு. இத்தனைக் கலைப் படைப்புக்களையும் ஒரு மனிதன் வாசித்து இரசிக்க வேண்டும் என்றால் அவன் அத்தனை ஆயிரம் மொழிகளையும் படிக்கவேண்டும். அது வரையறைக்குட்பட்ட ஒரு மனிதனால் முடியக்கூடிய காரியமல்ல. எனவேதான் இந்தக் கலைப்படைப்புக்களை எல்லோரும் சுவைக்க வேண்டும் என்ற நல்மனம் படைத்த ஒரு சிலர் செய்கின்ற நல் முயற்சியாகிய மொழிபெயர்ப்பு, ஒரு மனிதன் இன்னோர் மொழியிலுள்ள ஓர் கலைப் படைப்பை சுவைக்க உதவி செய்கிறது. போலந்து மொழியில் காலஞ்சென்ற திருத்தந்தையினால் எழுதப் பட்ட இந்த அரும்பெரும் பொக்கிஷம் நம்முடைய கைகளில் இன்று தவழ்கின்றதென்றால் அது போலந்து மொழியில் இருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்த பொ. தபொர்ஸ்கி, இன்னும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த மரியசேவியர் அடிகளாரின் முயற்சியினாலாகும்.

### படைப்புத்தெரிவு

கறொல் வொய்திவா பல கலைப்படைப்புக்களை ஆக்கியிருந்த வேளையிலும் மரியசேவியர் அடிகளார் இந்த நூலைத் தெரிவுசெய்து கொண்டமைக்குப் பல காரணங்கள் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். ஏனெனில் இந்த நூலில் பல அம்சங்கள் ஒன்றிணைகின்றன. இந்த நூலில் திருத்தந்தையின் ஆளுமை மிகத் தெளிவாக புலப்படுகின்றது. இந் நூல் அவரை ஓர் கவிஞராக, மெய்யியலாளராக, உளவியலாளராக, இறையியலாளராக நமக்கு வெளிப்படுத்துகிறது. எனவேதான் இந்த நூல் ஓர் தியான நூல், கவிதை நூல், அற நூல், நீதி நூல், அன்பு பற்றிய உளவியல் நூல், மேலும் திருமணம் பற்றிய இறையியல் நூல் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே இத்தனை சுவைகளை இந் நூலை வாசித்த பொழுது மரியசேவியர் அடிகளார் கண்டு கொண்டதன் காரணமாகவே இந் நூலை மொழிபெயர்க்க அருட்தந்தை அவர்கள் முனைந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

### மொழிவளம்

தமிழ்மொழி வளத்தைப் பொறுத்தவரையில் அருட் தந்தைக்கு நிகர் அருட்தந்தையே ஆவார். பலிக்களம் தொடங்கி இன்று வரை அவர் மேடையேற்றிய ஆற்றுகைகளிலும் அவர் உருவாக்கிய வாரிசுகளிலும் அவரின் மொழி ஆளுகையை நாம் காணக்கூடியதாகவுள்ளது. கம்பன் வீட்டுக் கைத்தடியும் கவி பாடும் என்பது போல நாற்பத்திரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள திருமறைக் கலாமன்றம் சாதித்த சாதனைகள் அருட் தந்தையின் மொழியாற்றலுக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. இவற்றினுடைய கொடுமுடியாகவே இன்று அவர் ஆக்கியுள்ள 'நகையகம்' என்ற இந்த மொழிபெயர்ப்பு அமைகிறது. மொழி நடையில் உள்ள ஒன்றை மொழி பெயர்ப்பதே கடினமானதொன்றாக அமைகின்ற போது கவிதை வடிவில் உள்ள ஒன்றை அதில் முழு உயிர்த் துடிப்பையும் இழக்காது வசன நடையில் மொழிபெயர்ப்பதென்பது எல்லோராலும் செய்யக்கூடியதொன்றல்ல. அது தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற அருட் தந்தை போன்ற ஒருவரால்தான் முடியும் என்று நான் நினைக்கின்றேன். அவர் வெறுமனே இதை மொழியாக்கம் மாத்திரம் செய்யாமல் இந் நூலுக்கு தமிழ் மணத்தையும் ஊட்டியிருக்கின்றார்.

**தமிழ்ப்பெயர்களுக்கூடாக கமழும் தமிழ் மணம்**


நூலில் வருகின்ற ஏழு பாத்திரங்களுக்கும் மூல நூலில் ஆசிரியர் பயன்படுத்திய பெயர்களுக்குப் பதிலாக தூய தமிழ்ப் பெயர்களை பயன்படுத்தி அடிகளார் இந் நூலை மொழிபெயர்த்தது ஒரு புதிய யுக்தியாகும். இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு அம்சம் ஆகும். இந்தத் தமிழ்ப் பெயர்களோடு; இந்த நூலை வாசிக்கின்ற போது ஏதோ நம் மத்தியில் நடைபெறுகின்ற ஓர் நிகழ்வை வாசிப்பது போன்ற ஓர் உணர்வு எம்மில் எழுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந் நூல் வேறு ஓர் மொழியில் வேறு ஓர் பண்பாட்டுப் பின்னணியில் எழுதப்பட்டாலும் இந்தத் தமிழ்ப் பெயர்கள் மிக எளிதாக அன்னியப் படுத்தப்படாத உணர்வோடு இந்த நூலை வாசிக்க எம்மைத் தூண்டுகிறது.

**மொழிபெயர்ப்பினூடாக வெளிப்படும் ஆளுமை**

இறுதியாக இறையியலாளர் 'தோமஸ் அக்குவையி னாஸ்' கூற்றுப்படி படைப்பினூடாக ஒருவர் அதைப் படைத்த படைப்பாளியை அறிந்து கொள்ளலாம் என்று கூறுகிறார். பரணியிலுள்ள இயற்கையின் எழில்கள் அதனைப் படைத்த பரம் பொருளை நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது. அதே போல் 'நகையகம்' என்கிற இந்த மொழிபெயர்ப்பு இதனை மொழிபெயர்த்த அருட்தந்தை யின் ஆளுமையை நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த நூலை எவரும் வாசிக்கத் தொடங்கினால் அதை வாசித்தே முடிக்க வேண்டும் என்ற ஓர் ஆவலை எல்லோருக்குள்ளும் இது ஏற்படுத்துகின்றது. எளிய, ஆனால் அழகான மொழி நடையில் இந்த நூல் மிகவும் இலகுவாக வாசகர்களைப் படிக்க வைக்கிறது.

**அருள்திரு. ம. டேவிற்**

# நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள்




| | |
|---|---|
| நூல் | : நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் (நகைச்சுவைக் கட்டுரைகள்) |
| ஆசிரியர் | : பொ. சண்முகநாதன் |
| வெளியீடு | : மணிமேகலைப் பிரசுரம் சென்னை 600 017 |
| பதிப்பு | : 2007 |
| விலை | : 50.00 (இந்திய ரூபா) |

"நகைச்சுவை உணர்வு மட்டும் இல்லாதிருந்திருந்தால் நான் என்றோ மடிந்திருப்பேன்" என்று மகாத்மா காந்தி ஒரு முறை கூறியிருந் தாராம். நகைச்சுவை உணர்வுமிக்க ஒருவர் தன்னைச் சூழும் இடர்க ளைக் கடந்து மன அழுத்தங்களுக்கு உட்படாமல் வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொள்ளும் மன நிலைக்கு வந்துவிடுவார். பல அறிஞர்கள் இவ்வாறுதான் தம்மைச் சூழ்ந்த துயர்களை நகைச் சுவைப் பாங்கான மனோ நிலையுடன் எதிர்கொண்டு நடந்திருக்கிறார்கள்.

நகைச்சுவை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான ஒன்று. யுத்தமும், அழிவுகளும், சலிப்பும் விரக்தியுமாய் உழலும் நமது மக்களுக்கு நகைச்சுவையின் தேவை மிகவும் வேண்டப்படுவதாகும். ஆனால் நகைச்சுவை இலக்கியங்களுக்கு இங்கு பஞ்சம் அதிகமாகும். நமது நகைச்சுவை எழுத்தாளர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

இவ்வாறு நகைச்சுவை இலக்கியங்கள் அதிகம் தோன்றாமைக்கு காலங்காலமான எமது இனப் பண்பாடு முதன்மைக் காரணமெனலாம். நாம் ஒன்றில் துதி பாடுவோம். அல்லாவிடில் வசை பாடுவோம். எம்மிடம் விமர்சன ரீதியான மனோபாவம் அதிகமில்லை. நகைச்சுவை என்பது ஒரு வகையில் இங்கிதமான சமூக விமர்சன மெனலாம். சமூக இயல்புகளை, சமூகப் போக்குகளை, மனித நடத்தைகளை சூழலின் பல்வேறு செயற்பா டுகளையெல்லாம் நகைச்சுவையினூடாக வெளிப்படுத்தும் போது அது சமூக விமர்சனமாகவே அமைகிறது.

நமது சூழலில் பயிலப்படும் தெனாலிராமன் கதைகளும், முல்லா கதைகளும் அக்காலச் சூழலின் அரசியல், சமூக விமர்சனங்களாகவே அமைந்து காணப் படுகின்றன. வீரமாமுனிவரால் எழுதப்பட்ட 'பரமார்த்த குரு கதைகள்' இந்து மத வைதீகத் தனத்தைக் கேலி செய்யும் மறைமுக எதிர்ப் பிரச்சாரப் புனைவாகவும் அதேவேளை ஒரு சமூக விமர்சனப் பதிவாகவுமே அமை கின்றன.

நகைச்சுவை இலக்கியம் எழுதுவதென்பது இலகுவானதல்ல. கதாசிரியரிடம் அத்தகைய உணர்வு காணப்படவேண்டும். பாத்திரங்கள், செயல்களில் ஆழ்ந்த அவதானம் வேண்டும். அவதானித்தவற்றை வாசகன் நகைக்கும் வண்ணம் சொல்லாக்க வேண்டும். நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என நகைச்சுவை சார்ந்து சில நூல்கள் இங்கு வெளிவந்துள்ளன. செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்', 'கொத்தியின் காதல்' ஆகிய நகைச்சுவை நாவல்கள், சானா எழுதிய 'பரியாரி பரமர்', பொ. சண்முகநாதனின் 'கொழும்புப் பெண்', 'பெண்ணே நீ பெரியவள்தான்' முதலியன

குறிப்பிடத்தக்கன. அமிர்த கழியான், திக்குவயல் சி.தர்மகுல சிங்கம், சிரித்திரன் சிவஞானசுந்தரம், முன்னோடிப் படைப்பாளிகள் சுயா, அனுசுயா எனச் சிலர் நகைச்சுவை இலக்கிய படைப் பாளிகளாக விளங்கியுள்ளனர்.

பொ.சண்முகநாதன் நகைச்சுவை இலக்கியம் படைப்பதில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருபவர். பல சிறுகதைகளை எழுதியுள்ளபோதிலும் நகைச்சுவை இலக்கியக்காரராகவே அவர் அடையாளப்படுத்தப்படு கிறார். பல நகைச்சுவைப் புனைவுகளை எழுதிய அவர் நகைச்சுவைக் கட்டுரைகளையும், பத்திகளையும் எழுதியுள் ளார். உதயன் பத்திரிகையில் அவர் எழுதிய பத்திகள் ‘நினைக்க... சிரிக்க... சிந்திக்க’, ‘சிரிப்போம், சிந்திப் போம்’ ஆகியன இரு நூல்களாக வெளிவந்துள்ளன. ‘நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள்’ இப்போது வெளிவந்துள்ளது.

இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி ஈழத்திலும் தமிழகத்திலும் நகைச்சுவை இலக்கிய முன்னோடிகளாக இருந்த சிலரை அறிமுகப்படுத்துவதாக உள்ளது. அவ் வகையில் சுயா என்ற சு.நல்லையா, அனுசுயா என்ற அல்வாயூர் மு.செல்லையா, சானா என்ற செ. சண்முகநாதன், கல்கி என்ற ரா.கிருஷ்ணமூர்த்தி, நாடோடி என்ற வெங்கட்ராமன், விகடன்- தேவன் என்ற ஆர். மகாதேவன் ஆகியோரை நூலாசிரியர் அவர்களது படைப்புக்களூடாக அறிமுகப்படுத்துகிறார். மேற்குறித்த வர்களின் படைப்புச் சிறப்பைத் தனது இரசனை நிலையில் நின்று நூலாசிரியர் வெளிப்படுத்துவது சிறப்பானது.

அடுத்த பகுதி நூலாசிரியரால் எழுதப்பட்ட 15 நகைச்சுவைக் கட்டுரைகளைக் கொண்டது. இக் கட்டுரை களுக்கூடாக 1970-80 காலப் பகுதியின் சமூக மாந்தர்கள், அவர்களின் இயல்புகள், நடத்தைகள், சமூகப் போக்குகள் என்பன வெளிப்படுகின்றன. ஒரு மனிதரின் இயல்பை கதாசிரியர் நான் என்ற இன்னொரு மனிதருடைய இயல் பினூடாக வெளிப்படுத்தும்போது இரு பாத்திரங் களையும் அவர்களது மனப்பாங்குகளையும் வாசகன் அறியக் கூடியதாக இருக்கிறது. இக் கட்டுரைகளில் போருக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் சமூகப் போக்கினை யும், சமூக மாந்தர்களது குணவியல்புகளையும், மனப்பாங்கு களையும், நடத்தைகளையும் அறிய முடிகிறது. இந் நூல் ஒருவகையில் அக் காலத்தின் சமூக விமர்சனமாக மிளிர்கிறது. கட்டுரைகள் எழுதப்பட்ட காலம் எல்லா இடங்களிலும் காணப்பட வில்லை. அது தவிர மணிமேகலைப் பிரசுரங்கள் பெரும்பா லானவற்றில் காணப்படும் நேர்த்தியின்மை இந் நூலிலும் உள்ளது. இவற்றைத் தவிர்த்து நோக்கின் பொ.சண்முக நாதன் துன்பங்களில் உழலும் மனிதர்களைச் சிறிது நேரம் மகிழச் செய்யும் நல்ல பணியை இந்நூலினூடாக ஆற்றியுள்ளதோடு ஒரு வகையில் ஆவணப்படுத்தும் செயலையும் செய்துள்ளார் எனலாம்.

**சு.ஸ்ரீகுமரன்**

## நூல் மதிப்பீடுகள்

**நூல் மதிப்பீடுகள் பகுதியில் தங்கள் நூல்களும் சஞ்சிகைகளும் அறிமுகம் செய்யப்படுவதை விரும்பும் வெளியீட்டாளர்கள் தமது படைப்புகளின் இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்கவும்.**

**ஒரு பிரதி மட்டும் அனுப்பினால் அது தொடர்பான சிறிய அறிமுகம் மட்டுமே இடம்பெறும். அறிமுகக் குறிப்பு இடம்பெற மாட்டாது.**


## கலைமுகம் விளம்பரக் கட்டணங்கள்





| | |
|---|---|
| பின்பக்க அட்டை (கலர்) | 12,000.00 |
| முன்பக்க/பின்பக்க உள் அட்டை(கலர்) | 10,000.00 |
| (கறுப்பு வெள்ளை) | 6,000.00 |
| உள் முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | 3,000.00 |
| உள் அரைப் பக்கம் | 1,500.00 |
| கால் பக்கம் | 750.00 |

புத்தக மற்றும் வர்த்தகம் சாராத விளம்பரங்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 'கலைமலர்'




**யா**ழ்ப்பாணம் - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த வெளியீடான 'கலைமலர்' இன் 2007 - 2008 ஆம் ஆண்டுக்கான 39 ஆவது மலர் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், கலாசாலைகளால் வெளியிடப்படும் ஆண்டு மலர்களிலிருந்து மாறுபட்டு - கடின உழைப்பின் வெளிப்பாடாக - வரலாற்றுச் சிறப்புமிக்க ஏராளமான விடயங்களை தன்னுள் கொண்டு காத்திரமான - பேணிப்பாதுகாக்க வேண்டிய மலராக இம்முறை மலர்ந்துள்ளது.

வழமையாக இத்தகைய மலர்களில் இடம்பெறும் வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகள், சம்மந்தப்பட்ட அமைப்பின் துறைசார் மன்றங்களின் அறிக்கைகள், மாணவர்களின் குழுப் படங்கள், மாணவர் விபரங்கள், நிகழ்ச்சிப் பதிவுகள் என்பனவற்றுடன் விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய பலரது துறைசார்ந்த ஆக்கங்களான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் போன்றவை கலைமலரிலும் நிறைந்து காணப்படினும்; இம்முறை 'கலைமலரை' கவனிப்புக்குரியதாக மாற்றியுள்ள விடயங்களாக, மலரின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 500 இற்கும் அதிகமான நிழற் படங்களின் தொகுதியையும், மலரின் முற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 1956 இல் வெளிவந்த 'ஈழகேசரி' ஆண்டுமலரில் இருந்தும், 'தமிழர் தகவல் 2005' இலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கிடைத்ததற்கரிய நிழற்படங்களையும் குறிப்பிடலாம். இவை கலைமலரை இன்னொரு படிநிலைக்கு உயர்த்தியுள்ளன எனலாம்.

மலரின் முற்பகுதியில் யாழ்ப்பாணக் கோட்டையின் அன்றைய தோற்றம், 1950 களில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுக்கோலம், ஈழத்துத் திருத்தலங்களின் அன்றைய தோற்றம், ஈழத்தின் சமயத் தலங்கள், திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம், யாழ்ப்பாண வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் திருக்கோணேஸ்வரம் இராவணன் வெட்டு போன்ற பிரதான தலைப்புகளில் நிழற்படங்கள் தொகுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மலரின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள நிழற்படத்தொகுதி அதிகப் பிரயத்தனப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பகுதியில் 512 நிழற்படங்கள் இடம்பெற்றுள்ளன. இவை மூன்று பகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

முதலாவது பகுதி; அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றி அமரத்துவம் அடைந்த ஈழத்து அறிஞர்கள், புலவர்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் ஆகியோரது நிழற்படங்களையும், இரண்டாவது பகுதி; சமகால மலையகத் தமிழ் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளில் ஒரு பகுதியினரது நிழற்படங்களையும், மூன்றாவது பகுதி; தென்னிந்தியாவில் இசைத்தமிழ் வளர்ச்சிக்குப் பணியாற்றிய முன்னோடிகளான அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரில் ஒரு பகுதியினரது நிழற்படங்களையும் கொண்டமைந்துள்ளது. இது ஒரு பயனுள்ள பாரிய முயற்சியாகும். இப்படங்களைத் தொகுத்துள்ள பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு இது தொடர்பாக எழுதியுள்ள அறிமுகக் குறிப்பில், "இந்த மூன்றுவகை நிழற்படத் தொகுப்புகளும் பூரணமானவை அல்ல. கிடைத்துள்ள நிழற்படங்களையும், தகவல்களையும் மையமாக வைத்தே உருவாக்கப்பட்டது. அடுத்து வரும் ஆண்டுகளில் வெளிவரும் 'கலைமலர்' சஞ்சிகைகளில் இம்முறை தவறவிடப்பட்டவர்களின் நிழற்படங்களையும் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும். இது பற்றிய தகவல்களை இலக்கிய ஆர்வலர்கள் தந்து உதவிசெய்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளமையை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

நிழற்படத் தொகுப்புத் தவிர, நிழற்படங்களைப் பெற இயலாத இலங்கைத் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் 111 பேரின் பெயர் விபரங்கள் தனியே தரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இம்மலரின் நிழற்படங்களின் தொகுப்பாளர் இத்தொகுப்பு முயற்சி தொடர்பாக மேலும் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் முக்கியமானவை. அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு;

"யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வருகின்ற போர்ச் சூழ்நிலைகள் காரணமாக மக்களது அனைத்து ஆவணங்களும் அழிந்துபோய் விட்டன. இருத்தல் நிலை கேள்விக்குரியதாக மாறிவிட்ட பின்னர், காலங்காலமாக கட்டிக்காத்துவைத்த பொருட்கள், கலைப்பொக்கிசங்கள், நூல்கள், நிழற்படங்கள், தகவல் திரட்டுக்கள் முதலானவை யாவும் இல்லாமற்போய்விட்டன. விரக்தியும் துன்பமும் நிறைந்த வாழ்வில் இவைபற்றிய அக்கறைகளும் மடிந்துவிட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டுதான், எமது எதிர்காலச் சமூகத்திற்கு உதவும் நோக்கமாக, இந்நிழற்படத் தொகுப்பு உருவாக்கப் பட்டுள்ளது... தற்போது நாம் ஆவணப்படுத்தும் இந்த நிழற்படங்கள் இன்னும் அரை நூற்றாண்டு காலமாவது நிலைத்திருக்கும் என்பது எமது நம்பிக்கை. இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் இவ்வளவு அதிகமான நிழற்படங்களை உள்ளடக்கிய காத்திரமான முதற் சஞ்சிகை 'கலைமலர்' என்பதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகம் பெருமையடைகின்றது..."

என்ற கருத்துக்கள் சரியானவையே. அந்த வகையில் இத்தகைய பெறுமதியான பணியை நிறைவுசெய்துள்ள தொகுப்பாளரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினரும் பாராட்டுக்குரியவர்களே.

எமது மண்ணில் ஆவணப்படுத்தவேண்டிய இது போன்ற விடயங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றை இத்தகைய மலர்களை வெளியிடும் ஏனையவர்களும் கருத்திற்கொண்டு ஆவணப்படுத்தினால் எதிர்காலச் சமூகத்திற்கும் தமிழ் இனத்திற்கும் செய்யும் பெரும் கைம்மாறாக அமையும்.

**மதுரன்**

# திருமறைக் கலாமன்றம் நடத்திய இசைநாடக அரங்கும் இசை நாடகப் பாடல் மெட்டுகளின் வெளியீடும்

மகிழன்



திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு வரும் பல்வேறு வகைப்பட்ட பணிகளில் முதன்மையானதொன்றாக எமது பாரம்பரிய கலைவடிவங்களை வளர்ப்பதிலும், பேணுவதிலும், ஆவணமாக்குவதிலும் அது தொடர்ந்தும் தீவிரமாகப் பங்காற்றி வருகின்றது.

இவற்றில் இக்கலை வடிவங்களை மக்கள்முன் கொண்டுசெல்லும் முகமாக நாடக, கூத்து அளிக்கைகள், ஏனைய அரங்க நிகழ்வுகள், கருத்தரங்குகள், பதிகை முயற்சிகள் எனப் பலவற்றைக் காலத்துக்குக் காலம் செயற்படுத்தி வந்துள்ளது.

இவைகளுக்கப்பால் இக்கலைவடிவங்களை ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததிக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் கையளிக்கும் இரண்டு பாரிய முயற்சிகளை திருமறைக் கலாமன்றம் அண்மைக் காலத்தில் நிறைவுசெய்து காலத்தின் கரங்களில் தந்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் தனது பல வருடகால முயற்சியின் பயனாக யாழ்ப்பாணத்தில் மரபுவழியாகப் பேணப்பட்டுவரும் தென்மோடி (கத்தோலிக்க) கூத்து மரபுப் பாடல்களுக்கான இசைமெட்டுகளை இனங்கண்டு அவற்றின் 153 மூலமெட்டுகளை அவற்றின் மூலத்தன்மை மாறுபடாது ஒலிப்பதிவு செய்து இறுவட்டு (MP3) வடிவிலும், நூல் வடிவிலும் வெளியீடு செய்த திருமறைக் கலாமன்றம்; இவ்வாண்டு ஜுலை மாதத்தில் மற்றுமொரு பாரிய முயற்சியாக; ஈழத்தில் வழக்கிலுள்ள இசைநாடக மரபுவழிப் பாடல்களின் 248 பாடல் மெட்டுக்களின் தொகுப்பினை ஒலிப்பதிவு செய்து இறுவட்டு (MP3) வடிவிலும், நூல் வடிவிலும் ஆவணப்படுத்தி வெளியிட்டுள்ளது. இப்பணியினை திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவரும் இன்று நம்மத்தியில் வாழும், இசைநாடகக் கலைஞர்களில் முதன்மையானவருமான கலைவேந்தன் ம. தைரியநாதன், அவரது மகனான தை யஸ்ரின் ஜெலூட் ஆகியோர் கடுமையான உழைப்பின் மூலம் நிறைவேற்றியுள்ளார்கள். இந்த வரலாற்று ஆவணத்தின் உருவாக்கத்தில் இவர்களுடன் யாழ். குடாநாட்டில் இன்று இருக்கக்கூடிய இசைநாடக, இசைக் கலைஞர்கள் பலரும் தங்களது மானசீகமான பங்களிப்பை நல்கியுள்ளனர்.

இந்த, இசைநாடகப் பாடல் மெட்டுக்களின் வெளியீடு தொடர்பாக அதன் நூலில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் குறிப்பிடுகையில்;

... 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் அறிமுகமாகி அதன் இசை வன்மை, அளிக்கை வன்மை போன்றவைகளினால் நகர்ப்புறம் தொடக்கம் கிராமப்புறம் ஈறாக எங்கும் பிரபல்யம் பெற்று ஈழத்துக்கென்று ஒரு தனித்துவத்தை உருவாக்கி தொழில்முறை அரங்க நேர்த்தியுடன் இடம் பிடித்துக்கொண்ட ஒரு கலை வடிவமே 'இசைநாடகம்' என வழங்கப்படுகின்ற ஸ்பெஷல் நாடகம். இது இன்று பெரிதும் நலிவுற்று ஓரிரண்டு பேர்மட்டும் மூலவர்களாக மிஞ்சி நிற்கும் அபாயத்துள் வாழும் கலையாக இருக்கின்றது. இதன் விளிம்புநிலைக் காலகட்டத்தில் நின்று இந்நாடக மரபின் ஆன்மாவாக இருக்கும் இசைமரபினை ஆவணமாக்கும் ஒரு முயற்சியையே இன்று நிறைவேற்றியுள்ளோம்... என்கிறார்.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஆவணப் பேழையை வெளியீடு செய்யும் முகமாக இசைநாடக அரங்கொன்றை 27.07.2008 காலையிலும், மாலையிலுமாக திருமறைக் கலாமன்றம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனது கலைத்தூது கலையகத்தில் நடத்தியிருந்தது. இந்த 'இசைநாடக அரங்கு' மூன்று பகுதிகளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

முதலாவது பகுதி, காலையில் இடம்பெற்றது. இது இசைநாடகக் கருத்தரங்காக அமைந்தது. இரண்டாவது பகுதி, இவ்வரங்கின் முதன்மைமிக்க நிகழ்வாக அமைந்த 'இசைநாடகப் பாடல் மெட்டுகள்' இறுவட்டினதும், நூலினதும் வெளியீடாகவும்,



முதற்பிரதி வழங்குகையில்...



கலைஞர்கள் கௌரவிக்கப்படுகையில்...

மூன்றாவது பகுதி, கலைஞர் கௌரவிப்பாகவும், பிரபல இசைநாடகக் கலைஞர்கள் பங்குகொண்ட இசைநாடக மேடைப் பாடல்களாகவும் அமைந்தது. இவை மாலையில் இடம்பெற்றன.

காலையில் இடம்பெற்ற கருத்தரங்கு 'ஈழத்து இசைநாடக மரபு' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றது. காலை 9.00 மணிமுதல் நண்பகல் வரை இடம்பெற்ற இக்கருத்தரங்கிற்கு, திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலக இணைப்பாளரும், யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் உதவி விரிவுரையாளருமான திருமதி வைதேகி செல்மர் எமில் தலைமை தாங்கினார். கருத்துரைகளை 'நந்தனார் கீர்த்தனையின் நாடக இயல்புகள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் விரிவுரையாளர் திருமதி நவதர்ஷனி கருணாகரனும், 'இசைநாடக மரபின் இசைக்கூறுகள்' என்னும் தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு நா. விமலநாதனும், 'இசைநாடகத்தின் உருவாக்கப் படிமுறைகள்' என்னும் தலைப்பில் செல்வி தை. சுயானந்தியும் வழங்கினார்கள். இவற்றின்போது செயன்முறை விளக்கங்களும் இடம்பெற்றன. இந்நிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்புரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமாரும், நன்றியுரையை யாழ். திருமறைக் கலாமன்ற நிகழ்ச்சி அலுவலகர் கொ. கரன்சனும் நிகழ்த்தினார்கள்.

இக்கருத்தரங்கில் நாடகமும் அரங்கியலும் கற்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

இசைநாடக அரங்கின் மாலை நிகழ்வுகள் பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகின. இசைநாடகப் பாடல் மெட்டுகள் இறுவட்டினதும் நூலினதும் வெளியீட்டு விழாவாக பரிணமித்த இந்நிகழ்வுக்கு திருமறைக் கலாமன்ற இசைத்துறையின் இணைப்பாளர் இசைத்தென்றல் ம. யேசுதாசன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் வருகைதந்திருந்தார்கள்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், மங்கல விளக்குகளை பிரதம விருந்தினர், நிகழ்வின் தலைவர், இசைநாடகப் பாடல் மெட்டுகளின் தொகுப்பாளர்களில் ஒருவரான ம. தைரியநாதன், திருமறைக் கலாமன்ற இசைநாடகப் பிரிவின் இணைப்பாளர் அண்ணாவியார் அ. பாலதாஸ், இசைநாடகப் பாடல் மெட்டுகளில் பாடல்களைப் பாடிய கலைஞர்களில் ஒருவரான திருமதி மனோகரி சற்குருநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தார்கள்.

தொடர்ந்து இறைவணக்கத்தை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் இணைப்பாளர் திரு. இ. ஜெயகாந்தன் நிகழ்த்தினார். இறைவணக்கத்தின் பின் மௌன அஞ்சலி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து; நிகழ்வுக்கான தொடக்க உரையையும், வரவேற்புரையையும் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் திரு. யோ. யோண்சன் ராஜ்குமார் வழங்கினார். அதன்பின் தலைமை உரை, பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து, வாழ்த்துரை, சிறப்புரை என்பன இடம்பெற்றன. இதன்போது வாழ்த்துரையை திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளாரும், சிறப்புரையை இசைநாடகப் பாடல் மெட்டுகளின் தொகுப்பில் பங்களிப்புச் செய்த யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டும் வழங்கினார்கள்.

தொடர்ந்து இசைநாடகப் பாடல் மெட்டுகளின் இறுவட்டு, நூல் ஆகியவற்றுக்கான வெளியீடு நடைபெற்றது. அதற்கு முன்பாக இதற்கான வெளியீட்டுரையை இதன் தொகுப்பாளர்களில் ஒருவரான தை. யஸ்ரின் ஜெலூட் வழங்க, இத்தொகுப்பினை தொகுப்பாளர்களில் ஒருவரான ம. தைரியநாதன் திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகளாருக்கு சமர்ப்பணம் செய்தார்.





கலைஞர்கள் இசைநாடகப் பாடல்களைப் பாடுகையில்...

தொடர்ந்து இசைநாடகப் பாடல் மெட்டுகள் வெளியீடு செய்யப்பட்டது. இதனைப் பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், சிற்பக் கலைஞருமான தொழிலதிபர் திரு. ஏ. வி. ஆனந்தன் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து முதற்பிரதியை பெற்றுக்கொண்ட திரு. ஏ. வி. ஆனந்தன் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து இசைநாடகப் பாடல் மெட்டுகளின் இறுவட்டு உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. இதன்போது கலைஞர்கள் மாலை அணிவிக்கப்பட்டு, சான்றிதழ்கள், கௌரவப் பிரதிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். சான்றிதழ்களையும், கௌரவப் பிரதிகளையும் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகள் வழங்கிச் சிறப்பித்தார். இக்கௌரவிப்புகளை இறுவட்டுக்குக் குரல்கொடுத்த, இசை மீட்டிய கலைஞர்களும், ஒலிப்பதிவு செய்த கலைஞரும், மற்றும் தொகுப்பாளர்களும் பெற்றுக்கொண்டார்கள். தொகுப்பாளர்களில் ஒருவரான மன்றத்தின் மூத்த இசைநாடகக் கலைஞர் ம. தைரியநாதனுக்கு இயக்குநர் மரியசேவியர் அடிகளார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இதன்போது உரை நிகழ்த்திய மரியசேவியர் அடிகள் கலைத்தூது அழகியல் கல்லூரியில் கலைஞர் தைரியநாதனின் பெயரில் பரிசு வழங்கும் செயற்பாட்டை ஆரம்பிக்க உள்ளதாகக் குறிப்பிட்டார்.

நிறைவு நிகழ்வாக, யாழ். குடாநாட்டின் பிரபல இசைநாடகக் கலைஞர்கள் பலரும் (வெளியீடு செய்யப்பட்ட இறுவட்டில் பாடியவர்கள்) ஒரே அரங்கில் வழங்கிய இசைநாடகப் பாடல்கள் இடம்பெற்றது. இதன்போது, பாரம்பரியம் மிக்க இசைநாடகப் பாடல்கள் கலைஞர்களால் பாடப்பட்டது. இந்நிகழ்வு பார்வையாளரை பரவசப்படுத்துவதாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து யாழ். திருமறைக் கலாமன்ற நிர்வாகசபை உறுப்பினர் எவ். யூல்ஸ் கொலினின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

மாலை நிகழ்வுகளிலும் பெருமளவிலானோர் கலந்துகொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தார்கள். ◆

## ஒளியைத் தின்ற இரவுகள்

அதிகாலை வேளைகளில்
சாளரங்கள் திறக்கவேண்டிய
அவசியங்கள் இப்போது நேர்வதில்லை.
வெளியிலும் ஒளியென்றொன்றில்லை.
காலைக் காற்றிலே கந்தகம் தவிர
வாசமுமில்லை.... சுவாசமுமில்லை...
காலைக்கடன்களெல்லாம், இருளில்
பழகிப்போன பாதைகளின் வழியே
கடமைக்காகச் செய்து முடிக்கப்படுகிறது!
மெல்லிய வெளிச்சம் போன்றதோர் பகலில்
வன்முறையும் மௌனமும்
பிரியமாகக் கற்பிக்கப்படுகிறது.
இயற்கை பேசும் ஒலிக்குறிப்புகளும்
மனிதர்களின் புரியாத பாஷைகளும்
அந்நியமாக்கப்படுகிறது...
நேசித்தல், யோசித்தல் எல்லாம்
கனவுகளில் மட்டுமென்பதால்
இன்னும் தடைசெய்யப்படவில்லை.
பசித்த புலன்களின் சாந்திக்கு
அவியாத மாமிசம் வெள்ளைத் தட்டிலும்
அமிலத் துளிகள் தங்கக் கிண்ணத்திலும்
அன்புடன் காட்டப்படுகிறது...
மீண்டும் .... இருளில்
பழகிப்போன பாதைகளின் வழியே
தூக்கம் கற்க படுக்கை சென்றால்...
போர்வைக்குள் மறைக்க முடிவது
உதறல்களை மட்டும்தான்
உணர்வுகளை அல்ல.
சிலருக்கு இரவுகள் விடிவதில்லை.
எங்களுக்கு மட்டும் - அவை
முடிவதேயில்லை....

நச்செள்ளை

# சிறுகதை அம்மாவின் ஆசைகள்

**சி. சிவாகர்**

"இன்னும் சரியா மூண்டு மாசந்தான் கிடக்குது... நிறோன்ர படிப்பில கொஞ்சம் கூடுதலா கவனமெடுக் கோணும். ஒரு மாதிரி கொலசிப் பாஸ் பண்ணிப் போட்டான் எண்டா யாழ்ப்பாணம் கின்டுக் கொலிச்சிலை யும் அட்மிசன் எடுத்துப் போடலாம்" வேறொன்றுமில்லை, இது ஜமுனாவின் வழமையான புலம்பல்தான்.

பக்கத்து வீட்டு இந்துமதியக்கா தன்ர மோன் கொலசிப் பாஸ்பண்ணிப் போட்டான் எண்டு அவாவுக்கு எவ்வளவு பெருமை. தன்ர பிள்ளையையும் கொலசிப்பில பாஸ்பண்ணவைச்சு ரவுணில படிபிக்கவேணும் எண்டொரு ஆசை ஜமுனாக்கு.

ராஜன் சேரின்ர பேப்பர்கிளாஸ் செஞ்சால் சுகமா பாஸ் பண்ணலாம் எண்டு ஆரோ சொன்னதால அங்கையும் நிறோவை அனுப்பி வந்தாள் அவள்.

ராஜன் சேரின்ர ரியூட்டறிக்கு ரெண்டு மைல் தூரம் போகோணும்... பிள்ளையால சைக்கிளோட ஏலுமோ..., பாவம் களைச்சுப் போடுவான். இனிமேல் அங்க அனுப்பாதையும் எண்டு கணவன் சொன்னதின் உண்மை புரிந்திருக்க வேணும். அதுதான் இப்ப பிள்ளைய தான் சைக்கிள்ள கொண்டுபோய் ரியூட்டறியில விட்டுட்டு வகுப்பு முடியும் வரை றோட்டில காவல் நிண்டு கூட்டி வருகின்ற வேலையையும் மேலதிகமாய் ஏற்றிருந்தாள்.

ஜமுனாவைப் போலவே பல தாய்மார்கள் ரியூட்டறிக்கு வெளியே ஒன்றுகூடி தமது பிள்ளைகளின்ர சுவாரஸ்யமான படிப்புக் கதைகளைச் சொல்லி இரண்டு மணிநேர முழுநீள அரட்டை அரங்கம் ஒன்றினை நடத்தி முடித்துவிடுவார்கள். அவர்கள் தங்கள் பிள்ளையளின்ர மாக்சுகளையும், புத்திசாலித்தனமான விடைகளையும் சொல்லும்போது ஜமுனாக்கு தன்ர பிள்ளையில சந்தேகம் வந்திடும். சிலவேளை 'உவன் பாஸ் பண்ணுவானா...' என்ற பயம் அவளை முழுசா விழுங்கிவிடும். அப்போதெல்லாம் தன்பிள்ளையின்மேல கூடுதல் கவனமெடுக்கவேணும் எண்டு தீர்மானித்துக் கொள்வாள்.

வகுப்பு முடிந்து வீட்டை போகும்போதும் ஜமுனா ஏதாவது சொல்லிக்குடுத்துக் கொண்டே வருவாள். நிறோவுக்கோ றோட்டால போகிற கார், பஸ்சுகளுக் கெல்லாம் கைகாட்டோணும், றோட்டுக்கரை வீடுகளில் தொங்குற பிலாக்காய்கள், பிலாக்காயளைக் கொந்துகின்ற அணில்கள் எல்லாத்தையும் பாக்கோணும் போலக்கிடக்கும். ஆனால் தாயின் கேள்விகளுக்கு விடை சொல்லத்தான் அவனுக்கு நேரம் சரியா இருக்கும்.

றிசல்ட் வந்த அடுத்தநாள் பேப்பரில படம்போட்டு பாராட்டி வாழ்த்துப் போடேக்கை பெரியக்கான்ர பேர் போடக்கூடாது. தங்கட பேரை அவா முந்திப் போடேல்லை என்றொரு கோபம் ஜமுனாக்கு.

இந்துமதியக்கா தன்ர பொடியனுக்கு குஞ்சம் வைச்ச தொப்பிபோட்டு எடுத்த போட்டோதான் பேப்பரில போட்டவா. நானும் நிறோவை அப்படித்தான் எடுக்கோணும். எதற்கும் இப்பவே வாங்கி வச்சாத்தான் நல்லதெண்டு இந்துமதியக்காவிடம் முற்கூட்டியே சொல்லிவைத்தாள் ஜமுனா.

***

இனிமேல் நாலுமணிக்கு எழும்பிப் படிக்கோணு மாம், அம்மா சொல்லிப் போட்டா... நாலரைக்கு எழமபவே கஸ்ரமாக்கிடக்கிறது அம்மாக்குத் தெரியுமா? எப்ப பாத்தாலும் படி படி எண்டு கொண்டு நிற்கிறா. பள்ளிக்கூடம், ரியூசன், வீட்டில அப்பான்ர வகுப்பெண்டு..., வீடு முட்ட புத்தகமும் வெற்றிக்கனியும், வெற்றித் தேர்வுமெண்டு, உதுகளைப் பாக்கவே தலையைச் சுத்துது. விடியக் காலமை புத்தகத்தைத் திறந்து பாத்தா பனம்பாத் தியில பனங்கொட்டையள் அடுக்கி வச்சமாதிரிக்கிடக்குது.

நேற்றைக்குப் பள்ளிக்கூடத்தில வாணி ரீச்சருக்கு அம்மா பேசிப்போட்டா... எழுத்துப் பிழைக்கு ஏன் மாக்ஸ் குறைக்கேல்லையாம். எனக்கெண்டா சரியா வெட்கமாப் போச்சு. இப்பவும் அம்மாவில கோபமாக் கிடக்குது. பாவம் ரீச்சர், அவாக்கு சரியான கவலை.

சோதினைக்கு எந்தக்கேள்வி எப்படி வருமோ...? இலங்கையின்ர தலைநகரம் யாழ்ப்பாணந்தானே? அப்புடித் தான் நான் எழுதினான். அது பிழையாம். கொழும்புதான் சரியாம். இலங்கையின்ர தலை யாழ்ப்பாணந்தானே. அப்ப அதின்ர தலையில உள்ள நகரம்தானே தலைநகரம்.

'சக்தி'யில காட்டுன் பாத்து எத்தினை நாளாப் போச்சு. மைடியர் பூதம் முடிஞ்சுதோ...? விளையாடக்கூட அம்மா விர்றாஇல்லை. இப்பெல்லாம் என்னமாதிரிக் காத்தடிக்குது, கொக்குப் பட்டம் கட்டி, அதுக்கு நல்ல வடிவா விண்ணும் கட்டிப் பறக்க விடலாம்...!

சோதினையில பாஸ் பண்ணினால் யெப்னா கிண்டுக்குப் போகலாந்தான். பக்கத்து வீட்டு றமேஸ் அண்ணா கொலசிப் பாஸ் பண்ணினாதால தானே யெப்னா கின்டுக்குப் போனவர். அவருக்கு வீட்டில எவ்வளவு மரியாதை. வீட்டில அவர் படிக்கிறதை ஒரு நாள்க் கூட நான் பார்க்கேல்லை. ஒருவேலையும் அவருக்கு இல்லை. முழுவேலையளும் அவற்ற அண்ணாதான் செய்யிறார், பாவம்.

பாஸ் பண்ணினால் கொம்பியூட்டர் வாங்கித் தரலாம் எண்டு அப்பா சொன்னவர்தான். பாஸ் பண் ணாட்...டி? அப்பா அடிக்கமாட்டார்... ஆனா... அம்மா? அப்பாவுக்கே அவாவுக்குப் பயம்.

இன்னும் கொஞ்சநாள்த்தானே..., பிறகு ஆர் படிக்கிறது. கிட்டியும் புள்ளும் அடிக்கோணும், போளை அடிக்கோணும், காற்று நின்றுடும் பட்டந்தான் விடேலாது.

***

மூத்தவன் படிச்சாத்தான் மற்றதுகளும் படிக்குங் கள். கொஞ்ச நாளைக்கு றாமா பாக்கிறதை நானும் விடோணும் என ஜமுனா தீர்மானித்துக் கொண்டாள். தனது மணிக்கூட்டில் நாலரைக்கு அலாரம் வைத்துக் கொண்டாள் - "விடியக்காத்தால எழும்பி படிக்கேக்க நித்திரையாப் போடுவான்..., பாத்து எழுப்பி விடோணும்." ◆

# பதிவுகள்




திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரம் பயிலும் சிறுவர்களினதும், அழகியல் கலை பயிலும் மாணவர்களினதும் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் 'சித்திர, அழகியல் கண்காட்சி' ஏப்பிரல் மாதம் 13ஆம் ,14 ஆம் திகதிகளில் கலைத்தூது அழகியல் கல்லூரி இயங்கும் இல 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த திரு.அ. சக்திவேல் நாடாவை வெட்டி காட்சியை திறந்து வைப்பதையும், சிறப்பு விருந்தினர்களான மூத்த ஓவியர் திரு.எஸ் சிவசுப்பிரமணியம் (ரமணி), திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகள் உட்பட பலர் காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.



திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கடந்த ஆண்டு முதல் நடைபெற்று வரும் பரதநாட்டிய முதுகலைமாணி, நுண்கலை மாணி, டிப்ளோமா பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கான பரீட்சைகள் ஜுன் மாத முற்பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்ற போது, அவற்றின் செயன்முறைப் பரீட்சைகளையும், பயிற்சிகளையும் நடத்துவதற்காக இந்தியா, திருச்சி கலைக்காவிரியில் இருந்து விரிவுரையாளர்களான திரு. எஸ். மதன்குமார், கலாநிதி எஸ். சுப்பிரியா ரவிக்குமார் ஆகியோர் 30.06.2007 இல் யாழ்ப்பாணம் வருகை தந்து 07.07.2008 இல் மீண்டும் இந்தியா திரும்பினார்கள். படங்களில் விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதையும், ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதையும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் திருமறைக் கலாமன்ற இயக்குநர், மூத்த பிரமுகர்களுடன் அமர்ந்திருப்பதையும் காணலாம். (விரிவுரையாளர்கள் இருவருக்கும். படத்தில் வட்ட அடையாளம் இடப்பட்டு காட்டப்பட்டுள்ளது)

## கலைமுகம் 50 ஆவது சிறப்பிதழ்



கலைமுகம் கலை, இலக்கிய சமூக இதழின் ஐம்பதாவது சிறப்பிதழுக்கான – பொன்மலருக்கான படைப்புக்கள் படைப்பாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

கலை இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், மொழி பெயர்ப்புக்களாக உங்கள் படைப் பாக்கங்கள் அமையலாம். நீங்கள் அனுப்பும் படைப்புக்கள் '50 ஆவது பொன் மலருக்கானதாக' இருந்தால் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் '50 ஆவது பொன் மலர்' எனக் குறிப் பிட்டு அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
'கலைமுகம்'
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,, யாழ்ப்பாணம்.

## இப்பொழுது விற்பனையாகின்றது...

# இசை நாடகப் பாடல் மெட்டுகள்

**ஈழத்தில் வழக்கிலுள்ள இசைநாடக**
**(பார்சி மரபு / ஸ்பெஷல் நாடக)**
**மரபுவழிப் பாடல் மெட்டுகளின் தொகுப்பு**

கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

பல வருடங்களாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக யாழ்ப்பாணத்தில் மரபு வழியாகப் பேணப்பட்டுவரும் தென்மோடி கூத்து மரபுப் பாடல்களுக்கான 153 மூல மெட்டுகளை நூல் வடிவிலும் இறுவட்டு (MP3) வடிவிலும் கடந்த ஆண்டில் தொகுத்து வெளியிட்ட திருமறைக் கலாமன்றத்தின் மற்றுமொரு பாரிய செயற்பாடாக ஈழத்தில் வழக்கிலுள்ள இசைநாடக மரபுவழிப் பாடல்களின் 248 மூல மெட்டுகள் நூல் வடிவிலும் இறுவட்டு (MP3-2CD) வடிவிலும் தொகுக்கப்பட்டு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.




விலை
நூல் + இறுவட்டு
600.00

ஈழத்துக் கலைகளை நேசிக்கும் ஒவ்வொருவரிடமும்
இருக்க வேண்டிய மற்றுமோர் அரிய தொகுப்பு இது



Color
Laser Print
எல்லா வகையான காகிதாதிகளிலும் உடனுக்குடன் பிறின்ட் எடுத்துக் கொடுக்கப்படும்

DIGITAL PRINT



Duro Frame

DIGITAL ART WORK

கணினி மூலமான இலச்சினை உருவாக்கம்

Hot line
077 7446973




J Graphics
ஜெட்ஸன்
தனித்துவமான சிந்தனையில் புதுமையான படைப்புக்கள்

Computer Design | Video - Edit | Art work | Colour Laser | Christian's Things



**வடிவமைப்புக்கள் யாவும்...**
புகைப்படங்கள் -
பெரிதாக்குதல், புதுப்பித்தல்,
பின்னனிமாற்றம் மற்றும்
பல்வேறுபட்ட வடிவமைப்புக்கள்

**அச்சக வேலைகள் யாவும்...**
பக்கவடிவமைப்பும்
அச்சுப்பதிப்பும்
4 Colour வடிவமைப்பும்
அச்சுப்பதிப்பும்
மற்றும் ஏனைய
அச்சுப்பதித்தல் வேலைகள்....



**ஒளிப்பதிவு - படத்தொகுப்பு**
ஆவணங்கள்
குறும்படங்கள்
கருத்து வெளிப்பாட்டுத் தொகுப்பு
பாடல்கள்

**தொலைக்காட்சி சேவைகள் ஆவணப்படுத்தல்**
தொலைக்காட்சி
சேவைகளின் நிகழ்வுகள்
CD, DVD களில் பதிவு செய்து
கொடுக்கப்படும்.



**கிறிஸ்தவ பொருட்கள்**
சுரூபங்கள், செபமாலைகள்,
வரவனிக்கங்கள், சிலுவைகள்,
அழகிய மெழுகுவர்த்திகள்,
புனித படங்கள் அடங்கிய
காட்டுகள், உத்தரியங்கள்,
பெரிய கலர்ப் படங்கள், சுவர்
மாட்டிகள் மற்றும் பல...

மொத்த விலையிலும்
சில்லறை விலையிலும்

**கோவில் கொடிகளும் வரைந்து கொடுக்கப்படும்**

# 30, St. Sebastian Road, Gurunagar, Jaffna, Sri Lanka.
Tel: 077 7446973, 077 7241885 E-mail. jjjeri_2007@yahoo.com

Design & Print: Judeson. Jaffna- 0777 446973